3ரூ

# டில்லி நோக்கி

by

நேதாஜி

DIGITIZED

V2:51y7M
N47

103375

# இந் நூல்

அடிமைத்தனை நீங்கிய இந்தியாவைக் காணத் துடித்துக் கொண்டிருந்த இந்திய வீரர்களுக்காக் மேன்மை தங்கிய நேத்தாஜி அவர்கள் பேசியவையும் எழுதியவையுமே இந் நூல். நாராயண மேனன் அவர்களால் ON TO DELHI என்ற தலைப்பில் ஆங்கிலத்தில் தொகுக்கப்பட்டது. சுதந்தர இந்திய தேசிய சர்க்காரின் சார்பில் பாங்காக்கிலிருந்து 1944-ல் வெளியிடப்பட்டது. இப்பொழுது அதனைத் தமிழில் தரும் வாய்ப்பு எங்களுக்குக் கிடைத்தது.

நேதாஜி ஐந்தாம் படைக்காரர் என நாத் துணிந்து கூறிய சிலர் இன்னும் இந்திய நாட்டில் உள்ளனர். அவர் நாண ஒரு சான்றாக இந் நூல் நிலைத்து விளங்கும்.

மூலத்தில் உள்ள வேகம் குன்றாது நேத்தாஜியின் உள்ளத் துடிப்பை அப்படியே தமிழில் ஆக்கித் தந்த நண்பர் சுப. நாராயணன் அவர்களுக்கும் இந் நூல் உருவாவதில் பெரும் பங்கு பெற்ற நண்பர் காந்தி அண்ணாமலை யவர்களுக்கும் எங்கள் நன்றி.

வெளியிடுவோர்

**உரிமை**

தேச பக்தி என்ற குற்றம் புரிந்ததற்காக
இந்தியச் சிறைகளில் அல்லலுற்றவர்கள்
அனைவருக்கும்

# இந்தியாவின் போரில் காந்திஜியின் பங்கு

[பாங்காக்கிலிருந்து 2-10-1943-ல் ஒலி பரப்பிய பேருரை]

இன்று, உலக மெங்கணு முள்ள இந்தியர்கள் தங்கள் தலை சிறந்த தலைவராகிய மகாத்மா காந்தியின் 75-வது பிறந்த நாளைக் கொண்டாடிக்கொண் டிருக்கிறார்கள். எந்த மனிதரை நாம் கௌரவிக்கிறோமோ, எந்த மனிதரிடம் நமது அன்பையும் மரியாதையையும் காணிக்கையாகச் செலுத்துகிறோமோ, அந்த மனிதரின் வாழ்க்கை அனுபவங்களை இந்த மாதிரிச் சந்தர்ப்பங்களில் எடுத்துச் சொல்லுவது வழக்கம். ஆனால், மகாத்மா காந்தியின் வாழ்க்கையைப் பற்றியும், செயலைப் பற்றியும் இந்திய மக்கள் மிக நன்றாக அறிவார்கள். அதனால், அவரது வாழ்க்கையைப் பற்றிய விவரங்களை யான் சொல்லப் புகுந்தால், அது அவர்கள் அறிவை அவமதிப்பதாகவே ஆகும். அப்படி நான் செய்யப்போவதில்லை. அதற்குப் பதிலாக, வேறொன்று செய்யப் போகிறேன். இந்தியாவின் சுதந்தரப் போராட்டச் சரித்திரத்தில், மகாத்மாஜியின் ஸ்தானம் என்ன? அதைப் பற்றி மதிப்பிடுவதில் நான் ஈடுபடப் போகிறேன். இந்தியாவுக்கும், இந்திய விடுதலை லட்சியத்துக்கும் மகாத்மா காந்தி செய்துள்ள சேவை ஒப்பற்றது, தனித் தன்மை வாய்ந்தது. அதனால், நமது தேசியச் சரித்திரத்தில் அவர் பெயர் என்றென்றைக்கும் பொன் எழுத்துக்களால் எழுதப் பெற்றிருக்கும்.

இந்தியச் சரித்திரத்தில் மகாத்மா காந்தியின் ஸ்தானத்தை எப்படிப் பிசகாமல் மதிப்பிடுவது? அதற்கு, பிரிட்டிஷார் இந்தியாவை எப்படிக் கைப்பற்றிக் கொண்டார்கள் என்பதைப் பரப்பு நோக்காக முதலில் கவனிக்க வேண்டியது அவசியம். பிரிட்டிஷார் முதல் முதலாக இந்திய மண்ணில் கால் வைத்தபோது, இந்தியாவானது

பாலும் தேனும் வழிந்தோடும் நாடாக இருந்தது; கடலுக்கு அப்பால் இருந்த வறுமைப்பட்ட ஆங்கிலேயரை இங்கு அழைத்து வந்தது இந்தியாவின் செல்வந்தான். இவை அனைத்தையும் நீங்கள் அறிவீர்கள். இன்று நாம் காண்பது என்ன? அரசியல் அடிமைத்தனத்தாலும், பொருளாதாரச் சுரண்டலாலும் இந்திய மக்கள் பசியாலும், பட்டினியாலும் செத்துக்கொண்டிருக்கிறார்கள். முந்தி ஏழையாய், ஏதுவின்றியிருந்த பிரிட்டிஷ் மக்களோ இந்தியாவின் செல்வத்தையும், மூலாதாரங்களையும் கொண்டு செழித்துக் கொழுத்து விட்டார்கள். இழந்து போன தங்கள் சுயேச்சையை மீட்பதனாலேயே தங்களுடைய பலதிறப்பட்ட பிரச்னைகளையும் தீர்த்துக் கொள்ள முடியும் என்பதை, துயரத்தின் மூலமும், கஷ்டத்தின் மூலமும், அவமானத்தின் மூலமும், சித்திரவதையின் மூலமும், இவ்வளவு நாளைக்குப் பிறகு, கடைசியில் இந்திய மக்கள் தெரிந்துகொண்டு விட்டார்கள்.

இந்தியாவை வெற்றி கொள்வதில் பிரிட்டிஷார் கையாண்ட வழிமுறைகளைப் பற்றிக் கவனிக்கும்போது, நாம் காண்பது என்ன? தேசத்தின் எந்தப் பகுதியிலும், பிரிட்டிஷார் ஒருபோதும் இந்திய மக்கள் அனைவர்மீதும் போரிட முனையவில்லை. இந்தியா முழுவதையும் உடனே வெற்றி கண்டு கைப்பற்றிக்கொள்ளவும் அவர்கள் முயலவில்லை. இவைகளை நாம் காண்கிறோம். அவர்கள் செய்தது என்ன? மக்களின் ஒரு பகுதியை வசப்படுத்திக் கொள்ளவே அவர்கள் எப்போதும் முயன்றார்கள். அதற்காக, அவர்கள் லஞ்சம் கொடுத்தார்கள்; ஊழல் முறைகளைக் கையாடி, மக்களைக் கெடுத்தார்கள். அதற்குப் பிறகுதான் ராணுவ வேலைகளைத் தொடங்கினார்கள். வங்காளத்தில் இப்படித்தான் நடந்தது; அங்கே, ராணுவத் தலைமை அதிகாரி (கமாண்டர்-இன்-ச்சீஃப்) ஆக இருந்தவர் மீர்ஜாஃபர். அவருக்கு வங்காளச் சிம்மாசனத்தை அளிப்பதாக ஆசை வார்த்தை காட்டி, பிரிட்டிஷார் அவரை வசப்படுத்திக் கொண்டார்கள். அந்தச் சமயம், இந்தியாவில் மத சமூகப் பிரச்னை இன்னதென்பதே யாருக்கும் தெரியாது. சுயேச்சையாக வங்காளத்தில் அரசாண்டு வந்த கடைசி மன்னராகிய சிராஜ்-உத்-தௌலா ஒரு முஸ்லிம். அவரை, முஸ்லிமாகிய அவருடைய ராணுவத் தலைமை அதிகாரியே காட்டிக் கொடுத்துவிட்டார். சிராஜ்-உத்-தௌலாவுடன் அவருடைய கடைசிக் கால மட்டும் போராடியவர் யார்? மோகன்லால் என்ற ஹிந்து ராணுவ அதிகாரிதான்.



இந்தியச் சரித்திரத்திலுள்ள இந்நிகழ்ச்சியிலிருந்து நாம் கற்றுக்கொள்ளும் பாடம் என்ன? துரோகச் செயல்களைத் தடுப்பதற்கும், கண்டிப்பதற்கும் காலாகாலத்தில் நடவடிக்கை எடுத்துக்கொள்ளாவிட்டால், எந்தத் தேசமும் அதன் சுயேச்சையைப் பேணிக் காத்துவர முடியவே முடியாது. துரதிருஷ்ட வசமாக வங்காளத்தில் உண்டான மாறுபாடுகள் தக்க காலத்தில் இந்திய மக்களின் கண்ணைத் திறந்துவிடவில்லை. வங்காளத்தில் சிராஜ்-உத்-தௌலாவின் வீழ்ச்சிக்குப் பிறகு கூட, இந்திய மக்கள் பிரிட்டிஷாரைத் தமது பொது விரோதியாகக் கொண்டு, எதிர்த்துப் போராடியிருந்திருப்பார்களானால், நாம் விரும்பாத இந்த அன்னியனை, இந்திய மண்ணினின்றும் தூக்கி எறிவதில் அவர்கள் எளிதில் வெற்றி கண்டிருப்பார்கள். தங்களது சுதந்தரத்தை நிலைநிறுத்திக்கொள்ளும் பொருட்டு, இந்திய மக்கள் போரிடவில்லை யென்று யாரும் சொல்ல முடியாது. ஆனால், ஒன்று; அவர்கள் எல்லாரும் ஒன்றாகத் திரண்டு போரிடவில்லை. பிரிட்டிஷார் வங்காளத்தைத் தாக்கிய போது, பின்புறத்திலிருந்துகொண்டு யாரும் அவர்களைத் தாக்கவில்லை. பின்னால், தென் இந்தியாவில், திப்பு சுல்தானுடன் பிரிட்டிஷார் சண்டை போட்டார்கள். அப்போது, மத்திய இந்தியாவிலுள்ள மராத்தியர்களோ, வட இந்தியாவிலுள்ள சீக்கியர்களோ திப்பு சுல்தானுக்கு உதவியாக வரவில்லை. வங்காளம் வீழ்ச்சியுற்ற பிறகுகூட, பிரிட்டிஷாரை வீழ்த்திவிடுவது சாத்தியமாகவே யிருந்தது. தெற்கில் திப்பு சுல்தானும், மத்திய இந்தியாவில் மராத்தியர்களும், வடக்கில் சீக்கியர்களும் ஒன்று திரண்டால், இப்படிச் செய்திருக்க முடியும். நம்முடைய கெட்ட காலம், விஷயம் இப்படி நடக்க

வில்லை. ஆகவே, இந்தியாவின் ஒவ்வொரு பகுதியை, ஒவ்வொரு சமயத்தில் தாக்கி, சன்னஞ் சன்னமாய், நாடு முழுவதும் தங்களது ஆட்சியைப் பிரிட்டிஷார் விரித்துக்கொண்டு போக அவர்களுக்குச் சாத்தியமாயிற்று. இந்திய வரலாற்றில் உள்ள இந்தத் துன்பகரமான அத்தியாயத்திலிருந்து நாம் கற்றுக்கொள்ளும் பாடம் என்ன? எதிரியின் முன்னிலையில் இந்திய மக்கள் ஒன்றுபட்டு நின்றாலொழிய, அவர்கள் தங்கள் சுதந்தரத்தை ஒருபோதும் பெறப்போவதில்லை. அப்படி அவர்கள் பெற்ற போதிலும், அதை அவர்களால் நிலைநிறுத்தி வைத்துக்கொள்ள முடியப் போவதுமில்லை.

இந்திய மக்களின் கண்களைத் திறந்துவிடுவதற்கு நீண்டகாலம் பிடித்தது; கடைசியாக, 1857-ல் அவர்கள் விழித்தெழுந்தார்கள். அப்போது, நாட்டின் வெவ்வேறு பகுதிகளில் பிரிட்டிஷார்மீது ஏகோபித்த தாக்குதலைத் தொடங்கினார்கள். போராட்டம் தொடங்கியபோது—இதைத்தான் பிரிட்டிஷ் சரித்திராசிரியர்கள், "சிப்பாய்க் கலகம்" என்கிறார்கள்; நாம், முதலாவது "சுதந்தரப் போராட்டம்" என்கிறோம். முதலில் பிரிட்டிஷாரை வெகு எளிதாக நாம் முறியடித்துவிட்டோம்; ஆனால், இறுதியில், நாம் தோல்வி கண்டதற்குக் காரணம் இரண்டு விஷயங்கள்: இந்தியாவின் எல்லாப் பகுதிகளும் போராட்டத்தில் கலந்துகொள்ளவில்லை. அது மட்டுமா? இன்னொன்றும் உண்டு: நம்முடைய ராணுவ அதிகாரிகளின் தொழில் நுணுக்க அறிவு, எதிரிப் படைகளை நடத்திச் சென்ற அதிகாரிகளுடைய அறிவைவிடக் குறைவானது. பதினெட்டாம் நூற்றாண்டிலும், பத்தொன்பதாம் நூற்றாண்டிலும் நவீனப் போர்த்தொழில் கலையில் ஐரோப்பாவானது வெகுவாக முன்னேறிவிட்டது என்பது வாஸ்தவம். இந்திய மக்களோ, கால வேகத்தோடு ஒட்டி நடை போட்டு, முன்னேறவில்லை. இதன் பயனாக, பிரிட்டிஷ் படையோடு கடைசிக் கட்டத்தில் மல்லாட நேர்ந்தபொழுது, நம்முடைய ராணுவத் தலைவர்கள் பூரணத் தகுதி வாய்ந்தவர்களல்ல என்பது வெளிப்படத் தொடங்கிவிட்டது. 1857-ல் நாம் அடைந்த



தோல்வியி லிருந்து நாம் கற்றுக்கொள்ளுகிற பாடம் என்ன? இதுதான்: இனிமேல், மற்றத் தேசங்கள் வாழ்க்கையின் ஒவ்வொரு துறையிலும், சிறப்பாகப் போர்த்தொழில் கலையில் அடையும் முன்னேற்றத்தைப் பற்றியும், இந்திய மக்கள் மிக நெருக்கமாகத் தெரிந்து வைத்துக்கொண் டிருக்கவேண்டும். இதுதான் நாம் கற்றுக்கொண் டிருக்கிற பாடம்.

1857-ல் அடைந்த தோல்விக்குப் பிறகு, இந்திய மக்களிடமிருந்து பிரிட்டிஷார் ஆயுதங்களைப் பறித்துக்கொண்டார்கள். அந்தச் சமயத்தில், தம்மிடமுள்ள ஆயுதங்களைப் பிடுங்கிக்கொள்ளும்படி விட்டுவிட்டுச் சும்மா இருந்தது அவர்கள் செய்த பெரும் பிழை; அவர்கள் செய்த பைத்தியக்காரத்தனங்களி லெல்லாம் இது படுமோசமானது. இந்திய மக்களிடமிருந்து ஆயுதங்களைப் பறித்து, அதன்மூலம் அவர்களை நிராதரவாக ஆக்கியிராவிட்டால், மீண்டும் அவர்கள் தங்கள் விடுதலைக்காக, சுருங்கிய காலவரையறைக்குள், எதிர்த்தடித்திருக்க முடியும். ஆயுதம் பறிபட்டதால், அரசியல் வாழ்வில், இந்திய மக்கள் தலைகுப்புற விழுந்து திக்குத் தெரியாமல், கிட்டத் தட்ட முப்பது வருஷத்துக்குத் திண்டாடிக்கொண்டு கிடந்தார்கள். கடைசியில், 1885-ல் இந்தியத் தேசியக் காங்கிரசின் உதயத்தின் மூலம், அரசியல் விழிப்பு ஏற்பட்டது. ஆரம்பத்தில், இந்தியத் தேசியக் காங்கிரஸ் ஒரு மிதவாதக் கழகமாகவே இருந்தது. பூரணச் சுதந்தரம் கோரவோ, பிரிட்டிஷ் தொடர்பை அறுத்துக்கொள்ளும்படிக் கோரவோ, காங்கிரஸ் தலைவர்கள் முதலில் பயந்தார்கள். குறுகிய கால அளவாகிய இருபது வருஷத்துக்குள், காங்கிரசுக்குள் புத்துயிர் ஊட்டப் பெற்றுவிட்டது. 1905-ல் நாம் காணும் நிலை என்ன? அரவிந்த கோஷ் போன்ற தலைவர்கள்; இந்தியாவுக்குப் பூரணச் சுதந்தரம் வேண்டுமென்று கேட்கிறார்கள். இந்தப் பூரணச் சுதந்தரக் கோரிக்கையுடன், விடுதலை பெறும் பொருட்டுக் கையாளப்பெற்ற நடைமுறைகள் இன்னும் அதிதீவிரமானவை. வங்காளத்தில், பிரிட்டிஷ் சாமான்களை மறியல் செய்

தார்கள். எதற்காக? அந்த மாகாணத்தைத் துண்டுபடுத்தியதற்கு எதிர் அடி கொடுப்பதற்காக, இந்த மாதிரி மறியல் செய்கிற முறை, சன்னஞ் சன்னமாக இந்தியா எங்கணும் பழக்கத்தில் வந்துவிட்டது. பொருளாதாரத் துறையில் மறியல் செய்வதுடன் நின்றுவிடாமல், இந்திய வாலிபர்கள் வேறொரு காரியமும் செய்தார்கள்; வெடிகுண்டு, கைத் துப்பாக்கி-இந்த உபாசனையையும் அவர்கள் மேற்கொண்டார்கள். பாரிஸிலும், இதர ஐரோப்பியத் தலைமை இடங்களிலும் புரட்சிகரமான அழிவு வேலைகள் எப்படி நடக்கின்றன என்று கற்றுக்கொள்ளும் பொருட்டு, பல இளைஞர்கள் வெளி நாடுகளுக்குச் சென்றார்கள். பொதுவாக, இந்திய இளைஞர்கள் எல்லாருமே, உலகத்தின் இதர பாகங்களில்-குறிப்பாக, ருஷ்யாவிலும் அயர்லாந்திலும் கையாண்ட புரட்சி முறைகளை ஆராயத் தொடங்கினார்கள்.

போன உலக யுத்தத்தின்போது, பழிக்கு அஞ்சாத பிரிட்டிஷ் அரசியல்வாதிகள், பொய்யான உறுதிமொழிகளைச் சொல்லி, இந்தியத் தலைவர்களை ஏய்த்துவிட்டார்கள். அதன்பயனாக, பிரிட்டனுக்குச் சேவை செய்வதற்காகவும், இந்தியாவின் அடிமைத் தளையில் உள்ள சங்கிலிப் பிணைப்புகளைப் பலப்படுத்துவதற்காகவும் இந்தியாவின் ரத்தமும், செல்வமும் ஆறாய்ப் பெருகி ஓடின, ஆனால், இந்தியப் புரட்சிக்காரர்களின் நிரந்தரமான பெருமைக்கு எடுத்துக்காட்டாக ஒன்றைச் சொல்லியாக வேண்டும். அது என்ன? பிரிட்டன் தங்களை ஏமாற்றிவிடும்படி அவர்கள் அவ்வளவு அப்பாவிகளாக இருந்துவிடவில்லை. தங்களால் முடிந்த மட்டும் முயன்று, நாட்டில் புரட்சியை உண்டாக்கப் பார்த்தார்கள். இந்தியாவின் கெட்ட காலம், அவர்கள் முயற்சி தோற்றது.

போன உலக யுத்தம் முடிந்து, இந்தியத் தலைவர்கள் தமக்கு வாக்களிக்கப்பெற்ற சுதந்தரத்தை அளிக்கும்படிக் கேட்கத் தொடங்கியபோது, அவர்கள் முதன் முதலாகக் கண்டது என்ன? அடுத்துக் கெடுக்கும் ஆல்பியன்-அதாவது, பிரிட்டிஷ் மக்களும், அவர்களது அரசியல் வாதிகளும்-இந்தியத் தலைவர்களை நம்பிக்கைத்



துரோகம் செய்துவிட்டார்கள். தலைவர்களின் கோரிக்கைகளுக்கு வந்த பதில் என்ன? அந்தப் பதில் ரௌலட் சட்டமாக-அதாவது, கறுப்புச் சட்டமாக-1919-ல் உருவெடுத்தது. அவர்களுக்கு இதுவரை இருந்துவந்த, கொஞ்ச நஞ்சச் சுதந்தரத்தையும் இது பிடுங்கிக்கொண்டது. இந்தக் கறுப்புச் சட்டத்தை அவர்கள் எதிர்த்தபோது, என்ன நடந்தது, தெரியுமா? ஜாலியன் வாலா பாக் படுகொலைதான் நடந்தது. போன யுத்தத்தில், இந்திய மக்கள் செய்துள்ள இத்தனை தியாகங்களுக்கும் கிடைத்த பரிசுகள் ரௌலட் சட்டமும், ஜாலியன்வாலா பாக் படுகொலையும்தான்.

1919-ல் நடந்த சோக நிகழ்ச்சிகளுக்குப் பிறகு, இந்திய மக்கள், தற்காலிகமாக, செயலற்று, உணர்வற்று, முடங்கிப் படுத்துவிட்டார்கள். சுதந்தரம் பெறுவதற்காகச் செய்த முயற்சிகளனைத்தையும் கொஞ்சமும் ஈவிரக்கமின்றி, பிரிட்டிஷாரும், அவர்களது ஆயுதம் தாங்கிய படைகளும் மிதித்து நசுக்கிவிட்டன. சட்ட வரம்புக்கு உட்பட்ட கிளர்ச்சி, பிரிட்டிஷ் சாமான்கள் மறியல், ஆயுதம் தாங்கிய புரட்சி-இவை ஒன்றுகூடச் சுதந்தரம் பெற வெற்றி அளிக்கவில்லை. எல்லாம் தோற்றுவிட்டன. துளி நம்பிக்கைகூட இல்லை. தங்களது ஹிருதயங்கள் ஆத்திரத்தால் வெந்துகொண்டிருந்தபோதிலும் போராடுவதற்கு ஏதாவது ஒரு புது முறை கிடைக்காதா, ஒரு புது ஆயுதம் கிடைக்காதா என்று இந்திய மக்கள் இருட்டில் தட்டித் தடுமாறித் தடவிக்கொண்டேயிருந்தார்கள். இந்தச் சரியான சந்தர்ப்பத்தில், மகாத்மா காந்தி அரங்கத்தில் அடி எடுத்துவைத்தார். அவருடைய முறை நூதனமானது. ஒத்துழையாமை இயக்கம் என்பது அது சத்தியாக்கிரகம் அல்லது அரசியல் பொதுவாழ்வில் கீழ்ப்படியாமை என்றும் அதைச் சொல்லுவது உண்டு. விடுதலையை அடைவதற்கு வழிகாட்டும்பொருட்டுத் தெய்வம்தான் அவரை அனுப்பியதோ, என்னவோ! அப்படித்தான் இருக்க வேண்டும். உடனே, இயல்பாக தேசம் முழுவதும் அவரது கொடியின்கீழ் அணிவகுத்து நின்றது. இந்தியாவைக் காப்

பாற்றி ஆயிற்று. ஒவ்வொரு இந்தியனின் முகத்திலும் நம்பிக்கையும் தன்னம்பிக்கையும் ஒளிபாய்ச்சின. இறுதியில், வெற்றி நிச்சயம் என்பது மீண்டும் உறுதியாயிற்று.

இருபது வருஷத்துக் கதிகமாக, இந்தியாவின் கதி மோட்சத்துக்காக மகாத்மா காந்தி பாடுபட்டு வந்திருக்கிறார்; இந்திய மக்களும் அவருடன் கூடவே பாடுபட்டு வந்திருக்கிறார்கள்.

1920-ல், தமது [புதிய ஆயுதத்துடன் போராடுவதற்கு அவர் முன்வந்திராவிட்டால், ஒரு வேளை இன்றும் இந்தியா செயலற்றே, வீழ்ந்து கிடக்கவே செய்யும்,-இது மிகைபடச் சொல்லும் சொல் லல்ல. இந்தியாவின் விடுதலை லட்சியத்திற்காக, அவர் ஆற்றியிருக்கும் தொண்டு, தனித் தன்மை வாய்ந்தது; ஒப்பற்றது. எந்த ஒரு தனி மனிதனும், தனித்த ஒரே வாழ்வுக் காலத்தில், இதே மாதிரியான சமய சந்தர்ப்பங்களில், இதைவிட அதிகமாகச் சாதித்திருக்க முடியாது.

மகாத்மா காந்தியைக் கிட்டத் தட்ட ஒட்டிய வேறொரு சரித்திர புருஷர் யார்? ஒரு வேளை, அவர் முஸ்தாஃபா கமாலாகத்தான் இருக்க வேண்டும். போன மகா யுத்தத்தில் தோல்வியுற்ற பிறகு, துருக்கியைக் காப்பாற்றியவர் அவர். அப்போது, துருக்கி மக்கள் அவரைக் '**காஜி**' என்று முழக்கொலி எழுப்பி, வாழ்த்தினார்கள்.

1920 முதல், மகாத்மா காந்தியிடமிருந்து இந்திய மக்கள் இரண்டு விஷயங்களைத் தெரிந்துகொண் டிருக்கிறார்கள். சுதந்தரம் பெறுவதற்குமுன், இவை இரண்டையும் நாம் கட்டாயம் அடைந்தே தீர வேண்டும்; இல்லாவிட்டால், காரியம் நடவாது. இப்படி, நமது ஜனங்கள் முதன் முதலாக, தேசிய சுயமரியாதையையும், தன்னம்பிக்கையையும் கற்றுக்கொண்டார்கள். இதன் பயனாக, அவர்கள் உள்ளத்தில் புரட்சித் தணல் கொழுந்துவிட்டு எரிந்துகொண் டிருக்கிறது. இரண்டாவதாக, இப்போது அவர்களுக்கு நாடு முழுதும் பரவிய



ஒரு ஸ்தாபனம் இருக்கிறது. அந்த ஸ்தாபனம், இந்தியாவின் தொலைதூரக் கோடியில் உள்ள கிராமங்களைக்கூட விடாமல் பற்றிப் பிடித்துவைத்திருக்கிறது. இப்பொழுது, இந்தியர் அனைவரின் உள்ளத்திலும் விடுதலைச் செய்தி ஊடுருவிப் பாய்ந்து, நிலையூன்றிவிட்டது. நாடெங்கும் விரிந்ததான அரசியல் ஸ்தாபனம் அவர்களுக்கு இருக்கிறது. தேசம் பூராவுக்கும் அது பிரதிநிதியாக விளங்குகிறது.-இந்த நிலைமையில், விடுதலைக்காக இறுதிப் போராட்டம் தொடங்குவதற்குக் கொடி உயர்த்தியாயிற்று; இதுதான் கடைசிச் சுதந்தரப் போராட்டம்.

சுதந்தரப் போராட்டத்துக்கு முன்னோடியாக ஆத்மிகவிழிப்பு ஏற்படுவது இந்தியாவில் மட்டும் நடந்த ஒரு நிகழ்ச்சி யல்ல. இத்தாலியில் ஓர் இயக்கம் நடந்தது. ரிஸார்கிமென்ட்டோ என்று அதற்குப் பெயர். அதில், மாஜினி பங்கெடுத்துக்கொண்டார். இத்தாலிய மக்களுக்கு, ஆத்மிக ஆவலை முதலில் ஊட்டியவர் அவர் தான். அவருக்குப் பிறகு, அவரைப் பின்பற்றியவர் கரிபால்டி. இவர், சண்டைக்காரர்; தீரர். ஆயுதம் தாங்கிய ஆயிரம் தொண்டர்களின் தலைமையில், ரோம் நகரை நோக்கி படை கிளம்பிச் சென்றார். நவீன அயர்லாந்திலும் கூட, சின் ஃபெயின் கட்சியில், 1906-ல் அது உண்டானபோது, என்ன நடந்தது? ஐரிஷ் மக்களுக்கு அந்தக் கட்சி ஒரு நடைமுறைத் திட்டத்தைக் கொடுத்தது. அது பெரும்பாலும், மகாத்மா காந்தியின் 1920-ம் வருஷத்து ஒத்துழையாமை இயக்கச் செயல் திட்டத்தைப் போன்றது. சின் ஃபெயின் கட்சி தோன்றிய பத்து வருஷத்துக்குப் பிந்தி-அதாவது, 1916-ல் முதலாவது ஆயுதம் தாங்கிய புரட்சி அயர்லாந்தில் நடந்தது.

விடுதலை பெறுவதற்கு உள்ள நேரான பாதையில், நம்முடைய கால்களை மகாத்மா காந்தி உறுதியாக ஊன்றச் செய்திருக்கிறார். அவரும், மற்றத் தலைவர்களும் சிறைக் கம்பிகளுக்குப் பின்னால் இப்போது செயலற்றுக் கிடக்கிறார்கள். எனவே, மகாத்மா காந்தி தொடங்கிய காரியத்தை அவரது

நாட்டு மக்கள் பூர்த்தி செய்தாக வேண்டும்-சொந்த நாட்டி லிருப்பவர்களும் சரி, அயல் நாட்டி லிருப் பவர்களும் சரி.

இறுதிப் போராட்டத்துக்கு என்னென்ன தேவையோ, அவை அனைத்தும் இந்தியாவில் உள்ள இந்தியர்களுக்கு இருக்கின்றன. ஆனால், அவர்களுக்கு ஓரே ஒரு குறை. அவர்களை விடுவிப்பதற்கு ஒரு ராணு வம் வேண்டும். அந்த விடுவிப்பு ராணுவம் வெளியி லிருந்துதான் வந்தாக வேண்டும். அதை வெளியி லிருந்து தான் கொடுத்து உதவவும் முடியும்.

ஒரு விஷயத்தைப் பற்றி உங்களுக்கு நினைவூட்ட விரும்புகிறேன். 1920, டிசெம்பரில், நாகபுரிக் காங்கிரஸ் வருஷக் கூட்டத்தில், தமது ஒத்துழையாமைச் செயல் திட்டத்தைப் பற்றி இந்தியத் தேச மக்களுக்கு எடுத் துரைத்து அதனை ஏற்றுக்கொள்ளும்படி அவர்களைக் கேட்டுக்கொண்டபொழுது, மகாத்மா காந்தி என்ன சொன்னார் தெரியுமா? இன்று, இந்தியாவிடம் வாள் இருந்தால் அது அந்த வாளை உருவியிருக்கும்'' என்று அவர் சொன்னார். தமது வாதத்தை மேலும் தொடர்ந்து பேசுகையில் மகாத்மாஜி என்ன சொன்னார்? ஆயுதம் தாங்கிப் புரட்சி செய்வதோ முடியாத காரியம். வேறு வழியென்ன? நாடு செய்யக் கூடியது என்ன? ஒத்துழை யாமை அல்லது சத்தியாக்கிரகம்தான்-என்று அவர் தொடர்ந்து பேசினார். அன்றைக்கும் இன்றைக்கும் இடையில், காலம் எவ்வளவோ மாறுதலை அடைந்துவிட் டது. இன்று, இந்தியர்கள் வாள் ஏந்த முடியும். இந்தியா வின் விடுவிப்பு ராணுவம் ஏற்கெனவே அமைந்துவிட் டது. நாளுக்கு நாள், அது எண்ணிக்கையில் பெருகி வருகிறது. இதைக் கண்டு நாம் மகிழ்ச்சியும் பெருமை யும் அடைகிறோம். ஒரு புறம் இந்த ராணுவத்தின் பயிற்சியைப் பூர்த்தி செய்து, கூடிய சீக்கிரம் இதைப் போர்க்களத்திற்கு அனுப்பியாக வேண்டும்; அதே சமயத்தில், புதிய ராணுவம் ஒன்றையும் நாம் நிறுவி யாக வேண்டும். போர்க் களத்தில் உள்ள ராணுவத் திற்கு இது, வேண்டும்போதெல்லாம் இடையறாது ஆள்



அனுப்பி, புதுப் பலம் தந்துகொண் டிருக்க வேண்டும். சுதந்தரத்தின் இறுதிப் போராட்டம் நீண்டதா யிருக் கும்; கடினமா யிருக்கும். நாம் போரிட்டுக்கொண்டே யிருக்க வேண்டும்-இந்தியாவிலுள்ள கடைசிப் பிரிட்டிஷ் காரன் சிறையில் அடைபட்டோ, நாட்டினின்றும் அப்புறப்படுத்தப்பட்டோ தீரும் வரை, நாம் இப்படிப் போராடிக்கொண்டே யிருக்க வேண்டும். உங்களை நான் எச்சரிக்க விரும்புகிறேன். நமது விடுவிப்பு ராணுவம்-அஜாத் ஹிந்த் ஃபவுஜ் அல்லது இந் தியத் தேசிய ராணுவம் - இந்திய மண்ணில் கால் வைத்த பிறகு, பிரிட்டிஷ் நுகத்தடிப் பளுவிலிருந்து இந் தியா முழுவதையும் விடுவிப்பதற்குக் குறைந்த பட்சம் பன்னிரண்டு மாதம் ஒரு வேளை, அதற்கு மேலும் பிடிக்கலாம். எனவே, நாம் கச்சையை வரிந்து கட்டிக் கொண்டு, நீண்ட கடுமையான போராட்டத்துக்குத் தயார் ஆவோமாக!

---

# இந்த யுத்தமும், அது உணர்த்தும் குறிப்பும்

**24-6-1943 ல், ட்டோக்கியோவிலிருந்து, ஒலி பரப்பிய பேருரை**

தேச மக்களே, நண்பர்களே!

முதலாவதாக இந்த யுத்தத்தின் அர்த்தத்தைப் பற்றியும், இதன் பின்னே கிடக்கும் சரித்திர விஷயங்களைப் பற்றியும் கவனிக்க விரும்புகிறேன். சரி; இது என்ன யுத்தம்? சக்திகளுக்கிடையே மூண்ட முட்டுதல் மோதுதல்தான் இந்த யுத்தம். ஒரு புறத்தில் உலகத்தில் இன்றுள்ள நிலைமையை அப்படியே வைத்திருக்க வேண்டுமென்கிற சக்திகளும், மறு புறத்தில் இந்த நிலைமையை ஒழித்துக் கட்டக் கங்கணம் கட்டிக் கொண்டு புது ஏற்பாட்டைக் கொணர்வதற்கு முற்படுகிற சக்திகளும் ஒன்றோடு ஒன்று எதிர்த்து மல்லிடுகின்றன. முந்திய பகுதியில் ஆங்கில, அமெரிக்க ஏகாதிபத்திய வல்லரசுகள் சேர்ந்திருக்கின்றன. இவை சுதந்தரம் ஜனநாயகம் என்ற போர்வையில் வேஷம் போட்டு திரிந்துகொண்டிருக்கின்றன. இந்த ஏகாதிபத்திய வல்லரசுகள் வெற்றி பெற்றால் நிலைமை என்ன ஆகும்? நம்முடைய அடிமைத் தனம் என்றென்றைக்கும் சாசுவதமாகும். அது மட்டுமா? அதிர்ஷ்டக் கட்டையான இன்னும் பல தேசங்கள் தொடர்ந்து அடிமைப் பட்டிருப்பதற்கு இது ஏதுவாகும்.

எனது நாட்டு மக்களில் சிலர் ஒரு நம்பிக்கை வைத்திருக்கிறார்கள். உள் நாட்டு நெருக்கடி உண்டாவதன் மூலம் இந்தியா போன்ற அடிமைப்பட்ட நாடுகளின் சுயேச்சை நிலையைப் பிரிட்டன் போன்ற ஏகாதிபத்திய வல்லரசுகள் அங்கீகரிக்கும்படிச் செய்துவிடலாமென்று அவர்கள் எதிர்பார்க்கிறார்கள். ஆனால், இப்படி எதிர்பார்த்ததெல்லாம் பிசகு என்று தெரிந்து விட்டது.



அதே மாதிரி போரைத் தடுப்பதற்காச் சில பேர் ஏற்கெனவே முயன்று இரு கட்சிகளும் எப்படியாவது ஒரு சமரசத்துக்கு வந்துவிட அவர்கள் பாடுபட்டிருக்கிறார்கள். அந்த முயற்சிகளெல்லாம் பயனற்றுப் போயின. விளை பயன் என்ன? இந்த யுத்தம் தான். கடைசி வரையில் இந்தப்போர் நடந்தே தீரும். போன யுத்தத்தை விட, இது அதிகக் காலத்துக்குப் போராடித் தீர்க்கப்படும் என்பதற்கு எல்லாவிதமான சந்தர்ப்பக் குறிப்புகளும் இருக்கின்றன.

இந்தப் பிரம்மாண்டமான மற் போரில் நம்முடைய தேசிய நலனை எப்படிக் காத்துக் கொள்ளலாம்? இளமையும், ஆண்மையும் நிறைந்த தேசங்களோடு நாம் கூட்டுக் கூடுவதினால்தான் நமக்கு நிச்சயமாக நன்மை உண்டு. இன்றிருக்கும் நிலைமையைத் தலை குப்புற வீழ்த்தி, அதன் மூலம் நமது சுதந்தரத்தைப் பெறுவதற்கு நமக்கு வாய்ப்பு அளிக்க இவை உறுதியாய் நிற்கின்றன.

முக்கூட்டு வல்லரசுகள் நமது பரம்பரை எதிரியுடன் சண்டை போடுகின்றன. அந்த எதிரிக்குக் கடுமையான தோல்விகளை உண்டாக்கி வருகின்றன. இந்த விஷயம் வெகு தூரத்துக்கு நமது தேசியப் போராட்டத்திற்கு மறை முகமான உதவி அளித்து வருகிறது. இது மிகத்தெளிவாகத் தெரிந்ததே. இந்த வல்லரசுகளால் நம்முடைய எதிரி படுகாயமடைந்திராவிட்டால், விடுதலை பெறுவதற்குநாம் செய்யும் கடும் முயற்சி, அது இன்று இருப்பதைவிட நூறுபங்கு அதிகக்கடுமையாய்இருக்கும். இதற்காக நாம் நன்றியுள்ளவர்களாகிறோம். ஆனால், இன்னொரு காரியத்துக்காக, நம்முடைய நன்றியறிதல் இன்னும் அதிகமானதாக ஆகிறது. நமக்குமறைமுகமான உதவி அளிப்பதோடு முக்கூட்டு வல்லரசுகள் நின்றுவிடவில்லை. நமது சுதந்தரப் போராட்டத்தில் அவைகள் நமக்கு நேரடியாக ஆதரவும், ஒத்தாசையும் செயல் முறையில் அளித்துவந்திருக்கின்றன.

எனது தேச மக்களில் சிலர் இருக்கிறார்கள்: அவர்கள் ஆங்கில ஸ்தாபனங்களில் பயின்று, பழகி வந்தவர்கள்;

ஆங்கிலப் பிரசாரத்தில் மனம் படிந்தவர்கள். இப்
படிப்பட்டவர்கள் முக்கூட்டு வல்லரசுகளின் தன்மை
களைப் பற்றிச் சந்தேகிக்கிருர்கள்.

இவர்களை நான் ஒன்று கேட்கிறேன்: என்மேல்
இவர்கள் நம்பிக்கை வைக்கட்டும். ஏன்? சக்தி
வாய்ந்த பிரிட்டிஷ் சர்க்கார் எனது வாழ்நாள் முழு
வதும் என்னை அல்லல்படுத்திக்கொண்டே வந்திருக்
கிறது. பதினெரு முறை என்னைச் சிறைப்பிடித்
திருக்கிறது அப்படியிருந்தும் அதனுல் என்னை மனம்
உடையச் செய்துவிட முடியவில்லை. இந்த மண்மேல்
உள்ள எந்தச் சக்தியும் என்னை அப்படிச் செய்து
விட முடியாது. இனி கபட நாடகதாரர்களான
தந்திரசாலிகளான சமயத்துக்குத் தகுந்தபடி சமா
ளித்துக்கொள்ளக்கூடிய, அசகாய சூரர்களான
பிரிட்டிஷ் அரசியல்வாதிகள் என்னைத் தாஜாபண்
ணிக்கொடுக்க முடியவில்லை யென்ருல், வேறு யாரும்
அப்படிச் செய்துவிட முடியாது.

நான் போய்ப் பார்த்த அச்சு நாடுகள் எல்லாவற்றி
லும், இந்தியாவைப் பொறுத்த அளவில், அங்கு நிலவிய
பொதுஜன அபிப்பிராயத்தை நான் மிகக் கவனமாய்
ஆராய்ந்ததோடு நின்றுவிடவில்லை. இந்த மூன்று சர்க்
கார்களின் கொள்கை, மன நிலைமை ஆகியவற்றைப்பற்றி
யும் நான் நேரடியாகத் தெரிந்து வைத்துக்கொண்டேன்.

நண்பர்களே! 16-6-1943-ல், சாம்ராஜ்ய சபையில்
(டியெட்டில்) பிரதமர் ட்டோஜோ மிகச் சமீபத்தில்
செய்த பிரகடனத்தை நேரேயிருந்து கேட்கும் உரிமை
எனக்குக் கிடைத்தது. ஜூன் 14-ல் அவரைக் கண்டு
பேசியதற்குப் பிறகு இது நடந்தது. இந்தப் பிரகடனம்
முற்றும் தெளிவானது. பூசி மெழுகாமல், நேரடியாக
விஷயத்தைச் சொல்லுகிறது. இந்த அறிக்கை புதுச்
சகாப்தத்தை உண்டாக்கிவைக்கும் பிரகடனத்தைக்
கொண்டது என்ற முறையில், சரித்திரத்தில் என்றென்
றும் நிலைபெற்றிருக்கும். “ இந்திய மக்களின் விரோதிக
ளாகிய ஆங்கிலோ-சாக்சன் தூண்டுகோல் சக்திகளை இந்



தியாவினின்றும் வெளியேற்றவும், அப்புறப்படுத்தவும்
பூரணச் சுதந்திரத்தை அந்தச் சொல்லின் முழுக் கருத்
தின்படி இந்தியா அடையவும் இந்தியாவுக்கு எல்லாவித
மான உபகரணங்களையும் வழங்க ஜப்பான் உறுதியாகத்
தீர்மானித்திருக்கிறது ” என்று மேன்மை தங்கிய பிரத
மர் இதில் ஓர் இடத்தில் சொன்னுர்.

நண்பர்களே! சில அச்சு எதிர்ப்பு ஜனங்கள் இந்
திய மக்களைத் தப்பு வழியில் இழுத்துச் செல்ல முயன்று
வந்திருக்கிருர்கள் என்று எனக்குத் தெரியும். அதை
அவர்கள் எப்படிச் செய்கிருர்கள் தெரியுமா? இந்தியா
வின் சுதந்தரக் கோரிக்கைக்கு ஆதரவு அளிக்கக்கூடிய
அளவுக்கு அச்சு வல்லரசுகள் தாராளத்தன்மை பெற்று
விடுவது நம்ப முடியாத சங்கதி என்று அவர்கள் சொல்
லாமல் சொல்லுகிருர்கள். எனக்கோ அச்சு வல்லரசு
ஒவ்வொன்றின் செயல் நிலையும் பரம்பரை போக்கின்படி
பார்க்கும்போது இயல்பாகவும் எளிதில் புரிந்துகொள்
ளக்கூடியதாகவுமே தோன்றுகிறது. இன்று அச்சு வல்
லரசுகளுக்கும் இந்தியாவுக்கும் ஒரு பொது எதிரிதான்
இருக்கிருன். ஆகவே, இவர்களிடையே பொது நலனும்
பொதுக் குறிக்கோளும் இருக்கின்றன. தங்களுடைய
சொந்த நலனை உத்தேசித்தும் எதிர்காலத்தில் தங்களு
டைய சொந்த விடுதலையையும் க்ஷேமத்தையும் உறுதிப்
படுத்திக் கொள்ளுவதின் பொருட்டும் பிரிட்டிஷ் ஏகாதி
பத்தியத்தை அச்சு வல்லரசுகள் முறியடித்து வீழ்த்தி
யாகவேண்டும். அந்தக் குறிக்கோளைச் சாதித்துக்கொள்
வதற்கு ஆங்கிலோ-அமெரிக்க வல்லரசுகளையும் அவற்
றின் செல்வாக்கையும் இந்தியாவிலிருந்து அச்சு வல்லரசு
கள் துரத்தியாகவேண்டும். பிரிட்டிஷ் நுகத்தடியின்கீழ்
தலைவணங்கிக் கிடக்க இந்திய மக்கள் விரும்பியபோதி
லும், அச்சு வல்லரசுகள் இதைச் செய்தே ஆகவேண்
டும். இந்திய மக்கள் சுதந்தரம் பெறுவதற்காகப்
போராடி வந்திருக்கிருர்கள் என்பதைத் தெரிந்திருக்கிற
முறையில், அச்சு வல்லரசுகளின் அனுதாபம் இந்தியர்
கள்பால் இருப்பது இயல்பே.

மேலும், இந்தியாவானது பிரிட்டிஷ் ஏகாதிபத்தியத்திலிருந்து தனது தேசியச் சுயேச்சை உரிமையைப் பெற்றுக்கொள்ளக் கூடுமானால், அச்சு வல்லரசுகள் உள்பட உலகம் முழுவதுக்குமே அது நன்மையாகும். எனவே, இந்தியச் சுதந்தர இயக்கத்தினிடம் இவ்வளவு தூரம் நட்பு முறையில் அச்சு வல்லரசுகள் ஏன் நடந்துகொள்ள முற்பட்டிருக்கின்றன என்பது புத்திக்கும், பகுத்தறிவுக்கும் எளிதில் புலப்படவே செய்யும்.

தங்களது அச்சு எதிர்ப்பு, ஜப்பானிய எதிர்ப்புப் பிரசாரங்களில் பரிபூரண முட்டுக்கட்டை ஏற்பட்டுவிட்டதைக் கண்ட ஆங்கிலோ-அமெரிக்க ஏகாதிபத்திய வாதிகளும், அவர்களுடைய கூலிகளும் தமக்குள்ள கடைசித் தந்திரத்தைக் கையாளத் தொடங்கிவிட்டார்கள்.

மீண்டும் மீண்டும் வெளிவந்த பிரதமர் ட்டோஜோவின் பிரகடனங்களைப் படித்துக்காட்டி அவர்கள் என்ன சொல்லிக்கொண்டிருக்கிறார்கள் தெரியுமா? எதையும் நம்பிவிடக்கூடிய அப்பாவி மக்களை, வாய்ச் சாலக்கால் ஏமாற்றிவிடுவதற்காக அமைந்த கொள்கைகளின் பிண்டாகாரமான உருவங்களாம் இந்தப் பிரகடனங்கள்! சம்ஸ்கிருதத்தில் ஒரு பழமொழி உங்களுக்கெல்லாம் தெரியும்: '**ஆத்மலாத் மன்யதே ஜகத்**'. இதன் அர்த்தமா? தன்னைப் போலவே உலகம் பூராவும் இருக்கும் என்று மனிதன் நினைப்பானாம்; அதுதான் இதன் அர்த்தம். தாங்களோ ஆஷாடபூதிகள். மற்றவர்களெல்லாருமே அஷாடபூதியென்று இவர்கள் நினைக்கிறார்கள்.

அது எப்படியும் போகட்டும்; பிரதமர் ட்டோஜோ இந்த மோசமான பிரசாரத்துக்குச் சரியான பதில் கொடுத்து நொறுக்கித் தள்ளியிருக்கிறார். இந்த வருஷ முடிவுக்குள் பர்மாவும், பிலிப்பீன் தீவுகளும் மெய்யாகவே சுதந்தரம் பெற்றுவிடுமென்று உலகம் பூராவும் அறியும்படி அவர் எடுத்துச் சொல்லி பதில் இறுத்திருக்கிறார். இந்த வருஷம் முடிந்தவுடன், தங்களது அச்சு எதிர்ப்புப் பிரசாரத்துக்கு நமது எதிரிகள் புதிதாக என்



னென்ன வாதங்களைத்தான் உண்டுபண்ணுவார்களோ, தெரியவில்லை.

தேச மக்களே! உங்களுக்குத் தெரியும்: 1940 முடியும் தறுவாயில், மகாத்மா காந்தி கடைசிச் சட்டமறுப்பு இயக்கத்தைத் தொடங்கிவிட்டார் என்று கண்டபோது இந்திய மக்களின் கண்ணியமும், கௌரவமும் மாசு போக்கிக் காக்கப்பெற்றுவிட்டனவென்று நான் உணர்ந்தேன். இந்தியப் புரட்சியை இன்னும் பெரிய அளவில் திட்டம்போட்டு நடத்தவேண்டியது அவசியமாயிற்று. அது பலன் தரும்படிச் செய்ய அதை இன்றும் பயனுள்ள வேகத்தில் அமைக்கவேண்டியது அவசியமாயிற்று.

ஆனால் அதற்குச் சர்வதேச நிலைமையைப் பற்றிய விவரம் தெரிந்திருக்கவேண்டும். அச்சு நாடுகளுடன் தொடர்பு ஏற்படுத்திக்கொள்ள வேண்டும். வெளிநாடுகளிலுள்ள நமது தேச மக்களின் நேரடியான செயலின் பாற்பட்ட ஒத்தாசையும் பெற்றாகவேண்டும்.

இந்த நோக்கங்களெல்லாம் பரிபூரணமாகச் சாதனையாகிவிட்டனவென்று உங்களுக்கு விளம்பக்கூடிய நிலையில் இன்று நான் இருக்கிறேன்.

முதலாவது, சர்வதேச நிலைமையை நாம் நேருக்கு நேராக அறிவோம். அதனால், இறுதியில் வெற்றி நமக்கே என்பதில் நமக்கு நம்பிக்கை உண்டு.

இரண்டாவது, பொதுவாக அச்சு வல்லரசுகளும், குறிப்பாக ஜப்பானும் தமது சுதந்தரப் போராட்டத்துக்கு இந்திய மக்களுக்கு இப்போது உள்ள மிகச் சிறந்த கூட்டாளிகளும், நண்பர்களும் ஆவார்கள் என்பதை நாம் நேருக்கு நேராக அறிவோம்.

மூன்றாவது, நமது எதிரிகளின் நேரடியானபிடிப்பின் கீழ் உள்ள நாடுகளில் வசிக்காமல் இந்தியாவுக்கு வெளியே உள்ள நாடுகளில் வசிக்கும் எல்லா இந்தியர்களும் நன்றாய் இணைக்கப்பெற்ற ஒரு ஸ்தாபனத்துள் இப்போது ஒருங்கு சேர்க்கப்பெற்றுள்ளார்கள். இந்தியாவுக்குள்ளே நடந்தேறி வருகிற மாறுபாடுகளை அவர்

கள் கவ்னமாய்க் கவனித்து வருகிறார்கள். மறுபுறத்தில், சர்வ தேச நிகழ்ச்சிகளுடன் அவர்கள் தடையில்லாமல் தொடர்பு வைத்துக்கொண்டு வருகிறார்கள்.

இந்தியாவில் உள்ள நீங்கள் சிறைப்படுத்தப்படுகிறீர்கள்; சதா உங்களுக்குத் தொல்லைதான்; மிருகம் மாதிரி கொடுமைப்படுத்தப்படுகிறீர்கள். இந்த நிலைமையிலும் நீங்கள் போராடிக்கொண்டேயிருக்கிறீர்கள். சரியான சமயத்தில், அதிகப்பட்ச உதவியை உங்களுக்கு அளிப்பதற்காக வெளிநாடுகளிலுள்ள மேற்படி இந்தியர்கள் எல்லா வகையான முயற்சிகளும் செய்து வருகிறார்கள்.

நண்பர்களே! உங்களுக்கு ஞாபகம் இருக்கும். கடந்த காலத்தில் நான் உங்களுக்கு உறுதி கூறியிருக்கிறேன். ஒருமுறை அல்ல பலமுறை சமயம் வருகிறபோது நானும் என்னைப் போன்ற இன்னும் பலரும் உங்கள் பக்கத்தில் வந்து சேர்ந்து, உங்களது துயரத்திலும் சண்டையிலும் உள்ள புகழில் உங்களுடன் தோளோடு தோள் நின்று பங்கு பெறுவோம். அத்துடன் வெற்றிக் களிப்பில் உங்களுடன் பங்கு பெறுவோம்.

பிரிட்டிஷ் ஒலிபரப்புக் கழகமானது அதன் பேச்சாளர் ஸ்ரீ பிரென்வுட் மூலமாக என்னைப்பற்றி ஒன்று சொல்லியிருக்கிறது. சொன்ன சொல்லைக் காப்பாற்றுவதில் எனக்குக் கொஞ்சம்கூடச் சிரத்தையில்லையாம். அப்படி அது சொல்லியிருக்கிறது. பி. பி. ஸி. (பிரிட்டிஷ் பிராட்காஸ்டிங் கார்ப்பொரேஷன்)-க்கு நான் ஒன்றும் உறுதிமொழி கொடுக்கவில்லை. என்னுடைய தேச மக்களுக்குத்தான் நான் உறுதிமொழி கொடுத்தேன். காலம் நிறைவு பெறுகிறபோது என் உறுதி மொழியை நிறைவேற்றி வைப்பேன் என்பதை இந்த ஒலிபரப்புக் கழ்கத்தாருக்குச் சொல்ல விரும்புகிறேன்.

இப்போது நான் மூன்றாவது கட்டத்தில் கால் வைத்துவிட்டேன். இந்திய எல்லையிலிருந்து நான் அதிகத் தூரத்தில் இல்லை. 1941 ஜனவரி முதற்கொண்டு பூமியிலுள்ள எந்தச் சக்தியும் எனது நடமாட்டங்களைத்



தடைபடுத்த முடியவில்லை. நமது தேசியப் போராட்டத்தின் கடைசிக் கட்டத்தில் பங்கெடுத்துக்கொள்ளும் பொருட்டு மீண்டும் நாம் இந்திய எல்லையைக் கடக்காமல் நம்மைத் தடுக்கப் பூமியிலுள்ள எந்தச் சக்தியாலும் முடியாது.

தேச மக்களே நண்பர்களே! முடிவாகச் சொல்லுகிறேன். சிறையிலும் விசாரணைக் கைதி முகாமிலும் உள்ள நம் தோழர்களுக்கு உங்கள் மூலமாக எனது சகோதர வாழ்த்துக்களை அனுப்புகிறேன். அவர்களை உற்சாகமாக இருக்கும்படி சொல்லுகிறேன். நமது தேசத்தின் கௌரவத்தையும் கண்ணியத்தையும் அவர்கள் நிலைநாட்டிவிட்டார்கள். தாங்கள் பட்ட கஷ்டங்களின்மூலம் அடிமைப்படுத்தப்பட்ட இந்தியா பிரிட்டனுடன் போரில் இறங்கி நிற்கிறது என்பதை உலகம் முழுவதற்கும் அவர்கள் பிரகடனம் செய்துவிட்டார்கள்.

நானும் இந்தியாவுக்கு வெளியே இருந்து வேலை செய்துகொண்டிருக்கும் மற்ற எல்லாரும் அவர்களைப் பற்றிப் பெருமை அடைகிறோம். அவர்களுடைய கம்பீரமான தியாகத்துக்கு எங்களது பணிவான வணக்கத்தைத் தெரிவிக்காமல் ஒரு நாள்கூடக் கழிவதில்லை. மீண்டும் அவர்களுக்கு உறுதி கூறுகிறேன். அவர்கள்பட்ட கஷ்டங்கள் வீண்போக மாட்டா.

இந்தியா சுயேச்சை பெறும், அதுவும் கூடிய சீக்கிரம். சுயேச்சையான இந்தியா தனது சிறைவாசல் கதவுகளைப் பரக்கத் திறந்துவிடும். அப்போது அதன் தகுதி வாய்ந்த மக்கள் சிறைக் குச்சு அறைகளின் இருட்டினின்றும் வெளிவந்து சுதந்தரம், களிப்பு சுய பரிபூரணம் என்ற ஒளியினுள் கால் எடுத்துவைப்பார்கள்.

**புரட்சி வாழ்க!**

**சுதந்தர இந்தியா வாழ்க!**

# பிரிட்டிஷ் ஏகாதிபத்தியத்தால் இந்தியாவுக்கு என்ன?

---

### 19-6-1943-ல் ட்டோக்கியோவில் நடைபெற்ற பத்திரிகை மாநாட்டில் விடுத்த அறிக்கை

கனவான்களே!

உங்களுக்கு எனது மனமார்ந்த வாழ்த்துக்கள். இதில் எனக்கு மிகுந்த மகிழ்ச்சியுண்டு என்பதைத் தொடக்கத்திலேயே நான் சொல்லி விடலாம். ஏனென்றால், நெடுங்காலமாக நமது நாட்டில் நான் பத்திரிகைத் தொழிலுடன் தொடர்பு வைத்து வந்திருக்கிறேன்.

உலகத்தின் இந்தப் பகுதிக்கு அதுவும் இந்த மாதிரிச் சந்தர்ப்பத்தில் நான் வரக் காரணம் என்னவென்று நீங்கள் அதிசயிக்கலாம். நெடும் பல ஆண்டுகளாக இந்தியாவிலும் பர்மாவிலும், பிரிட்டிஷ் சிறைகளே எனது வாசஸ்தலமாக இருந்து வந்துள்ளன. ஆனால். இன்று இந்தியாவில் சோம்பி சிறை வீட்டில் குந்திக் கிடக்காமல், நிப்பொன் நகரின். ஹிருதய ஸ்தானத்தில் உங்கள் முன் நின்றுகொண்டிருக்கிறேன். இது எதைக் குறிக்கிறது? எனது நாட்டில் எங்கனும் பரவி நிற்கும் புது இயக்கத்தின் சின்னமாகவே இந்தநிலைமை விளங்குகிறது.

இரண்டு வருஷங்களுக்கு முன்பு, பிறந்த நாட்டையும் வீட்டையும் விட்டு நான் கிளம்பியது எனது நாட்டு மக்களின் விருப்பத்திற் கிணங்கவேதான். அன்று முதல் நான் என்னென்ன செய்து வந்துள்ளேனோ அவை ஒவ்வொன்றும் அவர்களுடைய விருப்பத்திற் கிணங்கவே செய்யப் பெற்று வந்திருக்கின்றன.

இருபது வருஷ காலத்துக்கு அதிகமாக, விடுதலை பெற என் தலைமுறை மக்கள் கடு முயற்சி செய்து வந்



திருக்கிறார்கள். இப்போது கை கூடியிருக்கும் வேளைக்காக, அவர்கள் ஆவலோடு காத்திருந்தார்கள். இந்த வேளைதான் இந்திய மக்களுக்குச் சுதந்தரத்தின் அருணோதய நேரம்.

நமக்கு நன்றாய்த் தெரியும். இன்னொரு நூறு வருஷத்துக்கு இந்த மாதிரிச் சந்தர்ப்பம் மீண்டும் வாய்க்கப் போவதில்லை. ஆகையால், இதை நாம் பரிபூரணமாகப் பயன் படுத்திக் கொள்ளப் போகிறோம்.

கனவான்களே! ஜனநாயகத்தின் சுதந்தரத்துக்காக நடத்துகிற யுத்தத்தைப் பற்றி நாம் அடிக்கடி கேட்டிருக்கிறோம். ஆனால், நீங்கள் மிக நன்றாய் எண்ணிப் பார்க்க முடியும். சில வல்லரசுகள் இருக்கின்றனவே அவை ஜனநாயகம், சுதந்தரம் என்றெல்லாம் பேசுகின்றன; மனித ஜாதியில் ஐந்தில் ஒரு பகுதிப் பேருக்கு இதே ஜனநாயகத்தையும் சுதந்தரத்தையும் அவை அளிக்க மறுக்கின்றன. இவைகளைப் பற்றி என் நாட்டு மக்கள் என்ன நினைக்கிறார்களென்று நீங்கள் மிக நன்றாய்க் கருதிப் பார்க்க முடியும். விடுதலை வேண்டுமென்று கேட்டால், அதற்கு இந்த வல்லரசுகள் கொடுக்கும் பதில் என்ன தெரியுமா? கொடூரச் செயல்கள், மிருகத் தனமான நடவடிக்கைகள், ஆயுதப் பல மற்ற ஆண் பெண் குழந்தைகளைச் சகட்டு மேனிக்குக் கொன்று தீர்ப்பது-இவை தான் பதில். பிரிட்டிஷ் ஏகாதிபத்தியம் என்றால், இந்தியாவில் அதற்கு அர்த்தம் என்ன? ஒழுக்கத்தின் வீழ்ச்சி, பண்பாட்டின் அழிவு, பொருளாதர ஏழ்மைத்தனம்; அரசியல் அடிமைத் தனம்.

எனவே, கடைசியில் பிரிட்டிஷ் பிணைப்பை ஒழித்துக் கட்ட வேண்டுமென்று இந்திய மக்கள் பக்திப் பூர்வமாக உறுதி கொண்டு நிற்பதில் என்ன அதிசயம்? இப்போது நடக்கும் உலகப் போராட்டத்தால் இந்திய ஜனங்கள் என்ன தெரிந்து கொள்ளுகிறார்கள்? ஏற்கெனவே உள்ள நிலைமையை விடாமல் கொண்டு செலுத்த விரும்புகிற சக்திகளுக்கும், அந்த நிலைமையைக் குப்புற

வீழ்த்தத் தீர்மானித்திருக்கும் சக்திகளுக்கும் இடையே நிகழும் போராட்டமே இது என்று அவர்கள் கொள்ளுகிறார்கள்.

இத்தகைய போராட்டத்தில் மாறுதல் செய்வதை விரும்புகிற-புது முறை அமைக்க விரும்புகிற-வல்லரசுகளின்பால் எங்கள் அனுதாபம் சார்ந்திருந்தால், அதற்காக யாராவது எங்களைக் குறை கூற முடியுமா? அதுவும் எங்களது விடுதலைக் கோரிக்கையை இந்த வல்லரசுகள் தாங்கி நிற்கும் போது எங்களுடைய அனுதாபமானது உற்சாகமான ஆதரவாகப் பரிணமித்து விடுவது இயல்புதானே?

எங்களுடைய சாசுவதமான பகைவனுக்கு எதிராகப் போர் தொடுத்ததன் மூலம், முக்கூட்டு வல்லரசுகள் இந்தியப் போராட்டத்துக்கு மிகப் பெரிய உதவி அளித்துள்ளன. அவை என்றென்றைக்கும் எங்களின் நன்றியறிதலைப் பெற்றுள்ளன. ஏனென்றால், வெறும் அனுதாபத்துடன் நில்லாமல் செயல் பூர்வமான ஆதரவும் ஒத்தாசையும் நல்கியுள்ளன.

இருந்த போதிலும் எங்கள் சுதந்தரத்துக்காக எங்கள் சொந்த ரத்தத்தைக் கொண்டு கடன் கழிப்பது எங்கள் கடமை. எங்கள் உழைப்பாலும் தியாகத்தாலும் நாங்கள் வெற்றிப் பரிசிலாகக் கொள்ளப் போகும் சுதந்தரத்தை எங்கள் சொந்தப் பலத்தாலேயே பேணிக் காத்துக்கொள்ள முடியும்.

எனவே நமது பொதுப் பகைவனுக்கெதிராக நாங்கள் போரில் தீவிரமாகப் பங்கெடுத்துக்கொள்ள வேண்டுமென்று பலமாக உணர்கிறோம்.

வாளேந்தி நிற்கும் விரோதியுடன் வாள் கொண்டே சமரிட வேண்டும். அரசியல் ஒத்துழையாமை ஆயுதம் தாங்கிய போராட்டமாக வளர்ச்சியுற வேண்டும். பெரும்படியான முறையில் இந்திய மக்கள் தீக்குளிப்பு ஞானஸ்நானம் பெறுகிறபோது மட்டுமே, அவர்கள் தங்களது சுதந்தரத்துக்குத் தகுதியுடையவர்களாக ஆவார்கள்.

# நமது கவலை

## 21-6-1943-ல் ட்டோக்கியோவிலிருந்து ஒலி பரப்பிய பேருரை

நாட்டு மக்களே, நண்பர்களே!

கடைசியாக உங்களுடன் நான் பேசியதற்குப் பிறகு பொதுவாக யுத்தநிலைமையில் முக்கியமான மாறுதல் ஏதும் நடந்துவிடவில்லை. மேற்கு அரங்கத்தில் ஆங்கிலோ-அமெரிக்கர்கள் தொடர்ந்து சென்று மத்திய தரைக் கடலிலுள்ள தீவுகளைக் கைப்பற்றி அங்கே அமர்ந்து கொண்டு விட்டார்கள்.

ஆனால் இந்தியர்களாகிய நமக்கு ட்யூனிஸ் ட்டிம்பக்டூ அல்லது லாம்பெடுசா அல்லது அலாஸ்கா போன்ற இடங்களில் நடக்கிற விஷயத்தைப் பற்றி அவ்வளவு அக்கறை இல்லை. இந்தியாவுக்குள்ளே என்ன நடக்கிறது? நம்முடைய எல்லைக்கு அப்பால் என்ன நடக்கிறது? இதுதான் நமக்கு முக்கியம்.

பர்மாவை மீண்டும் கைப்பற்றிக் கொண்டு விட்டதாகப் பிரமாதமாக விளம்பரம் செய்தார்கள். அதுவோ வெட்கக் கேடான வாபஸ் வாங்குகிற செயலில் முடிந்து விட்டது. இதுதான் நமக்கு முக்கியம். நமது கிழக்கு எல்லையில் நிப்பொன் ராணுவம் இருக்கிறது. நிப்பொன் அரசாங்கமானது அதன் தகுதி வாய்ந்த பிரதம மந்திரி சேனாபதி ட்டோஜோவின் மூலம் இந்தியச் சுதந்தரத்துக்கு அதன் முழு ஆதரவையும் அளிக்கத் தயார் என்றும் ஆங்கிலோ-அமெரிக்கச் சக்திகளையும் அவற்றின் செல்வாக்கையும் இந்தியாவினின்றும் துரத்தியடிப்பதற்கு அது உறுதியாகத் தீர்மானித்திருக்கிறதென்றும் அடிக்கடி சொல்லியிருக்கிறது. கடைசியாக இந்தியப் புரட்சிக்காரர்களுக்கு அவர்களது பூரணத் தேசியப் போராட்டத்துக்குத் தமது செயல் பூர்வமான ஒத்தா

சையை நிப்பொனியப் பிரதம மந்திரி அளித்திருக்
கிறார்.

இன்னொரு விஷயமும் இந்தியாவுக்கு வெளிப்படை
யான முக்யத்துவம் வாய்ந்தது. நம் நாட்டிலுள்ள பிரிட்
டிஷ் ஏகாதிபத்தியக் கொள்கையை வேரறுப்பதுதான்
அது.

உங்களுக்குத் தெரியும்; எனக்குத் தெரியும். இந்த
யுத்தம் மூண்டபோது பிரிட்டிஷ் சர்க்கார் ஏதாவது
பெரும் சங்கடத்தில் மாட்டிக் கொள்ளு மென்று நம்
நண்பர்களில் சிலர் நினைத்தார்கள். பிரிட்டிஷ் இந்தியா
வில் பெரும் பான்மை மாகாணங்களில் மந்திரிப் பதவி
களை நிர்வகித்து வந்த கட்சியுடன் சமாதானத்துக்கு
வந்தாக வேண்டிய நிலைமை அதற்கு இயல்பாக வந்தே
தீருமென்றும் அவர்கள் எண்ணினார்கள்.

இந்த நண்பர்களின் எண்ணப்படி பார்த்தால், காங்
கிரஸ் செய்யவேண்டியதெல்லாம் என்ன? ‘ஏதாவது
செய்யுங்கள்’ என்று பிரிட்டிஷ் சர்க்கார் வாயைத்
திறந்து சொல்லும் வரையில் நாம் மூச்சைப் பிடித்துக்
கொண்டு, பொறுத்திருக்க வேண்டியதே.

ஒரு வருஷ மாயிற்று; பிரிட்டிஷ் கொடுங்கோலர்
களுக்கு மனமாறுதல் ஏற்பட்டதாக எவ்வித அறிகுறி
யும் காணோம். அப்புறம் இந்த நண்பர்கள் வேறொரு
முடிவுக்கு வந்தார்கள். பிரிட்டிஷ் சர்க்கார்மீது லேசாகப்
பலப் பிரயோகம் செய்து, சமரசம் கொண்டுவர
முயன்று பார்த்தார்கள். இதற்கான நடவடிக்கைகள்
எடுத்துக்கொண்டார்கள். உருப்படியான பயன் ஒன்றும்
விளையவில்லை.

சிங்கப்பூர் வீழ்ந்தது. பிரிட்டிஷ் ராணுவச் சரித்தி
ரத்தில் இது மிகப் பெரிய விபத்து. வின்ஸ்டன் சர்ச்சி
லும், ரூஸ்வெல்ட்டும் அப்படித்தான் சொல்லுகிறார்கள்.
பர்மாவும் போயிற்று: இவைகளால்கூட குறிப்பிடத்தக்க
மாறுதல் எதுவும் ஏற்பட்டுவிடவில்லை. பிரிட்டிஷ் ஏகாதி
பத்தியம் அசைந்து கொடுக்காமல், கல்லுப் பிள்ளையார்
மாதிரி இருக்கிறது. யாரும் வரலாம், யாரும் போகலாம்;



ஏகாதிபத்தியங்கள் வரலாம், ஏகாதிபத்தியங்கள் போக
லாம். ஆனால், பிரிட்டிஷ் ஏகாதிபத்தியம் என்றென்றைக்
கும் இருந்துகொண்டே யிருக்கும். நம்மை ஆளுகிறவர்
கள் இன்னும் இப்படித்தான் நினைத்துக்கொண்டிருக்
கிறார்கள்.

இதை நீங்கள் ராஜதந்திர அறிவுச் சூன்யம் என்று
சொல்லலாம்; கோடைக்காலப் பைத்தியக்காரத்தனம்
என்றுகூடச் சொல்லலாம். ஆனால், இந்தக் கோடைக்
காலப் பைத்தியக்காரத்தனத்துக்குத் தனியான விளக்
கம் ஒன்று இருக்கவே இருக்கிறது.

இந்தியாவிலிருந்துதான் பிரிட்டிஷ் சாம்ராஜ்ய
மானது வளர்ந்திருக்கிறது. பிரிட்டிஷ் மக்கள், அவர்கள்
எந்த அரசியல் கட்சியைச் சேர்ந்தவர்களாயினும் சரி,
இந்தியாவின் மூலாதாரச் செல்வங்கள் அனைத்தையும்
தாங்கள் அறுவடை செய்தாகவேண்டும் என்று அறி
வார்கள். இன்று அவர்களுக்குச் சாம்ராஜ்யம் என்றால்
இந்தியா என்றுதான் அர்த்தம். இப்போது அவர்கள்
அதிக வெறியுடன் சண்டை போடுகிறார்கள். எதற்காக?
அந்த ஏகாதிபத்தியத்தைக் கட்டிக் காப்பதற்காக. இந்தி
யாவின் சுதந்திரத்தை அங்கீகரிப்பதற்குக் கொடுக்கும்
விலையால், போரில் வெற்றி கிட்டலாம். ஆனால், அதனால்
ஏகாதிபத்தியம் நஷ்டமாகும்.

இதன் பயனாக, இந்த யுத்தப் போக்கில் பிரிட்ட
னுக்கு என்ன கதி நேர்ந்தபோதிலும் சரி, இங்கிலீஷ்
காரனானவன் தனது அந்தியக் காலம்மட்டும், தனது
ஏகாதிபத்தியத்தை தன்னுடனேயே வைத்துக்கொள்ள,
அதாவது இந்தியாவை விடாமல் பற்றி வைத்துக்
கொள்ள முயல்வான்.

ஆகவே, உங்களிடம் நான் வெளிப்படையாகப்
பேசலாமானால், இந்தியாவின் சுதந்தரத்தைப் பிரிட்டிஷ்
அரசியல்வாதிகள் அங்கீகரிக்க மறுப்பதற்குக் காரணம்,
கோடைக்காலப் பித்தமன்று. அவர்களுடைய நிலைமை
என்னவோ படுமோசமானதுதான். தனது சாம்ராஜ்யத்
தைச் சுயமாக இங்கிலீஷ்காரனே விட்டுக்கொடுத்து

விடுவானென்று நாம் எதிர்பார்க்கிறோமே, அதுதான்
கோடைக்காலப் பித்துக்கொள்ளித்தனம் !

பிரிட்டிஷ் ஏகாதிபத்திய வாதிகளுக்கு எதிராக இன்
னொரு விஷயமும் இருக்கிறது.

அன்றொரு நாள் ஜெர்மனியின் அன்னிய நாட்டு
மந்திரி சொன்னமாதிரி, இந்த யுத்தத்தின்போது பிரிட்
டிஷ் ஏகாதிபத்தியமானது தனது பிரதேச எல்லையில்
ஒரு பகுதியைத் தன் எதிரிகளிடம் இழந்து, மற்றப் பகுதி
யைத் தன் நண்பர்களிடம் இழந்துவிட்டது. மேலும்,
ஏகாதிபத்தியத்தை விடாப்பிடியாய்க் கொண்டுசெலுத்தி
வர வேண்டுமென்ற பெரு முயற்சியில் 'ஜான்புல்'லாகிய
பிரிட்டன் ரத்தம் கக்கி, வெளுத்துப் போய்விட்டது.
அந்தப் பிரம்மாண்டமான நஷ்டத்துக்கு ஈடு செய்யும்
பொருட்டு யுத்த முயற்சிக்காக அந்தக் கொடிய முறை
யில் இந்தியாவை மேலும் மேலும் சுரண்டிக்கொண்
டிருக்கிறது.

ஆகவே, ஏகாதிபத்தியத் தர்க்க ரீதிப்படி, இந்த யுத்
தம் எப்படி முடிந்தாலும் இந்தியாவின் மீதுள்ள தங்கள்
பிடியை இறுக்கமாய் நெருக்கிக்கொள்ளவே அவர்கள்
முயல்வார்கள்.

இதன் பயனாக, நமக்கு ஒரு விஷயம் பட்டப் பகல்
போல தெளிவாகிவிட வேண்டும். இங்கிலாந்தானது
ஒரு நாளைக்கு இந்தியாவின் சுதந்தரத்தை அங்கீகரிக்கும்
படிச் செய்துவிடலாம் என்ற மாய நம்பிக்கையை எந்த
இந்தியனும் மனதில் கொள்ளலாகாது.

ஆனால், ஒன்று. இதன் அர்த்தமென்ன ? இந்தியா
வுடன் பிரிட்டிஷ் அரசியல்வாதிகள் ஒருபோதும் சமரசத்
துக்கு வரமாட்டார்களென்பதா? அப்படியல்ல.

இன்னொரு சமரச முயற்சி எந்தச் சமயத்திலும்
செய்யப்பெறலாம். அது ராணுவத் தோல்வி நிலை
காரணமாக ஏற்பட்ட முடையால் நிகழலாம்; அல்லது,
இங்கிலாந்திலும், அமெரிக்காவிலும் உள்ள மிதவாதப்
போக்கினரைத் தட்டிக் கொடுப்பதற்காகச் செய்யப்



பெறலாம். ஒன்றை மட்டும் நான் குறிப்பாகச் சொல்ல
விரும்புகிறேன்: சமரசத்தின் மூலம் பிரிட்டிஷ் அரசியல்
வாதிகள் ஒருநாளும் இந்தியாவின் சுதந்தரத்தை அங்கீ
கரித்துக்கொள்ளப் போவதில்லை. இந்திய மக்களை ஏத்தி
விடத்தான் முயல்வார்கள்; இதைத்தான் நான் குறிப்
பிட்டுக் காட்ட விரும்புகிறேன்.

நீள நெடுங் காலத்துக்குப் பேச்சு வார்த்தைகள்
நடப்பது எதற்காக என்று நினைக்கிறீர்கள்? சுதந்தர
இயக்க வேலைகளைக் காடுமாற்றி வழி கடத்திவிடுவதற்கு
அமைந்த திட்டம்தான் இவை. இவற்றின் மூலம் தேசிய
உறுதிப்பாட்டின் அடிப்படை கலகலக்கிறது. 1941 டிசம்
பர் 1942 ஏப்ரல் அப்போதெல்லாம் அப்படித்தானே
செய்தார்கள் ?

போன வருஷம் சர் ஸ்டாஃபோர்டு க்ரிப்ஸ் இந்தியா
வில் பேச்சு வார்த்தை நடத்தினார். அதனால், பிரிட்டிஷ்
சர்க்காருக்கு எந்த வகையிலும் தீங்கில்லை. நமது சுதந்
தரப்போராட்டத்தையே அது இடைமறுத்துத்தடுத்தது.

எனவே, இன்றைக்கும் சரி என்றைக்கும் சரி பிரிட்
டிஷ் ஏகாதிபத்தியத்துடன் எந்த விதமான சமரசத்துக்
கும் வருவோ மென்று நாம் நம்பி நிற்கவே கூடாது.
இப்படிப்பட்ட நம்பிக்கைக்கு ஒரே முழுக்காய் முழுக்
குப் போட்டுவிட வேண்டியதுதான். நம்முடைய சுதந்
தரத்தில் சமரசத்துக்கு இடம் இல்லை. பிரிட்டிஷாரும்,
அவர்களது கூட்டாளிகளும் இந்தியாவிலிருந்து எப்
போது போயே போய்விடுகிறார்களோ அப்போதுதான்
சுதந்தரம் கிட்டியதாக ஆகும். மெய்யாகவே விடு
தலையை வேண்டி நிற்கிறவர்கள் அதைப் பெறச் சண்டை
யிட்டாக வேண்டும்; அதை அடைவதற்குத் தங்கள்
சொந்த ரத்தத்தைப் பணயமாக செலுத்தியாக
வேண்டும்.

எனவே, இந்தியாவுக்கு உள்ளேயும் சரி; அதற்கு
வெளியேயும் சரி நமது முழுப் பலத்துடனும், முழு ஆக்
கத்துடனும் விடுதலைப்போராட்டத்தை நாம் தொடர்ந்து
நடத்துவோமாக.

அந்த நாள் வரு மட்டும், அசையாது நம்பிக்கை கொண்டு சமரை நாம் தொடர்ந்து நடத்துவோம். நாமும், நமது நண்பர்களும் கூட்டாளிகளும் ஒன்று சேர்ந்து தாக்கும்போது ஆங்கிலோ அமெரிக்க ஏகாதிபத்தியம் - பிரிட்டிஷ் சாம்ராஜ்யம் - சிதறுண்டு போகும். அதன் சாம்பலினின்றும் இந்தியாவானது ஒரு சுதந்தர நாடாக மீண்டும் வெளிக் கிளம்பும்.

இந்தப் போராட்டாத்தில் பின் வாங்குகிற வேலை இல்லை; தயங்குகிற வேலை இல்லை. நாம் முன்னோக்கி மேலே மேலே செல்ல வேண்டும். வெற்றி கிட்டி விடுதலை சித்திக்கும் மட்டும் விடக் கூடாது.

புரட்சி வாழ்க !

# 1943-ல் சியோனன் (சிங்கப்பூர்) கிழக்கு ஆசியப் பிரதிநிதிகள் மகாநாட்டுத் தலைமைப் பேருரை

கிழக்கு ஆசியாவில் உள்ள இந்தியத் தேசிய இயக்
கத்தின் தலைவனாக நியமிப்பதன் மூலம், எனக்கு நீங்கள்
அளித்துள்ள கௌரவத்துக்கு எனது உள்ளமார்ந்த
வணக்கத்தைத் தெரிவித்துக்கொள்ளுகிறேன். இந்தப்
பொறுப்பை நான் ஏற்றுக்கொள்கிறேன். ஆனால், மிக்க
ஆழ்ந்த பணிவுணர்ச்சியோடு இப்படி நான் செய்கிறேன்.
இந்தியாவிலும் அயல் இடங்களிலும் உள்ள எனது தேச
மக்களின் பரிபூரணத் திருப்திக்கு உகந்தபடி எனது கட
மையை நான் பூர்த்திசெய்ய இறைவன் எனக்குப் போதிய
பலத்தை அருள்வாராக !

இந்தியாவிலும் அயல் இடங்களிலும் இந்த யுத்தம்
தொடங்கியதி லிருந்து நான் பெற்ற அனுபவங்களை
யெல்லாம் உங்களுக்குச் சொல்லவா? உங்களுக்குச்
சொன்னால் என்னைப் போலவே நீங்களும் உணர்வீர்கள்:
இயற்கையின் அருள் வண்ணம் தீமையினின்றும் நம்
மைக் காத்து வெற்றிக்கும் விடுதலைக்கும் உரிய மார்க்
கத்தில் நமது முயற்சிகளை இட்டுச் செல்வதாகவே
தோன்றுகிறது. எல்லாம் நன்மைக்கே என்ற எனது
நல்ல நம்பிக்கையை இது அதிகரித்து எனது தன்னம்பிக்
கையை நூறு பங்கு பெருக்கியிருக்கிறது.

நண்பர்களே! சுதந்தர உபாசகர்களாகிய இந்தியர்
கள், செயலில் இறங்க வேண்டிய சமயம் வந்துவிட்டது.
எல்லாவற்றையும் விட முக்கியமாகப் போர் நெருக்கடிக்
காலங்களில் செயலில் இறங்க வேண்டியவன் செய்ய
வேண்டியது என்ன? ராணுவ ரீதியான கட்டுப்
பாடு வேண்டும்; எடுத்துக் கொண்ட லட்சியத்தி
னின்றும் அணுவளவும் வழுவாமல் விடாப் பிடியாய்

நிற்கும் கட்சி விசுவாசம் வேண்டும். எனவே, கிழக்கு ஆசியாவிலுள்ள எனது நாட்டு மக்கள் அனைவரும் ஒரு தலைமையின் கீழ், பிண்டாகாரமான ஓர் அணி வகுப்பாகச் சேர்ந்து நின்று, நமக்கு முன் நிற்கும் கடுமையான சமருக்குத் தயார் செய்துகொள்ளும்படி அவர்களை நான் அழைக்கிறேன். அவர்கள் அப்படிச் செய்வார்களென்பதில் எனக்கு நம்பிக்கை யுண்டு.

இன்று நாம் எடுத்துக்கொள்ளும் முக்கியமான நடவடிக்கை, நம் எல்லாரையும் இணைத்துப் பிணைக்க உதவுகிறது. கிழக்கு ஆசியாவில் உள்ள தேசபக்த இந்தியர்களை மட்டுமா? அல்ல. உலக மெங்கணு முள்ள நாட்டுப் பற்றுள்ள இந்தியர்கள் அனைவரையுமே இது இணைத்துப் பிணைக்கிறது என்று உங்களுக்கு நான் மகிழ்ச்சியுடன் சொல்லுகிறேன். வெளி இடங்களிலுள்ள சுதந்தர உபாசகர்களான இந்தியர்கள் அனைவரின் ஆதரவையும் நம்பிக்கையையும் இன்று நான் பெற்றிருக்கிறேன். நமது தாய் நாட்டின் அடிமைத் தளையை அறுப்பதற்காக இவர்கள் தீவிரமாக வேலை செய்துவருகிறார்கள். இன்று எதிரி நாடுகளில் வசித்து வரும் இந்தியர்கள், இந்தியாவின் விடுதலைக்காக நேரடியாக வேலை செய்ய முடியவில்லை. ஆனால் நாம் செய்யும் வேலையில் அவர்களுடைய ஆத்ம பலமும் சேர்ந்திருக்கவே செய்கிறது. எனக்குத் தெரிந்த வரையில், சமீபக் கால வரலாற்றில், அயல் நாடுகளில் வசிக்கும் இந்தியர்கள் ஒரே பொதுக் குறிக்கோளை அடைவதற்காக ஒரு ஸ்தாபனத்தின்கீழ் ஒன்று திரண்டிருப்பது இதுதான் முதல் தடவை.

இதைவிடச் சிறப்பாகக் குறிப்பிடத்தக்க விஷயம் ஒன்று உண்டு. இந்தியாவிலுள்ள தங்கள் தேச மக்களுடன் முற்றும் இணைந்த ரீதியில், வெளி நாடுகளிலுள்ள தேசபக்த இந்தியர்கள் செயலாற்றி வருகிறார்கள், பல முறை, பொது மேடைகளில் நான் கூறியிருக்கிறேன்: நான் நாட்டையும், வீட்டையும் விட்டு 1941-ல் முக்கியமான காரியமாய்க் கிளம்பியது எனது தேசமக்களில் பெரும்பான்மையோரின் விருப்பத்தின்படியே



யாகும், அதன் பிறகு சி. ஐ. டி.-க்காரர்கள்-குற்ற ஆய்வுத் துறையைச் சேர்ந்த சேவகர்கள்-என்னென்னவோ தடையெல்லாம் விதித்துப் பார்த்தார்கள். எப்படியோ அடிக்கடி என் நாட்டு மக்களுடன் நான் தொடர்பு வைத்துக்கொண்டுதான் வந்திருக்கிறேன். இன்று உங்களுக்கு நான் இன்னும் அதிகமான விவரம் கூடச் சொல்ல முடியும். சென்ற பன்னிரண்டு மாதத்தில் நமது பிரதிநிதிகளில் அனேகம் பேரை வெளியிடங்களிலிருந்து-பல திசைகளிலுமிருந்து - இந்தியாவுக்கு உள்ளே அனுப்பியிருக்கிறோம். சிலரைப் பிடித்துவிட்டார்கள். காலம் வரும்போது இதற்கு நாம் சரிக்குச் சரி பழிக்குப் பழி தீர்த்துக்கொள்வோம். ஆனால், எத்தனையோ பேர் போலீசுக்குத் தப்பிவிட்டார்கள். திருப்திகரமாக வேலை செய்துவருகிறார்கள். கடைசியாக வந்த செய்திகளிலிருந்து தெரியும் நிலைமை இது. இவ்வாறாக, அயல் நாடுகளிலுள்ள தேசபக்த இந்தியர்கள் இந்தியாவிலுள்ள விடுதலைப் போராட்டக்காரர்களின் உண்மையான கண்காணிகளாகச் செயல் புரிந்து வந்திருக்கிறார்கள். மீண்டும் எல்லாருக்கும் நான் உறுதி கூறமுடியும். இன்று பரியந்தம் நாம் என்னென்ன செய்திருந்தாலும் எதிர்காலத்தில் என்னென்ன செய்யப் போவதாயிருந்தாலும் நாம் செய்தது, செய்யப் போவது அனைத்தும் இந்தியாவின் சுதந்தரத்துக்காகவேதான். இந்தியாவின் நன்மைக்கோ இந்திய மக்களின் விருப்பத்துக்கோ எதிராக உள்ள எதையும் நாம் ஒருபோதும் செய்யமாட்டோம்.

இப்போது நமது விடுதலையை நாம் எப்படிப் பெறலாம் என்ற பிரச்னையைப் பற்றிக் கவனிக்கிறேன். இந்தியாவிலுள்ள என் நண்பர்களில் சிலர் ஒருசமயம் ஒரு நம்பிக்கை கொண்டிருந்தார்கள். சர்வதேச நெருக்கடியின் காரணமாக தனது சொந்த நன்மையை உத்தேசித்து பிரிட்டிஷ் சர்க்காரானது இந்தியாவின் சுதந்தரக் கோரிக்கைக்கு இணங்கிவிடுமென்று அவர்கள் நம்பினார்கள். இதற்குள் அந்த நண்பர்களுடைய மாய வெளித்தோற்றம் மறைந்து போயிருக்க வேண்டும். ஏனென்றால்

நிலைமை வெட்ட வெளிச்சம். யுத்தத்தின்போதும், அதற்குப் பிறகும் முன்னைவிட அதிகமாக இந்தியாவைக் கொடுமைப்படுத்திச் சுரண்டப் பிரிட்டிஷ் சர்க்கார் உத்தேசிக்கிறது. அதனால்தான், ஃபீல்டு மார்ஷல் லார்டு வேவலை வைசிராயாகவும், கவர்னர் ஜெனரலாகவும் அனுப்பியிருக்கிறார்கள். நான் கவனித்திருக்கிறேன். இவரது நியமனத்தில் இந்தியாவிலுள்ள சில வட்டாரங்களுக்கு மிகுந்த அதிருப்தி ஏற்பட்டிருக்கிறது. லார்டு ஹலிஃபாக்ஸ் போன்றவரை வைசிராயாக அனுப்பியிருந்தால் அவர்களுக்குப் பிடித்திருக்கலாம். எனக்கு என்னவோ அவர்கள் கொள்வது சரியென்று படவில்லை. எனக்கு ஃபீல்டு மார்ஷல் வேவலை வைசராயாக நியமிப்பது ஒரு தீர்க்கதரிசன நிகழ்ச்சியாகவே படுகிறது- ''கண்ணுள்ளவன் படித்துப் பார்த்துக்கொள் அப்பா!'' என்று நடுத்தெருவில் கொட்டை எழுத்தில் சுவரில் சித்திரம் தீட்டிய மாதிரி நிரந்தரமாக வாபஸ் வாங்கிக் கொண்டே போகும் இந்த ராணுவத் தலைமை அதிகாரிதான் இந்தியாவின் கடைசி வைசிராயாக இருக்கப் போகிறார். மேலும், இந்தியாவில் இவர் கண்டிப்பாய் அதிகமாக ஆக்கிவைக்கப் போகிற ராணுவ அரசியல் பொருளாதாரச் சுரண்டல்கள் இந்தியப் பொது மக்களை மேலும் மேலும் மனக் கசப்படையச் செய்து, அதன் மூலம் புரட்சிச் சக்திகள் ஒன்று சேர வலுவூட்டும்.

புது வைசராயின் கீழ், கொஞ்ச காலத்துக்கு ராணுவ சர்வாதிகாரம் தான் இந்தியாவில் நடக்கும். இருந்த போதிலும், எதிர்காலத்தில் இந்தியாவிடம் சமரசம் செய்து கொள்வதற்கு மற்றொரு முயற்சி நடைபெறும் என்றே நான் எதிர்பார்க்கிறேன். இதனால் ஒன்றும் ஆகாது; வெறும் 'புருடா'; ஏய்ப்பு. இதை எதற்காகச் செய்கிறார்கள். இதன் அந்தரங்க நோக்கம் என்ன என்று -இந்தியாவிலுள்ள மக்கள் முற்கூட்டித் தெரிந்து கொள்ள வேண்டும். 1942 ஏப்ரலில், சர் ஸ்டாஃபோர்டுக் கிரிப்ஸ் வெறும் வாயலங்காரமான, வெற்று உறுதி மொழியை இந்தியாவுக்கு நீட்டிய போது, விஷயத்தை அவர்கள் கண்டு கொண்டார்களே, அந்த



மாதிரி பிரிட்டிஷ் மக்களின் உச்சப் பிரதிநிதியான ஸ்ரீ வின்ஸ்ட்டன் சர்ச்சில் தமது மன நிலையின் நீச்சுப் போக்குக்குச் சமீபத்தில் அறிகுறி காட்டினார். எப்போது? லண்டன் நகரத்து லார்டு மேயரிடம் அவர் ஒரு தாக்கல் சொன்னார் : 'பிரிட்டிஷ் குடியேற்ற நாடு' என்று சொல்வதுகூட அவருக்குப் பிடிக்கவில்லையாம். பிரிட்டிஷ் ஏகாதிபத்தியம் என்றுதான் சொல்லவேண்டுமாம். இங்கிலாந்தின் கடைசிச் சாம்ராஜ்யப் பிரதம மந்திரி அந்த ஏகாதிபத்தியத்தைப் பேணிக் காத்துவரத் தன்னால் இயன்ற அத்தனையையும் செய்வார் என்பதில் ஐயமில்லை. இந்திய மக்களுக்கு அவர் அளிக்கும் எந்த உறுதியும் அவர்களை ஏமாற்றும் நோக்கத்துடன்தான் இருக்கும். ஆனால், இந்த மண்ணகத்தின் பரப்பிலிருந்தே சடுதியில் அப்படியே மறைந்து போகக்கூடிய ஓர் ஏகாதிபத்தியத் துடன் சமரசத்துக்கு வர வேண்டுமென்று நினைத்துப் பார்ப்பதில்கூட அர்த்தமில்லை.

வேறு தேசங்களில் நடந்த சுதந்தர இயக்கச் சரித்திரங்களைப் பற்றிப் படித்தறிந்த உங்களில் பலர்-நான் அப்படி-த்தான் செய்திருக்கிறேன்-ஒன்றைக் கவனித்திருக்கலாம். சுதந்தரத்தைப் பெறுவதற்கு இரண்டு நிபந்தனைகள் அடிப்படையா யமைந்துள்ளன. முதலாவதாக, சாதகமான ஒரு சர்வதேச நிலைமை. இரண்டாவதாக, அவசியமான அளவுக்குத் தியாகமும், முயற்சியும். முதல் நிபந்தனை ஏற்கெனவே பூர்த்தியாகிவிட்டது. பிரிட்டிஷ் ஏகாதிபத்தியத்துடன் இந்தியா தனித்துப் போராட வேண்டியிருந்தால், நமது முயற்சி மகா கடுமையானதாக ஆகிவிடும். ஆனால், நமது எதிரிகளுடன் போராடி எதிரி மீது தோல்விமேல் தோல்வியைச் சுமத்தி, அவனைத் தள்ளாடச் செய்து ஓரளவுக்கு நமது பளுவை முக்கூட்டு வல்லரசுகள் குறைத்திருக்கின்றன. இன்னொரு வகையிலும் நமக்குச் சாதகம் கிடைத்திருக்கிறது. ஆங்கிலோ-அமெரிக்க ஏகாதிபத்தியம் நிலை பெயருகிற மட்டும் போரைத் தொடர்ந்து நடத்த முக்கூட்டு வல்லரசுகள் உறுதி பூண்டு நிற்கின்றன.

நண்பர்களே !

போர் நிலையை நேருக்கு நேராய்த் தெரிந்துகொள்ளும் பொருட்டு, இரண்டு வருஷக் காலத்துக்கு அதிகமாக நான் அடிக்கடி பிரயாணம் செய்துவந்திருக்கிறேன். ஆகவே, நான் உங்களுக்கு ஒன்று சொல்ல முடியும். பொதுவாக, யுத்தத்தின் நிலைமை-குறிப்பாக கேந்திரஸ்தானங்களின் நிலைமை-முக்கூட்டு வல்லரசுகளுக்கு மிகவும் அனுகூலமாகவே இன்னும் இருந்துவருகிறது. நாள் செல்லச் செல்ல, ஆங்கிலோ-அமெரிக்க வல்லரசுகள் தோல்விக்குப் பின் தோல்வி பெற்றே வருமென்று நீங்கள் காண்பீர்கள்.

நண்பர்களே !

பிரிட்டிஷ் ஏகாதிபத்தியத்திற்கு எவ்வளவோ ஆற்றல் உண்டு; எவ்வளவோ பலமுண்டு. இருந்தும், எங்கெல்லாம் கிடைக்குமோ அங்கெல்லாம் அது உதவியை நாடிப் பெற்றிருக்கவே செய்கிறது. எனவே கிடைத்த இடங்களிலெல்லாம் நாமும் அனுதாபத்தையும், ஒத்தாசையையும் பெறப் பார்ப்பது இயல்பே. மேலும் சரித்திரத்தில் நாம் காணும் ஒவ்வொரு சுதந்தர இயக்கமும், வெளி நாடுகளிலிருந்து இப்படியோ அப்படியோ ஏதாவது உதவியை நாட வேண்டித்தான் வந்திருக்கிறது. அப்படிக் கில்லாமல் வெற்றி கிட்ட முடியவில்லை. இந்தச் சந்தர்ப்பத்தில், விஷயங்களின் தர்க்க ரீதியான போக்கு முக்கூட்டு வல்லரசுகளை நமது இயல்பான கூட்டாளிகளாக ஆக்கியிருக்கிறது. அவர்களுடைய அனுதாபத்தையும்-உதவியையும்கூட தேவைப்பட்டால் நாம் ஏற்றுக்கொள்வதில் எவ்விதத் தவறுமில்லை.

பிரிட்டிஷ் பிரசாரத்தினால் மனம் கவரப் பட்டு, இந்தியாவைப்பற்றி முக்கூட்டு வல்லரசுகள் கொண்டிருக்கும் நடைமுறை நிலையைப்பற்றி எனது நாட்டு மக்களிற் சிலர் சந்தேகப்படுகிறார்கள் என்று நான் அறிவேன். ஆனால் அவர்களது பகுத்தறிவே விஷயத்தை அவர்களுக்குத் தெளிவாக்கிவிடும். பிரிட்டிஷ் சாம்ராஜ்



யத்தின் எதிரிகள் இந்தியாவின் சுதந்தரக் கோரிக்
கைக்கு ஆதரவு அளிப்பது மிக்க இயல்பான விஷயம்
தானே. மேலும், இங்கிலாந்து நீங்கலாக முக்கூட்டு
வல்லரசுகள் உள்பட, விடுதலை பெற்ற இந்தியாவை
உலக மனைத்துக்கும் நன்மை பயக்கவே செய்யும்.

இந்தியாவைப் பற்றித் தாங்கள் கொண்டிருக்கும்
செயல் முறை நிலை குறித்துக் கடந்த காலத்தில் முக்
கூட்டு வல்லரசுகள் அடிக்கடி தெளிவு படுத்தி யிருக்
கின்றன. அதோடு கூட ஃபிலிப்பீன் தீவுகள், பர்மா,
இந்தியா* ஆகியவை குறித்து தனது கொள்கையைத்
தனது தகுதி வாய்ந்த பிரதம மந்திரி சேனாபதி
ட்டோஜோ வழியாக, ஜப்பானியச் சர்க்கார் மீண்டும்
பரக்கக் கூறியுள்ளது. பிரிட்டிஷ் அரசியல் வாதிகளும்,
பிரசாரகர்களும் ஆஷாடபூதிகள். அதனால் ஜப்பானின்
போக்கு நிலையையும் மனமார்ந்த தல்ல என்றும்,
ஆஷாடபூதித் தனமானது என்றும் வர்ணித்து வந்திருக்
கிறார்கள். ஆனால், இதற்குப் பிரதம மந்திரி சேனாபதி
ட்டோஜோ சரியான அடி கொடுத்துப் பதில் சொல்லி
யிருக்கிறார். பர்மாவிலும், பிலிப்பீன் தீவுகளிலும் சுதந்
தரம் வரப்போவது உண்மை; அதுவும் போருக்குப் பிற
கல்ல; இந்த வருஷ முடிவுக்கு முந்தியே என்று உலக
முன்னிலையில் அவர் ஆங்கிலோ-அமெரிக்கப் பிரசாரத்
துக்குத் துணிந்து பதிலிறுத் திருக்கிறார்.

ஃபிலிப்பீன், பர்மா இவைகளிடம் ஜப்பான், நடந்து
கொள்கிற முறை அதன் உண்மைப் பூர்வத்துக்கும் நன்
னம்பிக்கைக்கும் மிகச் சிறந்த அத்தாட்சியாகும். இது
கிடக்கட்டும். சாதாரண மனிதர்கள் என்ற முறையில்
பார்ப்போம். அப்போது, ஜப்பானுடைய உத்தேசங்
களைப் பற்றி அவநம்பிக்கை கொள்வதற்கோ, சந்தேகப்
படுவதற்கோ எவ்விதக் காரணமும் இருக்க நியாய
மில்லை என்றே எனக்குப் படுகிறது. அன்னியர் ஆக்கிர
மிப்பை முதன் முதலாக எதிர்த்த ஆசிய வல்லரசு
ஜப்பான் ஒன்று தான். அடிமைப் படுத்தப்பட்ட ஆசிய

* இணைப்பு க பார்க்க

நாடுகள் உரிமை பெறாதவரைக்கும் ஆக்கிரமிப்புக் கொடுமைக்கு ஆளாகாமல் எந்த ஆசிய நாடும் அது பத்திரமாக இருப்பதாக உணர முடியாது என்பதை எந்த ஆசிய வல்லரசையும் விட ஜப்பான் மிக நன்றாய் அறியும். மேலும், ஜப்பானில் இன்று ஒரு வகையான உணர்வு நிலவுகிறது. ஆசிய உணர்வு என்று இதைச் சொல்லலாம். தங்கள் விடுதலையைப் பெறுவதற்கு ஏனைய ஆசிய நாடுகளுக்கு உதவி அளிக்க உண்டாகும் விருப்பத்தின் வழியாக இந்த உணர்வு வெளிப்படுகிறது. இது தனித் தன்மை வாய்ந்த ஒரு வளர்ச்சி. அடிமைப் பட்ட ஆசிய நாடுகள் அனைத்துக்கும், பொன் போன்ற ஒரு வாய்ப்பை இது அளிக்கிறது. இதன் மூலம் இந்த நாடுகள் தங்கள் உரிமையைப் பெற்று, சுதந்தரம் நீதி ஒழுக்கம் ஆகியவைகளை அடிப்படையாகக்கொண்ட ஒரு புதிய எற்பாட்டை உண்டாக்கலாம்.

இந்த விஷயத்தில் யாருக்காவது இன்னும் ஏதாவது சந்தேகமிருந்தால், அவரை என் மேல் நம்பிக்கை வைக்கும்படி கேட்டுக் கொள்கிறேன். எனது விஸ்வாசம் இந்தியாவுக்கு உரித்து-இந்தியாவுக்கு மட்டுமே உரித்து. எனது நாட்டை நான் காட்டிக்கொடுக்கக் கூடியவன் என்று சொல்லுகிற அளவுக்கு என்னுடைய விரோதிகளுக்குக் கூடத் துணிச்சல் வந்து விடாது. அன்றைக்கு ட்டோக்கியோவில் கூடச் சொல்லியிருந்தேன். என் வாழ் நாள் முழுதும் என்னை நச்சுப் படுத்திய பிறகு கூடப் பிட்டிஷ் சர்க்கார் எனது நேர்மையைக் குலைத்து விட முடியவில்லை என்றால், வேறு எவராலும் அப்படிச் செய்ய முடியப் போவதில்லை. குள்ள நரிப் பிரிட்டிஷ் அரசியல் வாதிகள் என்னைக் காக்காய் பிடிக்கவோ, ஏமாற்றவோ முடியவில்லை என்றால், வேறு யாரும் அப்படிச் செய்து விட முடியாது.

ஒவ்வொரு இந்தியனும் உணர்ந்துகொள்ள வேண்டும். ஆங்கிலோ-அமெரிக்க வல்லரசுகள் வெற்றி பெற்றால், அதனால் இந்தியாவுக்கு என்ன பலன்? அடிமைத்தனம் ஒழியாது; சுரண்டல் இன்னும் கொடூரமாய் அதிகரிக்கும். இவைதான் பலன். சுதந்தரம்பெற நமக்குள்ள ஒரே நம்பிக்கை யாது? முக்கூட்டாரின் வெற்றியே. ஆனால், ஒன்று: நம்முடைய போராட்டத்தை நாம் தக்கபடி நடத்திச் செல்ல வேண்டும். அப்போதுதான் அச்சு நாடுகளின் வெற்றி ஏக சமயத்தில் நமக்கும் வெற்றியை நல்கும்.

நண்பர்களே!

இன்றையச் சர்வதேச நிலைமை நமக்கு நிரம்பச் சாதகமானது. நிகழ்ச்சிப் போக்குகளின் சேர்க்கையும் மிகவும் சந்தோஷகரமான தினுசில் இருக்கிறது. இதன் பயனாகச் சுதந்தரத்தைப் பெறுவதற்கு நாம் செய்ய வேண்டியதெல்லாம் போதுமான உழைப்பும், தியாகமுமே. இந்த வகையில் நாம் சாதித்துள்ளவை திருப்தியற்றவை என்று சொல்வதற்கில்லை. உங்களுக்கு ஞாபகமிருக்கும்: போன வருஷம் மே மாதம், சர் ஸ்டாஃபோர்டு கிரிப்ஸ் இந்தியாவிலிருந்து போய்விட்டார். முதலாவது சுதந்தர யுத்தம் மூண்டு சரியாக எண்பத்தைந்து ஆண்டுகள் கடந்துவிட்டன. அப்போது நான் என்ன சொன்னேன்? நமது தேசியப் போராட்டம் மிகவும் முக்கியமான ஒரு கட்டத்தில் புகுந்துகொண்டிருக்கிறது என்று சொன்னேன். அன்றைக்குப் பிறகு, எத்தனையோ கல் தொலைவைக் கடந்துவிட்டோம். மேலும் மேலும் முன்னேறிவிட்டோம். இந்தியப் போராட்டச் சரித்திரத்தில் 1942 ஆகஸ்டானது மறக்க முடியாத ஓர் எல்லைக் கல்லாக இருந்துவரும். சாத்விக எதிர்ப்பிலிருந்து உத்வேக எதிர்ப்பாக மக்களின் மனநிலை மாறியதற்கு ஒரு குறிப்புக்காட்டாக இது விளங்கும். சட்டமறுப்பு இயக்க வேலையுடன் திருப்திப்பட்டுவிடாமல் இன்று தங்களது விடுதலையைப் பெற இதர வழிகளையும் கையாள ஆத்மப் பலத்திலும் இந்திய மக்கள் தயாராயிருக்கிறார்கள்.

எனவே, நமது இயக்கத் திட்டத்தில் அடுத்த கட்டத்திற்குப் போகவேண்டிய காலம் வந்துவிட்டது. இந்தியா

விற்குள்ளே இருந்தாலும் சரி, அதற்கு வெளியே இருந்தாலும் சரி, எல்லா ஸ்தாபனங்களும் கட்டுப்பாட்டுக்கு அடங்கியே போரிடும் ஸ்தாபனங்களாக ஒருவர் தலைமையின்கீழ் இப்போது உருமாறித் தீரவேண்டும். இந்த ஸ்தாபனத்தின் நோக்கமும், குறிக்கோளும் யாவை? சரியான காலம் வந்ததும் செயலில் இறங்கும்படி குறிப்புக் கொடுத்ததும், பிரிட்டிஷ் சாம்ராஜ்யத்திற்கு எதிராக இந்த ஸ்தாபனங்கள் ஆயுதம் தாங்கிப் போரிட வேண்டும். சரியானபடி நமது படைகளை எப்படித் திரட்டலாம்? அதற்காக வேண்டி தற்காலிகச் சுதந்தர இந்தியச் சர்க்கார் ஒன்றை நான் அமைக்க உத்தேசிக்கிறேன். இந்தியப் புரட்சியை வெற்றிகரமான முடிவுக்கு இட்டுச் செல்வது இந்தத் தற்காலிகச் சர்க்காரின் வேலை. இந்த நோக்கத்திற்காக வேண்டி இந்தியாவிலும், அதற்கு வெளியிலும் உள்ள இந்திய மக்களை ஆயுதம் தாங்கிய போராட்டத்துக்கு இந்தத் தற்காலிகச் சர்க்கார் தயார்ப்படுத்தவேண்டும். 1883 முதல் நாம் செய்துவந்துள்ள தேசிய முயற்சிகள் அனைத்திலும் உச்சநிலையாக இது விளங்கும். புரட்சி வெல்லும்போது ஆங்கிலோ-அமெரிக்கச் சாம்ராஜ்யம் இந்தியாவினின்றும் அகற்றப்படும்போது தற்காலிகச் சர்க்காரின் வேலை முடிந்துவிடும். அப்போது, அது நிரந்தரமான சர்க்கார் ஒன்றுக்கு வழிவிட்டு விலகிவிடும். அந்தச் சர்க்கார் இந்தியாவுக்குள்ளே இந்திய மக்களின் விருப்பத்திற் கிணங்க ஏற்படுத்தப்பெறும்.

இறுதிப் போராட்டத்துக்கு நாம் பரிபூரணமாகத் தயாரானவுடன், பொதுப் பகைவனுக்கு எதிராக முக்கூட்டு வல்லரசுகளுடன் சேர்ந்து, பொதுப் போராட்டத்தில் இந்தியப் போராட்டத்தையும் அணி பொருத்த இயலும். இந்தப் பொதுச் சண்டையில் பங்கு பெறுவதன் மூலம் நாம் சுதந்திரத்துக்கு அருகதை உள்ளவர்களாகிறோம். புனிதமான காரியத்துக்காக, நாம் ரத்தம் சிந்துவதன் மூலம், சுதந்தரத்துக்கு உரிய விலையை நாம் செலுத்தியவர்களாவோம். அதுமட்டுமா? அதே சமயத்தில், நமது தேசிய ஐக்யத்திற்கு என்றென்றும் நிலைத்து நிற்கக்கூடியதான அஸ்திவாரத்தை அமைத்தவர்களாக



வும் ஆவோம். இந்த அடித்தளம் ஒன்றுமட்டுமே நிலைத்து நிற்கக்கூடியது. கடைசியாக ஒன்று. ஆனால், அது சின்ன விஷயமல்ல. நம்முடைய முயற்சியாலும், தியாகத்தாலும் நாம் சுதந்தரம் அடைவோம். இப்படி அடையும் சுதந்தரத்தின் மூலம் நாம் பலம் பெறுவோம். அந்தப் பலத்தைக் கொண்டு, எக்காலத்தும் நமது விடுதலை உரிமையை நாம் பேணிக் காப்போம்.

நண்பர்களே!

இனி முடிக்கப்போகிறேன்? என்மீது நீங்கள் வைத்திருக்கும் நம்பிக்கைக்கும், உச்சிமீது வான் இடிந்து வீழினும் அச்சமின்றி எனக்கு நீங்கள் ஆதரவு அளிப்பதாக உறுதி கூறியிருப்பதற்கும் மீண்டும் எனது இதய பூர்வமான வந்தனத்தைத் தெரிவித்துக் கொள்கிறேன். உங்களை எச்சரிக்கிறேன்; இறுதி வெற்றி நமக்கே; அது நிச்சயம். ஆனாலும், எதிரியின் பலத்தை நாம் குறைவாக மதிப்பது ஆகாது. தற்காலிகமான எதிர்ப்போக்குநிகழ்ச்சிகள் ஏற்பட்டாலும் ஏற்படலாம். அவற்றிற்கும் நாம் தயாராகயிருக்கவேண்டும். நமக்கு முன்னே கடுமையான போர் காத்து நிற்கிறது. எதிரியோ பலசாலி; ஈவிரக்கமற்றவன்; கொடும்பாவி. இந்தக் கடைசி சுதந்தர அணிவகுப்பு முன்னேற்றத்தில், பசி, தாகம், வசதிக்குறைவு வலுக்கட்டாயமாக முன்னேற வேண்டிய நிலைமை, சாவு எல்லாம் உங்கள்முன் எதிர்ப்படும். இந்தப் பரீட்சையில் நீங்கள் தேறி, அடிமைப்படுத்தப்பட்டு, ஏழ்மைக் குள்ளாக்கப்பட்டிருக்கும் உங்கள் பூமிக்கு விடுதலையையும். செழிப்பையும் அதன் மூலம் நீங்கள் கொண்டு தருவீர்களென்று எனக்கு நம்பிக்கை உண்டு.

புரட்சி வாழ்க!

சுதந்தர இந்தியா வாழ்க!

# வீட்டையும் நாட்டையும் ஏன் விட்டு வந்தேன்?

---

[9-6-1943-ல், சியோனனில் நடைபெற்ற பொதுக்கூட்டத்தில் பேசிய பேச்சு]

சகோதரிகளே, சகோதரர்களே!

இன்று எனக்கு நீங்கள் மிகவும் உற்சாகமான, அன்பு கனிந்த வரவேற்பு அளித்திருக்கிறீர்கள்: அதற்காக முதலில் உங்கள் அனைவருக்கும் எனது வணக்கம். குறிப்பாக எனது சோதரிகளுக்கு வணக்கம். ஏன்? அவர்கள் எத்தனையோ பேர் தைரியமாக இங்கே வந்து, தங்கள் நாட்டுப்பற்றை வெளிக்காட்டிக் கொண்டிருக்கிறார்கள். இன்று காண்பதிலிருந்து இனி வரப்போகும் போரில். சியோனனிலும், மலேயாவிலுமுள்ள எனது நாட்டு மக்கள் தலைமைப் பங்கு பெறுவார்கள் என்று திடமாக உணர்கிறேன். ஒரு காலத்தில், பிரிட்டிஷ் சாம்ராஜ்யத்தின் கற்கோட்டையாக இருந்துவந்த இடம் இப்போது இந்திய தேசியத்தின் கற்கோட்டையாக ஆகிவிட்டது.

அடுத்தபடியாக விஷயத்தை உங்களிடம் திறந்து சொலலிவிட விரும்புகிறேன். எல்லாவிதமான அபாயங்களும் சூழ்ந்துள்ள ஒரு பிரயாணத்தில் கால்வைத்து வீட்டையும், நாட்டையும் விட்டு நான் வெளிக்கிளம்பியது ஏன்?

உங்களுக்குத் தெரியும். 1921-ல் சர்வ கலாசாலை வாயிற் கதவுகளை விட்டு, வெளி வந்தது முதற்கொண்டு சுதந்தர இயக்கத்தில் நான் ஆக்கமாய் வேலை செய்து வந்திருக்கிறேன். சென்ற இருபது வருஷ காலமாக, எல்லா விதமான சட்ட மறுப்பு இயக்கங்களிலும் அடிபட்டு வெளி வந்திருக்கிறேன். அது மட்டுமா? மீண்டும் மீண்டும், விசாரணையின்றிச் சிறையில் அடைபட்டிருக்கிறேன். ரகசியப் புரட்சி இயக்கங்களில்-ஹிம்சையோ அஹிம்சையோ, எதுவானாலும் சரி-நான் சம்பந்தப்பட்டிருக்கிறேனோ என்ற சமுசயத்தின் பேரில் தான் சிறைப்படுத்தப்பட்டேன். இந்த ரகசியப் புரட்சி இயக்கங்கள் எனக்குப் பழக்கமானவை. மிகை படுத்திக் கூறும் குற்றத்துக்காளாகாமல் நான் இன்னொரு விஷயத்தையும் அழுத்திச் சொல்லலாம். நான் பெற்றுக் கொள்ள முடிந்த அளவு அனுபவத்தைத் தம்மாலும் பெற முடிந்தது என்று சொல்லிக் கொள்ளக் கூடிய தேசியத் தலைவர் எவரும் இந்தியாவில் இல்லை. இந்த அனுபவத்தை வைத்துக் கொண்டு பார்த்தபோது, நான் ஒரு முடிவுக்கு வந்தேன். இந்தியாவினுள்ளே நாம் சேர்த்துப் பிடித்துச் செய்கிற முயற்சி அனைத்தும், பிரிட்டிஷாரை நாட்டிலிருந்து வெளியேற்றுவதற்குப் போதாதென்று கண்டேன். நமது ஜனங்களுக்கு விடுதலை பெற இந்தியாவில் நடக்கும் போராட்டமே போதுமென்றால், இந்த அனாவசியமான உபத்திரவத்திற்கும், விபத்துக்கும் ஆளாகக் கூடிய அவ்வளவு முட்டாளாக நான் ஆகிவிடமாட்டேன்.

சுருக்கமாகச் சொல்வதானால், இந்தியாவை நான் விட்டு வந்ததின் நோக்கம், அங்கே நடைபெறும் போராட்டத்துக்கு, இந்தியாவுக்கு வெளியே இருந்து கொண்டு, உப பலம் அளிப்பதே. வெளியிலிருந்து இந்த உப உதவி வரா விட்டால், எவராலும் இந்தியாவை விடுவிக்க முயாது. இந்த விஷயத்தை வேறு மாதிரி பார்ப்போம். இந்தியாவி லுள்ள தேசியப் போராட்டத்துக்கு இவ்வளவு அவசரமாகத் தேவைப் படுகிற இந்த வெளி உப உதவி உண்மையில் மிகக் கொஞ்சமே. ஏன் இப்படி? அச்சு வல்லரசுகள் பிரிட்டிஷார் மீது சுமத்தி யிருக்கும் தோல்விச் சாட்டைகளால் பிரிட்டிஷாரின் அதிகாரமும், கௌரவமும் படுமோசமாய்ச் சிதறுண்டு போய்விட்டன. அதனால், நம்முடைய வேலை கொஞ்சம் சுலபமாகி விட்டது.

இந்தியாவில் நமது தேச மக்கள் வேண்டி நின்ற, இன்றும் வேண்டி நிற்கிற உதவி இரு கூறுகளை உடையது. தார்மிக உதவி, பொருளுதவி. முதலாவதாக, கடைசியில் வெற்றி தமக்கே என்று அவர்களுக்குத் தார்மிகப் பூர்வமான நம்பிக்கை விழவேண்டும். இரண்டாவதாக வெளியிலிருந்து அவர்களுக்கு ராணுவ உதவி கிடைத்தாக வேண்டும். முதலில் சொன்னதைச் செய்வதற்குச் சர்வதேச யுத்த நிலையை தன்னிலிருந்து பிரிந்த ஒன்றாகக் கருதி ஆராய்ந்து பார்த்து அதன்மூலம் யுத்தத்தின் விளைபயன் என்னவாகும் என்று கண்டுபிடிக்க வேண்டும். அதைச் செய்வதற்கு இந்தியாவிலுள்ள தங்கள் மக்களுக்கு இந்தியாவுக்கு வெளியே உள்ள இந்தியர்கள் என்ன உதவி செய்யக்கூடுமென்று கண்டுபிடிக்கவேண்டும். அதோடு முடிந்தால்-அத்தகைய தேவை ஏற்பட்டால்-பிரிட்டிஷ் சாம்ராஜ்யத்தின் எதிரிகளிடமிருந்து உதவிபெற வேண்டும்.

நண்பர்களே !

இந்த இரண்டு நோக்கங்களும் பூர்த்தியாகிவிட்டன என்று சொல்லக்கூடிய நிலைமையில் நான் இப்பொழுது இருக்கிறேன். வெளி நாடுகளில் பிரயாணம் செய்ததால், விஷயங்களை நேருக்கு நேராக என்னால் பார்க்கமுடிந்தது. போரிடும் வல்லரசுகளின் தனித்தனி நிலைமைகளை நான் ஆராய்ந்து பார்க்க முடிந்தது. அதன் பிறகு, ஆங்கிலோ-அமெரிக்கச் சாம்ராஜ்யத்தின் தோல்வி நிச்சயம் என்ற முடிவுக்கு நான் வந்தேன். அப்போது, இந்தியாவிலுள்ள எனது நாட்டு மக்களுக்கு அந்தச் செய்தியைத் தெரிவித்தேன். பிறகு, உலகமெங்கணுமுள்ள எனது நாட்டு மக்கள் நன்றாய் விழிப்படைந்துவிட்டார்கள். தேசியப் போராட்டத்தில் தங்களுக்கு உரிய பங்கைப் பெற ஆவலோடு இருந்தார்கள் என்று காண நான் பூரித்துப் போய்விட்டேன். அச்சு வல்லரசுகளும், குறிப்பாக ஜப்பானும், இந்தியாவை விடுவிக்க மெய்யாகவே ஆவல் கொண்டிருந்தன என்று கண்டபோதும் நான் மகிழ்ந்தேன். இந்திய மக்கள் விரும்பினால், தங்கள் சக்திக்கு



உட்பட்ட எந்த உதவியையும் அவர்கள் செய்யச் சித்தமாயிருந்தார்கள் என்று காண நான் மகிழ்ந்தேன்.

வெளிநாடுகளில் உள்ள இந்தியர்களின் மனோபாவம் எப்படி இருந்தது? இந்தியா சுயேச்சையாக இருக்க வேண்டுமென்று விரும்பாத எந்த ஆணோ, பெண்ணோ அவர்களில் இருக்கமாட்டார்கள் என்றே நான் நினைக்கிறேன். தேசியப் போராட்டத்துக்கு உதவி செய்யத் தயாராயில்லாத எவரும் அவர்களில் இரார். வல்லரசுகள், ஜப்பான் இவைகளின் மனோபாவம் என்ன? யாருக்காகிலும் துளி ஐயமோ சமுசயமோ இருந்தால் அவரை என்னால் எளிதில் நம்பவைக்க முடியும். ஏராளமான அத்தாட்சி உண்டு. நம் ஜனங்களை விட்டுவிட்டுப் பார்த்தால் உலகத்தில் இன்று நமக்கு உள்ள மிகச் சிறந்த நண்பர்கள் அவர்கள்தான். மேலும், என்னை நம்பும்படி உங்களை நான் கேட்டுக்கொள்ள முடியும். எனது நாட்டு நலனுக்கு விரோதமாக நான் காரியம் செய்யக்கூடியவனென்று சொல்ல எனது விரோதிகளுக்குக்கூடத் துணிச்சல் வராது. பிரிட்டிஷ் சர்க்காரே என்னை ஏமாற்றவோ, கெடுக்கவோ, வலைபோட்டு இழுக்கவோ முடியாதபோது பூமியிலுள்ள இதர எந்த வல்லரசும் அப்படிச் செய்துவிட முடியாது. எனவே, பிரிட்டிஷ் சாம்ராஜ்யத்துடன் போராடுவதற்கு ஏதாவது வெளி உதவி உங்களுக்கு வேண்டுமென்றால், அச்சு வல்லரசுகள் உங்கள் உதவிக்கு வரும் என்று நான் சொல்லும்போது என்னை நம்புங்கள். ஆனால், உங்களுக்கு உதவி தேவையா, தேவை இல்லையா என்பது நீங்களே தீர்மானித்துக்கொள்ள வேண்டிய விஷயம். இன்னொன்றும் சொல்லாமலே தெரிந்துகொள்ளலாம். உதவியில்லாமலே காரியத்தை முடிக்க முடிந்தால், இந்தியாவுக்கு அதுதான் மிகச் சிறந்த வழி. அதே சமயத்தில் இன்னொன்றையும் சொல்லிவிடுகிறேன். சர்வ வல்லமையுள்ள பிரிட்டிஷ் சர்க்கார் பிச்சைப் பாத்திரம் ஏந்தி, உலகத்தைச் சுற்றிச் சுற்றிக் கண்டஇடத்திலெல்லாம் உதவிநாடி நிற்குமானால்-அடிமைப்பட்டு, வறுமைப்படுத்தப்பட்ட இந்திய மக்களிடம் கூட உதவி நாடி நிற்குமானால்-உதவிநாடியே தீரவேண்டும் என்கிற

நிலைமை ஏற்படும்போது வெளியாரிடம் நாம் உதவி பெறுவதில் தவறு ஒன்றுமில்லை.

வேளை வந்து விட்டது; உலகம் அறிய வெளிப்படையாகச் சொல்லலாம்; நமது எதிரிகளும் கேட்கட்டும். தேசிய விடுதலையை எப்படிக் கைவரப் பண்ணப் போகிறோம்? இந்தியாவுக்கு வெளியே உள்ள இந்தியர்கள்-குறிப்பாகக் கிழக்கு ஆசியாவில் உள்ள இந்தியர்கள்-போர்ப் படை ஒன்றை நிறுவப் போகிறார்கள். அது இந்தியாவிலுள்ள பிரிட்டிஷ் ராணுவத்தைத் தாக்கக் கூடிய அளவு பலம் பெற்றிருக்கும். அப்படி நாம் செய்யும் போது, புரட்சி மூளும். இந்தப் புரட்சி இந்தியாவிலுள்ள பொது ஜனங்களிடையே மட்டுமா மூளும்? அல்ல அல்ல. பிரிட்டிஷ் கொடியின் கீழ் இப்போது நின்று கொண்டிருக்கும் இந்திய ராணுவத்திடையேயும் இந்தப் புரட்சி மூளும். இப்படி இரண்டு பக்கத்திலிருந்தும்-இந்தியாவின் உள்ளும், அதற்குப் புறம்பும்-பிரிட்டிஷ் சர்க்காரைத் தாக்கும் போது அது துவண்டுபடும். அப்போது, இந்திய மக்கள் மீண்டும் விடுதலை பெறுவார்கள்.

எனவே என் திட்டத்தின் பிரகாரம், இந்தியாவினிடம் அச்சு வல்லரசுகள் எப்படி நடந்து கொள்கின்றன என்பது அனாவசியமான மனக் கவலை. இந்தியாவிலும், அதற்கு வெளியேயும் உள்ள இந்தியர்கள் மட்டும் தங்கள் கடமையை நிறைவேற்றினால், பிரிட்டிஷாரை இந்தியாவை விட்டு வெளியே தூக்கி வீசி, முப்பத்தெட்டுக் கோடி எண்பது லட்சம் பேரைக் கொண்ட தம் நாட்டு மக்களை இந்தியர்களால் விடுவிக்க முடியும். வறட்டுத் தவளைகள் இருக்கவே இருக்கும். இந்த முப்பத்தொன்பது கோடி இந்தியர்கள், பிரிட்டிஷ் அதிகாரத்தை இந்தியாவிலிருந்து வெளியேற்ற முடியாவிட்டால், வெளிநாட்டிலுள்ள முப்பது லட்சம் பேர் இந்தக் காரியத்தை எப்படிச் செய்ய முடியும் என்று அவர்கள் சொல்லுவார்கள். ஆனால், நண்பர்களே! அயர்லாந்துச் சரித்திரத்தைப் பாருங்கள். பிரிட்டிஷ் ஆதிக்கத்தின் கீழ் வாழும்



முப்பது ல்ட்சம் ஐரிஷ் ஜனங்கள்-ஒரு மாதிரியான ராணுவச் சட்டத்தின் கீழ் வாழும் ஜனங்கள்-சின் ஃபெயின் கட்சியைச் சேர்ந்த ஆயுதம் தாங்கிய ஐயாயிரம் தொண்டர்களின் உதவியைக்கொண்டு, 1921-ல் பிரிட்டிஷ் சர்க்காரை முழந்தாளிட்டுப் பணியச்செய்ய முடிந்ததென்றால் இந்தியாவில் சக்தி வாய்ந்த இயக்கத்தின் பக்கபலம் இருந்து, சக்தி வாய்ந்த ஜப்பான் எச்சமயத்திலும் உதவிக்குத் தயாராயிருக்கும்போது, முப்பது லட்சம் இந்தியர்கள் பிரிட்டிஷாரை இந்தியாவிலிருந்து வெளிக்கிளப்ப ஏன் முடியாது?

ஆனால், ஒன்று சொல்லவேண்டும். வெளிவாசிகளான இந்தியர்கள், குறிப்பாகக் கிழக்காசிய இந்தியர்கள், தமது சக்தி அனைத்தையும் முடுக்கிக் கிளப்பிவிட வேண்டும். அப்படிச் சரியாய்ச் செய்வதற்குச் சுதந்தர இந்தியத் தற்காலிகச் சர்க்கார் ஒன்றை ஏற்படுத்த உத்தேசிக்கிறேன். இந்திய மக்களின் மூலாதாரச் சக்திகள் அனைத்தையும் ஒன்றுதிரட்டி, இந்தியாவிலுள்ள பிரிட்டிஷ் ராணுவத்தின்மீது போராட்டம் நடத்துவதே இந்தச் சர்க்காரின் வேலை. போரில் வெற்றி கிட்டி, இந்தியா விடுவிக்கப்பெற்றதும், இந்திய மக்களின் விருப்பத்திற்கிணங்க அமைக்கப்பெறும் சுதந்தர இந்தியாவின் நிரந்தரச் சர்க்காருக்கு இடம் கொடுத்துவிட்டு, இந்தத் தற்காலிகச் சர்க்கார் விலகிக்கொள்ளும்.

நண்பர்களே! இப்போது தெரிந்துகொண்டிருப்பீர்கள். கிழக்கு ஆசியாவில் வாழும் முப்பது லட்சம் இந்தியர்களும் தமக்குக் கிட்டுகிற வசதிகளனைத்தையும் பணப் பலம், ஆட் பலம் உட்பட ஒன்றுதிரட்டும் வேளை வந்துவிட்டது. அரை மனதோடு காரியம் செய்வது பலிக்காது. மொத்தத் திரட்சிதான் நான் வேண்டுவது. அதற்குக் குறைவான எதையும் வேண்டேன். ஏன்? நம்முடைய எதிரிகள்கூட அடிக்கடி சொல்லக் கேட்டிருக்கிறோமே, இது மொத்த யுத்தமல்லவா?

உங்கள் முன்னர் இன்று நீங்கள் இந்திய விடுவிப்பு ராணுவத்தின் ஒரு பகுதியை ஆஜாத் ஹிந்த் ஃபவுஜ் அல்

லது இந்திய தேசிய ராணுவத்தின் ஒரு பகுதியைக் காண்கிறீர்கள்.

அன்றைக்கு, நகர மண்டபத்தின் முன்னால், அவர்களது சடங்குப் பூர்வமான படை அணி வகுப்பு நடைபெற்றது. அதற்குப் பிறகு, அவர்கள் தீர்மானம் நிறைவேற்றி யிருக்கிறார்கள். என்ன தீர்மானம்? புராதன டில்லியின் செங்கோட்டைக்கு முன்னால் தங்களது வெற்றிப் - படை அணிவகுப்பை நடத்தும் வரைக்கும், அவர்கள் ஓய்ந்திருக்கப் போவதில்லை. அதுதான் அவர்களுடைய தீர்மானம். "டில்லி நோக்கிச் செல்க! டில்லி நோக்கிச் செல்க!" என்ற முழக்கொலியையும் அவர்கள் ஏற்படுத்திக்கொண்டிருக்கிறார்கள். நண்பர்களே! முப்பது லட்சம் கிழக்காசிய இந்தியர்களின் முழக்கொலி மொத்த யுத்தத்துக்கு மொத்த த்திரட்சி என்று இருக்கட்டும்.

இந்த மொத்தத் திரட்சியிலிருந்து, குறைந்த பட்சம் மூன்று லட்சம் போர்வீரரும், மூன்று கோடி டாலருமாவது கிடைக்குமென்று எதிர்பார்க்கிறேன். இந்திய வீராங்கனைகளைக் கொண்ட பெண்கள் படை ஒன்றும் வேண்டும். "சாவுக்கு அஞ்சாத படை" ஒன்று இவர்களைக்கொண்டு அமைக்கவேண்டும். இவர்கள் வாளேந்துவார்கள்; 1857ல், இந்தியாவின் முதலாவது சுதந்தர யுத்தத்தில், வீராங்கனை ஜான்ஸி ராணி வாளேந்திய மாதிரி.

நண்பர்களே! ஐரோப்பாவில் இரண்டாவது போர் முனை ஏற்படுவதுபற்றி நெடுநாளாகக் கேள்விப்பட்டுக் கொண்டே வருகிறோம். ஆனால், இந்தியாவிலுள்ள நம் நாட்டு மக்கள் இப்போது திணறிக்கொண்டிருக்கிறார்கள். அவர்கள் ஓர் இரண்டாம் போர்முனை வேண்டுமென்று கேட்டுக்கொண்டிருக்கிறார்கள். கிழக்காசியாவில் எனக்கு மொத்தத் திரட்சி கொடுங்கள். நான் உங்களுக்கு இரண்டாம் போர்முனை தர உறுதி கூறுகிறேன். இந்தியப் போராட்டத்துக்கு மெய்யான ஓர் இரண்டாம் போர் முனை தருகிறேன்.

# டில்லிக்கு, டில்லிக்கு!

[5-7-1943-ல், இ. தே. ரா. (இந்தியத் தேசிய ராணுவ) ராணுவப் பயிற்சிப் பரீட்சையின்போது பேசியது]

இந்தியாவின் விடுவிப்பு ராணுவப் போர்வீரர்களே! என் வாழ்நாளில் இன்றுதான் மிக்க பெருமை வாய்ந்த நாள். இறைவன் உள்ளம் கனிந்து, இன்று எனக்கு ஒப்பற்ற கௌரவத்தையும், உரிமையையும் தந்துள்ளான். இந்தியாவின் விடுவிப்பு ராணுவம் உருவம் பெற்றுவிட்டது என்ற செய்தியை உலகம் பூராவுக்கும் விளம்பும் பேறு இன்று எனக்குக் கிட்டியிருக்கிறது. சிங்கப்பூர்ப் போர்க்களத்தில் இந்த ராணுவம் இப்போது போர் அணிமுறைப்படி வகுத்து நிற்கிறது. இந்தச் சிங்கப்பூர்தான் ஒரு காலத்தில் பிரிட்டிஷ் சாம்ராஜ்யத்தின் கற்கோட்டையாக இருந்தது. இந்த ராணுவம் பிரிட்டிஷ் தளையிலிருந்து இந்தியாவை விடுவிப்பதோடு மட்டும் நின்றுவிடாது; சுதந்தர இந்தியாவின் தேசிய ராணுவத்தை இதற்குப் பிறகு, உண்டாக்குவதும் இந்த ராணுவமே. இந்த ராணுவம்-இந்தியாவின் சொந்த ராணுவம்-முற்றும் இந்தியர் தலைமையைக் கொண்டே நிருமிக்கப் பெற்றுள்ளது. இதைக் கண்டு ஒவ்வோர் இந்தியனும் பெருமிதத்தால் உள்ளம் விம்மப் பெற வேண்டும். சரித்திர முக்கியத்துவம் வாய்ந்த அந்த நொடி நேரம் வந்ததும், இந்தியத் தலைமையின் கீழ் அது போரில் இறங்கும்.

சில பேர் இருக்கிறார்கள். ஒருசமயம் அவர்கள் என்ன எண்ணினார்கள்: சூரியன் அஸ்தமனமே ஆகாத ஏகாதிபத்தியம் நிரந்தரமான ஏகாதிபத்தியம் என்று அவர்கள் எண்ணினார்கள். இப்படிப்பட்ட எண்ணம் என்னை ஒருபோதும் தொந்தரவு செய்ததில்லை. சரித்திரம்

னுக்குக் கற்றுக் கொடுத்திருக்கிறது: ஒவ்வோர் ஏகாதிபத்தியத்துக்கும் தடுக்க இயலாத தளர்ச்சியும், வீழ்ச்சியும் இருக்கவே இருக்கின்றன, மேலும், நானே கண்ணால் கண்டிருக்கிறேன், கற்கோட்டைகளா யிருந்த கோட்டைகொத்தளங்கள், நகரங்கள் எல்லாம் தரைமட்டமாகி மண்ணோடு மண்ணாயின. இவை மறைந்த காலத்து இருந்துவந்த ஏகாதிபத்தியத்தின் சின்னமாக விளங்கின. இன்று பிரிட்டிஷ் ஏகாதிபத்தியத்தின் இடுகாட்டில் நின்று கொண்டிருக்கிறோம். இந்த நிலையில் ஒரு சிறு குழந்தைக்குக்கூடத் தெரியும்; அதுகூட நம்பும்: சர்வ வல்லமையுள்ள பிரிட்டிஷ் ஏகாதிபத்தியம் கடந்த காலத்தைச் சேர்ந்த ஒன்றாக ஏற்கெனவே ஆகிவிட்டது. 1939-ல் ஜெர்மனிமீது ஃப்ரான்ஸ் போர் தொடுத்து, போர் இயக்கம் தொடங்கியபோது, ஜெர்மன் சிப்பாய்களின் உதட்டிலிருந்து "பாரிஸுக்கு, பாரிஸுக்கு!" என்ற ஒரே உரத்த ஒலிதான் கிளம்பியது. 1941 டிசெம்பரில் நிப்பொனின் தீரமான வீரர்கள் படையெடுத்து நடந்தபோது "சிங்கப்பூருக்கு, சிங்கப்பூருக்கு!" என்ற ஒரே உரத்த ஒலிதான் அவர்கள் உதட்டிலிருந்து கிளம்பியது. தோழர்களே! வீரர்களே! "டில்லிக்கு, டில்லிக்கு!" என்று பேரொலி முழக்குங்கள்! இந்தச் சுதந்தரப் போரிலிருந்து நம்மில் எத்தனை பேர் தப்பிப் பிழைப்போமென்று நான் அறியேன். இதுமட்டும் எனக்குத் தெரியும்: இறுதியில், நாம் வெல்வோம். பிரிட்டிஷ் ஏகாதிபத்தியத்தின் மற்றோர் இடுகாட்டில் நம்மில் உயிர்தப்பி இருப்பவர்கள் வெற்றி அணிவகுப்பு நடத்தும்வரை, நமது வேலை முடிவுறாது! அந்த இடுகாடுதான் லால்-கிலா-புராதன டில்லியின் செங்கோட்டை.

எனது பொதுவாழ்வு முழுவதிலும் எப்போதும் நான் ஒன்றை உணர்ந்திருக்கிறேன். சுதந்தரம் பெறுவதற்கு இதர வகையில் ஒவ்வொரு வழியிலும் இந்தியா பக்குவம் பெற்றிருந்தபோதிலும் ஒரு விஷயத்தில் அதற்குக் குறை இருந்து வந்திருக்கிறது.-விடுவிப்பு ராணுவம் இல்லாத குறை. அமெரிக்காவைச் சேர்ந்த ஜார்ஜ் வாஷிங்டனால் போராடிச் சுதந்தரம் பெற முடிந்ததின் காரணம்



அவரிடம் ராணுவம் இருந்ததுதான்; கரிபால்டி இத்
தாலியை விடுவிக்க முடிந்ததற்குக் காரணம், ஆயுதம்
தாங்கிய தொண்டர்கள் அவருக்குப் பக்கபலமாக இருந்
ததுதான். இந்தியாவின் தேசிய ராணுவத்தை அமைக்க,
முன்வருவதில் முதல் ஆளாக இருப்பது உங்களது உரி
மையும்; பெருமையும் ஆகும். அப்படிச் செய்வதன்மூலம்
நமது சுதந்தரப் பாதையில் உள்ள கடைசித் தடையை
யும் நீங்கள் நீக்கியவர்களாவீர்கள். இத்தகைய பெரு
மிதமான லட்சியத்தில் முன்னோடிகளாக-வழிகாட்டி
களாக இருப்பது பற்றி மகிழுங்கள்; பெருமை அடை
யுங்கள்.

---

ஞாபகப்படுத்துகிறேன்: உங்கள் வேலை இருமடங்
கானது. ஆயுத பலத்தாலும் உங்கள் ரத்தத்தின் விலை
யாலும் நீங்கள் விடுதலை பெற்றாக வேண்டும். அப்
போது இந்தியா சுயேச்சையாக இருக்கும்போது சுதந்தர
இந்தியாவின் நிரந்தர ராணுவத்தை நீங்கள் நிருமிக்க
வேண்டும். நமது விடுதலையை என்றென்றைக்கும் பேணிக்
காப்பது சுதந்தர இந்தியாவின் வேலை. நமது தேசியத்
தற்காப்பு ஏற்பாடுகளைச் சற்றும் அசைக்க முடியாத
அஸ்திவாரத்தில் அமைக்க வேண்டும். அப்படிச் செய்
தால்தான் நமது சரித்திரத்தில் மீண்டும் நாம் சுதந்
தரத்தை இழந்துவிட மாட்டோம்.

நீங்கள் போர்வீரர்கள்; அந்த முறையில் மூன்று
லட்சியங்களை நீங்கள் உள்ளத்தி லிறுத்திப் பற்றி ஒழுகி
வர வேண்டும். விசுவாசம், கடமை, தியாகம் இந்த
மூன்று லட்சியங்களும் முக்கியமானவை. எப்போதும்
தங்கள் நாட்டுக்கு உண்மையாகவும், எந்த நிலைமையி
லும் தங்கள் கடமையை நிறைவேற்றக் கூடியவர்களாக
வும், எப்போதும் தங்கள் உயிரைத் தியாகம் செய்யத்
தயாராயிருப்பவர்களாகவும் இருக்கும் போர்வீரர்களை
இகல் வெல்லல் யார்க்கும் செய்யரிது." நீங்களும்
இப்படி வெல்லற்கரிய திறம்பெற விரும்பினால், இந்த

மூன்று லட்சியங்களையும் உங்கள் இதயத்தில், உள்ளுக்குள்ளே உள்ள அந்தரங்க ஸ்தானத்தில் ஆழப் பதிய வைத்துக்கொள்ளுங்கள்.

மெய்யான வீரனுக்கு ராணுவப் பயிற்சி, ஆத்மிகப் பயிற்சி ஆகிய இரண்டும் தேவை. நீங்கள்-நீங்கள் எல்லாரும்தான்-எப்படிப் பயில வேண்டும்? உங்களோடு, உங்கள் தோழர்களையும் எப்படிப் பயிற்றுவிக்க வேண்டும்? நீங்கள் பெறுகிற பயிற்சியின் நேர்த்தியைப் பொறுத்து ஒவ்வொரு போர்வீரனும் தன்னைப் பற்றித் தன்னில் தானே அகண்டாகாரமான நம்பிக்கை கொண்டிருப்பான்; எதிரியை விட எத்தனையோ மடங்கு தான் உயர்ந்தவன் என்ற உணர்வு பெற்றிருப்பான்; சாவுக்கு அஞ்சான்' நெருக்கடிச் சமயத்தில் தேவைப்பட்டால், சொந்தப் புத்தியை உபயோகித்து நடந்துகொள்ள வேண்டிய அளவுக்குத் திறமை பெற்றிருப்பான், உங்களுடைய பயிற்சி அப்படி யிருக்கவேண்டும். இந்த யுத்தப் போக்கின்போது,நீங்களே கண்ணால் கண்டிருக்கிறீர்கள். விஞ்ஞானப் பயிற்சியும். தைரியமும், அச்சமின்மையும், மின்வேகமும் சேர்ந்துகொண்டால் என்ன அற்புதங்கள் சாதனை யாகிவிடுகின்றன? இந்த உதாரணத்திலிருந்து கற்றுக்கொள்ள முடிந்ததெல்லாம் கற்றுக்கொண்டு முற்றும் முதல்தரமான நவீன ராணுவம் ஒன்றை இந்தியத் தாய்க்காக நிறுவி முடியுங்கள்.

இனி, உங்களில் அதிகாரியாயிருப்பவர்களுக்குச் சொல்லுகிறேன். ராணுவ அதிகாரிகளாகிய உங்களுடைய பொறுப்பு அதிகமானது. இந்த உலகத்தில் ஒவ்வொரு ராணுவ அதிகாரியின் பொறுப்பும் பெரிதே என்றாலும், உங்கள் விஷயத்தில் அது இன்னும் பெரியதாகி விடுகிறது. நமது அரசியல் அடிமைத்தனத்தால் நமக்கு உத்வேகம் அளிப்பதற்கு மூக்டென், போர்ட், ஆர்தர், சீடான் போன்ற பரம்பரை நிகழ்ச்சி வரலாறுகள் நமக்கு இல்லை. பிரிட்டிஷார் நமக்குக் கற்பித்த சில சங்கதிகளை நாம் மறக்கக் கற்றுக் கொள்ளவேண்டும். அவர்கள் கற்பிக்காத பல சங்கதிகளை நாம் கற்றுக் கொள்ள வேண்டும். இருந்தாலும், எனக்கு நம்



பிக்கை இருக்கிறது. நீங்கள் சமாளித்துக் கொள்வீர்கள். உங்கள் மேல், உங்கள் நாட்டார் போட்டிருக்கும் பாரமான கருமத்தை நீங்கள் செய்து முடிப்பீர்கள். நினைவு இருக்கட்டும் ஒரு ராணுவத்தை ஆக்கவோ, அழிக்கவோ அதன் அதிகாரிகளால் முடியும். இதுவும் நினைவு இருக்கட்டும். இத்தனை போர்முனைகளில் பிரிட்டிஷார் தோற்றது ஏன்? பிரயோஜனமில்லாத ராணுவ அதிகாரிகளே இதற்குப் பெரும்பாலும் காரணம். இனி, இதையும் ஞாபகத்தில் வைத்துக்கொள்ளுங்கள். உங்களிலிருந்துதான் சுதந்தர இந்திய ராணுவத்தின் பொது நிர்வாகிகள் தேர்ந்தெடுக்கப் பெறுவார்கள்.

உங்கள் எல்லாருக்கும் ஒன்று சொல்ல விரும்புகிறேன். இந்தச் சண்டையில் நீங்கள் அனுபவம் பெற்று, வெற்றியைச் சாதித்துக்கொள்ள வேண்டும். இவைதான் நமது வருங்கால ராணுவத்தின் தேசியக் கர்ண பரம்பரைக் கதையை ஆக்கும். தைரியம், அச்சமின்மை, வெல்லற்கு அருமை ஆகிய கர்ண பரம்பரைக் கதை இராத ஒரு ராணுவம், பலம்வாய்ந்த எதிரியோடு போராடும் போது, நிலைகுலையாமல் இருக்க முடியாது.

தோழர்களே!

நீங்களே வலியப் பணியாற்ற முன்வந்தீர்கள். மனித உள்ளம் கருதிப் பார்க்கக் கூடியவற்றுள், இது மகா கண்யம்வாய்ந்தது. இத்தகைய பணியைச் செய்துமுடிக்க, எத்தகைய தியாகமும் பெரிதல்ல. உயிர்த் தியாகமும் பெரிதல்ல. இன்று இந்தியாவின் தேசியக் கௌரவத்தின் காப்பாளர்கள் நீங்களே. இந்தியாவின் நம்பிக்கை அபிலாஷை அனைத்தின் உருவமும் நீங்களே. நல்லபடியாய் நடந்துகொள்ளுங்கள். அப்போதுதான், உங்கள் நாட்டு மக்கள் உங்களை வாழ்த்துவார்கள். பின் சந்ததிகள் உங்களைப்பற்றிப் பெருமைப்படும்.

எனது வாழ்நாளில் இன்றே மிகப் பெருமைவாய்ந்த நாள் என்று சொன்னேன். அடிமைப்பட்ட மக்களுக்கு விடுவிப்பு ராணுவத்தில் முதல் வீரனைச் சேர்ந்து

போராடுவதைவிட அதிகப் பெருமையோ, அதிகக்கௌரவமோ தரத்தக்கது வேறொன்றுமில்லை. ஆனால், இந்தக் கௌரவத்துடன் கூடவே, தக்க அளவு பொறுப்பும் இருக்கிறது. இதை நான் ஆழ உணர்கிறேன். இருளிலும் ஒளியிலும், இன்பத்திலும் துன்பத்திலும், கஷ்டத்திலும் வெற்றியிலும் உங்கள்கூடவே நான் இருப்பேன். இது உறுதி. இப்போதைக்கு உங்களுக்கு நான் அளிக்கக்கூடியவையெல்லாம் பசி, தாகம். வசதிக் குறைவு, கட்டாய முன்னேற்றம், சாவு ஆகியவைகள்தான். சாவிலும், வாழ்விலும் என்னை நீங்கள் பின்பற்றினால் நீங்கள் நிச்சயமாக என்னைப் பின்பற்றுவீர்களென்ற நம்பிக்கை எனக்கு உண்டு- வெற்றிக்கு உங்களை நான் இட்டுச் செல்வேன். விடுதலைபெற்ற இந்தியாவைக் காண, நம்மில் யார் தப்பிப் பிழைத்திருப்பார் என்பதுபற்றிக் கவலையில்லை. இந்தியா விடுதலை பெறும்; அது விடுதலை பெறுவதற்கு நம்மிடமுள்ள அனைத்தையும் நாம் கொடுப்போம். அப்படிச் செய்தால் போதும். இப்போது நமது ராணுவத்திற்கு இறை அருள் சுரந்து, வருகிற போரில் நமக்கு வெற்றி வழங்குமாக!

**புரட்சி வாழ்க!**

**சுதந்தர இந்தியா வாழ்க!**

---

[6—7—1943-ல் ராணுவ அணி நடைபோக்குப் பரப்பு நோக்கின் போது, மேன்மை தங்கிய பிரதம மந்திரி சேனாபதி ஹிடெக்கி ட்டோஜோ அவர்களைக் கௌரவிப்பதன் பொருட்டு, மேன்மை தங்கிய அன்னார்க்கு

# இந்திய தேசிய ராணுவப் படையினர் அளித்த நல்வரவேற்புரை

[படையின் சார்பாக நேதாஜி பேசியது-மொழிபெயர்ப்பாளர்]

மேன்மை தங்கிய பெரும் இந்தியத் தேசிய ராணுவத்தின் சார்பாக இன்று காலை மேன்மை தங்கிய தங்களுக்கு உவப்புடன் மனமார்ந்த வரவேற்பளிக்கிறேன். எங்கள் ராணுவத்தைப் பரப்பு நோக்கிச் செய்வதற்காக உங்கள் அரிய காலத்தில் இவ்வளவு நேரத்தைச் செலவு செய்து எங்களுக்கு அளித்துள்ள பெரும் பெருமைக்கு எனது ஆழ்ந்த பாராட்டுதலைத் தெரிவித்துக்கொள்ள விரும்புகிறேன். சுதந்தர இந்தியாவின் புதிதாக நிருமிக்கப்பெற்ற ராணுவச் சரித்திரத்தில் இந்த நாள் பொன் எழுத்துக்களால் பொறிக்கப்பெற்றிருக்கும். நேற்று நடந்த இந்தியச் சுதந்தரச் சங்க மாநாட்டுக்கு உற்சாக மூட்டும் செய்தி அனுப்பிய உடனடியாக இன்று எங்கள் வீரர்களிடையே மேன்மை தங்கிய நீங்கள் வந்திருப்பது எங்களது புரட்சிப் போராட்டத்துக்குச் சக்திவாய்ந்த உந்துதல் கொடுத்திருக்கிறது.

இன்று மேன்மை தங்கிய உங்கள் முன்பு நிற்கும் ராணுவத்திற்கு, இந்தியாவின் சுதந்தரத்துக்காகப் போரிட்டாக வேண்டுமென்பது தெரியும். வெற்றிக்கும் விடுதலைக்கும் இட்டுச் செல்லும் பாதையில் இன்றும் பல இடுக்கண்கள் வழிமறித்து நிற்கின்றன என்பதனையும்

அது உணர்ந்திருக்கிறது. ஆனால், எந்தவிதமான தியாகத்தைச் செய்தும், இந்திய விடுதலையைப் பெற்றே தீர்வதென்று இந்த ராணுவம் உறுதிகொண்டிருக்கிறது. இந்தக் கடுமுயற்சியில், கிழக்காசிய இந்தியர்கள் அனைவரின் ஈடுபட்ட ஆதரவை அது பெற்றிருக்கிறது. கிழக்காசிய இந்தியர்களின் உற்சாகம் எல்லையற்றது.

முடிவுரையாக மேன்மை தங்கிய உங்களுக்குப் பணிவுடன் வினயப்பூர்வமாக உறுதிகூற விரும்புகிறேன். உங்களுடன் தோளோடு தோளாக நின்று இன்பத்திலும் துன்பத்திலும், ஒளியிலும் இருளிலும், முழுவெற்றி கிட்டுமட்டும், இழந்த விடுதலையை மீட்டும் இந்தியா பெறுமட்டும் ஒரு சேர இருந்து போரிட உறுதி பூண்டுவிட்டோம். இது அசைக்க முடியாதது.

# ஒரு நாளில் எழுந்த ஏகாதிபத்தியம் ஓர் இரவில் மறையும்

12-7-1943-ல் இந்திய விடுதலைச் சங்க மாதர் பகுதியின் சியோனன் கிளையின் சார்பில் நடந்த இந்திய மாதர் கூட்டத்தில் பேசியது]

சகோதரிகளே!

இன்று நண்பகல் நீங்கள் எனக்கு அளித்த பெரிய வரவேற்பிற்கு எனது மனமார்ந்த வணக்கத்தை உங்களுக்கு முதலில் செலுத்த விரும்புகிறேன். வேண்டுமென்றே இதை நான் பெரிய வரவேற்பு என்கிறேன். ஏன்? இன்று நண்பகல் நீங்கள் எனக்கு அளித்த வரவேற்பைவிட அதிகச் சிறப்பான ஒன்றை என்னால் எண்ணிப் பார்க்க முடியாது. அதே சமயத்தில் அன்றைக்கு நகராண்மைக் கழகத்து அலுவலகத்தின் எதிரே, புல்வெளியில் (படாங்கில்) அணி சூழ்ந்து நின்றோமே அப்போது நீங்கள் காட்டிய பேருற்சாகத்துக்கும் வணக்கம். நான் மட்டுமல்ல, மேடையில் என்னுடன் இருந்த நண்பர்களும், விருந்தினரும் கூட உங்களது தீரப் போக்கைக் கண்டு உங்களைப்பற்றி மிகவும் உயர்ந்த அபிப்பிராயம் கொண்டார்கள். அந்த மழையிலும், குளிரிலும் கடைசி வரையில் நீங்கள் நின்ற நிலையானது, இடம் பெயராமலிருந்தது, எல்லார் மனத்திலும் ஆழப் பதிந்துவிட்டது. உங்களில் சிலர் குழந்தை குட்டிகளுடன் வந்திருந்தீர்களென்பதை நான் அறிவேன். நீங்கள் அந்தச் சமயம் காட்டிய தீரப் போக்கும், ஆழ்ந்த உற்சாகமும் எங்கள் எல்லார் மனத்திலும் ஆழப்பதிந்துவிட்டன. இந்த நல்ல ஆரம்பத்தை வைத்துக்கொண்டு, நாளுக்கு நாள் உங்கள் வேலை துரிதமாக முன்னேறும் என்பதில் எனக்குச் சந்தேகமில்லை.

உங்களுக்கெல்லாம் தெரியும்; எனக்கும் தெரியும். இந்தியாவில் சுதந்தர இயக்கத்தில் நமது பெண்கள்

எத்தகைய பங்கு கொண்டார்கள்? சிறப்பாக கடந்த இருபது ஆண்டுகளில் அவர்கள் கொண்ட பங்கு யாது? இதை நீங்களும் நானும் அறிவோம். இந்தியாவில் புது விழிப்பு ஏற்பட்ட அன்று முதற்கொண்டே புது வாழ்வின் எல்லாத் துறைகளிலும் பெண் மக்கள் சிறப்பான பங்கு பெற்றுவந்திருக்கிறார்கள். ஆனால், இது குறிப்பாகத் தெளிவுபட்டது 1921 முதற்கொண்டுதான். அப்போதுதான் மகாத்மா காந்தியின் தலைமையில் காங்கிரஸ் மறு பிறவி எடுத்தது. நமது சகோதரிகள் எங்கெந்த இயக்கங்களில் பெருமைக்குரிய பங்கெடுத்து வந்திருக்கிறார்கள் தெரியுமா? காங்கிரஸ் இயக்கத்திலோ, சட்ட மறுப்பு இயக்கத்திலோ மட்டுமல்ல; ரகசியப் புரட்சி இயக்கத்திலும் நமது சகோதரிகள் பங்குபெற்று வந்திருக்கிறார்கள்.

சொல்லப் போனால் மிகைப்படுத்துகிற குற்றத்துக்கு ஆளாகாமல் நான் ஒன்று சொல்லக்கூடும். இந்தியப் பெண்கள் முக்கியப் பங்கு பெறாத எந்த ஒரு துறையும் நமது தேசிய முயற்சியில் இல்லை. அவர்கள் பங்கு பெறாத எந்த ஒரு துறையும் நமது பொதுஜன சேவையில் இல்லை. இதுமட்டுமா? நமது தேசியப் போராட்டத்தில் நமது ஆண் மக்களோடு இந்தியப் பெண் மக்களும் மகிழ்ச்சியோடும், தைரியத்தோடும் படாத கஷ்டமில்லை. சோறின்றி, நீரின்றி, கிராமம் கிராமமாகச் சுற்றுப் பிரயாணம் செய்கிற வேலையா யிருக்கட்டும்; அடுத்தடுத்துப் பல கூட்டங்களில் சொற்பொழிவாற்றும் வேலையா யிருக்கட்டும்; வீட்டுக்கு வீடு சுதந்தரச் செய்தியைப் பறையறைவிப்பதாய் இருக்கட்டும்; அதிகார உத்தரவை மீறி மனிதத் தன்மையற்ற பிரிட்டிஷ் போலீசின் குண்டாந்தடிப் பிரயோகத்தையும் பொருட்படுத்தாது நடுத்தெரு வழியே ஊர்வலம் நடத்துவதாக இருக்கட்டும்; தேர்தல் பிரசார வேலையா யிருக்கட்டும்; குற்றச்சாட்டு, சிறைத் தண்டனையைத் தைரியமாக எதிர்நோக்குவதாகத்தான் இருக்கட்டும்; எல்லாவிதமான அவமதிப்பையும், அவமானத்தையும் சகித்துக்கொள்வதாக இருக்கட்டும்-இப்படிப்பட்ட எந்த நிலைமையிலும் எந்தச்



சந்தர்ப்பத்திலும் நமது பெண் மக்கள் சளைத்ததில்லை. கடைசியாக ஒன்று; ஆனால், இது அற்பமல்ல. நமது வீரச் சகோதரிகள் ரகசியப் புரட்சி இயக்கத்தில் சிறப்பான பங்கு பெற்றிருக்கிறார்கள். தேவை எழும்போது தங்கள் சகோதரர்களைப் போலவே தங்களாலும் துப்பாக்கி பிடித்து மிக நன்றாய்க் குண்டுபொழியத் தெரியும் என்று காட்டியிருக்கிறார்கள்.

உங்கள் நாட்டின் விடுதலைக்காகக் கஷ்டப்பட உங்களுக்குத் திறமையுண்டு; அதற்காக உங்களால் சண்டைபோட முடியும். உங்களது இந்தத் திறமையிலும் உங்கள் மீதும் எனக்குள்ள முழு நம்பிக்கையையும் இன்று நான் எடுத்துச் சொல்லுகிறேன் என்றால், அது வெறும் அர்த்தமற்ற வாய்நிறைந்த அடைமொழி அல்ல. உங்களுக்கு உற்சாகமூட்டும் நோக்கத்துக்காக மட்டுமே சொன்ன சொல் அல்ல. பின், எதைக் கொண்டு நான் இப்படிச் சொல்லுகிறேன்? எனது சொந்த அனுபவத்தைக் கொண்டே நான் இப்படிச் சொல்லுகிறேன். நமது பெண்களால் என்ன சாதிக்க முடியுமென்று எனக்குத் தெரியும். அதனால் மிகைப்படுத்தும் குற்றத்துக்குக் கொஞ்சமும் ஆளாகாமல் நான் ஒன்று கூறக்கூடும். நமது பெண்கள் செய்ய முடியாத எந்த வேலையுமில்லை, எந்தத் தியாகமுமில்லை, எந்தக் கஷ்டமுமில்லை.

நாம் தாய்நாட்டின் விடுதலையைப் பெறுவதற்கான முடிவான கடைசிப் போராட்டத்தில் இறங்குவதற்கு இப்போது வேளை வந்துவிட்டது. ஒரு நாட்டின் வாழ்வுக் காலத்தில் இத்தகைய வாய்ப்புக் கிடைப்பது அரிது. நமது வாழ்நாளில் இத்தகைய சந்தர்ப்பம் மீண்டும் வாய்க்கப் போவதில்லை யென்பது மட்டும் என்னவோ உறுதி. யார் கண்டார்? இன்னும் நூறு வருஷத்துக்கு இப்படிப்பட்ட சந்தர்ப்பமே வாய்க்காமற் போகலாம். ஒன்றை நான் சொல்லியாக வேண்டும்: இந்த வாய்ப்புக் கிடைத்ததும் இறைவனின் திருவுள்ளச் செயலாலேதான் ஆகும். இந்த வாய்ப்பை இரும்புப் பிடியில்பற்றி இருத்தி வைத்துக்கொண்டு எல்லாவிதமான தியாகத்தையும் செய்ய எல்லாவிதமான முயற்சியும் செய்தால் என்றென்

றைக்குமாக இன்று ஒரே மூச்சில் நாம் விடுதலை உரிமை பெற்றுவிடலாம். எனக்குத் தெரியும்: நம்மில் சிலர் இருக்கிறார்கள். பிரிட்டிஷ் ஏகாதிபத்தியம் சாசுவதமாக இருக்கக்கூடிய ஏகாதிபத்தியம் என்று ஒருகாலத்தில் அவர்கள் நினைத்தார்கள். பிரிட்டிஷ் ஏகாதிபத்தியம் ஒழிந்து போய்விடும் என்பது நம்ப முடியாத சங்கதி என்று ஒருகாலத்தில் அவர்கள் நினைத்தார்கள். ஆனால், சரித்திரம் சொல்லுவதென்ன? அது கூறும் விவரம் முற்றும் வேறு மாதிரியானது. ஒவ்வோர் ஏகாதிபத்தியத்துக்கும் உயர்ச்சி இருப்பதைப்போலவே வீழ்ச்சியும் இருக்கவே இருக்கிறது என்று சரித்திரம் நமக்குச் சொல்லுகிறது. உலகப் பரப்பின் மீதினின்றும் மறைந்தொழிந்துவிடும் காலம் இப்போது பிரிட்டிஷ் ஏகாதிபத்தியத்துக்கு வந்துவிட்டது. சகோதரிகளே, உங்களுக்கு நினைவிருக்கிறதா? அன்றைக்கு மைதானத்தில் பேசியபோது நான் சொல்லவில்லையா? மற்றவர்களல்லாவிடினும் சிங்கப்பூர்ப் போர்க்களத்தில் நின்று கொண்டிருக்கும் நாமாவது நம்பித்தான் ஆகவேண்டும். நாம் நம்பத்தான் செய்கிறோம். எதை? பிரிட்டிஷ் ஏகாதிபத்தியம் என்பது கடந்த காலத்தைச் சேர்ந்த விஷயம் என்பதை. இல்லையா? நாம்தான் நேரே கண்ணால் கண்டோமே. உலகத்தின் இந்தப் பாகத்திலிருந்து அது எப்படி மறைந்தது? உலகத்தின் இன்னொரு பகுதியிலிருந்து-இந்தியாவிலிருந்தும்தான்-அது எப்படி மறையும் என்பதை நாம் பார்ப்போம். பல வருஷங்களுக்கு முந்தி ஒரு புத்தகம் படித்திருக்கிறேன். எனக்கு நினைவிருக்கிறது. அதை எழுதியவர் ஓர் இங்கிலீஷ்காரர். அவர் பெயர் மெரிடித் கொன்ரேட் என்பது. அந்தப் புத்தகத்தில் இந்தியாவைப் பற்றிக் குறிப்பிடும்போது என்ன சொல்லுகிறார்? இந்திய மக்கள் ஐக்கியப்பட்டு விட்டால், பிரிட்டிஷார் இந்தியாவை அடக்கி ஆள முடியாமற் போய்விடுமென்கிறார் அவர். இப்படிச் சொல்லிக்கொண்டே போகும்போது, இன்னொன்றையும் குறிப்பிடுகிறார். அது என்ன?



ஒரே நாளில் எழும்பிய ஏகாதிபத்தியம் ஒரே இரவில் மறைந்து போய்விடுமாம்.

எனது சமீப ரேடியோப் பேச்சு ஒன்றில் குறிப்பிட்டிருக்கிறேன். சிங்கப்பூரை நிருமிக்க இருபது வருஷம் பிடித்தது; அதைக் காலி செய்ய ஏழே ஏழு நாள் போதுமானதாக ஆயிற்று. என்னவோ, ஏழு நாளில் பிரிட்டிஷாரை இந்தியாவிலிருந்து துரத்திவிட முடியாதுதான். ஆனால் நாம் துள்ளிதமாய்க் கணக்குப் போட்டுப் பார்த்தால், இறுதிப் போராட்டம் துவங்கியதிலிருந்து எத்தனை வாரத்தில் பிரிட்டிஷாரை இந்தியாவிலிருந்து துரத்த முடியும் என்று சொல்லமுடியும்.

சகோதரிகளே!

நமது உரிமையைப் பெறப் போரிடக் கடைசி முயற்சியில் இறங்குவதற்குக் காலம் வந்துவிட்டதென்பதில் நீங்கள் ஒவ்வொருவரும் பரிபூரணமான நம்பிக்கை கொண்டிருக்கிறீர்களென்று நம்புகிறேன். இந்த யுத்தம் ஆங்கிலோ-அமெரிக்கச் சாம்ராஜ்யத்தின் தோல்வியாகவும் வீழ்ச்சியாகவும் இருக்கும். ஆங்கிலோ-அமெரிக்கச் சாம்ராஜ்யத் தோல்வியிலிருந்துதான் இந்தியா சுதந்தரம் பெற முடியும் என்கிற விஷயங்களிலும் நீங்கள் ஒவ்வொருவரும் பரிபூரண நம்பிக்கை கொண்டிருக்கிறீர்கள் என்றே நம்புகிறேன். அதனாலேயே இந்தியாவின் சுதந்தரமானது அச்சு வல்லரசுகளின் இறுதி வெற்றியுடன் சேர்ந்து படிந்து கிடக்கிறது என்று எப்போதும் அழுத்தமாய் வற்புறுத்திச் சொல்லி வந்திருக்கிறேன். இன்று, இந்தியா அச்சு வல்லரசுகள் ஆகிய இரு தரப்பினருக்கும் பொது எதிரியாக இருப்பவன் ஒருவனே. அதனால், நமது குறிக்கோளும் பொதுவானதே. என்ன தியாகத்தைச் செய்யவேண்டி வந்தாலும் சரி, பொது எதிரியை நாம் எதிர்த்தாகவேண்டும். பொதுத் தியாகம் கஷ்டம் இவற்றின் மூலம் நமது விடுதலையைப் பெறவேண்டும்.

தியாகமும், கஷ்டமும் இல்லாமலேயே விடுதலைபெற முடிந்தாலும், அது பெறத் தகுதியற்றதென்றே நான்

நிச்சயமாய் எண்ணுகிறேன். ஏன்? நாம் சுயேச்சையா யிருந்தாலும், தியாகமும், கஷ்டமும் இல்லாமல் பெற்ற சுதந்தரத்தை நிலைபொறுத்தி வைத்திருப்பது கடினம். எனவே பிரிட்டிஷ் பிடியினின்றும் விடுதலைபெற்று, அதற்குப் பின்னர் நமது சுயேச்சையை நாம் என்றென்றைக்கும் பேணிக் காத்துவர விரும்பினால் சரித்திரத்தில் மீண்டும் நாம் சுதந்தரத்தை இழக்கக்கூடாதென்று விரும்பினால், நாம் அவசியமாகச் செய்யவேண்டியது என்ன தெரியுமா? நமது தேசியப் போராட்டம் நடக்க நடக்க நமது பலம் நிலையாக வேரூன்றி நமக்கு வெற்றியளித்து, அதற்குப் பின்னர் நம்முடைய சுதந்தரத்தை எக்காலத்தும் நாம் காத்துவர முடியும் படிச் செய்ய வேண்டும். ஆகவே சுதந்தரத்துக்கு நாம் விலை கொடுத்தாக வேண்டும். என்ன விலை? கஷ்டம், தியாகம், போராட்டம் என்ற விலை. என் உள்ளத்தில் ஐயம் எழவில்லை. வேண்டிய தியாகமும் போராட்டமும் செய்ய நம்மால் முடியும். வேண்டிய அளவு முக மலர்ச்சியுடன் கஷ்டப்பட நம்மால் முடியும். இதன் மூலம் நாம் பிரிட்டிஷ் அடக்கு முறை ஆட்சியிலிருந்து விடுதலை பெற முடியும் என்பது மட்டு மல்ல. அதற்குப் பிறகு நாம் பெற்ற சுதந்தரத்தைக் காத்து வரவும் நம்மால் முடியும்.

சகோதரிகளே!

இறுதிப் போராட்டத்துக்கான இறுதித் தயாரிப்பு வேலைகளை 'அடுதி பிடுதியாகச் செய்யத் தொடங்குவதற்குக் காலம் வந்துவிட்டது. நேரம் போக்க முடியாது. எப்போது கிளம்ப வேண்டும், அதற்கு அழைப்புக் குரல் எப்போது வரும் என்று எவரும் முன்கூட்டிச் சொல்ல முடியாது. ஆகவே, நாம் எப்போதும் தயாராயிருக்க வேண்டும். அழைப்பு எப்போது வந்தாலும், உடனே படை கிளம்பிச் செல்லத் தயாராயிருக்கவேண்டும். அன்றைக்குச் சொன்னேனல்லவா? அதேபோல, நம் உள்ளத்தில் இருப்பது ஒரே எண்ணந்தான். நம் உதட்டிலிருந்து கிளம்புவது ஒரே குரல் ஒலிதான்:-"டில்லி நோக்கி முன்னே போ!" "டில்லி நோக்கி முன்னே போ!" பிரிட்டிஷ் ஏகாதிபத்தியத்தின் இடுகாடாக ஆகிவிட்ட இந்த சியோனிலிருந்து துவங்குகிற இயக்கம் பிரிட்டிஷாரை இந்தியாவிலிருந்து துரத்திவிட்டு, நமது தலை நகரத்தில் நாம் அமர்ந்துகொண்டுவிட்டபிறகேமுடிவடையும். அப்போது டில்லியின் புகழ்பெற்ற செங்கோட்டை முன்னால் நமது வெற்றிக் கொண்டாட்டத்தின் கடைசி அணி வகுப்பை நாம் நடத்துவோம்.



சகோதரிகளே!

ஒரு காலத்தில் பழமை விரும்பும் மனிதர்கள் சிலர் நம்மில் இருந்தார்கள். தேசியப் போராட்டத்தில் பெண்களுக்கு இடம் இல்லை என்று அவர்கள் எண்ணினார்கள். இது முற்றும் ஆண் மக்களுடைய வேலையாம். இன்று நம்மிடையே அத்தகைய மனிதர்கள் இல்லையென்று நம்புகிறேன். அதற்கு முற்றும் மாறாக, நான் நம்புவது என்ன தெரியுமா? நமது பெண் மக்கள் தேசியப் போராட்டத்தில் தங்களுக்குரிய வேலையைச் செய்தாலொழிய, இந்தியா ஒருபோதும் சுதந்தரம் பெற முடியாது. நாம் சீக்கிரம் விடுதலை பெறுவோமென்று இன்று நான் உத்சாகமாயிருப்பது ஏன்? வருகிற போராட்டத்தில் இந்தியப் பெண்கள் சரியான பங்கு பெற்று வேலை செய்வார்கள் என்பதிலும் எனக்கு உத்சாகமான நம்பிக்கை உண்டு. அதனால்தான்.

வருகிற போராட்டத்தில் நீங்கள் உங்கள் பங்கு வேலையைச் சரியாய்ச் செய்வீர்கள் என்று பேசுகிறபோது இந்தியாவில் நம் சகோதரிகள் ஏற்கெனவே இந்தப் போராட்டத்தில் பங்கு பெற்று வருவதை நான் மறந்துவிடவில்லை. இன்று நம் சகோதரிகளில் நூற்றுக் கணக்கான-ஒருவேளை ஆயிரக்கணக்கான-பேர் இந்தியாவில் பிரிட்டிஷ் சிறைகளில் வாடிக்கொண்டிருக்கிறார்கள். நம் நாட்டின் யுவர்கள் அனைவருக்கும் உத்சாகமூட்டிச் செயலாற்றத் தூண்டுவன இவர்களது கஷ்டமும் தியாகமும்தான். எனக்குச் சந்தேகமில்லை. இந்தியாவிலுள்ள நமது நண்பர்கள்-ஆண்கள், பெண்கள், சிறுவர்கள், சிறுமிகள்-தங்கள் பங்கு வேலையைச் செய்து கொண்டே போவார்கள். ஆனால், அதுமட்டும் போதுமா?

சுதந்தரம் பெற அது மட்டும் போதாது. அவர்கள் முயற்சி யெல்லாம் ஒன்றுதிரண்டு வந்தாலும் கூடப் பிரிட்டிஷாரை இந்தியாவிலிருந்து வெளியேற்ற அது போதாது. எனவே, நாம் செய்து முடிக்க வேண்டிய கடமை ஒன்றுண்டு. அது யாது? வெளியிலிருந்து இந்தியாவுக்கு ஒத்தாசை அளிக்க வேண்டும்,

இங்கே கிழக்காசியாவில் கிட்டத்தட்ட முப்பது லட்சம் பேர் இந்தியரிருக்கிறோம். நமது மூலாதாரங்கள், ஆள் பலம்,-பணம், மற்றச் சௌகரியங்கள் இப்படி, இப்படி-எல்லாவற்றையும் ஒன்றுதிரட்டிக் குவிக்க முடிந்தால்; பிரிட்டிஷ் அடிமை விலங்கை முறித்தெறியக் கூடிய சக்தியை நம் தேசத்தார் பெறுவதற்கான உதவியை நாம் இந்தியாவுக்கு அளிக்கமுடியும்.

---

## சுதந்தரப் பர்மா

---

[பர்மா சுதந்தரம் பெற்றுவிட்டபோது பத்திரிகைகளுக்கு விடுத்த அறிக்கை]

1925 முதல் 1927 வரை மாந்தலேச் சிறையில் உள்ள எனது குச்சு அறையின் தாழ்வாரத்திலிருந்தபடி கடைசியாகப் பர்மாவில் சுதந்தரமாக இருந்துவந்த அரசனுடைய மாளிகையை உற்று நோக்குவது என் வழக்கம். அப்போது பர்மா மீண்டும் என்றைக்குச் சுதந்தரம் அடையுமோ என்று நான் என்னையே கேள்வி கேட்டுக் கொள்வதுண்டு. இன்று பர்மா ஒரு சுயேச்சை நாடு. விடுவிக்கப்பெற்ற ஒரு நாட்டின் சூழலில் நிரம்பியுள்ள காற்றை இப்போது நான் சுவாசித்துக் கொண்டிருக்கிறேன்.

உலக யுத்தம் நடந்து கொண்டிருக்கும் இந்த நட்ட நடுச் சமயத்தில், ஆசியாவிலே ஒரு சுதந்தர நாடு பிறப்பெடுத்துவிட்டது. பிரிட்டிஷ் சாம்ராஜ்யச் சாம்பலிலிருந்தும் தெறிபட்டு ஓட்டம் பிடிக்கும் பிரிட்டிஷார் தமக்குப் பின்னே விட்டுச் சென்ற இடிந்தழிந்து தீக்கிரையான வீடு வாசல்களிலிருந்து இன்னும் அழிந்துவிடாமல் புகைந்து கொண்டிருக்கும் சாம்பலிலிருந்தும் இது உதித்திருக்கிறது. நவம்பர் 1941-ல் அப்போது பர்மியப் பிரதமராயிருந்தவர் இங்கிலாந்திலிருந்தார். அங்கே சொற்ப அளவில் சுயாட்சி தரும்படிப் பிரிட்டிஷ் ஆளுவோரைக் கெஞ்சிக் கேட்டுக் கொண்டிருந்தார். அவருடைய கெஞ்சுதல்களை யெல்லாம் கேவலமாக மதித்து எள்ளி நகைத்து, உதறித் தள்ளிவிட்டார்கள். அப்புறம் பிரிட்டிஷாருக்கு எதிராகப் பர்மிய மக்கள் ஆயுதம் ஏந்திக் கிளம்பினார்கள். ஆயுதம் பூண்ட நிப்பொன் படைகளுடன் ஒத்துழைத்தார்கள். பர்மாவிலிருந்து பிரிட்டிஷாரைத் துரத்து துரத்தென்று துரத்தி அடித்தார்கள். அவர்கள்

செய்த தியாகம், பட்ட கஷ்டம் அனைத்துக்கும் இப்போது அவர்களுக்குப் பரிசு கிடைத்திருக்கிறது.

19-ம் நூற்றாண்டிலே தானே அடிமைப்படுவதன் மூலம் பர்மாவைத் தாக்கி அடிப்படுத்துவதற்குப் பிரிட்டிஷாருக்கு இந்தியாவானது சரியான எட்டும் எல்லைக் கல்லாக அமைந்தது. பர்மா இப்போது நமக்குக் கடன் கழித்துவிட்டது. பிரிட்டிஷாரை விரட்டிவிட்டது. இந்தியத் தேசிய ராணுவத்துக்குத் தன்னுடைய சுதந்தர பூமியை எவ்விக் கிளம்புவதற்குத் தகுந்த உந்துகளமாகத் தந்துதவியுள்ளது. இந்தியாவிலுள்ள பிரிட்டிஷ் ராணுவத்தைத் தாக்க இது உதவுகிறது.

ஜப்பானின் தகுதிவாய்ந்த பிரதமர் சேனாபதி ட்டோஜோ கொடுத்த வாக்குறுதி இப்போது காக்கப்பெறுகிறது. போருக்குப் பின் குடியேற்ற நாட்டு அந்தஸ்தும், பாக்கிஸ்தானும் தருவதாக சர். ஸ்டாஃபோர்டு கிரிப்ஸ் வாக்களிக்கிறார். சர். டார்மன் ஸ்மித்தோ, டில்லியிலிருந்தபடி தமது "டைப்ரைட்டர்களை"க் கொண்டு பர்மாவை ஆளுவதாகச் சொல்லிக்கொள்ளுகிறார். இவர்கள் இப்படிச் சொல்லிக்கொண்டு ஒருபுறம் இருந்தபடி இருக்க, பர்மா அதன் பாட்டில் தன் கூட்டாளி நிப்பானுடைய உதவியால் பிரிட்டிஷாரைக் குடை கவிழ்த்து, விடுதலை பெற்றுக்கொண்டுவிட்டது. இந்தியாவுக்கும், ஆசியாவுக்கும், உலகம் பூராவுக்கும் இது பெரிதும் அர்த்தக் குறிப்புடைய சங்கதியாகிறது.

இந்தியாவுக்குப் பக்கத்து வீட்டுக்காரப் பர்மா இப்போது விடுதலை பெற்றுவிட்டது என்கிற செய்தி புதுடில்லியிலுள்ள அதன் ஆட்சியாளரை நடுக்கு வாதம் பிடித்து ஆடச் செய்துவிட்டது. அவர்களைக் கிலி பிடித்து ஆட்டுகிறது. பர்மா செய்தது இந்திய மக்களுக்குத் தூண்டுகோலாக ஆகி, தம்மை அடக்கி ஒடுக்கி வைத்திருக்கும் அன்னியன்மேல் அவர்களும் ஆயுதம் தாங்கிச் சமரிட எழுந்தால் என்ன பண்ணுவது? அதனால், தேசிய



இயக்கத்தை நசுக்க இன்னும் அதிகக் கொடுமையான வழி முறைகளைக் கண்டுபிடிப்பதில் அவர்கள் சுறுசுறுப்பாய் ஈடுபட்டிருக்கிறார்கள். ஆனால், இனிமேல், இந்தியாவை உலகத்தின் எந்தச் சக்தியும் அடிமைப்படுத்தி வைத்திருக்க முடியாது. இரங்கூனின் சர்க்கார் மாளிகை மீது மயில் சின்னத்தைத் தாங்கிய (பர்மியர்) கொடி பறப்பதைப் போலவே, டில்லிச் செங்கோட்டை மீதும் சீக்கிரம் மூவர்ணக் கொடி பறக்கும்.

---

# சுதந்தரப் பர்மா

## II

### ரேடியோப் பேச்சு

தேச மக்களே, நண்பர்களே!

இன்று, 1943 ஆகஸ்ட் முதல் தேதி. இன்று, மகத்தான சரித்திர முக்கியத்துவம் வாய்ந்த நிகழ்ச்சி ஒன்று நடைபெற்றிருக்கிறது. உலக யுத்தம் நடந்துகொண்டிருக்கும் இந்த நிலைமையின் நட்ட நடுவிலே சுதந்தர ராஜாங்கம் ஒன்று உருப் பெற்றுவிட்டது. நமது அண்டை நாடாகிய பர்மா சுதந்தரம் பெற்றுவிட்டது. அதற்கு இப்போது சொந்தத் தேசியச் சர்க்கார் உண்டு.

சுதந்தரப் பர்மா நீடுழி வாழ்க!

1941, டிசெம்பரில், கிழக்காசியாவில் யுத்தம் மூண்டபோது இழந்த தங்கள் சுதந்தரத்தை மீண்டும் பெற இந்தச் சந்தர்ப்பத்தைப் பர்மிய மக்கள் பயன் படுத்திக்கொள்ளத் தீர்மானித்துவிட்டார்கள். இதை நீங்கள் அனைவரும் அறிவீர்கள். பர்மியர்களில் மிகப் பெரும்பாலோர் பிரிட்டிஷ் சர்க்காருடன் ஒத்துழைப்பதற்குப் பதிலாக நாட்டிலிருந்து பிரிட்டிஷாரை வெளியேற்றத் தங்களால் ஆன மட்டும் உதவி புரிந்தார்கள். அதன் பயனாக, இன்று பிரிட்டிஷாரிடமிருந்து பர்மா பரிபூரணமாய் விடுவிக்கப் பெற்றதோடு, அது நெடுங்காலமாக அடையப் பாடுபட்டுவந்த சுதந்தரக் குறிக்கோளையும் மெய்யாகவே அடைந்துவிட்டது. உலகச் சரித்திரத்தில் முக்கியமான இந்த நெருக்கடி வேளையில், பர்மாவின் சுதந்தரம் நமக்கு இரண்டு வகைகளில் அர்த்தம் நிறைந்ததாக ஆகிறது. முதலாவது, சரித்திரம் அளிக்கும் சந்தர்ப்பத்தைக் கைப்பற்றிக்கொள்ளத் தெரிந்துள்ள ஒரு தேசமானது என்ன சாதித்துக்கொள்ள முடியும் என்பதை அது காட்டுகிறது. இரண்டாவது, 19-ம் நூற்றுண்டில், பர்மாவைத் தாக்குவதற்குத் தாவுங்கட்டமாகப் பிடிபட்ட இந்தியர் எப்படிப் பிரிட்டிஷாருக்கு உதவியதோ, அதே போல, 20-ம் நூற்றுண்டில், இந்தியாவில் ஆக்கிரமித்துக்கொண்டிருக்கும் பிரிட்டனின் ராணுவத்தைத் தாக்குவதற்கு விடுதலை பெற்ற பர்மா கிழக்காசிய இந்தியச் சுதந்தர இயக்கத்துக்கு ஒரு தாவுங் கட்டமாக உதவியுள்ளது.

இந்தியா சுதந்தரம் இழந்து நெடு நாளைக்குப் பிறகுதான் பர்மா தன் சுதந்தரத்தை இழந்தது. இருந்தாலும், பர்மா நம்மை முந்திக்கொண்டு விடுதலை பெற்றுவிட்டது. நாமோ, புரட்சியின் வேதனைகளை இன்னும் ஆண்டனுபவித்துக் கடந்த பாடாயில்லை. பர்மிய மக்களின் சாதனை பெரிது. இந்திய மக்களின் சார்பாகவும், என் சார்பாகவும் எனது மனமார்ந்த வாழ்த்துக்கள் அவர்களுக்கு உரித்தாகும். பின்னாட்களில், அவர்கள் மேலும் மேலும் வளர்ந்து. செழித் தோங்குவார்களாக. புதியதும், சுதந்தரமுள்ளதுமான பர்மிய ராஜாங்கத்தின் தலைவராகிய மேன்மை தங்கிய டாக்டர் பாமா அவர்களுக்கும் எனது வாழ்த்துக்கள். இப்பொழுது அவர் ஆற்றவேண்டி வந்துள்ள பல பொறுப்புக்களையும் அவர் வெற்றிகரமாக ஆற்றிநடப்பாராக. ஜூலை முதல் வாரத்தில்தான் டாக்டர் பாமாவைச் சியோனானில் சந்தித்தேன். இவ்வளவு சீக்கிரத்தில், சுதந்தரப் பர்மிய ராஜாங்கத்தின் தலைவராக அவர் விளங்கி, அவருக்கு என் வாழ்த்தையும், பாராட்டையும் தெரிவித்துக்கொள்ளமுடிவது மட்டற்ற மகிழ்ச்சிக் குரிய செய்தியே.

நண்பர்களே,

இந்தியாவைத் தாங்கள் ஆண்டுவந்த காலத்தில், பிரிட்டிஷ் சர்க்கார் இந்திய மக்களுக்கு எத்தனை வாக்குறுதிகள் கொடுத்தார்கள் என்பதை நீங்கள் அறிவீர்கள். இந்த வாக்குறுதிகளெல்லாம் வெறும் கடிதத் துண்டுகளாகவே மதிப் பிழந்து போயின. இந்த யுத்தம் மூண்டதிலிருந்து இந்த வாக்குறுதிகளைத் திருப்பித்

திருப்பிக் கூறியுள்ளார்கள். என்னென்ன மடத்தனமான காரணங்களெல்லாமோ இந்த யுத்த அமளிக் காலத்திலே பிரிட்டிஷாரிட மிருந்து இந்தியர் கைக்கு அதிகாரத்தை மாற்றுவது இயலாம லிருக்கிற தென்று சப்பைக் கட்டுக் கட்டுகிறுர்கள். இவர்கள் கூற்றுக்கு முற்றும் மாருக விஷயங்கள் நடப்பதை நாம் பார்க்கிறேம். இந்த யுத்தம் நடந்தது நடந்துகொண்டே யிருக்க, இதன் மத்தியில், தனது சர்க்காரின் சார்பாகவும்,தேசத்தின் சார்பாகவும் ஜப்பானியப் பிரதமராகிய மேன்மை தங்கிய சேனபதி ட்டோஜோ அளித்த விடுதலை உறுதி மொழியை அவர் முற்றும் நிறைவேற்றி வைத்துவிட்டார். மனமிருந்தால் இடம் உண்டு. ஜப்பானின் ராஜரிகமும், தாராளப் போக்கும் பிரிட்டிஷ் அரசியல் வாதிகளின் ஆஷாட பூதித் தனத்தை வெள்ளிடை மலையாக எடுத்துக் காட்டுகின்றன. ஜப்பானின் இந்தப் பண்புகள் அதன் மெய்யான ராஜாங்கக் கொள்கையை நன்கு விளக்கிக் காட்டும்.

பர்மாவின் சுதந்தரத்தை யொட்டி ஃபிலிப்பீன் தீவுகளின் சுதந்தரமும் விரைவில் கிட்டும் என்பது நிச்சயம். ஆசியாவானது தன் சரித்திரத்தில் ஒரு புதிய சகாப்தத்தை இப்போது எட்டிநிற்கிறது. அடக்கப்பட்ட ஆசிய நாடுகள் எல்லாம் எழுந்து நின்று விடுதலை உரிமை பெற இது ஓர் ஒப்பற்ற சந்தர்ப்பம். இந்திய மக்களுக்கு இதில் ஒரு புனிதமான கடமை உண்டு. இந்த அரிய சந்தர்ப்பத்தை அவர்கள் பயன்படுத்திக்கொள்ள வேண்டும். பன்னெடுங் காலமாக அவர்கள் கொண்டிருந்த அபிலாஷைகளைப் பூர்த்தி செய்துகொள்ள வேண்டும்.

இந்தியா சுதந்தரம் பெருத வரைக்கும் ஆசியா பரிபூரணமாக விடுவிக்கப் பெற முடியாது. எனவே, இந்திய மக்கள் திரண்டெழுந்து தங்களைத் தாங்களே விடுவித்துக்கொண்டு, அதன் மூலம் இதர ஆசிய நாடுகள் விடுதலைபெற உதவியாக வேண்டும். எல்லாவற்றையும் விட இது முக்கியம். ஜப்பான் அளிக்கும் நட்பை இந்தியா



ஏற்க வேண்டும். அடக்கப்பட்ட இதர ஆசிய நாடுகளுக்கும் ஜப்பான் தனது நட்புறவை நல்க முன்வந்திருக்கிறது. பொது எதிரி முன்னுல் நிற்கிருன். தீர மிக்க நிப்பொனிய மக்களுடன் தோளோடு தோள் கொடுத்து இந்திய மக்கள் முன் நடக்க வேண்டும். எதிரி முறியடிக்கப்பட்டு, இழந்த சுதந்தரத்தை இந்தியா மீண்டும் பெறு மட்டும் அயரக் கூடாது.

**புரட்சி வாழ்க!**

**சுதந்தர இந்தியா வாழ்க!**

---

# சுதந்தரப் பர்மா

## III

[15-8-1943-ல் சியோனுன் ஃபாரேர் பார்க்கில் பேசியது]

கிழக்காசியா எங்கணும் உள்ள இந்தியர்கள் இது வரை என்றும் கண்டிராத அளவில் இன்று கூடுகிறார்கள். எதற்காக? இரண்டு நோக்கங்களுக்காக. முதலாவது நோக்கப்படி, அவர்கள் பர்மாவின் சுதந்தர தினத்தைக் கொண்டாடுகிறார்கள். இரண்டாவது நோக்கம், பிரிட்டிஷார் உடனே இந்தியாவை விட்டு வெளியேறி விட வேண்டும் என்ற தங்கள் கோரிக்கையை மீண்டும் வற்புறுத்துவதுவே. இந்தியாவுக்குப் பரிபூரண சுதந்தரம் கிட்டுகிற வரைக்கும் தொடர்ந்து போராடத் தாங்கள் பூண்டுள்ள அசைக்க முடியாத உறுதியை அவர்கள் மீண்டும் உறுதிப்படுத்துகிறார்கள்.

உங்களுக்குத் தெரிந்திருக்கும்: ஆகஸ்ட் முதல் தேதியன்று சுதந்தரப் பிரகடனம் செய்யப் பெற்றது; பர்மாவின் புதிய சுதந்தர ராஜாங்கம் உருப்பெற்றது; அதன் கூடவே விடுதலைபெற்ற பர்மாவின் முதல் மந்திரி சபையும் உருவாகியது. இந்த நல்ல வேளையில், பர்மாவில் இருக்கும் பாக்கியம் எனக்குக் கிடைத்தது. அந்த வைபவம் முற்றும் மிக்க புனிதமாகவும், பார்ப்போர் உள்ளத்தில் ஆழப் பதியும் தன்மையதாகவும் அமைந்திருந்தது. இறைவனுக்கு நான் நன்றி செலுத்துகிறேன். ஏன்? இந்திய எல்லைக்கு அடுத்தாற்போல், என் கண்ணெதிரிலேயே, புதிதாக ஒரு சுதந்தர ராஜாங்கம் உருப்பெற்றதைக் காணப் பெற்றேன். அதனால், சரித்திரத்தின் பழிக்குப் பழி வாங்கும் தன்மையினால், பர்மாவில் பிரிட்டிஷ் ஆதிக்கத்துக்கும், அதிகாரத்துக்கும் எந்த இடம் இருப்பிடமாக இருந்ததோ, அந்த இடத்திலேயே பர்மாவின் சுதந்தர ராஜாங்கமும் நிறுவப்பெற்றது.



சரித்திர முக்கியத்துவம் வாய்ந்த இந்த வைபவத்தைக் கண்ணுற்றுக்கொண்டிருந்த போது என் கற்பனையில் என்ன தோன்றியது தெரியுமா? புதிய டில்லியில், வைசராய் மாளிகையில் நமது தேசியக்கொடியை ஏற்றும் வைபவமும், இந்தியாவிலிருந்து பிரிட்டிஷாரைக் கடைசியில் வெளியேற்றிய பிறகு, டில்லியின் புராதனமான செங்கோட்டையினுள் அஜாத் ஹிந்த் ஃபவுஜ் (இந்தியத் தேசிய ராணுவம்) வெற்றிப் பவனி வருவதையும் என் மனக் கண்ணால் துலக்கமாகக் காண முடிந்தது.

நண்பர்களே!

உங்களுக்குத் தெரிந்திருக்கும்: பர்மா எனக்குப் புதிதல்ல. அந்த நாட்டைப் பிரிட்டிஷார் தம் வசம் வைத்திருந்தபோது, பர்மாவில் இரண்டரை ஆண்டுகள் சிறைவாசத்தில் கழித்திருக்கிறேன். ஆனால், இந்தச் சமயம் நான் கண்ட பர்மா புதிய பர்மா, சுயேச்சையான பர்மா. இந்தச் சுயேச்சைப் பர்மாவில் நிப்பொன் ராணுவ ஆட்சி முற்றும் எடுபட்டுவிட்டது. டாக்டர் பாமாதான் புதிய ராஜாங்கத்தின் தலைவர். பிரதமரும், ராணுவத் தலைமை அதிகாரியும்கூட அவர்தான். அவர் ஒரு மந்திரி சபை அமைத்திருக்கிறார். இதற்கு யோசனை கூற ஒரு தனிக் குழு இருக்கும். பிரிட்டன், அமெரிக்கா இரண்டின்மீதும் சுதந்தரப் பர்மா போர்ப் பிரகடனம் செய்துள்ளது. பர்மாவை மீண்டும் பிடித்து, மறுபடியும் அடிமைப் படுத்தி வைத்துவிடலாம் என்று இவை இன்னும் கனவு காணுகின்றன.

நிப்பொன் உடன் பர்மா நேச உடன்படிக்கைசெய்து கொண்டிருக்கிறது. நிப்பொன் ராஜத் தூதர் ஒருவர் ஏற்கெனவே பர்மாவில் இருக்கிறார். இதர நாடுகளின் தூதர்கள் சீக்கிரம் இரங்கூன் வந்து சேர்வார்கள். பர்மியத் தூதர்கள் பிற நாடுகளுக்குச் செல்ல யோக்யதாம்சம் பெற்றுவிட்டார்கள். பர்மாவில் உள்ள ஆங்கிலோ-அமெரிக்க எதிரிச் சொத்துக்கள் அனைத்தையும் புதிய பர்மிய ராஜாங்கத்தினிடம் பெயர் மாற்றிவிட நிப்பொன் தீர்மானித்துவிட்டது. இந்தச் சொத்துக்களில்

ஆலைகள், துறைமுகங்கள், ரயில்வேக்கள், டெலிபோன், தந்தி முதலிய எல்லாம் அடங்கும். இவ்வாறாக, பர்மியர்கள் பர்மிய மக்களின் இஷ்டப்படி நாட்டை ஆளுவார்கள். அவர்களுக்கு ராணுவம் உண்டு. அதில் போர்வீரர், அதிகாரிகள் அனைவரும் அவர்கள் ஜனங்கள்தான். கடைசியாக ஒன்று. இது அற்பம் அல்ல. ராஜாங்கத் தலைவர்-அதிபதி டாக்டர் பாமா-உடைய வீட்டின்மீதும், அலுவலகத்தின்மீதும் பறந்து காட்சி தருவது யாது? பிரிட்டிஷ் ஐக்யக் கொடியா? அன்று. மயில் சின்னமாகிய பர்மியத் தேசியக் கொடிதான் இங்கெல்லாம் பறப்பது.

சமீபத்தில் நான் பர்மாவில் கண்ட அனுபவங்கள் இன்று என் உள்ளத்தில் நிறைந்து செறிந்துள்ளன. அங்கே நான் கண்டது, கேட்டது அனைத்தையும் விவரிப்பதானால், அதற்கு மணிக்கணக்காக நேரம் பிடிக்கும்: அவ்வளவு விஷயம் சொல்ல வேண்டியிருக்கும். ஒரு சில செய்திகளை மட்டும் கூறிவிட்டு, இந்த விஷயத்தை முடித்துக்கொள்கிறேன். முதல் முதலில், இரங்கூன் சிறையைப் பற்றிப் பேசலாம். 1927-ல் இரங்கூன் சிறையில் பல மாதம் இருந்தேன். அதனால், மறுபடியும் அந்த இடத்தைப் பார்க்க விரும்பினேன். அப்படிச் செய்ய எனக்கு அனுமதி கிடைக்கவில்லை. ஏன்? இந்தியக் கைதிகளுக்காக அதை இப்போது உபயோகிப்பதில்லை. இப்போது அதைப் பிரிட்டிஷ் யுத்தக் கைதிகளுக்காகவே உபயோகிக்கிறார்கள்.

நண்பர்களே!

இந்தியச் சிறைக்கூடங்களை யெல்லாம் பிரிட்டிஷ் யுத்தக் கைதிகளுக்கான முகாம்களாக மாற்றியமைத்து, லட்சக்கணக்கான தேசபக்த இந்தியர்களைச் சிறைப்படுத்திய கொடுமைக்குப் பழிவாங்கப் போகிற அந்த நாளைப் பற்றி நினையுங்கள். அந்தப் புகழ் தரும் நாளை எதிர்நோக்கி இன்றிருந்தே தயாராகுங்கள்.

டாக்டர் பாமாவுடனும், அவரது மந்திரிகளுடனும் நீண்டநேரம் சர்ச்சையிடும் உரிமை எனக்குக் கிடைத்



தது. பொதுநலம் குறித்த பிரச்னைகள் பற்றிப் பரிபூரணமான ஒப்புரவு கிட்டியுள்ளது என்று மகிழ்ச்சியுடன் கூறுகிறேன். பொது எதிரிமீது பர்மாவும் இந்தியாவும் தோளோடு தோள் தொட முன்னேறி நடக்கும். பொது எதிரியை அடக்கி, அமைதி நிலைபெறச் செய்ததும் நாம் பரிபூரண நட்புரிமையுடனும், இணக்கத்துடனும் நல்ல அண்டை அயலார்களாக வாழ்வோம்.

நண்பர்களே!

இந்தியச் சுதந்தர இயக்கத்தின் சார்பாக அதிபதி டாக்டர் பாமாவுக்கும், புதிய மந்திரி சபையின் மந்திரிகளுக்கும், சுதந்தரப் பர்மிய மக்களுக்கும் அவர்கள் சித்தி பெற்றுள்ள சுதந்தரத்துக்காக எனது மனமார்ந்த வாழ்த்துக்களைக் கூற விரும்புகிறேன். எதிர் காலத்தில், பர்மா வானது நிரந்தரமான சுதந்தரமும், செழுமையும் பெற்றுத் திகழ நமது மனப்பூர்வமான ஆசி மொழிகளையும் கூற விரும்புகிறேன்.

நாம் பாக்கியசாலிகள். ஏன்? சமீபத்தில் டோக்கியோ போய் வந்த பர்மியத் தூதுவர்கள் இன்று நம் மத்தியில் உடன் இருக்கிறார்கள். மேன்மை தங்கிய ஊ பா ல்வின் தூதுவர்களின் தலைவராகச் சென்று வந்தவர். உங்கள் சார்பாகவும் என் சார்பாகவும் மேன்மை தங்கிய ஊ பா ல்வினுக்கும், அவரது சகாக்களுக்கும் மனமார்ந்த வரவேற்பளிக்கிறேன். பர்மாவிலிருந்து பிரிட்டிஷாரை வெளியேற்றிய பிறகு, இந்தியாவுக்கு வழி திறந்தாச்சு. அந்த வழியாக நாம் முன்னேறி நடக்க வேண்டும். பிரிட்டிஷாரை இந்தியாவிலிருந்து விரட்டியடிக்கிற வரைக்கும் பர்மாவின் சுதந்தரம் பத்திரப்படாது. எனவே, இந்தியா சுதந்தரமடைவது இந்திய மக்களுக்கு மட்டுந்தானா அவசியமானது? அல்ல, அல்ல. பர்மியருக்கும் அது அவசியமானதே.

பிரிட்டிஷார் இந்தியாவிலிருந்து வாபஸ் ஆகவேண்டுமென்று கேட்ட குற்றத்திற்காக மகாத்மா காந்தி சிறையிடப்பட்டு ஒரு வருஷம் ஓடிப் போய்

விட்டது. அது முதல் சட்ட மறுப்பு இயக்கமும், நாச வேலைகளும் தனி உத்வேகத்துடன் நடந்து வந்துள்ளன. நாமோ, இன்னும் சுதந்தரம் பெற்றபாடில்லை. இந்தோ-பர்மா எல்லையில் இன்னொரு போர் முனையை உண்டாக்கி, இந்தியாவிலுள்ள பிரிட்டிஷாருக்கும் அவர்களது நேச நாடுகளுக்கும் எதிராக ஆயுதம் ஏந்திக் கிளம்புமாறு இந்திய மக்களையும் பிரிட்டிஷ் இந்திய ராணுவத்தையும் நாம் அழைத்தாலொழிய நாம் சுதந்தரம் பெறப் போவதில்லை.

இந்திய மக்கள் கோரி நிற்கும் இரண்டாவது போர் முனையை உண்டாக்கும் வேலை கிழக்காசியாவிலுள்ள இந்தியர்கள் கையால் செய்து முடிக்கப் பெற வேண்டுமென்பது இறைவனது திருவுள்ளமாகும்: இதற்கு நாம் என்ன செய்ய வேண்டும்? கிழக்காசியாவில் உள்ள ஆள் பலம், பொருள் பலம் அனைத்தையும் பரிபூரணமாகத் திரட்டிக் குவிக்க வேண்டும். ஆஜாத் ஹிந்த் ஃபவுஜுக்கு (இந்தியத் தேசிய ராணுவத்துக்கு) ஜான்சி ராணி படை உள்பட எனக்கு மூன்று லட்சம் பேர் ஆண்களும் பெண்களும் தேவை. சியோனன் மலாய இளைஞர்கள் இத்தனை பேர் படையில் சேர முன்வந்திருப்பதற்கு அவர்களுக்கு நான் நன்றி செலுத்துகிறேன். ஆனால், சியோனனிலிருந்து கிடைத்துள்ள பணம் பற்றாது. சியோனனிலிருந்து குறைந்தது ஐந்து கோடி டாலராவது வேண்டும். நமது தேசியப் போராட்டத்துக்கு அது இருந்தாக வேண்டும். இது உங்களுக்கு அதிகப்படியானதல்ல என்று நான் அறிவேன்.

எனக்கு நம்பிக்கை உண்டு. சுயேச்சையான இந்தியாவின் தற்காலிகச் சர்க்காரை நாம் நிறுவுகிற காலம் வெகு தூரத்திலில்லை. இதைச் செய்ததும், நமது சொந்தச் சர்க்காரின் தலைமையின் கீழ், நாம் இந்தியாவுக்குள்ளே படையெடுத்துச் செல்வோம். ராணுவத்திலும் பொது ஜனங்களிலும் உள்ள என் தோழர்களுக்கு ஒன்று தெரிவிக்க விரும்புகிறேன். இந்தியத் தேசிய ராணுவம் முன்னுக்கு நடந்த வண்ணமிருக்கிறது.



சியோனனிலிருந்து டில்லி எவ்வளவோ தூரத்தில் இருக்கிறது. எனவே, நாம் கூடியசீக்கிரம் படை கிளம்பிவிட வேண்டும்: செயலில் இறங்கத் தயாராயும், தகுதியாயும் உள்ள அனைவரும் இப்பொழுதே பயணத்துக்கு மூட்டை கட்டத் தொடங்க வேண்டும்.

அடுத்த இரண்டு மாதக் காலத்தில், ராணுவத்தில் பெரும் பகுதி இந்தியா நோக்கி வழி பற்றிச் செல்லும். ராணுவம் நகரும் போது, சுதந்தரச் சங்கத்தின் தலைமை இடமும் டில்லியை நெருங்கி நெருங்கி நகரும். இந்தியா-பர்மா எல்லைக்கு நமது தலைமை இடம் மாற்றப் போகிற அந்த நன்னாளை நான் ஆவலோடு எதிர்பார்த்துக்கொண்டிருக்கிறேன். இன்று, நம்முடைய இந்தக் கூட்டத்தில் எனது முஸ்லிம் தேச மக்களில் இத்தனை பேரைக் காண்பது பெரு மகிழ்ச்சி தருகிறது. எனக்கு அவர்கள் அளித்த வரவேற்புக்கும், இந்தியச் சுதந்தர இயக்கத்துக்கு அவர்கள் அளித்த கண்ணியமான பண முடிப்புக்கும் எனது மனமார்ந்த நன்றி. உலக முழுவதும் அறியட்டும்; நமது எதிரிகள் அறியட்டும்; கிழக்காசியாவிலுள்ள இந்தியர் அனைவரும் ஒன்றுபட்டுவிட்டார்கள். சாதி, சமய வேற்றுமைகளை அவர்கள் பாராட்டவில்லை. தங்களுக்குப் பொதுவான தாய் நாட்டின் சுதந்தரத்துக்காக அவர்கள் போராடத் தீர்மானித்துவிட்டார்கள்.

———

## விசேஷத் தனி உத்தரவு

[ராணுவத் தலைமை அதிகாரத்தைத் தாமே நேரடியாக ஏற்றுக்கொண்ட சமயம் வெளியிட்ட உத்தரவு]

இந்தியச் சரித்திர இயக்கத்தின் நன்மையை உத்தேசித்தும், ஆஜாத் ஹிந்த் ஃபவுஜின் நன்மையை யுத்தேசித்தும். இன்று முதற்கொண்டு நமது ராணுவத்தின் நேரடியான அதிகார நிர்வாகத்தை நானே ஏற்றுக் கொண் டிருக்கிறேன்.

இது எனக்குக் களிப்பும், பெருமையும் தரக் கூடிய விஷயம். ஏன்? இந்தியாவின் விடுவிப்பு ராணுவத்தின் தலைவனாயிருப்பதை விடப் பெரிய கௌரவம் இந்தியன் ஒருவனுக்கு இருக்க முடியாது. ஆனால், நான் ஏற்றுக்கொண்டுள்ள வேலையின் பரிமாணத்தை நான் உணருகிறேன். பொறுப்புணர்ச்சி என் மீது பாரமாய் வந்து சுமந்திருப்பதை நான் உணருகிறேன். எல்லா நிலைமைகளிலும் சரி, அவை எவ்வளவு கடினமாயிருப்பினுஞ் சரி, எவ்வளவு சோதிக்கக் கூடிவையா யிருப்பினுஞ் சரி, இந்தியாவுக்கு நான் ஆற்ற வேண்டிய கடமையை ஆற்றுவதற்கு அவசியமான பலத்தை எனக்கு அருளும் படி இறைவனை இறைஞ்சுகிறேன்.

எனது தேச மக்களாகிய 38 கோடிப் பேரின் பணியாளாகவே நான் என்னை மதிக்கிறேன். இவர்கள் பல சமய கோட்பாடுகளைப் பின்பற்றுகிறவர்கள். எனது கடமைகளைச் சரியாக நிறைவேற்றத் தீர்மானித்திருக்கிறேன். 38 கோடிப் பேரின் நல உரிமைகளும் என் கையில் பத்திரமாயிருக்கும். ஒவ்வொரு தனி இந்தியனும் என்மீது பரிபூரணமான நம்பிக்கை கொள்வதற்கு நான் பாத்திரனாவேன் இப்படிப்பட்ட கலப்பற்ற தேசிய அடிப்படையின் மீதும், பரிபூரண நீதி, பாரபட்சமின்மை



இவற்றின் அடிப்படையின் மீதுமே இந்தியாவின் விடுவிப்பு ராணுவம் நிறுவப்பெற முடியும்.

நமது தாய் நாட்டின் விடுவிப்புக்காகவும். 38 கோடி இந்தியர்களின் நல்லெண்ணத்தை அடிப்படையாகக் கொண்டு சுதந்தர இந்தியச் சர்க்காரை நிறுவுவதற்காகவும், எக் காலத்தும் நிலைபேறுள்ளதான இந்தியச் சுதந்தரத்தைக் காத்துவரக்கூடிய நிரந்தர ராணுவத்தை ஆக்குவதற்காகவும், நாம் போராடப் போகிறோம். அந்தப் போராட்டத்தில், ஆஜாத் ஹிந்த் ஃபவுஜ் மிக முக்கியமான பங்குகொண்டு செயலாற்றும். இந்த வேலையைப் பரிபூரணமாக ஆற்றுவதற்கு நாம் என்ன செய்ய வேண்டும்? நாம் எல்லாரும் நெருங்கிப் பிணைந்து, ஒரு ராணுவமாக அமைந்துகொள்ள வேண்டும். அந்த ராணுவத்தின் குறிக்கோள் ஒன்றே ஒன்றுதான்--இந்தியாவின் சுதந்தரம். அந்த ராணுவத்தின் சித்தம் ஒன்றே ஒன்றுதான்--இந்தியச் சுதந்தரத்துக்காகச் செயலாற்றுவது அல்லது செத்துப்போவது. நாம் திரண்டு நிற்கும்போது, ஆஜாத் ஹிந்த் ஃபவுஜ் ஆனது கடினமான பாறைக் கற்களால் அமைந்த ஒரு சுவர்போல் இருக்கவேண்டும். நாம் முன்னேறி நடக்கும்போது, ஆஜாத் ஹிந்த் ஃபவுஜ் ஆனது மேடு பள்ளங்களைச் சமன்படுத்தும் நீராவியைக் கொண்டு இயங்கும் கப்பி உருளை மாதிரி இருக்க வேண்டும்.

நம்முடைய வேலை சுலபமானதல்ல. யுத்தம் நெடியதாய், கடினமானதாயிருக்கும். ஆனால், நம்முடைய கட்சியின் நியாயத்திலும், நம்முடைய எதிர்த்தடிக்க முடியாத வலிமையிலும் எனக்குப் பரிபூரணமான நம்பிக்கை உண்டு. மனித இனத்தில் சுமார் ஐந்தில் ஒரு பகுதியினராகிய 38 கோடி மனித ஜீவன்களுக்குச் சுதந்தரமாய் வாழும் உரிமை உண்டு. இப்பொழுது சுதந்தரத்தின் விலையைக் கொடுத்துத்தீர்க்க அவர்கள் தயாரா யிருக்கிறார்கள். இதன்பயனாக, விடுதலை வெற்றி பெற நமக்கு இருக்கும் பிறப்புரிமையை இனிமேல் நமக்குத் தராமல் பிடுங்கி வைத்துக்கொள்ள உலகத்தின் எந்தச் சக்தியாலும் முடியாது.

தோழர்களே! ராணுவ அதிகாரிகளே! வீரர்களே!

உங்களுடைய பரிபூரணமான ஆதரவையும், அச்சமற்ற விஸ்வாசத்தையுங் கொண்டு இந்தியாவை விடுவிப்போம். ஆஜாத் ஹிந்த் ஃபவுஜ் அந்த விடுவிப்பைச் செய்து முடிக்கும் கருவியாக அமையும். இறுதி வெற்றி நம்முடையதே. நான் உறுதி யளிக்கிறேன்.

நம்முடைய வேலை ஏற்கெனவே தொடங்கிவிட்டது. "டில்லி நோக்கி முன்னேறு!" என்ற முழக்கொலி நமது உதடுகளில் நின்று புறப்பட்ட வண்ணம், நாம் தொடர்ந்து உழைத்துப் போரிடுவோமாக. புது டில்லியில், வைசராயின் மாளிகைமீது, நமது தேசியக் கொடி பறக்கவேண்டும். இந்தியாவின் தலைநகரிலுள்ள புராதனமான செங்கோட்டையினுள்ளே ஆஜாத் ஹிந்த் ஃபவுஜ் வெற்றிப் பவனி வர வேண்டும். அதுவரைக்கும் நாம் தொடர்ந்து உழைத்துப் போராடுவோமாக.

சுபாஷ் சந்திரபோஸ்,
சிப்பா-சலர்
(உச்ச ராணுவ அதிகாரி)

தலைமையிடம், சிப்பாசலர் தலைமையிடம்,
உச்ச அதிகாரம்
ஆஜாத் ஹிந்த் ஃபவுஜ்
(இந்தியத் தேசிய ராணுவம்)
ஆகஸ்ட் 25. 1943.

---

# இ. தே. ரா. அதிகாரிகளுக்கு

சகோதர அதிகாரிகளே!

நமக்குள் நாம் ஒருவரை யொருவர் நன்ருய்த் தெரிந்துகொண்டிருக்க வேண்டுமென்பது என் விருப்பம். நமது நோக்கம் என்ன என்பதை நாம் அனைவரும் தெரிந்துவைத்திருக்க வேண்டும். நமது கடமைகள் யாவை? பொறுப்புக்கள் யாவை? இந்தக் கடமைகளையும், பொறுப்புக்களையும் திருப்திகரமாக நாம் எப்படி நிறைவேற்றி வைப்பது?

முதல் முதலாக, நானே என்னைப் பற்றி ஒரு சில செய்திகள் சொல்லுகிறேன். ஏன்? எனது தனி நபர் இயல்புஎன்ன? எனது தனிவாழ்க்கை யாது? இவைகளைப் பற்றி உங்களுக்குத் தெரிவிக்க விரும்புகிறேன். ஏனென்ருல், எதிர்காலத்தல், நாம் எல்லோரும் சேர்ந்து வேலை செய்ய வேண்டும். ஒரே பாதையில் அடி போட்டு நடக்க வேண்டும்.

கல்லூரிப் படிப்பு முடிந்ததும், நான் அரசியல் உலகில் நுழைந்தேன். அந்தக் காலத்தில், மிக முக்கியமான பிரச்னை எது தெரியுமா? இதுதான்: சென்ற யுத்தத்தின் போது, இந்தியர்கள் என்ன செய்தார்கள்? விளைபயன் யாது? எதிர்காலத்தில் நமக்கு உதவக்கூடிய முறையில் நாம் பெற்ற அனுபவங்களும், கற்ற பாடங்களும் யாவை? இந்தியாவிலும், இங்கிலாந்திலும் நாம் கண்ட அனுபவம் என்ன? நமது தலைவர்களின் கொள்கை பிழையானது என்று நமது அனுபவத்தி லிருந்து நாம் கண்டோம். செயலில் இறங்குவதற்கு நாம் நமது தலைவர்களை எதிர்பார்த்திருந்தோம் என்பது வாஸ்தவம். ஆனல், இளைஞர்களும், மாணவர்களும் ஆகிய நாம் கண்டது முழு ஏமாற்றமே, நம் மனத்தில் இருந்த தெல்லாம் ஒரே ஓர் எண்ணந்தான். போன யுத்தத்தில் நமது தலைவர்கள் செய்த பிசகை நாம் மறுபடியும் செய்துவிடக் கூடாது.

இந்த எண்ணந்தான் நம் மனத்தில் இருந்தது. எதிர்காலத்தில் நமக்கு வாய்ப்புக் கிட்டுமானால், இந்தமாதிரிப் பிசகுகளை நாம் செய்யமாட்டோம் என்று எண்ணினோம்.

இன்னொரு பெரிய கேள்வியும் எழுந்தது. ஐரோப்பாவில், யுத்தத்திற்குப் பிறகு 1918-1919 ஆகிய வருஷங்களில் பல மாறுதல்கள் ஏற்பட்டன. புதிய சர்க்கார்கள் உருவாகின. யுத்தத்திற்கு முன்னர் இவை இல்லை. செக் நாடு ஆஸ்திரியா-ஹங்கரி சாம்ராஜ்யத்தின் ஒரு பகுதியாயில்லாமல் போயிற்று. இன்னொரு தேசிய இனமாகிய போல் நாட்டினர் தங்கள் சொந்த அரசாங்கத்தை அமைத்துக்கொண்டார்கள். நான் ஐரோப்பா போனபோது, இரண்டு மூன்று இந்தியத் தலைவர்களை அங்கே சந்திக்கும் வாய்ப்புப் பெற்றேன். அவர்கள் எல்லோரும் எனக்கு ஆலோசனை கூறினார்கள். தாய் நாட்டுக்காக நாம் ஏதாவது செய்ய வேண்டுமானால், யுத்தச் சரித்திரத்தை நாம் ஆராய்ந்து பார்க்க வேண்டும். இத் தகைய சரித்திரத்திலிருந்து நாம் பெறும் அனுபவங்களைப் பிரிட்டனோடு நாம் போடும் சண்டையில் உபயோகித்துக் கொள்ள வேண்டும். விஷயங்களை நாம் விளங்கிக் கொள்ளவும் கற்றுக்கொள்ளவும் ஆரம்பித்தோம். செக்நாட்டுத் தலைவர்களில் சிலர் நாட்டைவிட்டு வெளியேறினார்கள். எதற்காக? பிரசாரம் செய்வதற்கும், ஆஸ்திரியா, ஹங்கரி ஆகிய நாடுகளின் எதிரிகளிடமிருந்து உதவி பெறுவதற்கும் அவர்கள் இப்படிச் செய்தார்கள். இவைகளைப் பற்றி நாம் தெரிந்துகொண்டோம். பிரிட்டன், ஃப்ரான்ஸ் ஆகிய இரு நாடுகளும் கைகோத்துக் கட்சி சேர்ந்துகொண்டன. பிரிட்டனும், ஃப்ரான்சும் இந்தத் தலைவர்களுக்கு உதவி புரிந்தன. யுத்தத்திற்குப் பிறகு, சுயேச்சையான சர்க்காரை இந்தத் தலைவர்கள் வைத்து நடத்தலாம். அந்த உரிமை இந்தத் தலைவர்களுக்கு உண்டு என்றுகூட இன்று அங்கீகரித்தன. தலைவர்களின் முயற்சிக்கு எல்லா உதவியும், ஒத்துழைப்பும் அளிப்பதாகப் பிரிட்டனும், ஃப்ரான்ஸும் உறுதி கூறின. முழு மனம் படிந்த ஈடுபாட்டுடன் அவர்கள் வேலை தொடங்கினார்கள். தங்கள்



நாட்டுக்கு வெளியேயிருந்த எல்லாச் செக் மக்களையும் ராணுவத்தில் சேர்த்துக்கொண்டார்கள். ஆஸ்திரியா-ஹங்கரி ராணுவத்தில் செக் தேசிய இனத்தைச் சேர்ந்த வீரர்களும் இருந்தார்கள். எதிரி வசப்பட்ட இந்தச் செக் வீரர்கள் செக் தேசிய ராணுவத்தில் சேர்ந்துகொள்ள வலிய முன்வந்தார்கள். செக் ராணுவத்தில் 20,000 வீரர்கள் இருந்தார்கள். இந்த ராணுவம் பிரிட்டன், ஃப்ரான்ஸ் இரண்டுடனும் கைகோத்த வண்ணம் ஆஸ்திரியா, ஹங்கரி, ஜெர்மனி ஆகிய மூன்று நாடுகளுக்கும் எதிராகப் போரிட்டது.

போல் நாட்டினரும் 30,000 பேரைக் கொண்ட ஒரு ராணுவத்தை அமைத்து, யுத்தத்தில் பங்கு பெற்றார்கள். ஜெர்மனியும் அதன் நேச நாடுகளும் தோல்வி அடையும் பாக்கியம் போல் மக்களுக்குக் கிட்டிற்று. யுத்தத்திற்குப் பிறகு அவர்கள் தங்கள் சொந்தச் சர்க்கார்களை அமைத்துக்கொள்ள முடிந்தது.

இதே பாதையில் நாமும் ஏன் போகக்கூடாது? சர்வதேசிய நிலைமையை நமக்குச் சாதகமாகப் பயன்படுத்திக்கொள்ளலாம். பரிபூரணச் சுதந்தரத்தைப் பெறுவதற்குப் பிரிட்டனின் எதிரிகளுடன் தோளோடு தோள் கொடுத்து நின்று நாம் போரிட வேண்டும்.

யுத்தத்தை அயர்லந்து மக்களும் தமக்குச் சாதகமாக ஆக்கிக்கொண்டார்கள். பிரிட்டிஷாருக்கு எதிராக சின் ஃபெயின் கட்சியின் கீழ் அவர்கள் வெளிப்படையாகப் புரட்சி செய்தார்கள். டப்ளின் நகரத்தில் சின் ஃபெயின் ஆட்சிக்கு இருந்ததெல்லாம் 3,000 பேரைக் கொண்ட ஒரு ராணுவந்தான். 10,000 பேரைக் கொண்ட ராணுவம் ஒன்றும் நாட்டில் அவர்களுக்கு இருந்தது. அவர்களுடைய திட்டங்களில் ஏதோ பிசகு நேர்ந்துவிட்டது. அதனால், டப்ளினில் தொடங்கிய எதிர்க் கிளர்ச்சி நாட்டுப்புறங்களில் பரவவில்லை. எப்படியும், எட்டு நாள் வரை டப்ளின் நகரை அவர்கள் தங்கள் ஆட்சியில் வைத்திருந்தார்கள். இது ஈஸ்டர் பெருநாள் சமயம் நடந்த

புரட்சியாகையால், இதை ஈஸ்டர் புரட்சி என்கிறார்கள். 1916-ல் இந்தப் புரட்சி செயலுருவம் பெறவில்லையானாலும் யுத்தம் முடிந்த உடனடியாக 1919-ல் இது மீண்டும் கிளம்பியது. 5,000 தொண்டர்கள்தான் இருந்தார்கள். இப்போது நிலைமை வேறு. போர் முடிந்துவிட்டது. எதிர் எழுச்சியை அடக்குவதற்கு இங்கிலாந்திலிருந்து துருப்புக்களைக் கொண்டுவர முடியும். 5,000 தொண்டர்களைக் கொண்ட இந்த ராணுவம்கூட விடாமல் சண்டைபோட்டது. கடைசியில், பிரிட்டிஷாரை அடிபணிய வைத்துவிட்டார்கள்.

1921-ல் நாம் இந்தியாவில் வேலைசெய்யத் தொடங்கினோம். சென்ற யுத்த வரலாற்றை ஆராய்ந்து பார்த்து நாம் பெற்ற அனுபவங்கள் அனைத்தும் நமக்கிருந்தன. உங்களுக்குத் தெரியும் :-அந்தக் காலத்தில் ஒத்துழையாமை இயக்கத்தை மகாத்மாகாந்தி தொடங்கிவிட்டார். காங்கிரஸுடன் கிலாஃபத் குழுவும் கைகோத்து வேலை செய்துகொண்டிருந்தது. ஒத்துழையாமை இயக்கத்தில் நாம் உற்சாகமாகப் பங்கெடுத்துக்கொண்டோம். நம் மனத்தில் ஒரே திட்டமான கருத்து இருந்தது. வாய்ப்புக் கிட்டும்போது பிரிட்டிஷாருக்கு எதிராக நாம் ஆயுதமேந்திக் கிளம்ப வேண்டும். நமக்கு இன்னொன்றும் தெரியும். பழிக்குப் பழிவாங்க ஜெர்மனி மீண்டும் முயலும். அப்போது, நாம் விரும்பிய சந்தர்ப்பமும் நமக்குக் கிடைக்கும்.

மகாத்மா காந்தியின் கீழ் 1921-ல் நாம் காங்கிரஸில் சேர்ந்தோம். எதற்காக? நமது போரைக் கொண்டு நடத்த வேறு வழியில்லை. கொடூரமான பிரிட்டிஷ் அடக்குமுறையைச் சமாளித்து, நமது தேசியக் கௌரவத்தைக் காத்துவர வேறு வழியில்லை. ஹிந்துக்களும், முஸ்லிம்களும் ஒன்றுபட்டார்கள். ஆனால், நமக்குத் தெளிவாகத் தெரியும். சட்ட மறுப்பு இயக்கத்தால் இந்தியா பரிபூரணமாய் விடுதலை பெறாது. மக்களிடையே அரசியல் பிரக்ஞையை இந்த இயக்கம் உண்டுபண்ணவில்லை என்பது வாஸ்தவம். ஆயுதம் தரித்த



போராட்டத்திற்கு மக்களை அது தயார்ச் செய்தது. 1921 முதற்கொண்டு, ஆயுதமேந்தத் தக்க சமயத்தை எதிர்பார்த்து, நாம் காத்துக்கொண்டிருந்தோம். ஐரோப்பாவில் மூண்ட யுத்தந்தான் அத்தகைய சந்தர்ப்பம்.

இது என் சொந்த நபர்ப் பார்வை மட்டுமல்ல 1921-ல் மகாத்மா காந்தியின் கீழ் தொண்டு புரிய வந்த பல இளைஞர்களும் இந்தக் கோணத்திலேயே பார்க்கிறார்கள். அஹிம்சையில் நம்பிக்கை கொண்ட சில இளைஞர்களும் இருக்கவே இருந்தார்கள். ஆனால், அவர்களில் பலா ஹிம்சையைப் பலமாக ஆதரிப்பவர்கள். அடிப்பதற்குச் சரியான காலத்தை எதிர்பார்த்து அவர்கள் காத்திருந்தார்கள்.

1933-ல் நான் ஐரோப்பாவுக்குப் போனேன். 1936 வரை அங்கேயே இருந்தேன். ஐரோப்பாவுக்கு நான் போன கருத்து யாது? நிலைமையை ஆராய எண்ணினேன். அடுத்து நிகழப்போவது என்ன என்று ஆராய எண்ணினேன். நான் ஐரோப்பாவில் தங்கியிருந்த காலத்தில் பெர்லினுக்குப் போனேன். சில சர்க்கார் அதிகாரிகளுடன் அறிமுகஞ் செய்துகொண்டேன். தலைவர் ஹிட்லரைச் சந்தித்தேன். அவரிடம் வெளிப்படையாகவே கேட்டேன்: பிரிட்டனை அவர்கள் எப்போது தாக்கப் போகிறார்கள்? அவர்கள் எப்போது தாக்குகிறார்கள் என்று தெரிந்தால், ஏகசமயத்தில் நாமும் ஆயுதமேந்திக் கிளம்பலாம் அல்லவா? அவர் பதில் சொன்னார்: பிரிட்டனோடு அவர்கள் சண்டை போடப் போவதில்லையாம். தங்கள் கோரிக்கைகள் எல்லாவற்றையும் பிரிட்டன் நிறைவேற்றி வைக்கும் என்று அவர்கள் நம்பினார்களாம். பிரிட்டனோடு சமரசம் செய்துகொள்வதில் அவர்கள் கருத்தாயிருந்தார்கள். இருந்தபோதிலும், இந்தியச் சுதந்தரத்தின்பால் தமக்குள்ள அனுதாபத்தை அவர் தெரிவித்தார். அவருடன் வாது புரிந்தேன். பிரிட்டிஷாரின் ஆஷாடபூதித்தனத்தையும், அவர்களது குள்ளநரித் தந்திரத்தையும் பற்றி வாதித்தேன். சொந்த அனு

பவத்தின் மூலம் இவைகளை இந்தியர்கள்தான் நன்றாய் அறிவார்கள் என்று சொன்னேன். ஜெர்மன் அதிகாரம் வலுப் பெற்று வருவதாகப் பிரிட்டன் நினைக்கிறபோது, ஜெர்மனியுடன் அது வெளிப் படையாக மல்லிட வந்து விடும் என்று அவரை எச்சரித்தேன். கடைசியாக, அவரிடம் சொன்னேன்:-"பிரிட்டன் எங்கள் பரம்பரை விரோதி. நீங்கள் ஆதரித்தாலும் சரி, ஆதரிக்காவிட்டாலும் சரி, நாங்கள் அதனுடன் போரிட்டே தீருவோம்." ஆனால், ஐரோப்பாவில் வெகு சீக்கிரம் போர் தொடங்கும் என்பதில் எனக்குச் சந்தேகமில்லை. யாருக்கும் இது விளங்கும். ஜெர்மனியில் நடந்து வந்த தயார் ஏற்பாடுகளைப் பார்த்தாலே போதாதா? இந்தச் சமயம் நான் ஐரோப்பா போன போது, 1936-ல் நான் சொன்னதைப் பற்றி அவர்களுக்கு நினைவூட்டினேன்.

இதை நான் சொல்வதன் கருத்து என்ன? என்ன நடக்கப்போகிறது என்பதைப் பற்றி ஒரு திடமான நம்பிக்கையுடனேயே நான் ஐரோப்பாவிலிருந்து திரும்பி வந்தேன். ஜெர்மனியில் அதிகாரத்துக்கு வந்த புதுக் கட்சி எப்போதுமே சண்டைக்குக் கட்சி கட்டிக்கொண்டு நின்றது. ஜெர்மன் கோரிக்கைகளைப் பிரிட்டிஷார் ஏற்க மாட்டார்கள் என்பதை நான் தெளிவாக விளங்கிக் கொண்டேன். ஜெர்மானியர் சற்று வலுக்கத் தொடங்கி விட்டார்கள் என்று பிரிட்டிஷார் கண்டால், அவர்கள் நாஸிகளுடன் போருக்கு நிற்பார்கள். 1938-ல் ஐரோப்பாவுக்குப் போனபோது நான் சில மாறுதல்களைக் கண்டேன். தங்களுடைய திட்டங்களைப் பிரிட்டிஷார் ஒரு போதும் பூரணமாக ஏற்கப்போவதில்லை என்பதை ஜெர்மனி புரிந்துகொள்ள ஆரம்பித்தது. 1938 செப்டம்பரில் சுடேட்டன் ஜெர்மானியர்களின் கட்சியை ஜெர்மானியர்கள் எடுத்துச் சொன்னபோது, ஹெர் (திருவாளர்) ஹிட்லருடன் ஓர் ஒப்பந்தம் செய்துகொள்ளும் பொருட்டு, ஸ்ரீ சேம்பர்லின் மியூனிக்கை நோக்கி ஓடினார். முன்பு ஒரு கால மிருந்தது. அப்போது, சர்வதேசிய மதிப்பு வாய்ந்த எல்லா வாதுகளும் பொதுவாக லண்டனிலேயே அலசி ஆராயப் பெறும். ஆனால், பிரிட்



டிஷ் பிரதமர் ஸ்ரீ சேம்பர்லின் தம் சொந்த நாட்டை விட்டு ஜெர்மனிக்குப் போய், ஜெர்மன் கோரிக்கைகளை அவர் ஏற்றபோது, ரகசியத்தை நான் தெரிந்துகொண்டேன். பிரிட்டன் வலுவிழந்து வந்தது. ஜெர்மனி வலுப் பெற்று வந்தது. பிரிட்டிஷாரின் சரித்திரத்தில், மாமூல் வழக்கத்தை விட்டு, இன்னொரு தேசத்தின் கோரிக்கைகளை ஏற்பதற்காக இங்கிலாந்தின் பிரதம மந்திரி ஒருவர் அயல்நாட்டுக்குப் போனது இதுதான் முதல் தடவை.

ஐரோப்பாவில் யுத்தம் வராமல் தடுக்கமுடியாது. விழிப்பாயிருந்து, நமது கோரிக்கைகளைப் பிரிட்டன் ஏற்கும்படி அதைக் கட்டாயப்படுத்த வேண்டியது இந்தியர்களுடைய கடமை. அப்படி அவர்கள் ஏற்க மறுத்தால், நாம் போருக்குத் தயாராக வேண்டியதுதான் என்று நான் இந்தியாவில் பிரசாரம் செய்யத் தொடங்கினேன். எனது பிரசாரத்தைக் கேட்ட பொது மக்கள் என்ன செய்தார்கள் என்பதை நான் கவனித்து வந்தேன். பொதுமக்களின் பூரணமான ஆதரவு எனக்கு இருந்தது என்ற திடநம்பிக்கையை நான் கொண்டேன். ஆனால், நம்முடைய தலைவர்களோ, வேறு வழியில் சிந்தித்து வந்தார்கள். குறிப்பாக, மகாத்மா காந்தியின் சிந்தனை வழி வேறு. பொறுத்திருந்து பார்ப்பதே அவர் கொள்கை. ஆனால், இளைஞர்களாகிய நாமோ, இந்தக் கொள்கையால் தடைப்பட்டு நின்றுவிடவில்லை. நமது பிரசாரத்தை நாம் இன்னும் அதிதீவிரமாக்கினோம். அண்மித்த எதிர்காலத்தில், வலியத் தமக்குக் கிட்டும் அரிய வாய்ப்பை நன்கு பயன்படுத்திக்கொள்ளுமாறு இந்திய மக்களை நாம் கேட்டு வந்தோம்.

1909 மார்ச்சில், திரிபுராவில் நடந்த இந்தியத் தேசியக் காங்கிரஸின் ஆண்டுக் கூட்டத்தில், நான் ஒரு தீர்மானம் கொண்டு வந்தேன். ஆறு மாதத்திற்குள் இந்தியாவுக்குச் சுதந்தரமளித்துவிட வேண்டும் என்பதே அந்தத் தீர்மானம். இத்தகைய இறுதி எச்சரிக்கையை அரசினருக்கு அனுப்பிவைக்க வேண்டுமென்று கோரியிருந்தேன். மேற்படி காலவரைக்குள் இந்தக் கோரிக்கை

ஏற்கப் பெருவிட்டால், நம்மிட முள்ள பலத்தைக்
கொண்டே பிரிட்டனுக் கெதிராகப் போரிட மக்களை
நாம் தயார்ப்படுத்த வேண்டும். அந்தத் தீர்மானமானது
ஓர் இறுதி எச்சரிக்கையாக அமைந்தது என்பது வாஸ்
தவம். சர்வ தேசிய நிலையில் இருந்த கடுகடுப்பான
கொதிப்புப் போக்கை மனத்தில்வைத்து, ஆறு மாதத்
துக்குள் ஐரோப்பாவில் எத்தகைய சூறுவளிப் பெரு
நெருப்பு மூளப் போகிறதென்பதை நன்றாகத் தெரிந்து
கொண்டே இந்தத் தீர்மானம் கொண்டுவரப் பெற்றது.

1939 செப்டம்பரில், மெய்யாகவே போர் மூண்டு
விட்டபோது, மார்ச் மாதத்தில் நான் சொன்னது
சொன்னபடியே முடிந்தது என்று பொதுமக்கள் காணத்
தொடங்கினார்கள். அந்தச் சமயத்தில், தேசியச் சக்திகள்
அனைத்தையும் ஒன்றுசேர்த்து, நமது கோரிக்கையை
ஏற்கும்படிப் பிரிட்டிஷ் சர்க்காரை நெருக்கிப் பிடித்து,
அந்த முயற்சியில் நாம் தோற்றால், அதற்காகப் போரிடு
வது நமது கடமையாயிற்று. ஆனால், நமது தலைவர்களின்
சிந்தனையும், செயலும் வேறு வழியில் சென்றன. யுத்தம்
நடக்க நடக்கப் பிரிட்டிஷார் வலுக் குன்றிவிடுவார்கள்.
இந்தியரின் உதவியைப் பெறுவதற்காகக் காங்கிர
ஸுடன் அவர்கள் கௌரவமான ஒப்பந்தம் செய்து
கொள்ளுவதற்கு முன்வருவார்கள் என்று தலைவர்கள்
எண்ணினார்கள். இந்த மாதிரியான எண்ணம் அசம்பா
விதமானது என்று சுட்டிக்காட்ட முயன்றேன். யுத்தத்
தின் போது, பிரிட்டிஷாரின் பலவீனம் எப்படிப்பட்ட
தாயிருந்தாலும், இந்தியாவில் தமக்குள்ள அதிகாரத்
தைத் தம்மிடமிருந்து யாரும் பிடுங்கிக்கொள்ள அவர்
கள் சம்மதிக்க மாட்டார்கள் என்று தலைவர்களுக்கு
நான் சொன்னேன். பிரிட்டிஷாரின் பலம் குன்றக் குன்ற
இந்தியாவின் மீதுள்ள அவர்கள் பிடிப்பு இன்னும் அதிக
ஆற்றல் படைத்ததாகவே ஆகும். இந்தியா இல்லாமல்
யுத்தத்தை அவர்களால் வெற்றிகரமாக நடத்திச் செல்ல
முடியாது. தங்கள் பலம் குறையக் குறைய, நாட்டின்
மூலாதார வசதிகளனைத்தையும் அவர்கள் கொள்ளை
யடித்துச் சூறையாட நினைப்பார்கள்.



1940 மார்ச்சில், காங்கிரஸ் கூட்டம் நடந்து
கொண் டிருந்தபோது, முற்போக்குக்கான நடவடிக்
கைகள் ஏதும் எடுத்துக்கொள்வார்கள் என்று எதிர்
பார்த்தோம். காந்திஜியோ காரியங்களைத் தம் சொந்த
வழிகளில் செய்ய எண்ணினார். பொறுத் திருந்து பார்க்
கவே அவர் விரும்பினார். நமக்கு மனம் முறியத்
தொடங்கிவிட்டது. என்ன வந்தாலும் சரி, நம் சொந்த
இயக்கத்தை ஆரம்பிக்க வேண்டியதுதான். நாடெங்க
ணும் யுத்த எதிர்ப்பு இயக்கம் தொடங்கப் பெற்றது.
அது கொஞ்சம் கடுமையாக ஆய்விட்டது. பல மக்கள்
வலியச் சிறை வாழ்க்கையை வரவேற்றார்கள். இதற்
கிடையே, ஒரு தகவல் எனக் கெட்டியது. சர்க்கார் ஒன்
றும் செய்யாததால், நவம்பரில் காந்திஜியே சட்ட
மறுப்பு இயக்கத்தைத் தொடாங்குவார் என்று தெரிந்
தது. அப்பாடா என்று நான் பெரு மூச்சு விட்
டேன். காந்திஜி ஓர் இயக்கத்தைத் தொடங்கினால்,
அது உலக மெங்கணும் எதிர் விளை பயன்களைக்
கிளப்பும். இந்தியர் சுதந்தரத்துக்காகப் போரிடுகிறார்
கள் என்று உலக முழுவதும் தெரிந்துகொள்ளும். இந்தி
யர்கள் சுதந்தரத்துக்கு அருகதை யுடையவர்கள் என்று
எல்லா நாடுகளும் எண்ணும். நமது கௌரவத்தைக்
காப்பதற்கு உலகத்தின் அனுதாபம் நிச்சயமாக நமக்
குக் கிடைக்கும்.

ஆனால், வெறும் சட்ட மறுப்பு ஆயுதம் ஒன்றை
மட்டும் கொண்டு நாம் சுதந்திரத்தைப் பெற மாட்
டோம் என்று நான் எண்ணினேன் இந்த இயக்கம் சர்க்
காரை நிச்சயமாக நெருக்கிப் பிடிக்கவே செய்யும். அதன்
யுத்த முயற்சியைத் தடைப்படுத்தவே செய்யும். ஆனால்,
நமது கோரிக்கையைச் சர்க்கார் ஒரு போதும் கருதிப்
பார்க்காது. இதுதான் என் கருத்து. என்ன செய்யலா
மென்று நாம் எண்ணிப் பார்த்துக் கொண் டிருந்தோம்.
புதிதாக என்ன வழி முறையை நாம் கையாளலாம்?
வெடி குண்டுகளாலும், சுழல் துப்பாக்கிகளாலும்
இளைஞர்கள் தங்கள் தங்கள் வேலையைச்செய்துகொண்டு
வந்தார்கள். இந்த இளம் புரட்சிக்காரர்களுடன் நாம்

தொடர்பு ஏற்படுத்திக்கொண்டோம். அவர்களுடைய பலத்தை நாம் அறிந்தோம். அவர்கள் மெய்யான புரட்சிக்காரர்கள். நல்ல, உயர்ந்த ஆத்மிக உற்சாகம் கொண்டவர்கள். ஆனால், நமது தாய் நாட்டுக்குப் பரிபூரணமான சுதந்தரத்தைப் பெறுவதற்கு அவர்களது பலமும், தியாகமும் போதுமானவையாயில்லை.

அப்போதுதான் சரித்திரத்தின் ஏடுகளை நாம் புரட்டிப் பார்க்கத் தொடங்கினோம். அங்கே நாம் பல உதாரணங்களைக் கண்டோம். அவற்றிலிருந்து பல பாடங்களைக் கற்றுக்கொண்டோம். அமெரிக்கா நடந்துகொண்ட விதம் நமக்கு முன்னே தென்பட்டது. நிலைமையை நான் உணரத் தொடங்கினேன். வெளி உதவியில்லாமல் இந்தியப் புரட்சி வெற்றிபெறாது. ஐக்கிய-அமெரிக்க நாடுகள் ஃப்ரான்ஸிலிருந்து ஏராளமான உதவி பெற்றன. ஃப்ரான்ஸிலிருந்து தளகர்த்தர்களை அமெரிக்காவிற்கு அனுப்பினார்கள். உலகச் சரித்திரத்தில் தன் சொந்த நாட்டின் சுதந்தரத்தைப் பெறுவதற்காக இதர நாடுகளின் உதவியைப் பெறுவது புதிய விஷயமல்ல.

இந்தியாவில் நமக்குக் கிடைத்து வந்த செய்திகள் திரித்து வந்தன. அவை, பிரசாரப் போக்கிலேயே அமைந்திருந்தன. பிரிட்டன் அவ்வாறு செய்வது இயல்புதான். ஆனால், இந்தியாவினுள்ளேயே இருந்துகொண்டு, உண்மையான உலக நிலையைப் புரிந்து கொள்வதென்பது ஆகாத காரியம். யுத்தத்தின் விளைபயன் எப்படி இருக்கும்? யுத்தம் எப்படி முடிவடையும்? கடைசியில் வெற்றி யாருக்கு? அயல் நாடுகளிலுள்ள இந்தியர்களின் கருத்துக்கள் யாவை? இந்தியா சுதந்தரத்துக்குப் போராடுவதைப் பற்றி அவர்கள் எப்படி எப்படியெல்லாம் நினைத்து வந்தார்கள்? இந்தியாவின் சுதந்தரத்தைப் பெறுவதற்கு அவர்களிடமிருந்து உதவி பெறுவது எப்படி? பிரிட்டனுடைய விரோதிகளிடமிருந்து பயனுள்ள உதவி பெற முடியுமா, முடியாதா?—இந்தமாதிரிக் கேள்விகள்தான் எங்களைச் சிந்திக்க வைத்தன. யாராவது ஒருவரை



இந்தியாவுக்கு வெளியே அனுப்பிவைக்க வேண்டுமென்று நாங்கள் நினைத்தோம். அன்னிய நாடுகளுக்குச் சில ஆட்களை அனுப்ப எண்ணினேன். அது நிரம்பக் கடினமான காரியம் என்பதில் சந்தேகம் இல்லை. ஏனென்றால், எங்களுடைய நடவடிக்கைகளெல்லாம் மிகக் கண்டிப்பான முறையில் கட்டுப்படுத்தப்பெற்றிருந்தன. இப்படிப்பட்ட, இந்தியாவைவிட்டு வெளிச்செல்லும், நபரைப் பிரிட்டிஷார் மெய்யாகவே "புரிந்துகொண்டிருக்க" வேண்டும். இவரைப் பற்றி இந்திய மக்கள் மெய்யான சிரத்தை கொண்டு, இவரை மதிக்க வேண்டும். கடைசியில், நானே இந்தியாவைவிட்டு வெளியேறுவதென்று தீர்மானித்தேன்.

அப்போது, நான் சிறையிலிருந்தேன். சிறையைவிட்டு வெளியேறுவது கடினமான பிரச்னை. சிறையிலிருந்து நழுவிவிடலாந்தான். ஆனால், நாட்டைவிட்டு எப்படி வெளிச் செல்வது? பிரிட்டிஷ் "சி. ஐ. டி"-க்காரர்கள் இருப்பதால், அது கடினம். கடைசியாக, உண்ணாவிரதமிருந்து, மறியல் செய்யத் தீர்மானித்தேன். என் இதயத்தைக் கடினமாக்கிக்கொண்ட பிறகே இந்த முடிவுக்கு வந்தேன். சாவது அல்லது சிறையிலிருந்து வெளியேறுவது—இரண்டிலொன்று ஆகவேண்டும். சர்க்காருக்கு என் முடிவைத் தெரிவித்தபோது, அதிகார வட்டாரத்தில் அது பரபரப்பை உண்டாக்கியது. ஏன்? சிறையில் நான் சாவதைப் பார்த்துக்கொண்டிருக்க அவர்கள் ஒருபோதும் விரும்பவில்லை. சிறையின் மேற்பார்வையாளர் என்னிடம் வந்தார். பட்டினி மறியல் செய்ய வேண்டாமென்று கெஞ்சிக் கேட்டுக்கொண்டார். எல்லாக் கைதிகளுமே பட்டினி மறியல் செய்யக் கிளம்பிவிட்டால், மன்னர் சர்க்கார், இயக்கமின்றி, நிலைகுத்திப் போகுமே என்று வாதாடினார். என்னை எச்சரிக்கவும் செய்தார். சிறையில் நான் மாண்டால் அதற்குப் பொறுப்பாளி நானேதான் என்றார். எனது பட்டினி மறியல் ஆறு நாள் நடந்தது. வலுக் கட்டாயமாக எனக்கு உணவு ஊட்ட முயன்றார்கள். ஆனால், ஜதீந்திரநாத் போன வழியைப் பின்பற்றி, நானும் சாகத் தீர்மானித்துவிட்டேன். ஏழு நாளைக்குப்

பிறகு, அரசினர் மாளிகையில், மறைவான மாநாடு ஒன்று நடைபெற்றது. ஏதாவது செய்தாக வேண்டுமென்று சர்க்கார் விரும்பியது. ஏன்? என் நிலைமை மோசமாகி வந்ததாக வைத்தியரின் அறிக்கை கூறிற்று. ஒரு மாதம் கழித்து, என்னை மீண்டும் கைது செய்யும் கருத்தோடு, என்னை விடுவித்தார்கள். சரியான காலத்தில் தகவல் எனக்கு எட்டியது. இடையில், இந்தியாவிலிருந்து நான் தப்பிப் போவதற்கு ஏதாவது ஏற்பாடு செய்து கொள்ள முடியும். நானும் நாட்டைவிட்டு வெளியேறினேன்.

தாய்நாட்டை விட்டுச் சென்ற பிறகு, நான் பெற்ற அனுபவங்கள் ஏராளம். இரு தரப்பினருடைய வானொலி பரப்புக்களையும் நான் கேட்டுக்கொண்டு வந்தேன். ஜெர்மன் அதிகாரிகள் எனக்கு ஓர் உரிமை தந்திருந்தார்கள். விரோதியின் ஒலிபரப்பையும், பிரசாரத்தையும் நான் கேட்க முடியும். ஐரோப்பா எங்கணுமுள்ள கோட்டை கொத்தளங்கள் அனைத்தையும், இதர தற்காப்பு ஏற்பாடுகளையும் பார்த்துவர எனக்கு வாய்ப்புக் கிடைத்தது. இப்படிப்பட்ட சொந்த அனுபவங்களைப் பெற்ற பிறகு, யுத்தத்தின் முடிவு எப்படியிருக்கும் என்பதில் எனக்கு ஐயமில்லை. அன்றைக்கு, அணிவகுப்புப் பவனியின்போதுதான் சொன்னேனே. போர் நீள நெடுக நடக்கும். விளைபயன் மட்டும் நிச்சயமாக ஒன்றுதான். அதாவது, பிரிட்டனும் அதன் சாம்ராஜ்யமும் வீழ்ந்து படும்.

இப்போது எழும் பிரச்னை, யாது? இதுதான்:-இப்படிப்பட்ட நிலைமைகளில் இந்தியாவின் ஸ்தானம் என்ன? பிரிட்டிஷ் சாம்ராஜ்யம் அழிந்து படுவது நிச்சயம். உலகத்தின் தேசப்படம் முழுவதும் மாறுதலடையும். புதிய தேசப் படத்தில், இந்தியாவின் ஸ்தானம் எப்படியிருக்கும்? பிரிட்டிஷார் இந்தியாவிலிருந்து விரட்டப்படுவார்கள். அப்புறம் நமது நிலை யாது? இதைப் பற்றி நாம் எண்ணிப் பார்க்க வேண்டும். மூன்றுவிதமான வழிகளில், ஏதாவது ஒன்றை நாம் பின்பற்றலாம்.



யுத்தத்தில் சேராமல், ஒருவருடனும் சார்பு கொள்ளாமல் விலகியிருப்பது ஒரு வழி.

அடுத்த வழி யென்ன? புதிதாக நாடேறி வந்தவனை நமக்குச் சுதந்தரம் தரும்படிக் கெஞ்சிக் கேட்கலாம்.

மூன்றாவது வழி? யுத்தத்தில் பங்கு பெறவேண்டும். பிரிட்டனின் எதிரிகளோடு சேர்ந்து கொள்ளவேண்டும். சுதந்தரத்துக்கு நம்மை நாம் அருகதையுள்ளவர்களாக ஆக்கிக்கொள்ள வேண்டும்.

நீங்கள் எந்த வழியைத் தேர்ந்தெடுத்துக்கொள்வீர்களென்று எனக்குத் தெரியும். நமக்கு உள்ள வழி ஒரே வழிதான். அதாவது, பிரிட்டனுடைய எதிரிகளோடு கைகோத்துப் போரிட்டுப் பிரிட்டிஷ் சாம்ராஜ்யத்தை அழிக்க நம்முடைய பங்குச் சேவையையும் வழங்குவது.

இந்தியாவின் உள் நாட்டு நிலை மிகவும் கவலைக்கிடமாக இருக்கிறது. இந்தியாவிலிருந்துகொண்டு, பிரிட்டனுக்கு எதிராகத் தங்களாலியன்றதைச் செய்துவரும் சக்திகளுக்கு ஆதரவு நல்கி, அவைகளை ஊக்குவிப்பது நமது கடமை. இன்று, இந்திய உள் நாட்டு நிலை எப்படி இருக்கிறது? மக்கள் அனைவரும் பிரிட்டிஷ் அரசாங்கத்துக்கு எதிராக இருக்கிறார்கள்.

ஆயுதம் இல்லாமலே மக்கள் போர் நடத்திவருகிறார்கள். நிராயுதபாணிகளான லட்சக்கணக்கான மக்களை அடக்குவதற்கு, நவீன ஆயுதங்கள் அனைத்தும் கிட்டப்பெற்ற, ஒரு சில ஆயிரம் பேரைக் கொண்ட, சிறு ராணுவம் போதுமானது. ஹெர் ஹிட்லரைச் சந்திக்கும் உரிமை எனக்குக் கிடைத்தபோது, இந்தியா குறித்த இந்தக் கேள்வியை அவர் முன் எழுப்பும் உரிமையை நான் உபயோகித்துக்கொண்டேன். எந்த வழியில் நாம் செல்லலாமென்று அவரிடம் நான் யோசனை கேட்டேன். ஜெர்மன் ஆட்சி அவைத் தலைவர் (ச்சான்செலர்) தமது கருத்தைத் தெரிவித்தார். அவரே அனுபவப்பட்ட ஒரு புரட்சிக்காரர். ஒரு சில ஆயிரம் பேர் நல்லபடியாக

ஆயுதம் தாங்கிக் கிளம்பினால், நிராயுதபாணிகளான லட்சக்கணக்கான புரட்சிக்காரர்களை அடக்கிவிட முடியுமென்று அவர் சொன்னார். "எல்லைப் புறத்தில் வெளி வல்லரசு ஒன்று வந்து முட்டாதவரைக்கும் உள் நாட்டு நிலையில் எந்த மாறுதலையும் எதிர்பார்க்க முடியாது" என்று அவர் மேலும் சொன்னார். இந்த வெளி வல்லரசின் ஒரு பகுதியாக நாம் அமைய வேண்டும். இரண்டாம் போர்முனையைப் பற்றி இப்போதெல்லாம் நாம் எவ்வளவோ சங்கதிகள் கேள்விப்படுகிறோம். நாம் தான் இந்தியாவில் இரண்டாம் போர்முனையை உண்டு பண்ண வேண்டும். அச்சு வல்லரசுகள் பிரிட்டிஷாரை முடமாக்கி, அவர்கள் கை, கால்களை முறித்திராவிட்டால், பிரிட்டிஷார் இரண்டு போர்முனைகளிலும் நம்மை எதிர்த்துத் தாக்குப் பிடித்திருக்கக்கூடும். அச்சுவல்லரசுகள் நம்முடைய வேலையைச் சுளுவாக்கிவிட்டன. இதற்காக அவர்களுக்கு நாம் நன்றி செலுத்துகிறோம். ஆனால், ஒன்று. இதே சமயத்தில், நமது தாய் நாட்டுக்கு நாம் ஆற்ற வேண்டிய கடமையை நாம் ஆற்றி ஆக வேண்டும். அந்தப் பொறுப்பு நம்மீது விழுந்திருக்கிறது. இந்த வேலையைச் செய்வதற்கு 50,000 பேரைக் கொண்ட ஒரு ராணுவம் போதும். ஆனால், இந்த ராணுவத்தை 30,000 பேரைக் கொண்ட ஒரு ராணுவமாக அதிகரித்துவிட நாம் தயாரா யிருக்க வேண்டும்.

இப்போது கிளம்பும் கேள்வி இது தான்:—இந்த ராணுவத்தின் கடமைகள் யாவை? இந்த ராணுவம் செய்து முடிக்க வேண்டிய கடமைகள் இரண்டு: முதலாவதும், முக்கிய மானதுமான கடமை எதிரி மீது போரிட்டுத் தாய் நாட்டை விடுவிப்பதுதான். முக்கியத்துவத்தில், இரண்டாவது கடமை இதற்குச் சற்றும் குறைந்ததல்ல: எதிரியை முறியடித்த பிறகு, இந்தியாவில் நாம் பிரமாதமான வேலை செய்தாக வேண்டும். இந்தியாவை விடுவிப்பதுடன் நமது கடமை தீர்ந்துவிடாது. நமது ராணுவம் புரட்சிகரமான ராணுவம். புரட்சிக்காரர்கள் என்ற முறையில், நாம் இரண்டு கடமைகளை நிறைவேற்றியாக வேண்டும். நான் ஏற்கெனவே சொன்னபடி, எதிரியை



இந்தியாவி லிருந்து விரட்டுவது முதல் கடமை. இரண்டாவது கடமை மிக்க பலம் வாய்ந்த ராணுவத்தை இந்தியாவில் அமைப்பது தான். அந்த ராணுவம் எந்த நாட்டையோ, அல்லது எந்த நாடுகளின் ஒன்று கூடிய எதிர்ப்பையோ தாக்குப் பிடிக்கக் கூடியதா யிருந்து, அன்னியர் படையெடுப் பினின்றும் இந்தியாவை என்றென்றைக்கும் தற்காத்துக்கொள்ளக்கூடியதா யிருக்கும்.

நண்பர்களே !

ஒரு போதும் நாம் அடிமைகளாயிருக்க மாட்டோம் என்று நாம் அனைவரும் நினைக்க வேண்டும். இந்த அடிமைத்தனம் எப்படி இருக்குமென்று ஏற்கெனவே மிக நன்றாய் ருசி கண்டுகொண்டுவிட்டோம். அன்னிய ஆக்கிரமிப்புக்காரர்களிடை மிருந்து நமது தாய் நாட்டைப் பாது காப்பதற்கு உலகத்தில் மிக்க பலம் வாய்ந்த ராணுவத்தை அமைப்பது உங்கள் அனைவருடைய கடமையும் ஆகும். திறமையையும், செயல் தகுதியையும் பொறுத்த வரையில், யாருக்கும் நீங்கள் சளைத்தவர்களல்ல என்று நான் சொல்லக்கூடும். நமக்குப் போதிய பயிற்சியும், வாய்ப்பும் கிடைக்கவில்லை. ஆனால், எப்போதெப்போது இவை இரண்டும் இந்தியர்களுக்கு அளிக்கப் பெற்றனவோ, அப்போதெல்லாம் அவர்கள் தங்கள் ஆற்றலை வெளிக்காட்டி யுள்ளார்கள். ராணுவத்தில் மட்டுமா? அரசியலில், பொருளியலில், அறிவியலில், ஆட்டபாட்டங்களில், இந்தியர்களாகிய நாம் எந்த வழியிலும் பிற்போக்கானவர்களல்ல. இந்தியர்கள் செயல் தகுதியுள்ளவர்கள். திறமை படைத்தவர்கள். எல்லாம் வல்ல இறைவன் அவர்களை அப்படிப் படைத்திருக்கிறார். உலகத்தாரிட மிருந்து நாம் எவ்வளவோ கற்றுக்கொள்ள வேண்டி யிருக்கிறது என்னவோ வாஸ்தவம் தான். அப்படிச் செய்யவும் நாம் தயார்தான். இந்தப் படிப்பு ஒருபுறமும், இயல்பான செயல் தகுதி, திறமை ஆகிய இவை ஒருபுறமும் நமக்கு இருக்க, இவற்றுடன் முழுத் தன்னம்பிக்கையும் சேர்ந்துகொண்ட நிலையில் நாம் இந்த ராணுவத்தை அமைத்து வருகிறோம்.

ஒரு ராணுவம் வெற்றியடைவதற்கு ராணுவப் பயிற்சி மட்டும் போதாது. ஃப்ரான்ஸைத்தான் பாருங்களேன். 1939 வரை ஃப்ரென்ச் ராணுவம்தான் உலகத்திலேயே மிகச் சிறந்தது என்று கருதப்பட்டது. மெய்யாக அது அப்படித்தானிருந்தது. ஏராளமான சரக்குச் சாமான், விமானங்கள், பீரங்கிகள் முதலியவைகளெல்லாம் அவர்களிடமிருந்தன. இவற்றுடன் கூட, அவர்களைக் காப்பதற்குத் "தகர்க்க முடியாத" மஜினோ அரணுமிருந்தது. பின், இவ்வளவு சுருங்கிய காலத்தில், ஃப்ரான்ஸ் என் விழுந்தது? இதற்குக் காரணம் ஒன்றே ஒன்றுதான். அவர்களிடம் போர் முனைப்பு இல்லை. போன யுத்தத்திற்குப் பிறகு, எதிரி மீளாத தோல்வி பெற்றுவிட்டபடியால், இனி ஓய்வு பெற்றுச் சும்மாவிருக்கலாம் என்ற உணர்ச்சி ஃப்ரான்ஸில் உண்டாய்விட்டது. ஜெர்மனியில் அப்படியல்ல. ஜெர்மனியில், "பழிக்குப் பழி" என்ற குரலொலிதான் ஒலித்தது. ஒரு நாடு பழி தீர்ப்பதிலும், தன் மறுப்புச் செய்வதிலும் காரியங்களைச் சாதிக்கச் சிந்தித்து வந்தது. இதனால்தான் ஃப்ரென்ச் மக்கள் இத்தகைய படுமோசமான தோல்வி அடைந்தார்கள். ஃப்ரென்ச் மக்கள் எழுச்சியை இழந்துவிட்டார்கள். ஜெர்மானியர்களோ, எழுச்சி மீதூர, அதில் பொங்கிப் புரண்டு கொண்டிருந்தார்கள்.

ஆஜாத் ஹிந்த் ஃபவுஜ் அணிவகுப்புப் பவனிக்குப் பிறகு, பிரதமர் ட்டோஜோவுடன் நான் பேசினேன். பெருமை வாய்ந்த அணிவகுப்பு நடந்ததற்காக அவர் என்னைப் பாராட்டி வாழ்த்தினார். இன்னொன்றும் அவர் சொன்னார். ஒரு ராணுவத்தின் வெற்றி அது பெறும் அறப் பயிற்சியை முக்கியமாகப் பொறுத்தே நிற்கிறது என்று அவர் மேலும் சொன்னார். இந்த விஷயத்தில் மேலும் விசேஷக் கவனம் செலுத்தப்பெறும் என்று அவருக்கு நான் உறுதி கூறினேன். இந்த "ஆத்ம" விஷயத்தை நிப்பொனியர்கள் மிக முக்கியமானதாகக் கருதுகிறார்கள்: உதாரணமாக, அட்டுத் தீவைத் தற்காத்து நின்றவர்களுடைய ஆத்ம வேகத்தைப் பாருங்களேன். எண்ணிக்கையில் தங்களைவிட இவ்வளவு அதிகமான



பேரைக் கொண்ட ராணுவத்துடன் எதிர்த்து நின்று தங்களால் வெற்றி காண முடியாது என்று அவர்கள் தெரிந்திருந்தார்கள். சுலபமாக அவர்கள் எதிரியிடம் அடிபணிந்து போயிருக்கலாம். ஆனால், அவர்கள் அப்படிச் செய்யவில்லை. அவர்கள் அப்படிச் செய்வது அவர்களது தாய் நாட்டின் புகழுக்கும், கௌரவத்துக்கும் இழுக்கானது. 2,000 பேரைக் கொண்ட அந்தப் பட்டாளத்தினர் அத்தனைபேரும் எதிரியுடன் சண்டையிட்டபடியே தங்கள் உயிரைத் தியாகம் செய்தார்கள்.

ஸ்டாலின்கிராடைக் காக்கப் போராடிய தீரர்களையும் நான் குறிப்பிடலாம். ஒரு சமயம், எதிரி அவர்களைச் சுற்றி வளைத்துக்கொண்டான். அடிபணிந்து போகுமாறு ஜெர்மானியர் அவர்களுக்கு இறுதி எச்சரிக்கைகூட விடுத்துவிட்டார்கள். அவர்களோ, அடிபணியவில்லை. தொடர்ந்து போரிட்டார்கள். அவர்களைச் சுற்றி வளைத்துக்கொண்ட எதிரியின் பலம் 20,000 பேரைக் கொண்டிருந்தபோதிலும், அவர்கள் சளைக்கவில்லை. ஸ்டாலின்கிராடைத் தற்காத்து நின்ற வீரர்களின் ஆத்மப் பலம் இப்படிப்பட்டதாகும்.

நம்முடைய வீரர்களிடம் இத்தகைய ஆத்மப் பலத்தை நாம் உண்டாக்கவேண்டும். ராணுவ அதிகாரிகளின் பொறுப்பு மிகப் பெரியது. ஒரு சிப்பாய் போர்க்களத்தை விட்டுச் சும்மா போய்விட முடியும். ஓர் அதிகாரி அப்படிச் செய்ய முடியாது. அவர், பொறுப்பு வாய்ந்த மனிதர். இத்தகைய பொறுப்பு வாய்ந்த அதிகாரிகளால் நடத்திச் செல்லப் பெறும் ராணுவம்தான் இறுதியில் வெற்றிகாணும். எனவே, உங்களுடைய வேலை மாணப்பெரிது. நீங்கள் மேற்கொண்டிருப்பதைவிடப் பெரிதும், கண்ணியமானதுமான வேலை வேறு எதுவுமே கிடையாது. இந்தியாவிலிருக்கும் நமது சகோதரர்களும், சகோதரிகளும் இதைவிடப் பெரிய சோதனைகளை உற்சாகத்துடனும், உவகையுடனும் எதிர்தாங்கி வருகிறார்கள். இந்திய விடுதலைக்கும், இந்தியாவின் நலனுக்கும் இதைக் காட்டிலும் பெரிய தொண்டு கிடையாது.

ஐரோப்பாவில் இருக்கும்போது, நான் ஒரு சிறிய தேசிய ராணுவத்தை நிறுவ முயன்று, வெற்றியும் அடைந்தேன். அந்த ராணுவத்தின் புகைப் படங்களையும் கொண்டு வந்திருக்கிறேன். நீங்கள் இங்கே எண்ணிக்கொண்டும், செய்துகொண்டும் இருப்பதையே பெர்லினிலும், ரோமிலும் உள்ள இந்தியர்களும் எண்ணியும் செய்தும் வருகிறார்கள். உலகம் முழுவதிலும், எங்கெல்லாம் இந்தியர்கள் இருக்கிறார்களோ அங்கெல்லாம், அவர்களிடையே ஒரு புதிய உற்சாகமும், புதிய விழிப்பும் ஏற்பட்டிருக்கின்றன.

---

# நீர்-நிலைப் பூதம்

[5-9-1943-ல், க்வாலா லம்பூரில் பேசியது]

நண்பர்களே!

இன்று மாலை நீங்கள் எனக்கு அளித்த பண முடிப்புக்கு எனது மனமார்ந்த வந்தனங்கள். இது நல்ல தொகையைக் கொண்ட ஒரு பண முடிப்பு. இதை முதல் தவணைப் பணமாக நீங்கள் கொண்டால்தான் நான் இந்தத் தொகையை, நல்ல தொகையைக் கொண்ட பண முடிப்பு என்று சொல்ல முடியும். இதர ஊர்களும் பணம் தந்திருக்கின்றன. அதுவும், மிகச் சுருங்கிய காலத்துக்குள்ளேயே சேர்த்துத் தந்திருக்கின்றன. ஈப்போவும் முதல் தவணைப் பணமாகத் தொகை செலுத்தி யிருக்கிறது. இவைகளைக் கவனிக்கும்போது, இப்போது நீங்கள் தந்திருக்கும் தொகையைவிட ஐந்து மடங்கு அதிகமாக க்வாலா லம்பூர் இந்தியர்கள் திரட்டித் தரக் கவலை எடுத்துக்கொள்வார்களென்று நான் நிச்சயமாக நினைக்கிறேன். அப்படி நீங்கள் செய்ய முடியவில்லை யென்றால், உங்கள் நாட்டுக்கு நீங்கள் பெரும் அபசேவை செய்தவர்களாவீர்களென்றே நான் அஞ்சுகிறேன். உங்கள் நகரத்தைப் பற்றி நீங்கள் மிக்க பெருமைகொள்கிறீர்கள். அப்படிப் பெருமைகொள்வது நியாயமும் கூட. உலகத்தின் இந்தப் பாகத்தில், இந்த நகரம் இரண்டாவது நகரமாகும். அப்படிப்பட்ட உரிமையை நீங்கள் அனுபவிக்கிறீர்களென்றால், அத்தகைய உரிமையாலும் சிறப்பு வேற்றுமையாலும் வருகிற பொறுப்புக்களையும் நீங்கள் நிறைவேற்றியாக வேண்டும்.

இப்போது நான் உங்களுக்கு ஒன்று சொல்லுகிறேன். ரொக்கமாக நமக்கு வேண்டியது, நமது மொத்தத் தேவையில் ஒரே ஒரு பகுதிதான். நம் தாய்நாட்டின்

சேவைக்காக, நமமிடமுள்ள அனைத்தையும் கொடுத்துவிட வேண்டிய காலம் வந்துவிட்டது. குறைந்த பட்சத் தியாகத்துடன் நின்றுவிடுகிற நாட்கள் போய்விட்டன. நம்மில் ஒவ்வொருவனும், ஒவ்வொருத்தியும் தன்னால் செய்யக் கூடிய அதிகப் பட்சத் தியாகத்தைப் பற்றிச் சிந்திக்க வேண்டிய காலம் வந்து விட்டது. அந்தத் தியாகம் மனித உயிராகவும், பணமாகவும், இதர சாதனங்களாகவும் இருக்கும். நவீன ராணுவம் படையெடுத்து முன்னேறுவதற்கு வேண்டிய தளவாடங்களைச் சித்தம் செய்ய வேண்டியதற்கு இவை அவசியம். எனக்கு மகிழ்ச்சி. க்வாலா லம்பூர் வாசிகளும், செலாங்கூர் சமஸ்தான வாசிகளுமாகிய நீங்கள் ஒவ்வொரு வகையிலும் உங்கள் கடமையை ஆற்றச் சிரத்தைகொண்டிருக்கிறீர்கள் என்று அறிந்து மகிழ்கிறேன். ஒன்றே ஒன்று கூற விரும்புகிறேன். உங்கள் வசூல் வேலைகளைக் கூடிய சிக்கிரம் துரிதப்படுத்தும்படிக் கேட்டுக்கொள்கிறேன். அப்போதுதான், பலர் எதிர்பார்ப்பதைவிட இன்னும் சீக்கிரமாக நமது ராணுவத்துக்கு வேண்டிய தளவாடங்களைச் சேகரித்துக்கொண்டு செயலில் இறங்கிக் களம் நோக்கி அது நடைபோடச் சித்தமாக முடியும். எனது அனுபவத்திலிருந்து எனக்கு இந்த நம்பிக்கை ஏற்படுகிறது: இந்திய மக்கள் நிராயுதபாணிகளாக இருந்துவருமட்டும், பிரிட்டிஷ் சர்க்கார் தனக்குக் கீழே, தன் ஆட்சியில், நவீன ராணுவங்கள் வைத்திருக்குமட்டும், நமது சுதந்தரப் போராட்டத்துக்கு நாம் ஆயுத மேந்திக் கிளம்பாதிருக்குமட்டும், இந்தியாவுக்கு நாம் சுதந்தரம் பெற்றுவிட முடியாது. மனித ஜாதியின் சரித்திரம் முழுவதையும் பாருங்கள். எனக்குத் தெரிந்தவரையில், நான் கண்டது என்ன? ஆயுதப் பலமில்லாமல், எந்தத் தேசமும் பூரணச் சுதந்தரம்பெற முடிந்ததாக ஓர் உதாரணம்-ஒரே ஒரு தனி உதாரணம்-கூட இருக்கக்காணோம். சரித்திரத்தை விட்டுவிடுவோம். பல்லாண்டுகளாக நாம் கண்ட இயற்கை அனுபவம் என்ன? அதிலிருந்து நமக்கு எத்தகைய நம்பிக்கை ஏற்படுகிறது? நமக்கு வேண்டியது பூரணச் சுதந்தரமா, அல்லது அதன் நலிந்த கலப்பு உருவமா? நாம் வேண்டுவது பூரணச் சுதந்தரமானால், நமது போராட்டத்தின் இறுதிக் கட்டத்தில், நாம் ஆயுதம் தாங்கியே ஆகவேண்டும். உலக முழுவதும் அமைதி ஆட்சி செலுத்துகின்ற காலையில், இந்திய மக்கள் போர்க் கருவிகளைக்கொண்டு போரிடுவது முற்றும் அசாத்தியமாயிற்று. இந்தியாவுக்குள்ளேயுள்ள மக்களுக்கு, அது முடியாத காரியம். இந்தியாவுக்கு வெளியே உள்ள மக்களுக்கு அப்படிச் செய்ய இயலாது. நல்ல வேளை, இந்த யுத்தம் வந்தது. நாலைந்து வருஷத்துக்கு முன் அசாத்தியமாயிருந்த காரியம், இன்று சாத்தியமாயிற்று. உங்களுக்கு ஆயுதம் வேண்டுமானால், இன்று நீங்கள் பெறலாம். எங்கிருந்து? இந்தியாவுக்குள்ளேயிருந்து அல்ல; இந்தியாவுக்கு வெளியேயிருந்துதான். நவீன ராணுவம் ஒன்றை அமைத்து, நவீனக் கருவிகள் அனைத்தையும் அதற்கு அளித்து, அதைச் சித்தம் செய்யவேண்டுமா? இன்று நீங்கள் விரும்பினால், அப்படிச் செய்யலாம். ஐந்து வருஷத்துக்கு முன்னே, நீங்கள் விரும்பினால்கூட அப்படிச் செய்ய முடியாது. அதனாலேயே, இந்த யுத்தமானது இறைவன் அருளால் நமக்குக் கிட்டிய வாய்ப்பு என்று நான் சொல்லுகிறேன். இது நமக்கு ஓர் ஒப்பற்ற வாய்ப்பைத் தந்திருக்கிறது. எதற்கு? குடியேற்ற நாட்டு அந்தஸ்து அடைவதற்கா? குடிவாசச் சுய ஆட்சி அடைவதற்கா? அல்ல. பூரணமான, பரிபூரணமான சுதந்தரம் அடைவதற்கே வாய்ப்புக் கிட்டியிருக்கிறது.

இந்தியர்களென்ற முறையில், உங்களிடம் ஒரே ஒரு கேள்வி கேட்க விரும்புகிறேன். மெய்யாகவே நீங்கள் பூரண, பரிபூரண சுதந்தரத்தை விரும்புகிறீர்களா? அப்படி நீங்கள் விரும்பினால், அதற்கான விலையை நீங்கள் செலுத்தியாகவேண்டும். பரிபூரணமான, நவீன ராணுவம் ஒன்றை நீங்கள் அமைத்து, அந்த ராணுவத்துடன் இந்தியாவை நோக்கிப் புறப்பட வேண்டும்.

இன்று, பிரிட்டிஷாருக்கு ஒரு போர்முனை இருக்கிறது. இந்தியத் தேசியப் போர் முனை என்று நீங்கள் அதைச் சொல்லலாம். அது இந்தியாவுக்குள்ளேயே இருக்கிறது. பிரிட்டிஷார், தங்கள் ராணுவத்தைக்

கொண்டு, இந்த இந்தியத் தேசியப் போர் முனையைச் சமாளிக்க முடிகிறது. இரண்டாம் போர்முனையை-போலி இரண்டாம் போர்முனை அல்ல; மெய்யான இரண்டாம் போர்முனை-உங்களால் உண்டாக்க முடியுமா? அப்படி உங்களால் முடியுமானால், நாட்டில் தங்கள் நிலையைப் பிரிட்டிஷார் கொண்டுசெலுத்துவது அசாத்தியமானதாக ஆகிவிடும். எனக்கு நம்பிக்கை இருக்கிறது. இந்தியத் தேசிய ராணுவம் இந்திய எல்லைப் புறத்தில் அடியெடுத்து வைக்கவேண்டியதுதான் பாக்கி, அதைக் கண்டமாத்திரத்தில், பொதுவாக இந்திய மக்களுக்கும், இந்திய ராணுவத்துக்கும்கூட அது படைக்கலத்தின் மணியோசையாகவே தென்படும். இந்தியப் புரட்சிக் கொடியைச் சுற்றி, அணிவகுத்துச் சூழுமாறு அவர்களை அது கூவி யழைக்கும். இது நான் காணும் பகற்கன வல்ல; எனக்குத் தெரியும். கிழக்காசியாவில் நாம் செய்துவரும் நடவடிக்கைகளை வீட்டிலுள்ள நம் மக்கள் நன்றாய் அறிவார்கள்; பிரிட்டிஷாரும் அறியவே செய்வார்கள். ஆனால், அதைப் பற்றி நான் கவலைப்பட வில்லை. வேளை வந்துவிட்டது. நாம் என்ன செய்துகொண்டிருந்தோம்; என்ன செய்துகொண்டிருக்கிறோம், இனிமேல் என்ன செய்யப் போகிறோம் என்பவைகளைப் பற்றி உலகமறிய இப்போது நாம் வெளிப்படையாகக் கூவிச் சொல்ல முடியும். இந்திய ராணுவத்தில் இன்று பிரிட்டிஷ் கொடியின்கீழ் நின்றுகொண்டிருக்கிறார்களே நமது சகோதரர்கள், அவர்கள் இந்திய உபகண்டத்தில், இந்தியத் தேசிய ராணுவம் அடியெடுத்து வைக்கும் வேளைக்காக, கவலையோடு காத்துக்கொண்டிருக்கிறார்கள். இன்று, இந்தியாவிலிருக்கும் நிலைமை இதுதான். மிகைப்படுத்திய கூற்று ஒன்றும் இதில் இல்லை. எனவே, நமது கடமை யாது? நமது வேலையைத் துரிதமாக முடித்து, கூடிய சீக்கிரம் இந்தியாவின் உதவிக்குத் தேசிய ராணுவம் போகுமாறு நாம் வழி செய்ய வேண்டும்.

இந்தியத் தேசிய ராணுவம் என்ற ஒன்று இருந்து வருகிற செய்தியை உலகத்துக்கு அறிவித்துவிட்டோம்.

V2:51y7 M97



N47

டில்லி நோக்கிப் படையெடுத்துச்செல்ல அது உத்தேசித்திருக்கிறது என்பதையும் அறிவித்துவிட்டோம். இப்படி அறிவித்த நாள் தொடங்கி, பிரிட்டிஷ் பிரசார தந்திரத்தில் பரிபூரண மாறுதல் ஏற்பட்டிருக்கிறது என்று அறிய நீங்கள் ஆச்சரியப்படுவீர்கள். சமீபக்காலம்வரை, பிரிட்டிஷ் பிரசாரகர்கள் என்ன சொல்லிக்கொண்டு வந்தார்கள்? இன்று, நிப்பொன் இந்தியாவின் விரோதியாகிவிட்டதாம். அதன் ராணுவம் இந்தியாவுக்குள் படையெடுத்துச் செல்லுமாம்: இப்படி அவர்கள் சொல்லி வந்தார்கள். ஆனால், இந்தியத் தேசிய ராணுவம் அமைக்கப்பெற்றுவிட்டது; அது இந்தியாவினுள் படையெடுத்துச் செல்லத் தயாராகிக்கொண்டு வருகிறது என்று அவர்கள் கண்டுகொண்டது முதல், பிரிட்டிஷ் பிரசாரகர்களின் போக்கு நிலையிலும், தந்திரங்களிலும் பரிபூரணமான மாறுதல் ஏற்பட்டுவிட்டது. இப்போது, இந்தியத் தேசிய ராணுவத்திற் கெதிராகக் கிளம்பும்படி, இந்திய மக்களைத் தூண்டிவிட அவர்கள் வெகு சிரத்தையோடு முயன்று வருகிறார்கள். பிரிட்டிஷ் சர்க்காருக்குத் தெரியும். நமக்குத் தெரிந்த அளவு அதற்குத் தெரியும்:—இந்திய எல்லைப்புறத்தில் நமது ராணுவம் தலைகாட்டியவுடன், இந்திய மக்களின் போக்கும், இந்திய ராணுவத்தின் போக்கும் எந்த மாதிரி இருக்குமென்று. அதனால்தான், இந்திய மக்களைத் தங்கள் பக்கமாய் இழுத்துக்கொள்ள அவர்கள் தங்களால் இயன்றமட்டும் முயன்றுவருகிறார்கள். இந்திய மக்களை வசப்படுத்திக் கொண்டால், இந்தியத் தேசிய ராணுவத்தை எதிர்த்து நிற்கலாமல்லவா? அதற்காக இப்படிச் செய்கிறார்கள்.

ஆனால், சற்றும் எதிர்பாராத, ஆச்சரியமான தகவல் ஒன்று என் காதில் விழுந்தது. அது என்ன? இந்துத் திருவிழா ஒன்று நடந்துகொண்டிருந்தது. இந்தியாவிலுள்ள இந்துக்கள் அனைவரையும், வெளியிலிருந்து இந்தியாவுக்குள்ளே படையெடுத்து வர இருக்கும் தங்களது சகோதரர்களுடன் போரிடுவதற்குத் தயாராகும்படிப் பிரிட்டிஷ் பிரசாரகர்கள் அந்தத் திருவிழாச் சந்தர்ப்பத்தில் இந்துக்களிடம் வேண்டுகோள் விடுத்

108375

தார்களாம். இந்தப் பிரிட்டிஷ் பிரசாரகர்கள் இதோடு மட்டுமா நின்றுவிட்டார்கள்? பழைய நல்ல காலம் மீண்டும் வந்துவிட்டதாகவும் அவர்கள் கூறத் தொடங்கினார்கள்.

நண்பர்களே!

ஆங்கிலோ-அமெரிக்கர்கள் புது நப்போலியன் ஒருவரை இப்போது கண்டுபிடித்துவிட்டார்கள். ஆங்கிலோ-அமெரிக்கர்களது கூற்றுப்படி, லார்டு லூயி மௌன்ட்பேட்டன் நீரிலும், நிலத்திலும் இயங்கக் கூடியவர்; தரையிலும், கடலிலும் செயலாற்றுவதில் மிக்க வல்லவர். சரி; இந்த நீர்-நில வாசியான பூதத்தின் தொழில் வரலாறு யாது? தியீப் சம்பவத்தின் மகாபுருஷர் இவர். தியீப் என்றால் என்ன தெரியுமா? ஃப்ரான்ஸில் இறங்கி, அந்தப் பகுதியிலிருந்து ஜெர்மானியர்களை வெளியேற்றப் பிரிட்டிஷ் ராணுவம் செய்த முயற்சிதான் இது. இருபத்துநாலு மணி நேரத்தில், அவர்கள் பரிபூரணமாகத் துடைத் தெடுக்கப்பட்டுவிட்டார்கள். லார்டு லூயி மௌன்ட்பேட்டனின் வீரதீரச் செயல்களெல்லாம் அங்கேயே முடிவடைந்தன. தியீப்பில் அவர் சாதித்த சாதனைகளால், தென் கிழக்கு ஆசிய ராணுவத்துக்கு அவரை ராணுவத் தலைமை அதிகாரியாக ஆக்கினார்கள். உங்களை அறைகூவி அழைக்கிறேன். இன்று உலகத்தின் எந்த ஒரு நாட்டையாவது காட்டுங்கள் பார்ப்போம்: வெற்றிக்காக அல்லாது, தான் கருதிய கருமத்தைச் செய்து முடிப்பதற்கல்லாது, தான் அடைந்த தோல்விகளுக்காக ஒருவனை மேல் பதவிக்கு உயர்த்துகிற காரியம் உலகத்தின் எந்த நாட்டிலாவது இன்று நடக்குமா? இந்த யுத்தத்தில் பிரிட்டிஷ் ராணுவமும், அதன் சர்க்காரும் சாதித்த ஒப்பற்ற சாதனை இது. லார்டு லூயி மௌன்ட்பேட்டனுக்கு நான் உறுதிகூற முடியும். கிழக்கு ஆசியாவில் இதைவிட இன்னும் வலுத்த, பெருத்த தியீப் அவருக்காகக் காத்துக்கொண் டிருக்கிறது.



ஒருவேளை, கிழக்கு ஆசியாவில் சில்மாதிரி ஜனங்கள் இருக்கலாம்; மலேயாவிலும் கூட அப்படிப்பட்டவர்கள் இருப்பார்கள். இவர்கள், ஒருவேளை, பிரிட்டிஷார் திரும்பி வருவார்களென்று இன்னும் நம்பி, கனவு கண்டு கொண்டிருக்கக்கூடும். இந்த ஜனங்களைப் பற்றி நாம் கேள்விப்பட் டிருக்கிறோம். சியோனானில்கூட இப்படிப் பட்ட ஒரு சிலர் இருக்கிறார்கள். இவர்களைக் கண்டால், எனக்கு இரக்கம்தான் வருகிறது. உங்களுக்குத் தெரியும், சியோனான் எப்படி இருந்தது, இன்று எப்படி இருக்கிறது என்று. சிங்கப்பூரைக் கட்டி முடிப்பதற்குப் பிரிட்டிஷாருக்கு—இதை, நான் சொல்லவில்லை; பிறர் சொன்னதையே திருப்பிச் சொல்கிறேன்—இருபது வருஷம் பிடித்தது. சிங்கப்பூரை விட்டு வெளியேற அவர்களுக்கு எத்தனை நாள் பிடித்தது? ஏழு நாள்! இது ஒரு சாதனைதான். பிரிட்டிஷார் திரும்பிவருவார்களென்று நம்பக்கூடிய ஜனங்கள் இன்னும் இருக்கவே செய்கிறார்கள்! பிரிட்டிஷ் சாம்ராஜ்யத்தின் மிகப் பெரிய கற்கோட்டையாக விளங்கிய அதே இடம் இப்போது அந்தச் சாம்ராஜ்யத்தின் மிகப் பெரிய இடுகாடாக ஆகியிருக்கிறது. அது இடுகாடாக ஆகவே செய்யும். பிரிட்டிஷ் சாம்ராஜ்யத்தின் செல்காலம் சென்றுவிட்டது. சந்தேகமிருந்தால், சரித்திரத்தின் ஏடுகளைப் புரட்டிப் பாருங்கள். ஒவ்வொரு சாம்ராஜ்யத்துக்கும் ஏற்றக்காலமும், வீழ்ச்சிக் காலமும் இருந்து வந்துள்ளன. போன யுத்தத்தில் பிரிட்டிஷ் சாம்ராஜ்யத்தின் புகழ் ஓங்கியது. அதற்குப் பிறகு அதன் வீழ்ச்சி படுவேகத்தில் சென்றுகொண் டிருக்கிறது. அந்த வீழ்ச்சியின் கடைசிக் கட்டத்தை நாமே கண்ணாரக் கண்டிருக்கிறோம்.

நான் எப்போதுமே சொல்லிவந்திருக்கிறேன். போன யுத்தம் இரண்டு சாம்ராஜ்யங்கள்—துருக்கியர்களின் ஒட்டமன் சாம்ராஜ்யமும், ஆஸ்த்ரியா-ஹங்கேரிய சாம்ராஜ்யமும்--மறையும்படிச் செய்தது. இந்த யுத்தம் பிரிட்டிஷ் சாம்ராஜ்யத்தின் முடிவைக் காணும். அந்தச் சாம்ராஜ்யத்தின் சாம்பலிலிருந்து சுதந்தர இந்தியா குதித் தெழும். இந்த இரண்டு சங்கதிகளும் ஓரி

னத்தவை—பிரிட்டிஷ் சாம்ராஜ்யத்தின் தோல்வியும், அக்குவிட்ட தன்மையும், சுதந்தர இந்தியாவின் சிருஷ்டியும் ஒரே இனத்தைச் சேர்ந்த சங்கதிகள்தான். இந்தியாவை நீங்கள் விடுவிக்க வேண்டுமானால், பிரிட்டிஷ் சாம்ராஜ்யத்தைக் குப்புற வீழ்த்தி, அக்கு விட்டுப் போகுமாறு வேலை செய்து, போரிட வேண்டும்.

சமீபக் காலமாகப் பிரிட்டிஷ் பிரசாரம் புதிய தந்திர முறைகளைக் கையாளத் தொடங்கியுள்ளது. அது என்ன தந்திரம்? ஆப்ரிக்காவிலும், ஸிஸிலியிலும் அவர்கள் அடைந்த சிறு சிறு வெற்றிகளைத் தங்களுக்கு மிகவும் சாதகமான முறையில் பயன்படுத்திக்கொள்ள முனைந்துள்ளார்கள். உலகமெங்கும் பிரிட்டிஷ் மேலாள்கள் (ஏஜண்டுகள்) செய்து வரும் பிரசாரத்தைக் காதில் வாங்கியிருக்கிறீர்களா? அப்படி நீங்கள் செய்திருந்தால், ஸிஸிலியைக் கைப்பற்றியதோடு அவர்கள் போரில் வெற்றி கண்டுவிட்டதாகவே நீங்கள் நினைப்பீர்கள். ஐரோப்பாவைப் பற்றி எனக்குக் கொஞ்சம் தெரியும். சமாதானக் கால ஐரோப்பாவை மட்டுமல்ல; யுத்தக்கால ஐரோப்பாவைப் பற்றியும் தெரியும். சண்டை நடந்த இடங்களையெல்லாம் நான் அறிவேன். ஐரோப்பாவிலுள்ள அச்சு வல்லரசுகளின் பலாபலங்களைப் பற்றி எனக்குத் தெரியும். என்னுடைய அனுபவத்தைக் கொண்டு உங்களுக்கு ஒரு விஷயத்தில் உறுதி கூற விரும்புகிறேன். ஐரோப்பாவில் என்ன வேண்டுமானாலும் நடக்கட்டும்; அதனால் இந்தியாவிலோ, கிழக்கு ஆசியாவிலோ உள்ள நிலைமையில் எல்வித மாறுதலும் ஏற்படாது. ஐரோப்பாவில் என்ன நடந்தாலும் சரி. தேவையான உழைப்பு முயற்சியை நாம் அளித்தால்தான் இந்தியர்கள் தயாராவார்கள். எனவே, இன்றைக்கோ நாளைக்கோ பகைவன் செய்யும் பிரசாரத்தினால் கணப்பொழுது நேரமும் நீங்கள் தயங்காதீர்கள். உங்களுடைய நம்பிக்கையிலும், விசுவாசத்திலும் உறுதியாய் நில்லுங்கள். இந்திய மக்கள் சுதந்தரம் பெறச் சாத்தியமாகிவிட்டது என்று நம்புங்கள். முதலாவது, இந்தியாவுக்கு நாம் இரண்டு



அல்லது மூன்று லட்சம் பேர் கொண்ட ராணுவத்தைக் கொண்டு போக வேண்டும். இது மிகப் பெரிய முயற்சியாகும். உலகத்தின் பற்பல பாகங்களில், எல்லாப் போர் முனைகளிலும் போரிட்டுக்கொண்டிருக்கும் லட்ச லட்சம் மக்களைப் பாருங்கள். முப்பத்தெட்டுக் கோடி மக்கள் கடைத்தேற மூன்று லட்சம் பேரையோ, அதிகமாய்ப் போனால், நாலு லட்சம் பேரையோ கொண்ட ராணுவம் மிகவும் அற்பமானது. இந்த ராணுவத்திற்கு வேண்டிய வீரர்களைக் கிழக்காசிய மக்கள் வழங்க முடியவே முடியும். இந்த ராணுவத்திற்கு வேண்டிய தளவாடச் சாமான்களைக்கொடுத்து, ராணுவத்தைச்சித்தம்செய்யப் பண உதவி புரியவும் கிழக்கு ஆசிய மக்களால் முடியும். எனவே, நமது சக்தி அனைத்தையும் சேர்த்துப் பிடித்து, ஒரு ராணுவத்தை அமைத்து, கூடிய சீக்கிரம் அதைப் பூரணமானதாக ஆக்குவதில் குறியாய்ச்சுவோமாக!

நண்பர்களே!

இன்று நமது வேலை யாது? இன்றிருக்கும் நமது ராணுவத்தைக் கூடிய சீக்கிரம் பூரணமானதாகப் பண்ணுவதுதான். அதோடு கூட, அந்த ராணுவத்தை நாம் விரித்துப் பெருக்க வேண்டும். ஏன்? யுத்தம் நீண்டதாயிருக்கும், கடினமானதாயிருக்கும். இளைஞர்கள் மேலும் மேலும் அதிகமாக ராணுவத்தில் சேர்ந்து பயிற்சி பெற வேண்டும். உங்களை வாழ்த்துகிறேன். க்வாலா லம்பூர் நகரத்தின் மத்தியில் உங்களிடையே நமது முகாம்களில் ஒன்று இருக்கிறது. வருகிற சுதந்தரப் போருக்கு இங்கே இந்திய இளைஞர்கள் பயிற்றுவிக்கப் பெறுகிறார்கள். ஆம்; இன்று அவர்கள் பயிற்சி பெறுவது சியோனனிலும் க்வாலா லம்பூரிலும் மட்டுமல்ல; மலாயா எங்கணும் ஆங்காங்கு எத்தனையோ முகாம்களிருககின்றன. இந்த முகாம்களில் பல, முன்பு, பிரிட்டிஷ் ராணுவத்தின் முகாம்களாக இருந்தன. நமது உபயோகத்துக்காக இவை நமக்கு அளிக்கப்பெற்றுள்ளன. இது எனக்கு வேறொரு விஷ

யத்தை நினைவூட்டுகிறது. அது என்ன? நாம் இந்தியாவுக்குப் போகும் போது, நமது தேசிய ராணுவத்துக்கு ஏற்கெனவே தயாரித்த ராணுவக் கூடங்களை அங்கே நாம் காண்போம். புதுக் கூடங்களை நாம் கட்ட வேண்டியதில்லை. கல்கத்தாவிலிருந்து பம்பாய் வரையிலும், ராவல்பிண்டியிலிருந்து சென்னை வரையிலும் நேர்த்தியான ராணுவக் கூடங்கள் இருக்கின்றன. இவை, இந்திய ராணுவத்துக்காகவே உள்ளவையா? அல்ல. பிரிட்டிஷ் வெள்ளைச் சிப்பாய்களுக்காகவே (டாம்மிகளுக்காகவே) இவை உள்ளன. ஆனால், இந்த நேர்த்தியான ராணுவக் கூடங்களை நமது இந்தியத் தேசிய ராணுவத்திற்காக நாம் எடுத்துக்கொள்ளப்போகிறோம். இவைகளுக்குப் பதிலாக எல்லாச் சிறைக் கூடங்களையும் பிரிட்டிஷாரின் உபயோகத்துக்காக அவர்களுக்குக் கொடுத்துவிடுவேன் என்று நான் வாக்களிக்கிறேன்.

நண்பர்களே!

பிரிட்டனைத் தோற்கடிப்பதற்கு நமக்கு வெளி உதவி தேவைப் படும். உலகம் பூராவிலுமிருந்து எதிரி உதவி கேட்டுக் கொண்டிருக்கிறான். பிரிட்டிஷ் சாம்ராஜ்யம் எல்லாம் வல்லது. அதில் சூரியன் அஸ்தமனமாவதே இல்லை. அத்தகைய ஆற்றல் படைத்த சாம்ராஜ்யம் பிச்சை ஓடு ஏந்தி, உலகத்தைச் சுற்றிச் சுற்றி வருகிறது. வாஷிங்டனில் மட்டுமா அவர்கள் உதவி கேட்டுக்கொண்டிருக்கிறார்கள்? அல்ல. உலகம் பூராவுமே அவர்கள் உதவி தேடித் திரிகிறார்கள். ஏழை இந்திய மக்களை, அடிமைப்படுத்தப்பட்ட இந்திய மக்களைக் கூட அவர்கள் சும்மா விடவில்லை. இந்திய மக்கள் கூடத் தங்கள் பங்குக்கான உதவியை வீரர்களாகவும், பணமாகவும், வெடி மருந்தாகவும், யுத்தத் தளவாடங்களாகவும் கொடுத்தாக வேண்டியிருக்கிறது. தங்கள் கஷ்டக் காலத்தில் தங்களுக்கு உதவும்படி இந்திய மக்களைக்கூட அவர்கள் கெஞ்சிக் கொண்டிருக்கிறார்கள். இன்று நாம் யாருடன் போரிட வேண்டும்? பிரிட்டனின் பலத்தோடு மட்டுமல்ல. பிரிட்டனும் அதன் நேச நாடுகளும்



சேர்ந்துகொண்டுள்ள கூட்டுப் பலத்தை நாம் எதிர்த்தாக வேண்டும். இந்தக் கூட்டுப் பலம் அதிகச் சக்தி பெற்றது. நாம் போரிட்டு வெல்வதானால், அதற்கு நமக்கு உதவி வேண்டும். வேளை வரும்போது உதவியைப் பெற்றுக்கொள்ளவேண்டும். முதலில் நாம் நமது கடமையைச் செய்து முடித்துவிட்டு, அதன் பிறகு உதவி கேட்டு, அதை அடைவதில் மானக்கேடு ஒன்றுமில்லை.

இந்தச் சந்தர்ப்பத்தில், கிழக் காசிய மக்களின் கடமை யாது? அதிகப்பட்ச உழைப்பை அவர்கள் செயலில் கொண்டு கூட்டித் தர வேண்டும். அதுவே அவர்களது கடமை. ஞாபகமிருக்கட்டும். ஏதாவது கொஞ்சம் சாதித்துக்கொள்ள உங்களுக்கு வாய்ப்பிருக்கிறது. உலகத்தின் பிற பாகங்களிலுள்ள உங்கள் நாட்டு மக்கள் இப்படிச் செய்ய முடியாது. ஐரோப்பா, ஆஃப்ரிக்கா, அமெரிக்கா அல்லது இங்கிலாந்தில் கூட உள்ள இந்தியர்களால் என்னதான் செய்ய முடியும்? அவர்கள் செயலற்றவர்கள். எனக்குத் தெரியும். தங்கள் நாட்டின் சுதந்தரத்துக்காகத் தொண்டாற்றவும், போரிடவும் துடிதுடித்துக்கொண்டிருக்கிறார்கள். ஆனால், அப்படிச் செய்ய இயலாது. ஒரு ராணுவத்தை நிறுவ அவர்களால் இயலாது. தேசிய ராணுவத்தில் சேரவும் அவர்களால் முடியாது. இதெல்லாம் உங்களால் முடியும். நீங்கள் மட்டும் இதை உங்களது புனிதக் கருமமாகக் கொண்டால், தேசிய ராணுவத்தில் சேர்ந்து அது வெற்றிபெற வேலை செய்யலாம். எனவே, தியாகம் செய்யும்படி உங்களை அழைக்கும் குரல் உங்கள் காதில் விழுந்ததும், உள்ளம் குன்றாதீர்கள். இறைவனுக்கு வந்தனை செய்யுங்கள். உலகத்திலுள்ள இந்தியர்கள் அனைவரிலும் உங்களுக்கே ஓர் ஒப்பற்ற வாய்ப்பை இறைவன் தந்துள்ளார். இதன் மூலம் நீங்கள் உங்கள் நாட்டிற்குத் தொண்டாற்றலாம். உங்கள் நாட்டின் சுதந்தரத்துக்குப் போரிடலாம்.

# பொன்னெழுத்து நாள்

பிலிஃப்பீன் தீவுகளின் சரித்திர ஏடுகளில் இந்த நாள் பொன்னெழுத்தால் பொறிக்கப்பெற வேண்டிய நாளாகும். இன்று 180 லட்சம் பிலிஃப்பினோ மக்கள் தங்கள் குடியரசின் பூரணக் குடி ஆட்சியை மீண்டும் பெறுவார்கள். 42 வருஷங்களுக்கு முன் இந்தச் சுதந்தரத்தை அமெரிக்கா திருடிக் கவர்ந்தது. சுதந்தர இந்திய அரசாங்கம் மறு பிறப்பெடுத்த இரண்டரை மாதத்துக் குள்ளேயே ஃபிலிப்பீன் குடியரசு மறு பிறவி எடுத்தது ஆசிய நாடுகள் அனைத்தும் களிபேருவகை கொள்ள வேண்டிய சந்தர்ப்பமாகும். குறிப்பாக, இன்னும் தமது சுதந்தரத்துக்காகப் போராடிக்கொண்டிருப்பவர்களுக்கு இது உவப் பூட்டும் நன்னாள். ஃபிலிப்பீன் தீவுகளின் குடியரசு சுதந்தரம் பெற்றுவிட்டது என்ற இன்றையப் பிரகடனம் இந்தியாவுக்கு விசேஷ அர்த்தமும், முக்கியத்துவமும் கொண்டது. ஏன்? தங்களது சுதந்தரத்துக்காகப் பிரிட்டிஷாருடன் போரிட்டுக்கொண்டிருக்கும் எனது தேச மக்களாகிய 38 கோடி 80 லட்சம் பேருக்கு இந்தச் செய்தி நம்பிக்கை யூட்டுகிறது, உற்சாக மளிக்கிறது. என்றென்றைக்கும் மீளாதபடி கிழக்காசியாவின் ஒவ்வொரு மூலை முடுக்கிலிருந்தும் ஜப்பானியப் படைகளால் வெளி யேற்றப் பெற்ற ஆங்கிலோ-அமெரிக்கர்கள் இந்தியாவை இப்போது ஆசியாவில் தமக்குள்ள ஒரே கடைசிக் கோட்டையாக மாற்றி அமைத்துவிட்டார்கள். ஆனால் ஆங்கிலோ-அமெரிக்கர்களை வெளியேற்றித் தானும் தனது சுதந்தரத்தைத் திரும்பவும் பெறப் போகிற நாள் வெகு தூரத்திலில்லை. இதற்கிடையில் எனது, ஃபிலிப்பினோச் சகோதரர்களுக்கு எனது மன மார்ந்த வாழ்த்துக்களை வழங்குகிறேன். 40 வருஷத்துக்கு அதிகமாக அமெரிக்க ஆதிக்கத்தின்



கீழிருந்து வந்த பிறகு, தாங்கள் ஆசையோடு அடைய முயன்று வந்த சுதந்தரக் குறிக்கோளை அடைந்து, காரிய சித்தி பெற்றுவிட்டார்கள்.

அனுபவத் தீரரான புரட்சித் தலைவர், தளகர்த்தர், இமிலியூன் அகுயினால்டோவுக்கும் மிக்க மனப்பூர்வமான எனது வாழ்த்துக்களை அளிக்கிறேன். 40 வருஷத்துக்கு முன் எந்தக் கட்சிக்காக அவர் அமெரிக்கருடன் போரிட்டாரோ, அந்தக் கட்சி வெற்றிபெறுவதைக் காணா மட்டும் அவர் உயிர் வாழ்ந்து வந்திருக்கிறார். அதற்காக அவருக்கு என் பாராட்டுக்கள் உரியன. ஃபிலிப்பீன் குடியரசின் முதல் தலைவராகத் தேர்ந்தெடுக்கப் பெற்ற டாக்டர் ஜோஸ் லாரலையும் நான் மனமார வாழ்த்துகிறேன். ஸ்ரீ ஜார்ஜ் வர்க்காஸையும் வாழ்த்துகிறேன். மிகப் பெரிய கிழக் காசியப் போர் மூண்ட நாள் தொடங்கி, எந்தக் குறிக்கோளை யடைய இரவு பகலாய்ப் பாடுபட்டு வந்தாரோ, அதை இவர் சாதித்துக்கொண்டு விட்டார்.

சியோனான்,
14—10—43

# பகதூர் ஷாவின் சமாதியில்

[பகதூர் ஷாவின் சமாதியில், கண்டோர் உள்ளத்தில் பதிந்து, பக்திப் பூர்வமான உணர்வை எழுப்பக் கூடிய சடங்கு ஒன்று 26-9-1943ல் ஞாயிற்றுக்கிழமை யன்று நடைபெற்றது. சுதந்தர இந்தியாவின் கடைசிச் சக்கரவர்த்திஇவர். இந்தியாவிலிருந்த பிரிட்டிஷ் ஆட்சியை விழ்த்தப் போராடிய பகதூர் ஷாவின் பூத உடலின் மிச்ச மீதிகளுக்கு நேத்தாஜி ஆழ்ந்த வணக்கம் செலுத்தினார். விழாவில் கலந்துகொண்டவர்களில், மேன்மை தங்கிய டாக்டர் *பாமாவும் அவரது சகாக்களும் இருந்தனர்]

மேன்மை தங்கிய சமூகம் அவர்களே ! அன்பர்களே !

இன்று சுதந்தர இந்தியாவின் கடைசிச் சக்கரவர்த்தியாகிய பகதூர் ஷாவின் சமாதி யருகே நாம் கூடியிருக்கிறோம். இது விநோதமா யிருக்கலாம். ஒருவேளை, அதிர்ஷ்டவசமான சரித்திர நிகழ்ச்சி தற்செயலாகக் கூடிக்கலப்பதாகவும்இருக்கலாம். இந்தியாவின் கடைசிச் சக்கரவர்த்தியினுடைய எச்சங்கள் பர்மிய மண்ணில் அடங்கி யிருக்கும்போது, சுதந்தரப் பர்மாவின் கடைசி மன்னரின் கடைசி எச்சங்கள் இந்திய மண்ணில் பதிந்து கிடக்கின்றன.

இந்தியாவிலும் பர்மாவிலு முள்ள நாம் மிக்க ஆழ்ந்த பிணைகளால்சரித்திரப்பூர்வமாக ஒன்று சேர்க்கப் பெற்றிருப்பதாகவே நெடுகிலும் உணர்ந்து வந்திருக்கிறோம். மேன்மை தங்கிய உங்கள் சமூகத்தின் தேசத்துக்கும் எங்கள் தேசத்துக்கும் இடையே யுள்ள இந்தப் பிணைப்புக்களை மிக்க நம்பிக்கைப் பூர்வமாய் நிரூபிக்கக் கூடிய அத்தாட்சிகளில், இந்தச் சரித்திர சம்பந்தமான

*டாக்டர் பாமான் பேச்சை இணைப்பு 3-ல் பார்க்க



சந்தர்ப்பச் சாதகமும் ஒன்று. நாம்—நம்மிரு தேசங்களும்—நமது பொது விரோதிக்கு எதிராக இடும் பொதுப் போரைக் கடந்து சென்றுகொண்டிருக்கிறோம். எனவே, எங்களது கடைசிச் சக்கரவர்த்தியின் லௌகிக எச்சத்தின் முன்னர் ஒரு சிறு கொண்டாட்டம் கொண்டாடுவது செய்யத் தக்க செயலேதான். இப்படிச் செய்வதன் மூலம், ஒரு வகையில், எங்களுள்ளே எரிந்துகொண்டிருக்கும் நெருப்பை இன்னும் அதிகமாக மூட்டிவிட முடியும். அதே சமயத்தில், பர்மாவையும், இந்தியாவையும் இவ்வளவு காலமாகப் பிணைத்துவந்து, எக்காலத்தும் நம்மை ஒன்று சேர்த்துப் பிணைக்க விருக்கும் கட்டுகளை இது மேலும் வலுப்படுத்தும்.

மேன்மை தங்கிய சமூகமும், சர்க்காரின் கனம் தங்கிய அங்கத்தினர்களும் இந்த விழாவுக்கு மன முவந்து வந்திருக்கிறீர்கள். இதன் மூலம் எங்களுக்கு நீங்கள் அளித்துள்ள கௌரவத்துக்கு நாங்கள் ஆழ்ந்த நன்றி செலுத்துகிறோம். இனி வரும் நாட்களில் நிகழ விருக்கும் முக்கியமான சரித்திரச் சம்பந்தமான நிகழ்ச்சிகளுக்கு இந்த விழா கருவூலம் போன்றது.

ஏற்கெனவே நான் சொல்லி யிருக்கிறேன். அதே போல், மீண்டும் நான் கூற விரும்புகிறேன். எங்கள் பர்மிய நண்பர்களுடன் தோளோடு தோள் தொட்டு போர் புரியநாங்கள் அசையாத தீர்மானம்கொண்டுவிட்டோம். நிப்பொனுடைய ஆதரவும், பெருந்தகைமையான உதவியும் கிடைப்பதுஉறுதி. இப்படியாகப் பிரிட்டிஷ்சாம்ராஜ்யத்தின் இறுதி வீழ்ச்சியைக் கொண்டுவந்துவிடுவோம். ஒரு புறத்தில், இந்தியாவுக்கு அது இழந்த விடுதலையைக் கொண்டுவந்து தரும். அதே சமயத்தில், பர்மாவின் சுதந்தரத்தையும், பாதுகாப்பையும் அச்சுறுத்தி வரும் தொல்லை ஓரேயடியாக நீக்கப்பெற்றுவிடும்.

இந்தச் சமயம், நமது அசைக்க முடியாத நம்பிக்கையைப் புனிதமான ஞாபகச் சின்னத்தின் எதிரே-இந்தியாவின் சுதந்தரத்துக்குக் கடைசியாகச் சண்டையிட்டவ

ருடைய மனித உடலின் எதிரே—மக்களிடையே மன்னர் மன்னனாகவும், மன்னர் மன்னர்களிடையே மனிதனாகவும் இருந்துவந்த ஒரு மனிதனிடத்தில் நாம் தெரிவித்துக் கொள்ளுகிறோம்: பகதூர் ஷாவின் ஞாபகத்தை நாம் உள்ளத்தில் இறுத்திவைத்திருக்கிறோம். இந்தியர்களாகிய நாம், மதக் கோட்பாடுகளைக் கருதாமல், பகதூர் ஷாவின் ஞாபகத்தை உள்ளத்தில் ஆழப் பதியவைத்திருக்கிறோம். எதற்காக? எதிரியுடன் நாட்டுக்கு வெளியிலிருந்தபடி போரிடத் தன் தேசமக்களுக்குப் போர் முரசு கொட்டிய மனிதர் அவர் என்பதற்காகவா? அல்ல. அந்த மனிதருடைய கொடையின் கீழ்த்தான் எல்லா மாகாண இந்தியரும், பல மதங்களைப் பின் பற்றிய இந்தியர்களும் ஒன்று சேர்ந்து போரிட்டார்கள். இந்த மனிதரின் புனிதமான கொடியின் கீழ் முஸ்லிம்களும், ஹிந்துக்களும், சீக்கியர்களும்—குறைந்த பட்சம் சுதந்தர உபாசகர்களானமுஸ்லிம்களும், ஹிந்துக்களும்,சீக்கியர்களும்—பக்கம் பக்கமாய், நின்ற படி, ஆங்கிலச் சரித்திரக்காரர்களால் சிப்பாய்க் கலகமென்று முத்திரை யடிக்கப்பெற்றதும், இந்தியர்களால் முதலாவது சுதந்திர யுத்தம் என அழைக்கப் பெறுவதுமான யுத்தத்தில் போர் புரிந்தார்கள். இப்போதோ, இந்தியாவின் சுதந்தரத்துக்கான கடைசிப் போரில் நாம் ஈடுபட்டிருக்கிறோம். நமது அசைக்க முடியாத தீர்மானத்தைப் புதுப்பித்துக் கொள்வது இன்னும் அவசியமாகவே இருக்கிறது. இந்தக் கடைசிச் சுதந்தர யுத்தத்தை இறுதி வரை போராடித் தீர்க்க வேண்டும். எந்தக் கஷ்டத்தையும், தியாகத்தையும் பொருட்படுத்தக் கூடாது. நம் வழியில் நேரும் எந்த இடுக்கணையும் பொருட்படுத்தக் கூடாது. இந்த யுத்தம் எவ்வளவு நாளைக்கு நீண்டு போனாலும், அதைப் பொருட்படுத்தக் கூடாது. அப்படிச் செய்தால், கடைசிக் காலத்தில் பர்மா, இந்தியா இரண்டின் பொதுவாகிய அந்த விரோதி முடிவாக வீழ்த்தப் பெறுவான். நாம் விடுதலை பெறுவோம். நமது வீடுகளாகிய பர்மா, இந்தியாவில் மட்டும்தானா சுயேச்சை பெறுவோம்? இல்லை. மனித சமுதாயத்தின் பொது விதியை நிறை



வேற்றி வைப்பதற்குத் தோளோடு தோள் தொட்டு, முன்னேறி நடக்கும் தோழர்களாகவே விடுதலை பெறுவோம்.

சமூகம் அவர்களே!

இந்த மாதிரி க்ஷேத்திரங்களில், நன்கொடைகளும், காணிக்கைகளும் அளிப்பது எங்கள் வழக்கம். எங்களது உட்படையான உணர்ச்சிகளுக்கும், நம்பிக்கைக்கும் அடையாளமாக, இந்தியாவில் முதல் சுதந்தர யுத்தத்தின் கடைசி மகா புருஷராகிய சக்கரவர்த்தி பகதூர் ஷாவின் பேரால் ஒரு நன்கொடை அல்லது நஜர் வழங்குவதைத் தவிர வேறு உயர்ந்த வழி என் மனத்துக்கு எட்டவில்லை. இது சிறு தொகைதான். 250,000 ரூபாய் தான். இதை மேன்மைதங்கிய உங்கள் சமூகத்திடம் அளிக்கிறோம். பர்மாவின் மீதும், பர்மா எந்த லட்சியத்தை அடைவதற்காகக் கச்சை கட்டி நிற்கிறதோ, அந்த லட்சியத்தின் மீதும் எங்களுக்குள்ள மதிப்பையும் அன்பையும் காட்டும் மிகச் சிறிய அடையாளம் இது. இந்தச் சிறிய நன்கொடையை நீங்கள் சரியென்று எண்ணுகிற முறையில் உங்கள் சமூகம் பயன்படுத்திக் கொள்ளலாம்.

இனி, இந்தச் சிற்றுரையை முடித்துக்கொள்ளுகிறேன். பகதூர் ஷாவே கட்டிய ஈரடிச் செய்யுளொன்றின் ஆங்கிலக் கருத்தை மேற்கோள் காட்டி, என் பேச்சை முடித்துக்கொள்ளுகிறேன்: "இந்தியாவின் சுதந்தரப் போர் வீரர்களின் ஆன்மாவில் நம்பிக்கையின் கடைசித் திவலை இருந்து வரும் வரைக்கும், இந்தியாவின் வாளானது லண்டனின் நெஞ்சகத்தைத் தொடர்ந்து ஊடுருவிப் பாயவே செய்யும்."

---

# பிரகடனத்தைப் பற்றிய அறிவிப்பு *

சரித்திர மாணவன் என்ற முறையில்,—குறிப்பாக, உலகத்தின் வெவ்வேறு பாகங்களின் புரட்சி வரலாறுகளைப் பயின்ற மாணவன் என்ற முறையில்—22 வருஷக் காலப் பொது வாழ்வில், தனது சுதந்தரப் போராட்டத்தில் இந்தியாவுக்குக் குறையா யிருந்துவந்த விஷயங்கள் யாவை? ஒரு தேசிய ராணுவமும், அந்த ராணுவத்தைப் போருக்கு நடத்திச் செல்ல ஒரு தேசியச் சர்க்காரும் ஆகிய இரண்டு விஷயங்கள்தான். எப்போதும் நான் இதை உணர்ந்துவந் திருக்கிறேன். இந்த யுத்தப் போக்கின் காலத்தில், நிப்பொனின் ஆயுதம் தாங்கிய படைகள் பெற்ற பிரமாதமான வெற்றிகளின் காரணமாகக் கிழக்காசியாவி லுள்ள இந்தியர்கள் இந்தியச் சுதந்தரச் சங்கத்தையும், இந்தியத் தேசிய ராணுவத்தையும் நிறுவ முடியும்படி யாயிற்று.

தேசிய ராணுவம் உண்டாக்கப் பெற்றதானது கிழக்காசியாவி லுள்ள சுதந்தர இயக்கம் முழுவதுக்கும் மெய்ப்பாட்டையும் செயல் கவர்ச்சியையும் கொடுத்தது. இந்த ராணுவம் நிறுவப்பெறு திருந்தால், கிழக்காசியாவில் சுதந்தரச் சங்கமானது வெறும் பிரசாரக் கருவியாகவே இருந்திருக்கும். தேசிய ராணுவம் உண்டானதுடன் ஆஜாத் ஹிந்த் (சுதந்தர இந்திய) தற்காலிகச் சர்க்கார் ஒன்றை ஏற்படுத்த முடிந்ததோடு அப்படி ஏற்படுத்துவது கட்டாயமாகவுமானது. சுதந்தரச் சங்கத்திலிருந்து பிறந்தது இந்தச் சர்க்கார். எந்த நோக்கத்துக்காக? இந்தியாவின் கடைசி சுதந்தரப் போராட்டத்தைத் தொடங்கி வைக்கவும், அதை நடத்திச் செல்லவும்.

* ஆஜாத ஹிந்த் தற்காலிகச் சர்க்காரின் பிரகடனத்தை இணைப்பு 4-ல் பார்க்க.



இந்தத் தற்காலிகச் சர்க்காரை ஏற்படுத்துவதின் மூலம், ஒருபுறத்தில் இந்திய நிலைமைகளின் அவசரத் தேவைகளை நாம் பூர்த்தி செய்துவைக்கிறோம்; மறுபுறத்தில், சரித்திரத்தின் அடிச்சுவட்டை நாம் பின்பற்றிச் செல்லுகிறோம். சமீபக் காலத்தில், 1916-ல் ஐரிஷ் மக்கள் தங்கள் தற்காலிகச் சர்க்காரை ஏற்படுத்தினார்கள். போன உலக யுத்தத்தின்போது செக் நாட்டினரும் இதேமாதிரி செய்தார்கள். போன உலக யுத்தத்திற்குப் பிறகு, முஸ்தஃபா கெமால் தலைமையில், துருக்கி தேசத்தினர் தங்கள் தற்காலிகச் சர்க்காரை அனட்டோலியாவில் ஏற்படுத்தினார்கள்.

நம்முடைய விஷயத்தில், ஆஜாத் ஹிந்தின் தற்காலிகச் சர்க்கார் சாதாரணமான காலத்துச் சர்க்கார் மாதிரி இராது. அதன் செயல்களும், அமைப்பும் தனி முறையிலிருக்கும். அது, போரிடும் ஸ்தாபனமாக இருக்கும். அதன் முக்கிய நோக்கம் இந்தியாவிலுள்ள பிரிட்டிஷாருக்கும், அவர்கள் கூட்டாளிகளுக்கும் எதிராகப் போர் தொடங்கி, அதை நடத்துவதே. ஆகவே, விடுதலைப் போராட்டத்தைத் தொடங்குவதற்கும், அதை நடத்தி வைப்பதற்கும் அவசியமான இலாக்காக்களையே இந்தச் சர்க்கார் கொண்டுசெலுத்தும்.

மந்திரி சபையில், சர்க்காரின் பொது மக்கள் சம்பந்தமான இலாக்காக்களில், இலாக்காப் பிரதிநிதிகளாகச் சில அங்கத்தினர்கள் இருப்பார்கள். சர்க்காரின் ஆயுதம் தரித்த படைகளின் பிரதிநிதிகளாக வேறு சிலர் இருப்பார்கள். சுதந்தரத்துக்குப் போராடுவதே சர்க்காரின் நோக்கம் ஆகையால், மந்திரி சபையில் ஆயுதப் படைகளுக்கு அதிகமான பிரதிநிதித்துவம் அளிக்கப்பெற்றிருக்கிறது.

மந்திரி சபையின் சாதாரண மந்திரிகளைத் தவிர, மந்திரி சபைக்கு ஒரு சில ஆலோசகர்களை நியமிக்கவும் ஏற்பாடு செய்யப்பெற்றிருக்கிறது. இந்த மாதிரியாகக் கிழக்காசியாவிலுள்ள இந்தியச் சமூகம் முழுவதுடனும் தற்காலிகச் சர்க்கார் நெருங்கிய, ஸ்தாபன ரீதியான, தொடர்பைக்கொண்டுசெலுத்தி, வரப்போகும் போராட்

டத்துக்கு அவர்களுடைய மூலாதாரங்கள் அனைத்தையும் திரட்டிச் சேர்க்கும்.

தற்காலிகச் சர்க்காரை இந்திய மண்ணிற்கு மாற்றிக்கொண்டு போகும்போது, தன் சொந்தப் பிரதேசத்தில் செயலாற்றுகிற சாதாரணச் சர்க்காரின் அலுவல்களை அது செய்யத் தலைப்படும். அப்போது, பல புதிய இலாக்காக்கள் துவங்கப்பெறும்.

---

ஆஜாத் ஹிந்த் தற்காலிகச் சர்க்கார் அமைந்ததின் பயனாக, வெற்றிக்கு இருந்து தீர வேண்டிய முன்னேற்பாட்டு நிலைகள் அனைத்தையும் இந்தியச் சுதந்தர இயக்கம் பெற்றுவிட்டது. சுதந்தரத்துக்காகக் கடைசிப் போராட்டத்தைத் துவங்க வேண்டியதுதான் பாக்கி நிற்பது. இந்தியத் தேசிய ராணுவம் இந்திய எல்லைப் புறத்தைக் கடந்து, சரித்திர முக்கியத்துவம் வாய்ந்த அதன் டில்லிப் பயணத்தைத் துவங்கியதும், இது ஆரம்பமாகிவிடும். ஆங்கிலோ - அமெரிக்கர்கள் இந்தியாவிலிருந்து வெளியேற்றப்பெறவேண்டும். புது டில்லியில் வைசராய் மாளிகையின்மீது, இந்தியத் தேசிய ராணுவக் கொடி ஏற்றிவைக்கப்பெற வேண்டும். அப்போதுதான் இந்தியப் படையின் முன்னேற்றப் பயணம் முடிவடையும்.

---

# இந்தியாவின் பெண்கள்

[ஜான்சி ராணிப் பட்டாள முகாமைத் திறந்துவைத்தபோது பேசியது]

*சகோதரிகளே! சகோதரர்களே!*

ஜான்சி ராணிப் பட்டாளப் பயிற்சி முகாமைத் திறந்துவைப்பது முக்கியமான, அர்த்தம் நிறைந்த செய்கையாகும். கிழக் காசியாவில் நமது இயக்கம் அடைந்துள்ள முற்போக்கைக் குறிப்பதற்கு இது மிகவும் முக்கியமான எல்லைக் கல்லாகும். தவிர, இதன் முக்கியத்துவத்தை உணருவதற்கு நீங்கள் ஒன்றை ஞாபகத்தில் கொள்ள வேண்டும். நம்முடைய இயக்கம் வெறும் அரசியல் இயக்கம் அல்ல. நாம் ஆற்றப்போக விருக்கும் கருமமோ, நமது தேசத்தின் புத்துயிர்ப்பு வேலையாகும். சொல்லப்போனால், இந்திய நாட்டுக்கு நாம் புதியதொரு வாழ்க்கையைக் கொண்டுவருகிறோம். நம்முடைய புதிய வாழ்க்கையை ஸ்திரமான அஸ்திவாரத்தின்மீது நிறுவுவது அவசியம். ஞாபகத்தில் வையுங்கள். நாம் செய்வது வெறும் பிரசார வாண வேடிக்கை யல்ல. சொல்லப்போனால், இந்தியா மறு பிறவி எடுப்பதை நாம் நேரே கண்டுவருகிறோம். நமது பெண் மக்களிடையே புது வாழ்க்கையின் அசைவு இயக்கம் தென்படுவது மிகப் பொருத்தமான விஷயமே.

நம்முடைய கடந்த காலம் மிகப் பெரியது. புகழ் வாய்ந்தது. புகழ் வாய்ந்த பரம்பரைச் செல்வம் இல்லாவிட்டால், ஜான்சி ராணியைப் போன்ற வீராங்கனையை இந்தியா உண்டாக்கி யிருக்க முடியாது: இந்தியாவின் சிறந்த பெண்மணிகளின் வரலாறு, வேதக் காலத்தைப் போல், புராதனமானது. இந்தியாவினுடைய மகளிர் பாங்கின் பெருமையின் வேர் சம்ஸ்கிருதப் பண்பாட்டை

இந்தியா பெற்றிருந்த முந்தைய நாட்களில் ஊன்றியுள்ளது. சிறந்த பெண்மணிகளை முற்காலத்தில் அளித்த அதே இந்தியா, அதன் கவலைக்கிடமான நிலைமையில் ஜான்சி ராணியையும் அளித்தது. இன்று, நமது சரித்திரத்தில் மிகவும் கவலைக்கிடமான நேரம். இதை நாம் சமாளிக்க வேண்டி யிருக்கிறது. நிலைமையைச் சமாளித்துக்கொள்ள இந்தியப் பெண்கள் இனம் தவறிவிடாது என்ற நம்பிக்கை எனக்கு இருக்கிறது. ஜான்சியின் சுதந்தரப் போருக்காக இந்தியாவானது ஒரு லட்சுமி பாயை அளிக்கவேண்டி வந்து, அவ்வாறே அளிக்கவும் செய்ததென்றால், இன்று, இந்தியா முழுவதன் சுதந்தரப் போருக்காக, 38 கோடி இந்தியர்களை விடுவிப்பதற்காக, ஆயிரம் ஆயிரம் ஜான்சி ராணிகளை இந்தியா அளிக்க வேண்டி வந்தால், அது அவ்வாறு அளிக்கவே செய்யும்.

இதே மாதிரி, பண்டை நாட்களில், இந்தியாவில், மைத்ரேயி போன்றவர்கள் இருந்தார்கள். மகாராஷ்டிரத்தின் அகல்யா பாய், வங்காளத்தின் ராணி பவானி, ரஜியா பேகம், நூர்ஜஹான் போன்ற எழுச்சி யூட்டும் பெண்மணிகள் இருக்கிறார்கள். இந்தியாவில் பிரிட்டிஷ் ஆட்சி வருவதற்கு முந்திய சமீபச் சரித்திரக் காலங்களில் அரசு செலுத்தி வந்த சிறந்த ராஜ்ய நிர்வாகிகள் இவர்கள். இந்திய மண்ணின் வளப்பத்தில் எனக்குப் பூரண நம்பிக்கை உண்டு. இந்தியப் பெண்மையினத்தின் தலை சிறந்த மலர்களை, முன்போல், இனிமேலும் இந்தியா உண்டுபண்ணுமென்று நான் திடமாக நம்புகிறேன்.

*1921*-ல் புது அரசியல் வாழ்வை இந்தியாவில் தொடங்கியபோது, ஆயிரம் ஆயிரமாக—ஏன், லட்ச லட்சமாக—நம்முடைய சகோதரிகள் அந்த இயக்கத்தில் சேர்ந்து, தியாகம் செய்ய முன்வந்தார்கள். அந்த நாட்களில், சிறைக்குப் போவ தென்பது பெரிய விஷயம். சிறை வாழ்க்கையின் அல்லல்களை அனுபவிக்க நம் இந்தியச் சகோதரர்களும், சகோதரிகளும் சித்தமானார்கள். எனக்கு இன்றும் ஞாபக மிருக்கிறது. *1921* டிசெம்பரில்,



கல்கத்தாவில், இரண்டு சிறைகள் இப்படி நிறைந்துவிட்டன. பிரிட்டிஷார், மேலும் இரண்டு சிறை கட்டினார்கள். ஒரு சில நாளில், இவையும் நிறைந்துபோய்விட்டன.

சிறை வாழ்க்கையைக் கண்டு இந்தியர்கள் அஞ்சி, அடங்கவில்லை என்று பிரிட்டிஷார் கண்டபோது, அவர்கள் தங்கள் தந்திரத்தை மாற்றிக்கொண்டார்கள். தலைவர்களைச் சிறையிட்டார்கள். பொது மக்களைக் குண்டாந் தடியாலும், துப்பாக்கிக் குண்டாலும் தாக்கினார்கள். சட்ட மறுப்பு இயக்கத்தில் சேருவ தென்றால், குண்டாந் தடிப் பிரயோகத்தையும், துப்பாக்கிச் சூட்டையும் தாங்கச் சம்மதம் என்றே அப்போது அர்த்தம். இந்தியர்கள்—ஆண்கள் மட்டுமல்ல; பெண்கள் கூடத்தான்—குண்டாந் தடியையும், துப்பாக்கியையும் வரவேற்கத் தயாரானார்கள். கல்கத்தாவில் நடந்த ஒரு நிகழ்ச்சியை என்னால் மறக்க முடியாது. சர்க்கார் உத்தரவை மீறி ஊர்வலம் நடத்தினோம். குண்டாந் தடி கொண்டு ஊர்வலத்தைக் கலைக்க முயன்றது போலீஸ். சில சகோதரிகள், வட்டமாய்க் கை கோத்துக்கொண்டு, எங்களைச் சுற்றும் நின்றுகொண்டார்கள். (போலீஸுக்கும் எங்களுக்கும் நடுவில் அவர்கள் நின்றார்கள்). தடியடியைக் கண்டு அவர்கள் துணுக்குறவே யில்லை. இப்படியாக், நமது சகோதரிகளின் உற்சாகமும், உறுதியும், படிப்படியாக, எப்படி வளர்ந்துவந் திருக்கின்றன என்பதை நான் நேரே கண்டிருக்கிறேன்.

சாத்விக எதிர்ப்புச் சரித்திரத்தில் மட்டுமல்ல, புரட்சிக் கட்சியின் சரித்திரத்திலும் பெருமைக்குரிய பங்கு கொண்டு செயலாற்றிய நம் சகோதரிகள் எத்தனை எத்தனையோ பேர். துணிச்சலான புரட்சிக்காரர்களாகிய பல சகோதரிகளை எனக்குத் தெரியும். சாத்விக எதிர்ப்புக்கு ஒருவகையான தைரியம் அவசியமானால், புரட்சி முயற்சிகளுக்கு இன்னொரு வகையான, இன்னும் அதிக ஆக்கமான, தைரியம் அவசியம். இதிலும் நம் சகோதரிகள் குறைந்தவர்களல்ல என்று நான் கண்

டேன். 1931-ல் ஆங்கில மாஜிஸ்ட்ரேட் ஒருவரை
இரண்டு சிறுமிகள் துப்பாக்கியால் சுட்டுவிட்டனர்.
ஒருத்திக்கு 16 வயது. மற்றவளுக்கு வயது 17. இந்தி
யாவில், சாதாரண மனிதர்கள்கூட மாஜிஸ்ட்ரேட்டுகள்
முன்னிலையில் நடுங்குவார்கள். இந்த இரண்டு தீரச்
சகோதரிகளோ, மாஜிட்ரேட்டை வீடேறிச் சுட்டார்
கள். அந்த இளம் சகோதரிகளுக்கு எவ்வளவு அபாரத்
தைரியம் இருந்திருக்க வேண்டுமென்று நீங்கள் எளி
தில் எண்ணிப் பார்க்க முடியும். இப்படிப்பட்ட தைரி
யம் வானத்திலிருந்து அறுந்து விழாது. இந்திய மண்ணி
லிருந்து வருவது அது. கடந்த கால இந்தியாவின் எத்
தனை எத்தனையோ காலத்துப் பரம்பரைப் பண்பில்
வேரூன்றி நிற்பது அது.

1928 முதற்கொண்டே இந்தியாவிலுள்ள மாதர்
ஸ்தாபனங்களில் நான் சிரத்தை காட்டிவந்திருக்கிறேன்.
சந்தர்ப்ப மளித்தால், நம் சகோதரிகள் எந்த நிலைமை
யையும் சமாளித்துக்கொள்வார்களென்று நான் கண்
டேன். வங்காளத்தில், ராஷ்டிர மகிலா சங்கம் என்று
ஒன்றிருந்தது. நேர்த்தியான வேலை செய்து வந்தது அது.
1928 டிசெம்பரில், 500 பெண்மணிகளைக் கொண்ட
தொண்டர் படையொன்று அமைக்கப்பெற்றது. நல்ல
முறையில் அது நடைபெற்று வந்தது. அது மட்டுமா?
அவர்களது அணிவகுப்புப் பவனிகளும், கட்டுப்பாடும்
எங்களுக்குப் பெருத்த நம்பிக்கை தந்தன. என்னுடைய
நம்பிக்கையை உறுதிப்படுத்தின. வேண்டிய வாய்ப்பை
யும், தூண்டுதலையும் மட்டும் அளித்தால், அவர்களிடம்
ஒப்படைக்கும் கடமைகளை இந்தியப் பெண் மக்கள் சரி
வரச் செய்து முடிப்பார்கள் என்ற விஷயம் உறுதிப்பட்
டது. அடிமை நாட்டில் கிடைக்கக்கூடிய கம்பு, குத்து
வாள் ஆகிய ஆயுதங்களைக் கொண்டு பெண்கள் ஸ்தா
பனங்கள் ஆயுதப் பயிற்சி பெற்று வந்ததை இந்தியா
வில் கண்டிருக்கிறேன். நம் சகோதரிகள் அடைந்த
பயிற்சி முற்போக்கு நிலை வியக்கத் தக்கது.



ஆகவே, இந்தியச் சுதந்தர இயக்கத்தை நடத்திச்
செல்லுவதை நான் மேற்கொள்ளத் தொடங்கியபோது,
கவலைக்கிடமான இந்த அவசர வேளையில், இந்தியாவுக்
குத் தொண்டு புரிய நம் சகோதரிகளுக்கும் வாய்ப்
பளிக்க வேண்டுமென்று நான் உணர்ந்தேன். பலரைக்
கலந்து பார்த்தேன். சிலர் சொன்னார்கள்: பெண்கள்
பட்டாளத்தை ஏற்படுத்துவது இந்தியாவில் சாத்திய
மாகலாம். கிழக்கு ஆசியாவில் அப்படிச் செய்வது
அசாத்தியமான காரியமென்று அவர்கள் சொன்னார்கள்.
அவர்கள் சொன்னது என் நம்பிக்கையையும், தீர்மானத்
தையும் அசைக்க வில்லை. இன்று, உங்கள் கண் முன்
னேயே பார்க்கிறீர்கள். நமது சகோதரிகள் என்ன
செய்து முடித்திருக்கிறார்களென்று உங்களுக்குத் தெரி
யும். இந்த வேலை ஜூலை மாதத்தில் தொடங்கியது.
இப்போதுதான் பயிற்சி முகாம் திறக்கப் பெறுகிறது.
சுணக்கத்துக்குக் காரணம் அவர்களிடமுள்ள எந்த வித
மான குறையுமல்ல. அவசியமான ஏற்பாடுகளைச் செய்து,
தங்கும் வசதிகளை அமைப்பதில் சிரமமிருந்தது. அது
தான் சுணக்கத்துக்குக் காரணம். இதற்கிடையில்,
நமது சகோதரிகள் பொறுமையிழந்து, துடி துடித்து நின்
றார்கள் என்பதை நான் அறிவேன். என்னிடம் தூது
வந்து, அவர்களை நான் மறந்துவிட்டேனா—என்று கேட்க
இருந்தார்களாம். முகாம் தயாராகிவிட்டது. ஜான்சி
ராணி பிறந்த நாளாகிய இன்று அது திறந்து வைக்கப்
பெறுகிறது. இன்று, எனக்கு மகிழ்ச்சியுண்டாகிறது.

இந்தச் சந்தர்ப்பத்தில். ஜான்சி ராணியைப் பற்றிச்
சில வார்த்தைகள் சொல்லுகிறேன். ஜான்சி ராணி
தனது போராட்டத்தைத் துவங்கியபோது, அவளுக்கு
வயது 20 தான். 20 வயது இளம் பெண் குதிரை மீதேறி,
வாளேந்திப் போர்க் களத்தில் சமர் செய்வதென்றால்,
எப்படியிருக்குமென்று நீங்களே எளிதில் கற்பனை பண்
ணிப் பார்த்துக்கொள்ளலாம். அவளிடம் எத்தகைய
துணிவும், ஆத்ம வேகமும் இருந்தன என்று நீங்கள்
சுலபமாகக் கண்டுகொள்ளலாம். அவளுக்கு எதிராகப்
போர் புரிந்த ஆங்கில ராணுவத் தலைவர், "எதிர்த்

தெழுந்தவர்களில் அவள்தான் மிகச் சிறந்தவள். மிக்க தைரியசாலி'' என்று அவளைப் பற்றிச் சொன்னார். இதை அவர் ஒப்புக்கொண்டது ஏன்? ஜான்சி ராணியின் துணிந்த மனப்பாங்கை அவரால் மறைக்க முடியவில்லை. ஏனெனில், அவரே அவளுக்கு எதிராகப் போர் புரிய வேண்டியிருந்தது. முதலில், கோட்டையிலிருந்து அவள் போர் புரிந்தாள். கோட்டையை முற்றுகையிட்டதும், ஒரு கோஷ்டியுடன் கல்பி என்ற இடத்துக்கு அவள் தப்பி ஓடினாள். அங்கே, தீரமாகப் போர் புரிந்து நின்றாள். அப்புறம், இந்தப் போர் முனையிலிருந்து அவள் பின்வாங்க வேண்டி வந்தது. தாந்தியா தோப்பியுடன் அவள் நேச உடன்படிக்கை செய்துகொண்டாள். குவாலியர்க் கோட்டையைத் தாக்கி, அதைக் கைப் பிடித்துக்கொண்டாள். அந்தக் கோட்டையைத் தளமாக வைத்துக்கொண்டு, சமரைத் தொடர்ந்து நடத்தினாள். அந்தக் கடைசிப் பெருஞ் சமரில், போர் புரிந்த வண்ணமே, அவள் மடிந்தாள்.

கருதிப் பாருங்கள். ஒருமுறைக்கதிகமாகத் தோல்வியடைந்தும், விடாப் பிடியாகச் சண்டை போட்டாள் என்றால், அதற்கு எவ்வளவு தைரியம் அவசியமாயிருந்திருக்கும். இந்த 20 வயது ராணியிடம் அந்தத் தைரியம் இருந்தது. இனி வரும் தலைமுறை தலைமுறையான இந்திய மக்களுக்கு எழுச்சியூட்டும் சின்னமாக விளங்கிய வீர தீரத்தை அவள் காண்பித்தாள்.

கெட்ட காலத்தால், ஜான்சி ராணி முறியடிக்கப்பட்டாள். அது, அவள் அடைந்த தோல்வி அல்ல. அது, இந்தியாவின் தோல்வியே ஆகும். அவள் மடிந்தாள். ஆனால், அவளது ஆத்ம வேகம் ஒருபோதும் மடியாது. இந்தியாவால் மீண்டும் ஜான்சி ராணிகளை உண்டுபண்ண முடியும். வெற்றி நோக்கி முன்னேற இந்தியாவால் முடியும்.



இன்று திறந்துவைக்கப்பெறுகிற முகாமில் 156 சகோதரிகள் பயிற்சி பெறத் தொடங்குகிறார்கள். விரைவில், சியோனானில், இந்தத் தொகை ஆயிர லக்கத்தை எட்டுமென்று நான் நம்புகிறேன். தாய்லந்திலும், பர்மாவிலும், பெண்கள் பயிற்சி முகாம்கள் துவங்கப்பெற்றுள்ளன. ஆனால், சியோனானில்தான் மத்திய முகாம் இருக்கிறது. இந்த மத்திய முகாமில், குறைந்த பட்சம், ஆயிரம் எதிர்கால ஜான்சி ராணிகளையாவது நாம் பெற்றிருக்க வேண்டும்.

---

# உங்கள் பாங்கிப் புத்தகம் எங்கே?

[அகில மலாயாச் செட்டியார்களும், இதர இந்திய வர்த்தகர்களும் நடத்திய மாநாட்டில், 25-10-1943-ல் பேசியது]

நண்பர்களே!

மலேயாவின் எல்லாப் பாகங்களி லிருந்தும் இந்த மாநாட்டுக்கு வந்துள்ள சகோதர, சகோதரிகளுக்கு முதலில் எனது மனமார்ந்த வரவேற்பு. மாநாட்டில் பங்கு கொள்ள வந்திருக்கிறீர்கள். இது முக்கியத்துவம் வாய்ந்ததாகவும், அர்த்தம் நிறைந்ததாகவும் ஆகுமென்று எனக்கு நம்பிக்கை யிருக்கிறது. நமது மாபெரும் லட்சியத்துக்கு விசுவாசம் செலுத்தும் உறுதி மொழிகளை ஓரளவு கேட்டிருக்கிறோம். அந்த விசுவாசத்தை இந்த மகாநாடு பரீட்சைக்கு உட்படுத்தப் போகிறது.

நான் நீளமாய்ப் பேசப்போவ தில்லை. நீண்ட பேச்சுக்களுக்கு அவசிய மில்லை. முதலில், உங்களை வேண்டிக்கொள்கிறேன்: இந்தியாவை விடுவிக்கும் பொறுப்பு உங்கள் தோள் மீது சுமையாக வந்து விழுந்தால், நீங்கள் ஒவ்வொருவரும் என்ன செய்வீர்கள் என்று கருதிப் பாருங்கள். இந்தியாவை விடுவிப்பது பொறுப்பான காரியம். கிழக் காசியாவி லுள்ள ஒவ்வோர் இந்தியன் மீதும் அந்தப் பொறுப்பு விழுகிறது. உங்கள் மீது சார்ந்திருக்கும் இந்த மாபெரும் பொறுப்பை நீங்கள் உய்த்துணர்வீர்க ளென்று நம்புகிறேன்.

ஒரு ராணுவமானது போர்க் களத்துக்குச் செல்லும் போது, போர் புரிந்து வெற்றி காணும் பொறுப்பு அந்த ராணுவத்தைச் சார்ந்த ஒவ்வொரு நபரின் மீதும் சமமாகப் பகிர்ந்து விழுகிறது. அவர்கள் அதிகாரியாயிருக்கட்டும், பட்டையப் பட்டியலில் சேராத (நன்-கமிஷன்டு



ஆபீசர்) அதிகாரியா யிருக்கட்டும், வெறும் சிப்பாய் ஆகக்கூட இருக்கட்டும்—எல்லோருக்கும் பொறுப்பு ஒன்றே. எந்த ராணுவத்தின் ஒவ்வொரு வீரனும் தனது கடமையைச் செய்யச் சித்தமா யிருக்கிறானோ, அந்த ராணுவந்தான் வெற்றி பெறும். கிழக்காசியாவி லுள்ள இந்தியர்கள் இன்று ஒரு ராணுவமாக ஆய்விட்டார்கள். இந்த ராணுவம் போர் புரிந்து வெல்லவேண்டும். இதை நீங்கள் உணர்ந்தாக வேண்டும். போர் முனையி லுள்ள ஒவ்வொரு வீரனின் விஷயத்தைப் போலவே, கிழக்காசியாவி லுள்ள ஒவ்வொரு இந்தியனின் விஷயமும் மாபெரும் பொறுப்பு வாய்ந்தது. எனக்குத் தெரியும்: உங்களில் சிலர் பணக்காரர்கள். மற்றவர் ஏழைகள். எனக்குத் தெரியும்: உங்களில் சிலர் படித்தவர். மற்றவர்கள் அப்படி யல்ல. உங்களது வேறுபாடுகள் எப்படியும் போகட்டும், இதை மட்டும் நினைவில் பதிய வைத்துக்கொள்ளுங்கள்: உங்கள் கடமையைப் பொறுத்த மட்டில், நீங்கள் அனைவரும் சரி நிகர் சமானமே. கிழக்காசியாவி லுள்ள ஒவ்வோர் இந்தியனும் தன் கடமையைச் செய்யவேண்டு மென்று நான் விரும்புகிறேன்.

ராணுவத்தில் அதிகாரியாக ஒருவரை நியமித்தால், அவர் தாமே முன்சென்று, மற்றவர்கள் முன்னே செல்ல வழி காட்ட வேண்டியது அவரது கடமை. நமது கிழக்காசியப் போராட்டத்தில், சியோனன் மிகப் பெரிய முக்கியத்துவம் பெற்றுவிட்டது. இந்தியச் சுதந்தரச் சங்கத்தின் தலைமை யிடம் இங்கே இருக்கிறது. இந்தியத் தேசிய ராணுவத்தின் தலைமை யிடம் இங்கே இருக்கிறது. சமீபத்தில் அமைக்கப்பெற் றுள்ள ஆஜாத் ஹிந்த் தற்காலிகச் சர்க்காரும் இங்கேயே நிறுவப்பெற்றிருக்கிறது. ஒரு காலத்தில், சியோனன் பிரிட்டனின் கோட்டையாக இருந்தது. இன்றோ, கிழக்காசியாவில், இந்தியச் சுதந்தர இயக்கத்தின் தலைமை யிடமாக அது ஆய்விட்டது.

சியோனனுக்கும், கிழக் காசியாவி லுள்ள இதர இடங்களுக்கும் இடையே எப்படிப்பட்ட தொடர்பு

இருக்கிறது? ராணுவத் தலைவருக்கும், அவர் பட்டாளத்
தைச் சேர்ந்த துருப்புக்களுக்கும் இடையே எப்படிப்
பட்ட தொடர்பு உண்டோ, அந்த மாதிரிதான் இதுவும்.
சமரில் வெற்றி கிட்டுவது எதைச் சார்ந்திருக்கிறது?
ஒவ்வொரு வீரனும் தன் கடமையை ஆற்றுகிறதைப்
பொறுத்து மட்டுமா? அது மட்டு மல்ல. ராணுவத்தை
நடத்திச் செல்லும் அதிகாரி, தானே சரியாக நடந்து
காட்டி, திட்டமான வழி காட்டிச்செல்வதையும் சார்ந்து
நிற்கிறது.

இப்படியாக, நீங்கள் ஒன்றை உணர்ந்துகொள்வீர்
கள்: சியோனானிலிருந்து ஏதாவது குரல் எழுந்தால்,
கிழக்காசியா எங்கணுமிருந்து அதற்கு எதிரொலி கிளம்
பும். நீங்கள் இங்கே செய்யும் எந்தச் செயலும் கிழக்
காசியா எங்கணும் எதிர் விளைவுகளை உண்டுபண்ணும்.
சியோனானிலிருந்து நீங்கள் நடத்திக் காட்டும் முன்
மாதிரியை மிகப் பெரிதும் சார்ந்த வண்ணமே கிழக்
காசியாவின் வெவ்வேறு பாகங்களிலுள்ள இந்தியர்கள்
செய்யப்போகும் செயல்கள் அமையும். உங்களைப் பார்த்
துத்தான் அவர்கள் தங்கள் தங்கள் பங்கு வேலையைச்
செய்வார்கள். நினைவிருக்கட்டும்: உங்கள் பொறுப்புக்
கள் மிகப் பெரியவை. ஏன்? நீங்கள், முன்சென்று வழி
காட்ட வேண்டியவர்கள். கிழக்காசியாவின் இதர பாகங்
களிலுள்ள இந்தியர்களுக்கு உற்சாக மளிப்பது உங்கள்
வேலை.

நீங்கள் சுயமாகச் சிந்திக்க வேண்டும். மனக்
கண்ணால் கருதிப்பார்க்க வேண்டும். அயல்நாட்டுப் படை
யெடுப்பு போன்ற கவலைக்கிடமான அவசர நிலைமையைச்
சமாளிக்க வேண்டி வரும்போது, சுதந்தர இந்தியச் சர்க்
கார் என்ன செய்திருக்கும்? பேச்சுக்குப் பார்ப்போம்:
இந்தியா சுதந்தர நாடு என்று வைத்துக்கொள்வோம்.
அன்னிய எதிரி நம்மைத் தாக்குவான் என்ற ஆபத்து
வந்துவிட்டது. அப்போது, சுதந்தர இந்தியாவின் சர்க்
கார் என்ன செய்யும்? அப்போது, அவர்கள் பூரணப்
படை திரட்டு வேலையைத் தொடங்கியிருக்க மாட்டார்



களா? நீங்கள் எளிதில் புரிந்துகொள்ளலாம். எந்தச்
சர்க்காரின் சாதாரணமான கடமையும் இதுதான். இந்த
விஷயத்தை நினைவில் வைத்துக்கொள்ளுங்கள். நமது
சுதந்தரத்தைப் பெற்று, அதைக் கொண்டுசெலுத்து
வதற்கு நாம் செய்யும் பெரு முயற்சியில் உங்கள் கடமை
கள் யாவை என்று கருதிப் பாருங்கள்.

இன்னொன்றைப் பற்றியும் எண்ணிப் பாருங்கள்.
நாட்டில் யுத்தம் நிலவுகிற நிலையில், சுதந்தர நாடு
ஒன்று கையாளும் நடை முறைகள் எப்படி யிருக்கும்?
இது வரை நம் விஷயத்தில் நடந்த மாதிரி, கூட்டங்கள்
கூட்டுவதும், வேண்டுகோள் விடுப்பதுமா நடக்கும்?
இல்லை! சுதந்தரச் சர்க்கார், அதற்கு மாறாக, என்ன
செய்யும் தெரியுமா? குறிப்பிட்ட வயதுக்குள் ளடங்கிய,
நல்ல தேக நிலையுள்ள, ஆண்கள் எல்லாரும் குறிப்பிட்ட
இடத்தில் குறிப்பிட்ட நாளில், குறிப்பிட்ட நேரத்தில்
திரண்டு கூடும்படி வெறும் கட்டளை மட்டுமே வெளி
வரும். தாமாக, எவ்வித முணு முணுப்பு மின்றி, சர்க்
காரின் அழைப்புக் கிணங்க மக்கள் ஓடி வருவார்கள்.
ஏனென்றால், தங்கள் விடுதலைக்காகத் தாங்கள் தியாகம்
செய்ய வேண்டு மென்பதைச் சுதந்தர மக்கள் அறிவார்
கள். இனி, தன் சுதந்தரத்தைக் காப்பாற்றிக் கொள்
ளப் பணம் தேவைப்பட்டால், சுதந்தர சர்க்கார் என்ன
செய்யும்? அது கூட்டமா கூடும்? பிச்சை எடுக்கும் பிர
சாரத்திலா செல்லும்?

அதற்கு மாறாக, தங்கள் யுத்தத் தேவைகளுக்காகச்
சுதந்தரச் சர்க்கார் வரவு செலவுத் திட்டங்கள் தயாரிக்
கும். வேண்டிய பணத்தைத் திரட்ட வேண்டிய வழி
துறைகளைப் பற்றிச் சிந்திக்கும். மக்களின் பொருளா
தார நிலைமைகளைக் கண்முன் வைத்துக்கொண்டு, அவ
சியமான வரி விதிப்பு வேலையில் இறங்கிவிடும். உங்
களைக் கேட்கிறேன். சுதந்தர நாட்டில், யுத்த வரிக்குப்
பணம் கொடுக்கவோ, போர் வீரனாக மாறவோ எவனா
வது மறுக்க முடியுமா? இந்தியா இன்னும் சுயேச்சை
பெறவில்லை. ஆனால், உள்ளத்திலும், ஆத்மாவிலும் நாம்

சுயேச்சை பெற்றவர்கள். தற்காலச் சர்க்காரை நிறு
வியதன் மூலம் நாம் சுயேச்சை பெற்ற மக்களாகிவிட்
டோம்.

இப்போது, இந்தியாவை விடுவித்து, சுதந்தரச் சர்க்
காரை நிறுவுவது நமது பொறுப்பு. சுதந்தரத்துக்கு
நாம் தகுதி யுள்ளவர்க ளென்று நாம் உணர்ந்தால்,
மெய்யாகவே நாம் சுதந்தரத்தை விரும்பினுல், நாம்
என்ன செய்ய வேண்டும்? கவலைக் கிடமான தேசிய
அவசர வேளையில், நமது சுதந்தரச் சர்க்காரின் ஆட்சி
யில், சுதந்தர இந்தியாவில் நாம் வாழ்ந்தால் எப்படி
யிருப்போமோ, அதேபோல், இப்போதே நாம் செயல்
புரியவும் செய்ய வேண்டும். சுதந்தர இந்தியச் சர்க்கா
ரின் அழைப்பின்படி. சுதந்தர இந்தியாவில் நாம் என்
னென்ன செய்திருப்போமோ, அவைகளை யெல்லாம்
உடனே செய்து முடிக்க வேண்டியது நமது பக்திப்
பூர்வமான கடமையாகிறது. பாருங்களேன். ஜெர்மானி
யர், நிப்பொனிய மக்கள் எப்படி நடந்து கொள்ளுகிருர்
கள்? அந்த நாடுகளில் மக்களின் மூலாதார வசதிகள்
அனைத்தையும் சாக்கார் எப்படித் திரட்டிச் சேர்த்திருக்
கிறது! தன் சொந்தச் சுந்தரத்தைத் தற்காத்துக்கொள்ள
வேண்டிய கடமை ஒரு சர்க்காருக்கு ஏற்படுகிறபோது,
அந்தச் சர்க்கார் அந்தக் கடமையைச் செய்தே ஆகவேண்
டும். தங்கள் நாட்டின் மூலாதார வசதிகள் அனைத்தை
யும் அரசினர் ஓரிடத்தில் திரட்டிக் குவிக்கவேண்டும்.
சட்டப்படி சொல்வதானுல், யுத்தத்தில் கலந்துகொண்
டுள்ள நாட்டில், தனியுடைமை இராது. இத் தகைய
அவசர வேளைகளில், தன் மக்களின் சொத்துச் சுகங்
களின் மீது சர்க்காருக்குப் பரிபூரண உரிமை உண்டு.
நாமும் சுதந்தர மக்கள்தான். நமக்குச் சுதந்தர சர்க்கார்
உண்டு. உங்கள் செல்வமும், உடைமைகளும் உங்களுக்
குச் சொந்தமா? அப்படி நீங்கள் நினைத்தால், நீங்கள்
வாழ்வது ஒரு பொய்யுலக வாழ்வு. யுத்தத்தில் சம்பந்தப்
பட்டிருக்கிறபொழுது, ஒவ்வோர் உயிரும், ஒவ்வொரு
பொருளும் நாட்டிற்கே சொந்தம். உங்கள் உயிரும்,
சொத்தும் இப்போது உங்களுக்குச் சொந்தமல்ல, அவை
இந்தியாவுக்கு மட்டுமே சொந்தம்.



எல்லா வகையிலும் எனக்கு நம்பிக்கை யிருக்கிறது.
இந்த எளிய உண்மையை நீங்கள் உணர வேண்டும்.
எப்படியாவது நாம் சுதந்தரம் பெற்ருக வேண்டும்.
இப்போது, நாம் சுதந்தரமக்கள். போரில் ஈடுபட்டுள்ள
வர்கள். இந்த உண்மையை உணர்ந்தால், இன்னொரு
உண்மையையும் நீங்கள் உணர்வீர்கள். எதுவும் உங்க
ளுக்குச் சொந்த மல்ல. உங்கள் உயிரும், சொத்தும் இனி
உங்களுடையவை அல்ல.

இந்த உண்மையை உணர உங்களுக்கு விருப்ப
மில்லையா? அப்படியானுல், உங்களுக்குத் தனியாகத்
தெளிவாக வேறொரு பாதை இருக்கவே யிருக்கிறது.
உங்களுக்கு விருப்ப மில்லையா? சுதந்தரச் சர்க்காரின்
கீழ்ச் சுதந்தரமாக வாழும் இந்தியர்கள் என்ற முறையில்
உங்களது கடமைகளை நீங்கள் ஏற்க விரும்பவில்லையா?
உங்களுக்குச் சுதந்தரம் வேண்டாமா? சுதந்தரத்தின்
விலையைக் கொடுக்க நீங்கள் தயா ரில்லையா?—அப்படி
யானுல், உங்களுக்கு ஒரே வழிதான் உண்டு. ஆங்கிலே
யர் போன பாதையில் நீங்களும் போகவேண்டியதுதான்.

இங்கே, ஒரு காலத்தில் அவர்கள் ஆள்வோரா
யிருந்துவந்தார்கள். ஆனுல், இங்கே இன்று அவர்களுக்கு
மிஞ்சி யிருக்கும் இடம் ஒரே இடம்தான்: சிறையிடம்
தான். நீங்கள் விரும்பினுல், சிறைக்குப் போய், ஆங்கி
லேயருக்குத் துணை யிருக்கலாம். ஆனுல், இதை நினைவில்
வையுங்கள்: யுத்தம் முடிந்து, இந்தியா சுதந்தரமடைந்த
தும், சுதந்தர இந்தியாவில் உங்களுக்கு இட மிருக்காது.
உங்கள் மேல் இந்தியச் சர்க்கார் மனம் உவந்து இரக்கப்
படுமானுல், சுதந்தர இந்தியச் சர்க்கார் உங்கள்பால்
காட்டக்கூடிய மிக அதிகப்படியான கருணைச் செயல்
எது தெரியுமா? உங்களுக்கு மூன்ரும் வகுப்புப் பயணச்
சீட்டுக் கொடுத்து, இந்தியாவின் புனித மண்ணைவிட்டு
நீங்கள் இங்கிலாந்துக்குப் போகும்படிச் செய்வதே.

என் காதில் விழுந்தது. மலேயாவில் உள்ள பணக்
கார இந்தியர்களில் சிலர் முணுமுணுக்கிருர்களாம்.
அவர்களை நான் வாட்டி வதைக்கிறேனும், விஷயத்தைத்

அவர்களுடன் நேருக்கு நேராகப் பேசிவிட விரும்பு கிறேன். அப்போது, இனிமேல் அவர்களும் நேர் பாதை யில் செல்லலாம். நான் கேள்விப்பட்டிருக்கிறேன். நல்ல பணக்கார இந்தியர்கள் தங்கள் தேசிய இனத்தை மாற் றிக்கொண்டுவிட நினைக்கிறார்களாம். இப்படிச் செய் வதன் மூலம் இந்தியச் சுதந்தர லட்சியத்துக்குப் பண உதவிசெய்யாமல் தப்பிவிடப் பார்க்கிறார்கள். இன்னொன் றும் கேள்விப்பட்டேன். சிலர் யோசனை செய்கிறார்க ளாம். கண்காணிப்பாளர்களிடம் தங்கள் சொத்துக் களைக் கொடுத்துவிட்டு, யுத்தம் முடிந்த பிறகு திரும்ப பெற்றுக் கொண்டு விடுவார்களாம்.

இந்த விஷயம் கூட என் காதுக்கு எட்டியது. சிற் சிலர், போக்குக் காட்டி ஏமாற்றிவிட நினைக்கிறார்க ளாம். லட்ச ரூபாய் தருவதாக வாக்களிப்பது. காலங் கடத்துவதற்காக அந்தத் தொகையைச் சிறு சிறு தவணை களில் செலுத்துவது. "இப்பவோ பின்னேயோ" நாம் பர்மாவுக்குப் போய்விடுவோம்: அங்கிருந்து இந்தியா போவோம். இப்படியாகப் பணந் தராமல் ஏமாற்றிவிட லாம்—இது இவர்கள் யோசனை.

ஆனால், இவர்கள் படுமோசமான தப்புச் செய்கிறார் கள். எங்களை ஏமாற்றிவிடுவதும், தங்கள் கடமையைச் செய்து முடிக்காமல் பதுங்கிக்கொள்வதும் அவ்வளவு சுலபமான காரியமாக இருக்கப் போவதில்லை. நாங்கள் இங்கே, சியோனனில், இருப்போம். பர்மாவிலிருப்போம். இந்தியாவில்கூட இருப்போம். எங்கிருந்த போதிலும், நமது ஸ்தாபனம் இங்கேயே யிருக்கும். ஏன்? அது இங்கேயேதா னிருக்கவேண்டும். இந்தியா பூரணச் சுதந் திர மடைந்து, கடைசி ஆங்கிலேயன் இந்தியாவி லிருந்து விரட்டியடிக்கப்படும் வரையில் தன் வேலையை அது செய்தாக வேண்டும்.

ஒவ்வோர் இந்தியரையும் வேண்டிக்கொள்கிறேன்— அவர் இந்துவானாலும் சரி, சீக்கியர் ஆனாலும் சரி, கிறிஸ் துவர் ஆனாலும் சரி—தம் கடமையைச் செய்வதினின்றும் தவறிவிடக்கூடாது. யார் யார் தங்கள் தங்கள் கடமை



களைச் செய்துவருகிறார்கள், யார் யார் எத்திக்கொண்டு வருகிறார்கள் என்று எனக்குத் தெரியும்.

நான் இந்தியாவை விடுவித்தாக வேண்டும். இந்தி யாவை நான் சுதந்தரம் பெறச் செய்வேன். என்ன செய் தாவது, என்ன கஷ்டப்பட்டாவது காரியத்தை முடிக்கத் தான் போகிறேன். நிலைமையை உணருமாறு உங்களை வேண்டுகிறேன். பளுவை யேற்றுத் தாங்கவேண்டியது உங்கள் கடமை. உங்களுக்குப் பிடித்தாலும்சரி, பிடிக்கா விட்டாலும் சரி, கடமை கடமைதான். செய்யவேண்டி யதைச் செய்யாமல் நழுவிவிட விரும்பினால், உங்களுக் குச் சுதந்தரம் வேண்டாமென்று திறந்து சொல்லிவிடுங் களேன். அப்போது, நான் ஏற்கெனவே சொல்லியபடி, உங்கள் முன்னால் முற்றும் வேறு விதமான பாதை திறந்து கிடக்கும்.

நீங்கள் இந்தியர்கள் என்று சொல்லிக்கொள்ளு கிறீர்களா? இந்தியர்கள் என்று சொல்லிக்கொண்டு, கிழக் காசியாவில் பணம் சேர்க்க விரும்பினால், சுதந்தர இந்தியர்கள் என்ற முறையில், உங்கள் ஒவ்வொருவர் மீதும் சாரும் கடமைகளைச் செய்யாமல் நழுவி விட முடி யாது. உங்கள் கடமையைச் செய்வதும், செய்யா திருப் பதும் உங்கள் சொந்த விருப்பத்தைப் பொறுத்த விஷய மென்று நினைத்துவிடாதீர்கள்.

இதுதான் என்னுடைய கடைசி வேண்டுகோள். அன்று, சியோனனில் பேசிய போது, நான் ஏற்கெனவே சொல்லி யிருக்கிறேன். இன்று, இங்கே நான் நிற்பது மற்றும் ஒரு வேண்டுகோள் செய்வதற்காக அல்ல. கையேந்திக்கொண்டு, பிச்சைக்காரன் மாதிரி இங்கே நான் நிற்க வில்லை. சுதந்தர இந்தியத் தற்காலிகச் சர்க் காரின் பிரதிநிதியாக இன்று நான் நிற்கிறேன். உங்கள் சொத்துச் சுகங்களின் மீது இந்தச் சர்க்காருக்குப் பூரண உரிமை யிருக்கிறது.

உறுதி அளிக்கிறேன், நண்பர்களே!—

நீளப் பேச்சுப் பேசிக் காலத்தைப் போக்குகிறவனல்ல நான். சும்மா பயமுறுத்துகிறவனல்ல நான். நான் என்ன சொல்லுகிறேனோ அதைப் பூராவும் எண்ணிப் பார்த்த பிறகே சொல்லுகிறேன். சொல்லுகிறபடி செய்கிறவன் நான். என் எதிரிகள் கூட அறிவார்கள். பெரும்பாலும், நான் சொன்னபடி செய்யாமலிருப்பதில்லை. நான் சொல்லிவிட்டேன். எப்படியாவது, என்ன செய்தாவது, இந்தியாவுக்குச் சுதந்தரம் பெற்றாக வேண்டும். பூரணத் திரட்சி வேலைகளை நடத்தியாக வேண்டும். கூடுமானால், கட்டாயப் படுத்தாமலும், அவசியம் நேர்ந்தால் கட்டாயப்படுத்தியும், இதைச் செய்தே தீர வேண்டும். மீண்டும் வற்புறுத்திச் சொல்கிறேன். நான் சொல்வதெல்லாம் வாஸ்தவமாகவே சொல்வதுதான்.

இன்று, உங்கள் முன் விரிவாகப் பேசுகிறேன். எதற்காக? நீங்கள் தப்பான கற்பனைகளைக் கொண்டு ஏமாந்து போகக்கூடாது. கட்டாயமின்றி உதவிபுரிய முன் வர உங்களுக்குப் பூரா வாய்ப்பும் தரவில்லையே என்று பின்னால் நீங்கள் சொல்லக்கூடாது. கண்ணியமான வழியிருக்கிறது. வலிய உதவ முன் வந்தீர்களானால், உங்களைப் பற்றி நான் பெருமையடைவேன். அப்படி நீங்களாகவே ஒத்தாசை செய்ய விரும்பவில்லையென்றால், அதற்காக வேண்டி நாங்கள் அடிமைகளாக இருந்து வரப் போவதில்லை.

எனக்கு ஆச்சரியமாயிருக்கிறது. நம்மில் சிலரைப் பற்றித் தகவல் வந்தது. பணம் சம்பாதித்துச் சேர்க்க எத்தனை எத்தனையோ வருஷம் பிடித்ததாம். தங்கள் குழந்தை குட்டிகளுக்குப் பாதுகாப்புச் செய்து வைக்க வேண்டுமாம். இந்தக் காரணத்துக்காகச் சுதந்தரச் சர்க்காரைக் கொண்ட சுதந்தர இந்தியாவில் தியாகம் செய்ய இவர்கள் மறுத்திருந்தார்களானால், இவர்கள் கதி என்ன ஆகியிருக்குமென்று எண்ணிப் பாருங்கள்.



நிச்சயமாக இவர்கள் விரோதிகளாகவே கருதப்படுவார்கள்.

நீங்கள் நண்பராகவோ அல்லது எதிரியாகவோதானிருக்க முடியும். நினைக்காதீர்கள். பிரிட்டிஷார் மட்டுமா நம்முடைய எதிரிகள்? பிரிட்டிஷாருக்கு உதவி செய்யும் ஒவ்வொருவரும், நம் லட்சியத்துக்கு உதவ மறுக்கும் ஒவ்வொருவரும் நம்முடைய எதிரிதான். ஏன்? இன்று, நாம் சாவுக்கும் வாழ்வுக்குமிடையே மல்லாடிக்கொண்டிருக்கிறோம்.

இதோ, அவர்களைப் பாருங்கள். இந்தியத் தேசிய ராணுவத்தில் சேர வலிய முன் வந்து, தேவையான பயிற்சியைப் பெற்றுவருகிற அவர்களைப் பாருங்கள். அவர்களுக்குத் தெரியாது. அவர்களில் எத்தனை பேர் சுதந்தர இந்தியாவைப் பார்க்கு மட்டும் உயிரோடு இருக்கப் போகிறார்கள்? அவர்கள் தயாராகிக் கொண்டு வருகிறார்கள். தங்கள் ரத்தத்தின் கடைசிச் சொட்டு வரை சிந்திவிடும் ஒரே எண்ணத்தோடு அவர்கள் தயாராகிறார்கள். சுதந்தர இந்தியாவுக்குப் போவது, அல்லது போகும் வழியில் சாவது—என்ற நினைப்புடன் அவர்கள் தயாராகிவருகிறார்கள். பின் வாங்குவதற்கு அவர்களிடம் எவ்விதத் திட்டமுமில்லை. பின் வாங்கும் திட்டம் வேவலுக்கும், அவரது ராணுவத்துக்கும் பிரத்தியேகமாய் ஒதுக்கி வைக்கப்பட்டிருக்கட்டும்.

பிரிட்டிஷ் சர்க்கார் அவருக்குப் பதவி உயர்வுகளை அளித்திருக்கிறது. இப் போது, அவரை இந்தியாவின் வைசராயாக ஆக்கி யிருக்கிறது. ஏன்? வாபசுக்குப் பின் வாபசாகப் பின் வாங்கித் தன் உயிரைக் காத்துக் கொள்ளும் கலையில் அவர் துறை கை போனவர் என்று நிரூபித்துக் காட்டிவிட்டார் அல்லவா?—அதனால். பின் வாங்கித் தன் உயிரைக் காத்துக்கொள்ளும் எவ்விதத் திட்டமும் இ. தே. ரா.—வுக்கு இல்லை. வெற்றி பெற முன்னேறுவது, அல்லது வழியில் கடைசிச் சொட்டு ரத்தம் வரை சிந்துவது—என்ற எண்ணத்துடன் இ. தே. ரா. பயிற்சி பெற்றுவருகிற போது, பணக்காரர்கள்

என்னிடம் என்ன கேட்கிறார்கள். தெரியுமா? பூரணத் திரட்சி என்பதற்கு அர்த்தம் பத்துச் சத விகிதமா அல்லது ஐந்து சத விகிதமா என்று கேட்கிறார்கள். சத விகிதங்களைப் பற்றிப் பேசும் இவர்களை நான் கேட்கிறேன். நம்முடைய போர் வீரர்களைச் சண்டை செய்யச் சொல்லி, தங்கள் ரத்தத்தில் பத்துச் சத விகிதத்தை மட்டும் சிந்திப் பாக்கி ரத்தத்தை மீத்து வைத்துக் கொள்ளுங்கள் என்று சொல்ல முடியுமா?

நீங்களே கண்ணாரக் காணலாமே? நமது படையில் சேர்ந்திருக்கும் இளைஞர்கள் ஊடும், நமது கொடியின் கீழ் திரண்டு நிற்கும் சகோதரிகள் ஊடும் பாய்ந்து சுவறியுள்ள உணர்ச்சி வேகத்தைப் பார்க்கிறீர்களே! நல்ல வேளை, நமக்கு ஆள் தட்டில்லை. அழைத்தவுடன், அமோகமாக ஆட்கள் வந்துவிட்டார்கள். நீண்ட யுத்தத்துக்குக்கூடத் தயாராவதற்குப் போதுமான ஆட்கள் பயிற்சி பெற வந்துவிட்டார்கள். நமக்கு வேண்டியது என்ன? இதே மாதிரி பண ஆதரவும், சரக்குச் சாமான் ஆதரவும்தான். நாம் எல்லோருமே ஏழைகள் என்றால், அன்னியர் உதவியை நாடுவது நியாயமாகும். ஆனால், நம்மிடையே பணக்காரர்களு மிருக்கிறார்கள். நம்முடைய அன்னிய நண்பர்களும் இதை அறிவார்கள். நம் சொந்த மக்களிடமே போதுமான வசதிகளிருந்தால், மற்றவர்களிடம் கை நீட்டி உதவி பெறுவது சுத்த மானக் கேடு.

உயிர் கொடுக்க முன் வர ஏராளமான சகோதரிகளிருக்கும் போது, உயிர் கொடுக்க விரும்பாதவர்கள் தங்கள் உடைமை போகிறதே என்று முணு முணுப்பது ஏனென்று எனக்கு விளங்க வில்லை. பார்க்கப் போனால், பண மென்பதுதான் என்ன? உயிரோடு ஒப்பிடும் போது, பணம் ஒன்றுக்கும் உதவாதது. அன்னியச் சர்க்கார் ஒன்று உங்களிடம் இப்படிச் சொல்லுகிறதென்று வைத்துக்கொள்ளுங்கள்: கோடிப் பணத்தைக் கொடுக்கிறாயா? உயிரை யிழக்கிறாயா என்று கேட் கேட்டால், நீங்கள் என்ன செய்வீர்கள்?



உயிரை விடப் பணத்தை இழப்பதையே நீங்கள்
நிச்சயமாக விரும்புவீர்க ளல்லவா?

இளைஞர்கள் உயிர் கொடுக்க முன் வருவது
போலவே, இல்லாத எளிய வகுப்பு மக்களும் வலிய முன்
வந்து, உற்சாகத்துடன் தங்களிட முள்ள உடைமை
அனைத்தையும் தருகிறார்கள். காவல்காரர்கள், வண்ணார்
கள், நாவிதர்கள், பெட்டிக்கடைக்காரர்கள், பால்
காரர்கள் போன்ற ஏழை வகுப்பு இந்தியர்க ளெல்
லாம் தங்களிட முள்ள அனைத்தையும் தர முன் வந்திருக்
கிறார்கள்.

அது மட்டுமா? அவர்களில் சிலர் வலியப் போரில்
சேரவும் முன் வந்திருக்கிறார்கள். "பூரணத் திரட்சி"
என்று நான் சொல்லும் சொற்களின் அர்த்தம் என்ன
என்று சில நண்பர்கள் கேட்கிறார்கள். தங்கள் உடை
மைகளை மட்டு மல்லாமல் தங்கள் உயிரையும் கொடுக்க
முன் வந்திருக்கும் இந்த ஏழைகள் தாங்களே செயலில்
நடத்திக்காட்டி, "பூரணத் திரட்சி" என்ற சொற்களின்
சரியான பொருளை விளக்கிவிட்டார்கள்.

இந்த ஏழை மக்களில் சிலர் என்னிடம் வந்தார்கள்.
கையில், மடியி லுள்ள ரொக்கம் பூராவையும் என்னி
டம் கொடுத்து விட்டார்கள். அது மட்டுமா? அவர்கள்
அதற்குமேலேகூடப் போய்விட்டார்கள். வாழ்க்கை
பூராவும் தாங்கள் சிறுகச் சிறுகச் சேர்த்துவைத் திருந்த
பணத்தின் பிரதிநிதியாகிய தங்கள் சிறு சேமிப்புப்
பாங்கிப் புத்தகத்தையும் என்னிடம் தந்துவிட்
டார்கள். மலேயாவி லுள்ள இந்தியர்க ளிடையே, என்
னிடம் வந்து அதே மாதிரி உற்காசகத்துடன், இந்தியச்
சுதந்தர லட்சியத்துக்காக, "இதோ, என் பாங்கிப் புத்த
கம்!" என்று சொல்லக் கூடிய ஒரு பணக்காரன்
இல்லையா, என்ன?

தேசிய இனம் என்ற முறையில், பரித்தியாக லட்சி
யத்தில் இந்தியர்கள் நம்பிக்கை கொண்டவர்கள். இந்துக்
களில் சன்னியாசிகளின் லட்சியமும், முஸ்லிம்களில்

பக்கிரிகளின் லட்சியமும் நமக்கு இருக்கவே இருக்கின்றன. நமது சரித்திரத்தில், எத்தனையோ எடுத்துக் காட்டுகளிருக்கின்றன. உண்மைக்காக, நீதிக்காக, நம் பிக்கைக்காக, பக்கிரிகளாக மாறிய எத்தனையோ மன்னர்கள் நம்மிடையே இருந்துவந்திருக்கிறார்கள்.

இதைவிடப் பெரிய லட்சிய மிருக்க முடியுமா? இதைவிடப் பெருமிதமான, புனிதமான லட்சிய மிருக்க முடியுமா? 38 கோடி மனித ஆன்மாக்களை விடுவிக்க வேண்டிய காரியம் சாமானிய மானதா? ஒரு பணக்காரன்கூட இல்லையா? இத் தகைய மா பெரும் லட்சியத்துக்கு "இதோ எனது பாங்கிப் புத்தகம்!" என்று முன் வந்து சொல்லக் கூடிய ஒரு பணக்காரன் இல்லையா?

உயிரை அளிக்கக் கூடிய அளவுக்கு நீங்கள் பரித்தியாகம் செய்யக் கூடியவர்களல்லாவிட்டால் போகட்டும். "உயிரை மட்டும் கேட்காதீர்கள். மற்ற எல்லாவற்றையும் தந்துவிடுகிறோம்" என்று சொல்லக்கூடிய ஒரு சிலர்கூட உங்களிடையே இல்லையா—என்பது தான் எனக்கு விளங்க வில்லை.

இனி, சுதந்தர இந்தியத் தற்காலிகச் சர்க்காரின் வேலைத் திட்டத்தை உங்கள் முன் இப்போது சமர்ப்பிக்கிறேன். இந்தத் திட்டத்தை நடத்திவைக்கும் போது, நாம் மெதுவாக, இடையறாமல், காரியம் செய்ய வேண்டும். எந்தச் சர்க்காரும் அப்படித்தான் செய்யும். யுத்த முற்கால மதிப்புப்படி, மலேயா இந்தியர்களின் செல்வம் நூறு கோடி. இது உங்களுக்குத் தெரியும். இப்போது, பெறு மதிப்புகள் உயர்ந்துவிட்டன. சாதாரணமாக ஒரு சர்க்காரானது வருஷத்துக்கு ஒரு முறை வரவு செலவுத் திட்டம் தயாரிக்கிறது. அவசியம் வந்தால், அந்த வருஷத்திலேயே உபரியான துணைச் செலவுத் திட்டங்களையும் தயாரிக்கிறது. நானும் அப்படியே செய்ய உத்தேசிக்கிறேன்.

நீங்கள் என்ன செய்யப் போகிறீர்கள்? பூரணத் திரட்சி செய்கிற போக்குக்கு ஏற்ப வலிய முன் வரப்



போகிறீர்களா? அல்லது சண்டை, முடியும் வரை அவ்வப்போது நாங்கள் கேட்கும் பணத்தைக் கொடுக்கப் போகிறீர்களா?

மலேயாவிட மிருந்து நான் முதலில் கேட்பது 10 கோடி ரூபாய். இது மலேய இந்தியர்களின் சொத்தில் கிட்டத்தட்டப் பத்துச் சதவிகிதம் ஆகும். இந்த மாநாட்டில், மலேயாவின் பணக்காரர் பலர் வந்திருக்கிறார்கள். அதனால், இப்போதே ஒரு கோடி ரூபாய் எதிர்பார்க்கிறேன். இன்னும் ஒரு மாதத்திற்குள் மலேயாவிலிருந்து 10 கோடி ரூபாயும் வந்துவிடும்.

———

# ச்சுங்கிங்நுக்கு வேண்டுகோள்

[ஷங்ஹாயி லிருந்து 21-9-1943-ல் பேசியது]

ஷங்ஹாய் ஒரு நகராண்மைக் கழகத்தின் கீழ், ஓர்
அரசாங்கத்தின் கீழ், ஒரு நகர்த் தலைவரின் கீழ், ஐக்கிய
மான சமயத்தில் நான் ட்டோக்கியோவி லிருந்தேன்.
இப்போ தெல்லாம் மூன்று ஷங்ஹாய்க ளில்லை. இப்
போதிருப்பது ஒரே ஒரு ஷங்ஹாய்தான். வரபோ
கிற நிகழ்ச்சிகளுக்கு இது அறிகுறி யென்றே எனக்குப்
படுகிறது. எனக்கு ஐய மில்லை. நாள் பிடிக்காது. சீன
நாடு முழுவதும் ஒரே சர்க்காரின் கீழ், ஒரே தலைவரின்
கீழ் இதே மாதிரி ஐக்கியமாகிற காலம் தொலைவி
லில்லை.

இங்கிருந்து தெற்கில், எனது தலைமை இடத்துக்குப்
போக வேண்டிய வழியில், நான் இருக்கிறேன். அங்
கிருந்து சீக்கிரம் பர்மாவுக்கும், இந்திய எல்லைப் புறத்
துக்கும் பயணமாவேன். கடமை என்னைப் பர்மாவுக்கு
அழைக்கிறது. எனக்குத் தெரியும். இந்தியச் சுதந்
தரத்துக்காகப் போர் புரிய நாங்கள் இந்திய எல்லைப்
புறத்துக்குப் போகும்போது,பிரிட்டிஷ் துருப்புக்களோடு
நாம் போரிட வேண்டும். சீனத் துருப்புக்களோடும்
பெரும்பாலும் போரிட வேண்டும். எனக்கு விளங்க
வில்லை: இந்தியாவி லுள்ள பிரிட்டிஷாருக்காகச் சீனர்
கள் ஏன் போரிட வேண்டும்? இந்தியாவின் மீதுள்ள
பிரிட்டிஷாரின் ஆதிக்கத்தைக் காத்துவரப் பிரிட்டிஷா
ருக்குச் சீனர்கள் ஏன் உதவ வேண்டும்? எனக்குப் புரிய
வில்லை: மக்களுக்காக உள்ள ஒரு சர்க்கார், தேசியச்
சர்க்கார் என்று சொல்லிக்கொள்ளும் ஒரு சர்க்கார்,
தன்னுடன் நேச பாவத்துடன் இருக்கும் ஒரு நாட்டில்
ஆதிக்கம் செலுத்திவரும் அன்னிய வல்லரசு தன் ஆதிக்



கத்தை அந் நாட்டில் தொடர்ந்து நடத்திவருவதற்காக
அந்த நாட்டுக்கு எதிராகத் தன் துருப்புக்களை எதற்
காக அனுப்புகிறது?—என்று எனக்கு விளங்க வில்லை.
இந்திய மக்கள் மெய்யாகவே சீனவுடன் அனுதாபம்
கொள்ளுகிறார்கள். உங்களுக்குத்தெரியும்: இந்தியத்தேசி
யக்காங்கிரசும், இந்திய மக்களும் ச்சுங்கிங் சர்க்காருக்கு
நிஜமாகவே உதவி யளித்துள்ளார்கள். 1938-ல், தேசியக்
காங்கிரசின் தலைவனாக நான் இருந்த போது, முதலாவது
வைத்திய உதவிக் கோஷ்டியைச் சீன மக்களிடத்தும்
சுங்கிங் சர்க்காரிடத்தும் கொண்டுள்ள அனுதாபத்தின்
அடையாளமாக அனுப்ப நான் பொறுப்பாளியாக
இருந்தேன். பின்னால், பல வகையில், மருந்துச் சாமான்
களும், பிற பண்டங்களும் தந்து சுங்கிங்குக்கு நாங்கள்
ஒத்தாசை செய்தோம். எதற்காக? எங்கள் அனுதா
பத்தை மெய்யாக எடுத்துக் காட்டுவதற்காக. எனக்குத்
தெரிய வில்லை: மார்ஷல் ச்சியாங் கேஷேக்கும், அவரது
சர்க்காரும் எங்கள் நல்லெண்ணத்துக்கு இன்று எந்த
மாதிரியாகப் பதில் உதவி செய்யப் போகிறார்கள்?
பிரிட்டிஷாருடன் சேர்ந்துகொண்டு, எங்களை எதிர்த்துப்
போர் புரியச் சீனத் துருப்புக்களை இந்தியாவுக்கு
அனுப்புவதன் மூலமா?

சுங்கிங் சர்க்கார் தன் துருப்புக்களை இந்தியாவுக்கு
அனுப்பிக்கொண் டிருப்பது கண்டு நான் வருந்து
கிறேன். சுங்கிங்கிடம் எப்போதுமே எனக்குப் பேரள
வான பரிவு உண்டு. இருந்தும், எங்களுக்கு எதிராகப்
போரிடவும், பிரிட்டிஷ் சாம்ராஜ்யத்திற்கு உதவி புரிய
வும் சீனத் துருப்புக்கள் இந்தியாவுக்கு வந்துகொண்
டிருக்கிறார்கள். இது விஷயமாக உங்களுக்கு ஒன்று
சொல்லுகிறேன். இன்று கிழக் காசியாவில் நேர்ந்திருக்
கும் நிலைமை முற்றும் புதியதொரு நிலைமை. சில [வரு
ஷத்துக்கு முன் இதைப் பற்றி யாரும் கனவுகூடக் கண்
டிருக்க மாட்டார்கள். இன்று, நிப்போன் ஆனது கிழக்
காசியாவில் முற்ற முழுக்கப் புதிய கொள்கையை யேற்
றிருக்கிறது. பர்மா, ஃபிலிப்பீன் தீவுகள் இவற்றின்
சுதந்தரப் பிரகடனத்தின் மூலமும், சுதந்தர இந்தியத்

தற்காலிகச் சர்க்கார் நிறுவியதன் மூலமும் இந்தப் புதுக் கொள்கையை நிப்பொன் விளக்கிக் காட்டிவிட்டது. நிப்பொன் சர்க்கார் சீனுவின் தேசியச் சர்க்காருடன், சமீபத்தில், ஒரு புது உடன்படிக்கை செய்துகொண்டது. அமைதியை மீண்டும் நிலை நாட்டியவுடன் தன் பொறுப்புக்களை அது வாபஸ் பெற்றுக்கொள்ளும் என்ற செய்தியை மேற்படி உடன்படிக்கையின் மூலம் நிப்பொன் சர்க்கார் வெளிப்படுத்தி யிருக்கிறது.

நான் இந்தியத் தேசியப் புரட்சிக்காரன். ஒவ்வொரு இந்தியனும் இந்தியாவின் கட்சியிடம் உண்மையாய் நடந்து வர வேண்டும். அதே மாதிரி, ஒவ்வொரு சீனனும் சீனுவின் கட்சியிடம் உண்மையாயிருக்க வேண்டும். மா பெரும் கிழக் காசியாவின் யுத்தம் மூண்டதி லிருந்து நிப்பொன் நிஜமாகப் பின்பற்றி வந்த வழியைப் பற்றி எனக்கு நேராக விஷயம் தெரிந்த மட்டில், நான் உங்களுக்கு ஒன்று சொல்லுகிறேன். கிழக் காசியாவில் புதிய நிலைமை ஏற்பட் டிருக்கிறது. அதன் காரணமாகச் சீனுவுக்கும், சீன மக்களுக்கும் பொன் போன்ற வாய்ப்புக் கிட்டி யிருக்கிறது

சீனுவின் ஒரே பிரச்னை யாது? ஒற்றுமை. இந்தப் பிரச்னை இன்னும் தீர்ந்தபா டில்லை. மற்றப்படி, சீனுவானது தான் விரும்பியதை நிப்பொனின் புதிய கொள்கையின் மூலம் ஏற்கெனவே சாதித்துக்கொண்டுவிட்டது. கிழக் காசியாவில் நான் வெகு தூரம் பிரயாணம் செய்திருக்கிறேன். இப்போதுள்ள யுத்த நிலைமை குறித்து இந்த மாதிரியான முடிவுக்கு வரக்கூடிய நிலைமையில் நான் இருக்கிறேன். எனக்குத் தெரியும்: போர் நீண்டதாயும், கடினமானதாயும் இருக்கும். ஆனால், எனக்கு நம்பிக்கை யுண்டு. இந்த யுத்தத்தில், பிரிட்டன் முறியடிக்கப்படும். ஏன்? நமது கட்சி நியாயமானது என்பதற்காக மட்டு மல்ல. படைத் தள அமைப்பு வசதிகள் (வியூகங்கள்) நிப்பொனுக்குச் சாதகமா யிருக்கின்றன. அதனால்தான். இந்த யுத்தத்தில், பிரிட்டன் முறி



முறியடிக்கப்பட்டா லொழியச் சீனுவிலோ, கிழக் காசியாவிலோ நீங்கள் ஒரு போதும் அமைதி பெற முடியாது.

சீனு ஒரே தலைவரின் கீழ் வரப் போகும் நாள் எட்டத்தி லில்லை. சீனுவுக்கும், நிப்பொனுக்கும் இடையே கௌரவமான சமாதானம் ஏற்படுவதன் மூலம் சீனுவி லிருந்து நிப்பொன் தன் துருப்புக்களை வாபஸ் வாங்கிக் கொள்ளும். சமாதானத்துக்காக, இந்த யுத்தம் முடியும் வரை நீங்கள் காத்திருக்க வேண்டிய காரண மில்லை. இந்த யுத்தம் நடந்துகொண் டிருக்கும் போதே நீங்கள் சமாதானம் பெற்று. உங்கள் தேசியச் சீரமைப்பு வேலையையும், சீனுவின் பொருளாதார மீட்சிக்கான வேலையையும் தொடங்குவது சாத்தியமே.

---

# இறை அருள்

இன்றைக்கு இரண்டு வருஷத்துக்கு முன்னே, கிழக்காசியாவின் சரித்திரத்திலே ஒரு புதிய அத்தியாயம் தொடங்கியது. அன்றிலிருந்து கிழக் காசியாவின் தேசப் படத்தில் மாறுதல்கள் ஏற்பட்டிருக்கின்றன. இந்த மாறுதல்களும், கிழக்காசியாவின் நாடுகளுக்கு இவை குறிப்பால் உணர்த்தும் அர்த்தமும் எல்லாருக்கும் மிக நன்றாய்த் தெரியும். அதனால், அவைகளைப் பற்றி நான் மீண்டும் சொல்லத் தேவையில்லை. பெரும்படியான விளைவுகளை உண்டாக்கிவிடக்கூடிய இந்த மாறுதல்களை இன்று நான் வேறொரு கோணத்திலிருந்து ஆராய விரும்புகிறேன்.

சரித்திரத்தைப் படித்தாராய்ந்தால், என்ன தெரிகிறது? உலகச் சரித்திரத்தில் பெரிய மாறுதல்கள் எப்படி ஏற்படுகின்றன. அவைகள் அலைமாதிரி, நிலத்தில் பரவிப் புரண்டோடிக்கொண்டேயிருக்கும். ஆகக் கடைசியிலுள்ள தூரத்து எல்லையை யெட்டு மட்டும் பரவியடித்துச் செல்லும். பிறகு, அதன் சக்தி பூராவும் செலவாகிப் போனதும், அது பின் தாங்கி வந்துவிழும். இதை வேறு மாதிரியாகச் சொல்லுகிறேன். உலகச் சரித்திரத்தில் நிகழும் பெரிய மாறுதல்கள் முதலில் விரிந்து பரவும், பிறகு சுருங்கும்,—அதாவது வாபஸ் வாங்கும். இப்படியாகப் பிரிட்டிஷ் சாம்ராஜ்யத்தின் வளர்ச்சிவிரிவுத் தன்மையில் அடங்கியது. பிரிட்டனைத் தளமாகக் கொண்டு அது வளரத் தொடங்கிப் பின்னால் தூரக் கிழக்கு வரை சென்றது. போன உலக யுத்தம் பிரிட்டிஷ் ஏகாதிபத்தியம் அடைந்துள்ள வளர்ச்சியின் உச்ச நிலையையும், விரிவின் உச்ச நிலையையும் குறித்துக் காட்டியது. அடுத்த 40 வருஷக் காலத்தில் அந்த ஏகாதிபத்தியத்தின் ஆண்மைச் சக்தி காலியாகிவிட்டது. கிழக்காசியாவில் யுத்தம் தொடங்கியதிலிருந்துதொலைதூரத்திலுள்ளஹொங்காங் வரை பரந்து விரிந்துபோன அலையானது பின்வாங்கத் தொடங்கியது. அதனாலேயே ஹொங்காங்கிலிருந்துஆரம்பித்து, பர்மாவில் போய் முடிந்த தோல்விகள் வரிசையாயேற்பட்டன. இப்போது எழும் கேள்வி யாது? "இப்படிப் பின் வாங்குவதை நிறுத்த முடியுமா? அழுகலை மேலும் பரவாமல் தடுக்க முடியுமா? அழுகி, நசுங்க ஆரம்பித்துவிட்ட ஏகாதிபத்தியத்தை நடுவில் பிடித்து நிறுத்திக் காப்பாற்ற முடியுமா?" இதற்குச் சரித்திரம் அளிக்கும் பதில் முடியாது என்பதுதான். மீட்சி உண்டாகத் தலைப்பட்டவுடன் நிகழ்ச்சிகள் தமக்கு ஏற்கெனவே விதித்துள்ள வழிப்படி நடக்கும். அவை அப்படி நடக்காமல் செய்ய உலகத்திலுள்ள எந்தச் சக்தியாலும் முடியாது. ஒரு காலத்தில் கன்ஸ்டான்டினோபிலிலிருந்து வியன்னா நுழைவாயில் மட்டுக்கும் விரிவடைந்து கொண்டுபோன துருக்கி ஏகாதிபத்தியம் அது எங்கிருந்து கிளம்பியதோ, அதே இடத்துக்குத் திரும்பி வர வேண்டியதாயிற்று. அதேபோல், சிதைவுற்ற பிரிட்டிஷ் ஏகாதிபத்தியமும், அதன் தள ஸ்தானத்துக்குத் திரும்பிப் போயாக வேண்டும். விதியும், இயற்கையும் இப்படித் தீர்ப்புக் கூறி யிருப்பதாகத்தான் எனக்குப் படுகிறது.

கிழக் காசிய யுத்தம் இந்தியாவுக்கு இயற்கையின் வரப்பிரசாதம் என்பதைத் தவிர வேறு அல்ல. இந்தியாவில் தாங்கள் செலுத்திய ஆட்சிக் காலம் நெடுகிலும் பிரிட்டிஷார் எப்போதும் வட மேற்கு எல்லைப் புறத்தைப் பற்றி நினைத்துவந் திருக்கிறார்கள். இந்தத் திசையிலிருந்துதான் எதிரி ஒரு நாள் வருவான் என்பது அவர்கள் நினைப்பு. இந்தியாவின் கிழக்கு எல்லைப்புறத்தைப் பற்றி எந்த இங்கிலீஷ் தளகர்த்தனோ அல்லது நிபுணனோ ஒருபோதும் சிந்தித்ததில்லை. இங்கிலாந்தின் எதிரி திடீரென்று கிழக்கு எல்லைப் புறத்தில் தோன்றுவானென்று எந்த ஆங்கிலேயனும் ஒருபோதும் கனவுகூடக் கண்டதில்லை. எதிர்பார்த்ததற்கு முற்றும் மாறாக, இந்தியாவின் கிழக்கு எல்லைப்புறம் இப்போது திறந்துவிடப்பெற்றுவிட்டது. எனவே, இந்தியாவுக்கு உள்ளே போவதோ, அங்கிருந்து வெளியே வருவதோ இன்று ஒரு பிரச்னை யல்ல. இதைவிடப் பெரிய விசேஷமான விஷயம் என்னவென்றால், கிழக்கு எல்லைப் புறத்துக்கு அப்பால் சுமார் 30 லட்சம் இந்தியர்களைக் கொண்ட ஜனத் தொகுதி இருப்பது

தான். கிழக் காசிய யுத்தத்தாலேற்பட்ட சந்தர்ப்பத்தை இந்த ஜனங்கள் ஆவலோடு கைப்பற்றிக்கொண்டு விட்டார்கள். இந்தியாவின் வடமேற்கு எல்லைப் புறத்தைத் திறந்துவிட்டிருந்தாலுங்கூட, வெளி நாட்டில் வசிக்கும் இந்தியர்கள் இந்தியாவிலுள்ள தங்கள் நாட்டு மக்களுக்குச் சரக்குச் சாமான் உதவி, ராணுவ உதவி இவைகளைக் கொண்டு சேர்க்க முடியாது. மேலும், இந்தியாவுக்கு நல்ல காலமாக, ஒரு காரியம் நடந்திருக்கிறது. இந்தியாவின் கீழ் வாசல்களைத் திறந்துவிடுவதில் வெற்றி கண்ட அதே வல்லரசு உலகத்தின் நமது பாகமாகிய அங்கிருந்து, ஆங்கிலோ-அமெரிக்க அதிகாரத்தையும், செல்வாக்கையும் அங்கிருந்து வேரோடு பிடுங்கி எறியத் தீர்மானித் திருக்கிறது.

மற்றவர்கள் என்னுடன் ஒப்பலாம், ஒப்பாமலும் போகலாம். எப்படியிருந்தாலும், எனக்குத் திடநம்பிக்கை இருக்கிறது. பிரிட்டிஷ் ஏகாதிபத்தியம் தனது கடைசிச் சமரை இந்தியாவில் நடத்திவருகிறது. போர் புரியாமல் எந்த எகாதிபத்தியமும் வீழ்ந்ததில்லை. எனவே, இந்தியாவில் பிரிட்டிஷார் கடுமையாய்ப் போரிடுவார்கள். பூகோளத்தின் எல்லாப் பாகங்களிலிருந்தும் கிடைக்கக்கூடிய எல்லா உதவியையும் அவர்கள் சேர்த்துப் பிடித்துக்கொள்வார்கள். இது இயல்புதான். ஆனால், சரித்திரத்தின் சக்கரங்கள் அரைத்துக்கொண்டே போகும். அவைகளைப் பின் புறமாகத் தள்ளித் திருப்ப முடியாது. இறுதியில், பிரிட்டிஷார் இந்தியாவைக் காலி செய்தாக வேண்டிவரும். இந்தியா சுதந்தரம் அடையும்போது, அடக்கி ஒடுக்கப்பட்டிருக்கும் மேற்கு ஆசிய நாடுகள் தூங்கிக் கொண்டாயிருக்கும்? யாராவது அப்படி முட்டாள்தனமாக நினைப்பார்களா? பிரிட்டிஷ் ஆதிக்கத்தின் கீழோ, பிடிப்பின் கீழோ தவித்துக்கொண்டிருக்கிற அராபியர்களும், பாரசீகர்களும் இன்னும், இதர நாட்டினரும் கிடைத்த சந்தர்ப்பத்தைக் கைப்பற்றிக்கொண்டு, தங்களை வாட்டி வதைக்கும் பிரிட்டிஷாருக்கு எதிராக ஆயுதமெடுத்துக்கொண்டு கிளம்புவார்கள். இது இயல்பு. சொல்லப் போனால், இந்தியாவி



லிருந்து பிரிட்டிஷார் வாபஸ் வாங்கத் தொடங்கிவிட்டார்கள், என்ற குறிப்பு எப்போது வரும் வரும் என்று அவர்கள் ஆவலோடு காத்துக்கிடக்கிறார்கள். இதைச் சொல்லும் போது, நான் சுய விருப்பத்துக்கு இடங் கொடுத்துச் சிந்தனையிலாழ்ந்துவிடவில்லை. இந்த யுத்தம் நடந்துவரும் போது, அடக்கி ஒடுக்கப்பட்ட மேற்கு ஆசிய நாடுகளின் தலைவர்களையும், பிரதிநிதிகளையும் நான் சந்தித்திருக்கிறேன். எனக்குத் தெரியும் உலக நிகழ்ச்சிகளை அவர்கள் மிகக் கவனமாகக் கவனித்துவந்திருக்கிறார்கள். பிரிட்டிஷ் ஏகாதிபத்தியம் மேலும் சுருண்டு விழுவதை அவர்கள் எதிர்பார்த்த வண்ணமிருக்கிறார்கள். அவர்கள் கண்ணைத் திறந்து விழித்துக்கொண்டிருக்கிறார்கள். சந்தர்ப்பம் வரும்போது, அதைப் பிடித்துக்கொள்ள அவர்கள் தவற மாட்டார்கள்.

1905-ல், மேற்கத்திய ஆக்கிரமிப்பை ஜப்பான் வெற்றிகரமாகத் தாக்குப் பிடித்து நின்றது. 35 வருஷம் அது தன் பலத்தைச் சேர்த்துப் பிடித்துத் திரட்டியது. இப்போது, அது தன்மீது சாடிய பிரளயத்தைத் திருப்பியடித்திருக்கிறது. ஒரு காலத்தில், இந்தப் பிரளயம் ஆசியாவைக் கிட்டத்தட்ட ஏறி அமுக்கிவிட்டது. ஆக்கிரமிப்பு அலைப்பெருக்கு, இப்போது வழிந்தோடிக்கொண்டிருக்கிறது. இவ்வளவு சங்கதி நடந்திருக்கிறது. இவ்வளவு நடந்தும், பிரிட்டிஷ் ஏகாதிபத்தியத்தை இனி மேலும் காப்பாற்றிவிட முடியுமா? அப்படி நினைக்கிறவன் அறியாக் குழந்தைதான். கடந்த காலத்தில் இதர ஏகாதிபத்தியங்கள் போன வழியிலேயே அந்த ஏகாதிபத்தியமும் போய்விடும். சந்தேகமில்லை. ஆசியாவின் சரித்திரத்தில், 1941 டிசெம்பரானது ஒரு புதிய அத்தியாயத்தைக் கொண்டுவந்து தந்திருக்கிறது. உலகத்தின் சரித்திரத்திலும் இது ஒரு புதிய அத்தியாயம் தான்.

ஷியோனன்,
8—12—1943.

# இந்தியாவும் அயர்லாந்தும்

ஐரிஷ் குடியரசுக்காரர்களிடமிருந்து வாழ்த்துச் செய்தி வந்திருப்பது எனக்கு மாணப்பெரிய மகிழ்ச்சியைத் தந்துள்ளது. இந்தியர்களாகிய நாம் எத்தனையோ சுதந்தர இயக்கங்களைப்பற்றிக் கவனமாக ஆராய்ந்துவந்திருக்கிறோம். இவைகளிடமிருந்து உணர்ச்சி வேகம் பெற்றிருக்கிறோம். இப்படிப்பட்ட சுதந்தர இயக்கங்களில், ஐரிஷ் சுதந்தரப் போராட்டத்துக்கு நிகராக வேறு எதுவும் அனேகமாயிராது. ஐரிஷ் நாட்டை அடக்கி ஒடுக்கிச் சுரண்டியவர்கள், நம்மை அடக்கி ஒடுக்கிச் சுரண்டியவர்களே. நாம் அனுபவித்த ஆஷாடபூதித்தனம், மிருகத்தனம், ஈவிரக்கமின்மை ஆகிய அதே அனுபவங்களை ஐரிஷ் நாடும் அனுபவித்திருக்கிறது. கடந்த காலத்தில், பிரிட்டிஷ் சாம்ராஜ்யம் அயர்லாந்தைத் துண்டுபடுத்தியது. பிரிட்டிஷ் சாம்ராஜ்யம் இந்த யுத்தத்தில் தப்பிப்பிழைத்தால், இந்தியாவுக்கும் இதே கதி காத்திருக்கிறது. 1916-ல், ஈஸ்டர் எதிர்க் கிளர்ச்சி வேளையில், ஐரிஷ் குடியரசுக்காரர்கள் தங்கள் தற்காலிகச் சர்க்காரை ஏற்படுத்தினார்கள். 1943-ல், இந்தியாவின் சுதந்தரப் போர்வீரர்களை தங்கள் கடைசிச் சுதந்தரப் போராட்டத்தைத் தொடங்குமுன் தங்கள் தற்காலிகச் சர்க்காரை ஏற்படுத்த இருக்கிறார்கள். நமக்கிடையே பொதுவான சங்கதிகள் எவ்வளவோ இருக்கின்றன. அதனால், ஐரிஷ் நாட்டினர்க்கும், நமக்குமிடையே ஆழ்ந்த ஒருமைப்பாட்டுப் பிணைப்பிருந்துவருவது இயல்புதான்.

பல நூற்றாண்டுக் காலமாக, இணையற்ற தீரத்துடன், பிடிவாதத்துடன், தன்னலம் இன்றி ஐரிஷ் போர்வீரர்கள் தங்கள் கொடுங்கோலராகிய பிரிட்டிஷாரை எதிர்த்துப் போராடிவந்துள்ளார்கள். சில சமயங்களில்,



எதிரி அவர்களை அமுக்கி ஏறிவிட்டான். ஆனால், அவர்கள் ஒருபோதும் சிதைந்து போகவில்லை. குறிப்பாக, இந்த நூற்றாண்டில், ஐரிஷ் தேசபக்தர்கள் எப்படிச் சண்டைபோட்டிருக்கிறார்கள்? உன்னதமான ஆதர்சத்திலும், தியாகத்திலும் அவர்கள் எத்தகைய உச்சநிலைகளை எட்டிவிட்டார்கள். தன் பிறப்புரிமைக்காக மனிதன் செய்த போராட்டத்தில், மிக்க பெருமிதமான அத்தியாயங்களுள் ஒன்றாக இவை அமைகின்றன. ஐரிஷ் வீரர்களுக்கு இந்தியத் தேசபக்தர்கள் நன்றி செலுத்தக் கடப்பாடு உடையவர்கள். ஐரிஷ் வீரர்கள் இந்தியாவின் தேசபக்தர்களுக்கு அளித்துள்ள உணர்ச்சி வேகத்துக்குக் கைம்மாறு செய்வது கடினம். சொல்லப்போனால், மிகைப்படுத்திக் கூறிய குற்றத்திற்குக் கொஞ்சமும் ஆளாகாமல், இப்படிச் சொல்லலாம்: அன்னியச் சாம்ராஜ்யத்திற்கு எதிராக எத்தனையோ பேர் போராடியிருக்கிறார்கள். அவர்களை நேரே எனக்குத் தெரியும். அந்தக் கௌரவம் எனக்குண்டு. இப்படிப்பட்டவர்களில், யாருடைய நட்பை நான் மிக அதிகமாகப்போற்றுகிறேன்? ஐரிஷ் குடியரசுக்காக, விட்டுக்கொடுக்காமல், திடமாய் நின்று சண்டையிட்ட தீரமிக்க ஆண்கள், பெண்கள் இவர்களின் நட்பையே நான் அதிகமாகப் போற்றுகிறேன்.

உலகத்தின் தூரக்கோடியில் அமர்ந்துகொண்டு என் தாய் நாட்டை விடுவிப்பதற்காகத் திட்டம் போட்டுக்கொண்டு, உழைத்துச் சாகும் எனக்குக் கடலுக்கு அப்பால் உள்ள ஐரிஷ் குடியரசுக்கார நண்பர்கள் அனுப்பிய செய்தி என் ஆத்மாவில் களிப்பையும், உணர்ச்சி எழுச்சியையும் பொங்கிப் புரளச்செய்துவிட்டது. எனக்கு எத்தனையோ வேலைகள். இவைகளுக்கிடையே, பல காட்சிகளை இந்தச் செய்தி என் மனக்கண்முன் மிகத் தெளிவாகக் கொண்டுவந்து நிறுத்திவிட்டது. அயரின் மரகதத் தீவில் பல நண்பர்களைப் பெற்றேன். அந்த நாட்டில், பல புனித ஸ்தலங்களுக்குப் போயிருந்தேன். சுதந்தரத்துக்காக அங்கே எத்தனை வீரச்செயல்களும், தியாகங்களும் நடைபெற்றன!

எனது ஐரிஷ் குடியரசுக்கார நண்பர்கள் அனுப்பிய செய்தியை நான் மிக மகிழ்ச்சியோடு எதிரொலிக்கிறேன். இத்துடன், மகிழ்ச்சி மொழியையும், பதிலாக அனுப்பு கிறேன். எங்கள் கட்சி நியாயமானது. எங்கள் பிறப் புரிமையை அடைவதே எங்கள் கோரிக்கை. விலை கொடுக்க நாங்கள் தயார். எனவே, நாங்கள் வெற்றி வாகை சூடுவோம். சுதந்தரம் வரும்.

சியோனுன்,
2-11-1943.

---

## டில்லி செல்லும் சாலை

நினைவுக்கு எட்டாத காலந் தொடங்கி, வெளியே யிருந்து இந்தியாவுக்கு உள்ளே முன்னேறிச் செல்லும் ஒவ்வொரு ராணுவத்தின் இலக்காக டில்லி இருந்துவந் திருக்கிறது. விரோதி ராணுவ மானுலும் சரி, நேச ராணுவமானுலும் சரி, டில்லியே இலக்காக இருந்துவந் திருக்கிறது. நினைவுக்கு எட்டாத காலந் தொடங்கி, நாட்டின் மீது நிர்வாகப் பிடியைப் பெற முனைந்த ஒவ்வொரு இந்திய ராணுவத்தின் நோக்கமும் டில்லி யாகவே இருந்துவந் திருக்கிறது. சொல்லப் போனுல், மிகைபட்ட கூற்றுக்கு ஆளாகாமல், இப்படிச் சொல்ல லாம்; இந்தியாவின் சரித்திரம் டில்லியைச் சுற்றிலும் உள்ள சம வெளிகளில் கல்லின் மீது எழுதப்பெற்றிருக் கிறது:—"டில்லியை எவன் ஆளுகிருனே, அவன் இந்தியா வையும் ஆளுகிருன்". இந்தப் பழமொழி இந்திய மக்க ளிடையே சாதாரணமாக வழங்குகிறது. ஒரு காலத் தில், இந்தியக் கவிஞர்கள் இதற்கு மேலே இன்னும் அதிகமாய்ப் போய்விட்டார்கள். "டில்லியைப் பெற்ற பிரபு உலகத்தைப் பெற்ற பிரபு ஆவான்" என்று அவர் கள் சொன்னுர்கள்.

எல்லாச் சாலைகளும் ரோம் நகரை நோக்கிச் சென்று சேர்ந்து கூடுகின்றன. டில்லி அப்படி அல்ல. அதை எப்போதும் மேற்கிலிருந்தான் அணுகி யிருக்கிருர் கள். அதாவது வட மேற்கு என்று வைத்துக் கொள் ளுங்கள். சரித்திரம் கற்பித்த பாடம் இது. பிரிட்டி ஷார் 1857-ல் இந்தியாவைக் கடைசியில் அடிப்படுத்திய போது, இந்தப் பாடத்தை நேர்த்தியாய் உபயோகித்துக் கொள்ள முயன்றுர்கள். முதலில், அவர்கள் ஆஃப்கா னிஸ்தானத்தில் அமர்ந்துகொள்ள முயன்றுர்கள். ஏன்? இந்தியாவில் தங்கள் ஏகாதிபத்தியத்தைப் பாதுகாத்துக் கொள்வதற்காக. ஆனுல், ஆஃப்கானிஸ்தானத்தை அடிப்

படுத்தச் செய்த முயற்சியெல்லாம் தோல்வியுற்றன. அப்போது, ஆஃப்கானிஸ்தானத்துக்கும், இந்தியாவுக்குமிடையே தற்காப்புச் சுவர் அமைக்கப் பிரிட்டிஷார் முனைந்தார்கள்.

பிரசாரத்தின் பெருமதிப்பில் பிரிட்டிஷார் எப்போதும், தங்களை அறியாமல், இயல்பாக, நம்பிவந்திருக்கிறார்கள். பிற்காலங்களில் என்ன நடந்தது? சிங்கப்பூர் உடைக்க முடியாத கோட்டை என்ற எண்ணத்தை வெளி உலகத்தாரிடையே அவர்கள் உண்டு பண்ணினார்கள். அதே போலே, முன்னாட்களில் அவர்கள் என்ன செய்தார்கள்? இந்தியாவின் வட மேற்கு எல்லை மிக்க பலமாய்க் காக்கப்பட்டு வந்ததாகவும், கடக்க முடியாத பெருந் தடையாக அது இருந்ததாகவும் ஓர் எண்ணத்தை அவர்கள் உண்டு பண்ணினார்கள், உண்மை விஷயமென்ன? இந்தியா, ஆஃப்கன் எல்லைப்புறம் பொதுவாக நன்றாய்க் காக்கப்பட்டு வந்தாலும், பாரசீக வழியாய் பலுச்சிஸ்தான் மூலம் இந்தியாவைச் சுலுவாகத் தாக்கியிருக்கலாம். ஆனால், பாரசீகம் (அல்லது ஈரான்), ராணுவம் சம்பந்தப்பட்ட வரையில், பலவீனமான நாடாக இருந்து வரும் வரை, பிரிட்டிஷாருக்குப் பயமில்லை. அவர்களுக்கு இருந்த பெரும் பயம் ஒரு நாள் ஆஃப்கானிஸ்தானம் மூலம் ருஷியாவானது இந்தியாவைத் தாக்கும் என்பதே. ஆகையினால், அவர்கள் செய்த கோட்டைக் காவல்களெல்லாம் வட மேற்கிலிருந்து படையெடுத்து வரும் ராணுவத்தைத் தடுக்க இந்திய—ஆஃப்கான் எல்லைப்புறத்தைத் தற்காத்துக் கொள்வதிலேயே முக்கியமாய்க் குறி வைத்திருந்தன.

ஜார் கொள்கையுள்ள ருஷ்யா உலக வல்லரசாக இருந்து வந்த வரை, ஆஃப்கானிஸ்தானம் மூலம் ருஷ்யா படையெடுத்து வருமோ என்று இந்தியாவில் நிரந்தரமான நடுக்கத்துடன் பிரிட்டிஷார் இருந்து வந்தார்கள். ஆனால், ஜார் ஆட்சி முறை தகர்ந்ததும், அவர்கள் அப்பாடா என்று பெருமூச்சு விட்டார்கள். ஆனால், இன்னொன்று: 1917-ல் போல், போல்ஷவிக் ஆட்சி முறை



மாஸ்கோவில் நிறுவப்பெற்றது. கிழக்காசியாவில் அடிமைப்பட்டிருந்த தேசங்கள் அனைத்துக்கும் அது பரிவு காட்டுவதாகச் சொல்லியது. அமனுல்லா மன்னர் 1919-ல் ஆஃப்கன் சிம்மாசனத்தில் அமர்ந்தார். இவர் இந்தியச் சுதந்தரத்துக்குப் பரிவு காட்டுவதாகச் சொன்னார். இந்தச் சங்கதிகள் பல இந்தியப் புரட்சிக்காரார்களுக்கும் நம்பிக்கையூட்டின. ஆஃப்கானிஸ்தானத்திலிருந்தோ, போல்ஷவிக் ருஷியாவிலிருந்தோ தாங்கள் உதவி பெறலாமென இந்தியர்களுக்கு நம்பிக்கை ஏற்பட்டது. இதன் பயனாக, 1919-லும் அதன் பிறகும், பல இந்தியப் புரட்சிக்காரர்கள் தேசாந்தரம் கிளம்பிக் கபூலுக்கும், அங்கிருந்து மாஸ்கோவுக்கும் உதவி ஒத்தாசை நாடிப் போனார்கள்.

அமனுல்லா மன்னருக்குத் தெரியும். இந்தியாவின் வடமேற்குப் பாதுகாவல்கள் உடைக்க முடியாதவை' என்பது வெறும் கதை. தமக்கும் பிரிட்டிஷ் இந்தியருக்கும் இடையே தகராறு ஏற்பட்டால், பிரிட்டிஷாருடன் அமனுல்லா மன்னர் சண்டைக்குப் போகத் தயங்கவில்லை. 1919-ல், ஆஃப்கன் ராணுவம் வெற்றிகரமாக இந்தியாவுக்குள்ளே புகுந்தடித்து வந்துவிட்டது. பிரிட்டிஷார் கிலி பிடித்துப் போனார்கள். ஆஃப்கன் மன்னர் சொன்ன சொன்னபடி, அவருடன் சமாதானம் செய்துகொண்டார்கள். ஆனால், பத்து வருஷம் கழித்துப் பிரிட்டிஷாரின் சூழ்ச்சி அமனுல்லா மன்னரை மீறி விட்டது. ராஜ்யப் பதவியைத் துறந்து, அவர் நாட்டைவிட்டுப் போகவேண்டியதாயிற்று. 1929-ல், பிரிட்டிஷார் மறுபடியும் அப்பாடா என்று நிம்மதியாகப் பெருமூச்சு விட்டார்கள்.

பத்து வருஷத்துக்கு அப்புறம்-அதாவது, 1939 ஆகஸ்ட்டில், சோவியத்-ஜெர்மன் அனாக்ரமிப்பு ஒப்பந்தம் செய்துகொள்ளப்பெற்றது. அந்த வருஷம் செப்டம்பரில், பிரிட்டனுக்கும், ஜெர்மனிக்குமிடையே போர் மூண்டது. இவைகள் மறுபடியும் பிரிட்டிஷார் மனத்தில் ருஷ்யப் பூதத்தை முன்னணியில் கொண்டுவந்து நிறுத்தின. அதன்மேல் புதிய கோட்டைக் காவல்கள் இந்தி

கெல்லைப் புறத்தில் ஆரம்பிக்கப்பட்டன. எதற்காக?
சோவியத் ருஷியர்கள் ஒரு வேளை இந்தியாவுக்குள். படை
எடுத்து வந்தால், அவர்களைத் தடுத்து விரட்டுவதற்காக.

1941-ல், ஜுனில், ஜெர்மனிக்கும், ருஷ்யாவுக்கு
மிடையே போர் மூண்டது. பிரிட்டிஷார் கொண்டிருந்த
கிலி உணர்ச்சி மறைந்து, அபாரமான நிம்மதி அவர்
களுக்கு ஏற்பட்டது. ஜெர்மன் ராணுவம் ருஷ்யக் காக்
கேஷியப் பிரதேசங்களை நோக்கி வெகு வேகமாக முன்
னேறி முடிவில் இரானை நோக்கி வந்தபோது கொஞ்சக்
காலத்துக்கு லேசாகக் கவலை இருந்து வந்தது. ஆனால்,
பிரிட்டிஷார் பின்னால் உணரத் தொடங்கி விட்டார்கள்.
சோவியத்-ஜெர்மன் யுத்தம் இந்தியாவிலுள்ள தங்கள்
ஏகாதிபத்தியத்தைக் காப்பாற்றி விட்டதென்று பிரிட்டி
ஷார் உணரத் தொடங்கிவிட்டார்கள்.

ஆனால், கிழக் காசியாவில் சண்டை வந்ததும், எல்
லாம் தலைகீழாக மாறிப்போயின. பன்னெடுங் காலமாக
இந்தியாவின் வடமேற்கு எல்லைப்புறத்துக்கு இருந்து
வந்த முக்கியத்துவம் திடீரென்று மறைந்தது. அதன்
ஸ்தானத்தில் வட கிழக்கு எல்லைப்புறம் முக்கியத்துவம்
பெறத் தொடங்கியது. இந்தியா-பர்மா எல்லைப்புறத்தின்
வனாந்தரங்களும், மலைகளும் திடீரென்று கடந்து செல்
லக் கூடியனவாக ஆயின. இவைகளின் ஊடேயும், இவை
களின் மேலேயும் சாலைகள் திறக்கப்பட்டன. இந்தப்
புதுச் சாலைகள் வழியாகப் பர்மாவின் பிரிட்டிஷ் கவர்
னரும், அவரது சில்லறை தேவதைகளும், கிலிபிடித்த
அவரது படைகளும் வங்காளம் நோக்கி ஓடினார்கள்.
அங்கிருந்து டில்லிக்கு ஓடினார்கள்.

பர்மாவின் பிரிட்டிஷ் கவர்னர் இப்போது புதுடில்லி
யில் பத்திரமாய் அமர்த்திவைக்கப்பட்டிருக்கிறார். பர்மா
விலிருந்து அவருடன் தப்பி ஓடிய அகதிகளின் துணை
கொண்டு, அங்கே அவர் ராஜ்யம் நடத்துகிறார். ஆனால்,
ர ...னால் நமது உபயோகமாகும் இந்தச் சாலை
...ட்டு விட்டுப் போயிருக்கிறார். இந்தச் சாலை
...ரக அவரும் ஐந்து லட்சம் ஆண், பெண்
...வி லிருந்து இந்தியாவுக்கு வழி நடந்தார்கள்.



அவர் இரங்கூனிலிருந்து டில்லிக்குக் கிளம்பியதன்
பிறகு, இந்தச் சாலைகள் அபிவிருத்தி செய்யப் பெற்
றிருக்கின்றன. புதிய சாலைகள் வேறு திறக்கப்பெற்
றிருக்கின்றன. மேலும், இந்தியாவை அணுகுவதற்கு
உள்ள வடமேற்குப் பாதைகளைப் போல் அல்லாமல்,
வடகிழக்குப் பாதை மூலமாக இந்தியாவைக் கிட்டி
நெருங்க முடியும். நிலத்தின்மூலமாக மட்டுமல்ல; கடல்
மூலமாகவும், ஆகாய மூலமாகவும் பின்கண்ட வழியாகச்
செல்லலாம். இதன் பயனாக கிழக்கிலிருந்தும், வடகிழக்கி
லிருந்தும் இன்று டில்லிக்கு எட்டிச் செல்லும் சாலை
ஒன்றல்ல; இப்படிப்பட்ட சாலைகள் பல இருக்கின்றன.
இந்தச் சாலைகள் எல்லாம் சீக்கிரம் நம் கையில் சிக்கி,
நமக்கு உபயோகமாயிருக்கும்.

“எல்லாச்சாலைகளும் ரோமுக்கு இட்டிச் செல்லும்”
ஒன்று ஐரோப்பாவில் சொல்லுகிறார்கள். இங்கே, கிழக்
காசியாவில், மேலே குறித்த சாலைகள் அனைத்தும் இந்
தியாவின் தலைநகருக்கு இட்டுச் செல்லும். அதுமட்டுமா?
அதன் இதயத்துள் அமைந்துள்ள புராதனச் செங்கோட்
டைக்கும் இட்டுச் செல்லும். நாம் சேரவேண்டிய இடம்
டில்லி. டில்லிக்கு நாம் பலசாலைகள் வழியாக வழி நடப்
போம். வழியில், நம்மைத் தடுக்கக் கோட்டைக் காவல்
களில்லை. வடமேற்கு எல்லைப்புறத்தில்தான் அவையிருக்
கின்றன. வனாந்தரங்களும், மலைகளும், அலைகளும், புயல்
களும், இருக்கலாம். ஆனால் இயற்கை நம்மிடம் அன்பு
காட்டி, இந்தப் புதிய சாலைகளைத் திறந்து வைத்திருக்
கிறது. இயற்கை போடும் தடைகளை அதிகச் சிரமமில்
லாமல் நாம் சமாளித்துக் கொள்வோம்.

ஆனால், இங்கிருந்து வைசராய் மாளிகைக்கும், இந்தி
யத் தலைநகரின் செங்கோட்டைக்கும் செல்லவேண்டிய
வழி நடை நெடியதாயும், களைப்புத்தரக் கூடியதாயு
மிருக்கும். ஆகவே, நாம் காலம் போக்கவேண்டாம்.
வேட்டியை வரிந்து கட்டிக்கொண்டு, கூடிய சீக்கிரம்
நமது பிரயாணத்தைத் தொடங்குவோமாக. டில்லி நோக்
கிச் செல்லும் சாலைகள்தான் சுதந்தரம் நோக்கிச் செல்
லும் சாலைகள்.

# இணைப்பு 1.

[ஃபிலிப்பீன் தீவுகள், பர்மா, இந்தியா பற்றிச் சேனாபதி ட்டோஜோவின் பிரகடனங்கள்.]

...ஃபிலிப்பீன் தீவுகளைப் பொறுத்த வரையில், அந்தத் தீவுகளின் மக்கள் ஜப்பானின் மெய்யான உத்தேசங்களை இனிமேற்படப் புரிந்துகொண்டு பெருத்த கிழக் காசியக் கூட்டுச் செழிப்பு மண்டலத்தை நிறுவுவதில் பங்கெடுத்துக்கொள்ளுபவர்களில் ஒருவராயிருந்து தங்களது ஒத்துழைப்பை வழங்குவார்களானால், ஜப்பானானது சுதந்தரத்தின் கௌரவத்தை அவர்கள் அனுபவிக்க மகிழ்ச்சியோடு உதவி புரியும். பர்மாவைப் பற்றிய விஷயத்தில், ஜப்பான் செய்ய உத்தேசிப்பது ஃபிலிப்பீன் சம்பந்தமான அதன் உத்தேசத்திலிருந்து மாறுபட்டதல்ல.

*21—1—1942.*

...இந்தியாவுக்கு இது ஓர் அரிய வாய்ப்பு. அதற்குப் பல்லாயிர வருஷத்து வரலாறும், நேர்த்தியான பண்பாட்டுப் பரம்பரையுமிருக்கின்றன. பிரிட்டனுடைய கொடுங்கோலாட்சியிலிருந்து விடுபட்டுப் பெருத்த கிழக் காசியக் கூட்டுச் செழிப்பு மண்டலத்தை அமைப்பதில் பங்கு பெற அதற்கு ஓர் அரிய வாய்ப்புக் கிட்டியிருக்கிறது. இந்தியாவானது இந்தியர்களுக்கே என்ற தனக்குரிய ஸ்தானத்தை அது மீண்டும் நிலைபெறுத்திவிடும் என்று ஜப்பான் எதிர்பார்க்கிறது. இந்தியர்களின் தேசபக்த முயற்சிகளுக்கு உதவியளிப்பதில், ஜப்பான் கஞ்சத்தனம் பண்ணாது. தன் சரித்திரத்தையும், பரம்பரையையும் மறந்துவிட்டு, தன் பணியைப்புரிய இந்தியாவானது விழித்தெழத் தவறி, முன் போலவே பிரிட்டிஷாரின் ஆசை வார்த்தைகளாலும், சூழ்ச்சிகளாலும்



ஏமாறிக்கொண்டேபோய், அவர்கள் சொன்னபடி ஆடுமானால், இந்திய மக்கள் மறு மலர்ச்சி பெறுவதற்குக் கிடைத்த வாய்ப்பு என்றென்றைக்கும் கிட்டாமலே போய்விடும் என்று நான் அஞ்சுகிறேன்.

*16—2—1942.*

இந்திய மக்களைப் பற்றிய வரையில், அவர்களைப் பகைத்துக்கொள்ள வேண்டுமென்ற எண்ணம் ஜப்பானுக்கு லவலேசமும் இல்லை என்பது வாஸ்தவம். ஆனால், ஒரு விஷயத்தை நான் மறுபடியும் தெளிவாக வற்புறுத்திக் கூற விரும்புகிறேன். அமெரிக்க, பிரிட்டிஷ் செல்வாக்கைப் பரிபூரணமாக நசுக்கிவிட ஜப்பான் கொண்டிருக்கும் தீர்மானம் எவ்வித மாறுதலையும் அடையாது.

பர்மா பர்மியருக்கே என்பது ஏற்கெனவே செயல்முறையில் உண்மையாக ஆகிவருகிறது. நான் திடமாக நம்புகிறேன்: இந்தியாவை இந்தியர்களுக்காக நிறுவுவதற்கு இதுதான் சமயம். பல வருஷங்களாக இதுதான் 40 கோடி இந்திய மக்களின் அபிலாஷையாக இருந்துவந்திருக்கிறது.

கிரேட் பிரிட்டன் நெடுங்காலமாக இந்தியா மீது எதேச்சை அதிகாரம் செலுத்திவந்து, அதை ஏமாற்றியிருக்கிறது. போன மகாயுத்தத்தில், இந்தியாவுக்குப் பிரிட்டிஷார் கொடுத்த வாக்குறுதி நிஜத்தில் என்னவாயிற்று? இந்த விஷயம் இந்திய மக்களின் ஞாபகத்தில் இன்னும் பசுமையாகவே இருக்குமென்று நான் நம்புகிறேன். இப்போது என்னென்னவோ ஆசை வார்த்தைகள் காட்டி, மறுபடியும் இந்தியாவை ஏமாற்ற முயன்றுகொண்டிருக்கிறது. பிரிட்டிஷாரின் தட்டிக் கொடுக்கும் மாதிரிப் பேச்சைக் கேட்டு, இந்தியத் தலைவர்கள் இந்திய மக்களின் நெடு நாளைய ஆழ்ந்த அபிலாஷைகளைக் காட்டிக் கொடுத்து, தெய்வசங்கல்பமாய்க் கிடைத்த இந்த வாய்ப்பை வீசி யெறிந்துவிடுவார்களானால், இந்தியாவைக் காப்பாற்றுவதற்கு என்றென்

றைக்கும் சமயம் வரப்போவ தில்லை. 40 கோடி இந்திய மக்களுக்கு இதைவிடப் பெரிய துரதிர்ஷ்டம் இருக்க முடியாது.

இந்தியா இந்தியர்களுக்கே என்று பெருத்த கிழக் காசியக் கூட்டுச் செழிப்பு மண்டலத்தை நிறுவுவதில் ஒத்துழைக்கும் பெருமையை யடைய இந்தியா எழப் போகிறதா அல்லது ஆங்கிலோ-அமெரிக்க வல்லரசு களின் தளைகளின் கீழ் நிரந்தரமாகப் பிணிக்கப் பெற்று, அடிபணிந்து, பிற்காலச் சந்ததியாருக்குத் தன் அடிமைப் பெயரைத் தனக்குப் பின்னே விட்டுச் செல்லப் போகிறதா? எதிரும் புதிருமாய் நின்று காரியம் செய்ய வேண்டிய காலம் அதற்கு வந்து விட்டது. கடந்த காலத்தை ஒழித்துக் கட்டிவிட்டுப் புதிய நிலைமையைத் திட்டமாகப் பார்த்து, இறுதியாக முடிவு கட்டுவதற்கு அதற்குக் காலம் வந்துவிட்டது.

*12—3—1942.*

---

# இணைப்பு 2.

[பிரதிநிதிகள் கூட்டத்துக்குச் சேனாபதி ட்டோஜோவிட மிருந்து வந்த வாழ்த்துச் செய்தி]

பெருந் தலைவர் ஸ்ரீஜத் சுபாஷ் சந்திரபோஸை வரவேற்கும் சமயத்தில், கிழக் காசியாவி லுள்ள இந்தியச் சுதந்திரச் சங்கம் கிழக் காசியாவி லுள்ள இந்தியப் பிரதிநிதிகள் குழுவின் கூட்டத்தைப் பிரிட்டிஷாரின் அடிமைத் தளையி லிருந்து விடுவிக்கப்பட்ட சியோனனில் நடத்துகிறது. சுபாஷ் போஸுக்கு அளிக்கும் இந்த வரவேற்புடன் இந்தியச் சுதந்தரத்தை அடைவதற்குப் புத்துயிர் பெற்ற, கடுமை வாய்ந்த உறுதியுடன் வெகு தூரம் செயலில் இறங்கிவிடுகிறீர்கள்.

இந்தச் சந்தர்ப்பத்தில், எனது மனமார்ந்த வாழ்த்துக்களை வழங்குகிறேன். ஏன்? இது சந்தோஷமான, நல்ல அறி குறி. இந்தியாவுக்கு மட்டு மல்ல,-கிழக் காசியா அனைத்துக்குமே அப்படித்தான்.

பெருத்த கிழக் காசியப்போர் மூண்டதி லிருந்து, சாம்ராஜ்ய ஜப்பானியப் படைகள் எதிரியைக்கண்ட கண்ட இடத்தி லெல்லாம் நிர்மூலமாக்கி யிருக்கின்றன. மிகச் சுருங்கிய காலத்துக்குள், ஆசியாவின் இந்தப் பகுதியி லுள்ள ஆங்கிலோ-அமெரிக்கக் கேந்திர ஸ்தானங்கள் எல்லாவற்றையும் அவை தகர்த்தெறிந்து விட்டன.

அதே சமயத்தில், ஜப்பான் மஞ்சுக்கோ, சீனா, தாய்லாந்து இவைகளுக்கிடையேயுள்ள ஐக்கியப் பிணைப்புக்கள் பலப்படுத்தப்பட் டுள்ளன. அவை, தடுத்து நிறுத்த முடியாதபடி, கிழக் காசியாவில் கூட்டுச்செழிப்பு மண்டலத்தை அமைப்பது என்கிற தமது இலக்கை நெருங்கிக் கொண்டு போகின்றன.

இறுதி வெற்றியிலும், நியாயத்தின் வெற்றி எக்காலத்திலும் அசைக்கமுடியாத நம்பிக்கை கொண்டது ஜப்பான். இவைகளுக்காகவே அது போர்புரிந்துவருகிறது. இந்த நம்பிக்கையுடன் அடுக்கடுக்காய்ப் பிரிட்டிஷார் செய்துவந்த தவறுகளும், கேடுகளும் துடைத்தெறியப்படப் போகின்றன. இவ்வாறாகப் பெருத்த கிழக்காசியாவின் ஒளிபொருந்திய அருணோதய வேளை வந்துவிட்டது.

இந்தியா, தன்னை விடுவித்துக்கொள்ள இது பொன்போன்ற சந்தர்ப்பம். இத்தகைய அரிய சந்தர்ப்பம் மீண்டும் ஒருபோதும் வாய்க்காது

பெருத்த கிழக்காசியப் போர் மூண்டதிலிருந்து இந்தியாவிலிருந்து இந்தியத் தேசியவாதிகள் தங்களை ஆளும் பிரிட்டிஷாருக்கு எதிராகக் கிளம்பினார்கள். இப்படியாக, இந்தியாவானது ஏற்கெனவே ஆத்மீகச் சுதந்தரத்தை அடைந்துவிட்டது.

பிரிட்டிஷ் ஏகாதிபத்தியம் கடைசி மூச்சை இழுத்துக்கொண்டு திணறுகிறது. நெருக்கு வெட்டில், தன்னை அணுகிவரும் அழிவு நாளைத் தள்ளிப் போடுவதற்காக, அது எந்த உபாயத்தையும் கையாளத் துணிந்துவிடும். அமெரிக்காவும் தனது பேய்க்கரத்தை இந்தியா நோக்கி நீட்டிக்கொண்டிருக்கிறது.

இப்படிப்பட்ட சந்தர்ப்பத்தில், இந்தியர்கள் இந்தியாவின் பூரணச் சுதந்தரத்தைப் பெறுவது சல்லிசான காரியமே அல்ல. ஆனால், 40 கோடி இந்தியர்களும் ஒரே கட்டாக ஐக்கியமாகித் தங்கள் சொந்த விடுதலையையும், சுதந்தரத்தையும் தங்கள் சொந்த ரத்தத்தாலும், கடின உழைப்பாலுமே வென்றுகொள்ள வேண்டும்.

நிப்பொனுடைய மனப்பூர்வமான விருப்பமென்ன? இந்தியா இந்தியர்களுக்கே என்ற இந்தியாவின் நெடுநாளைய ஆழ்ந்த பேரவா நிறைவு பெறவேண்டும் என்பதே. நிப்பொன் சர்க்கார் திருப்பித் திருப்பி இதுபற்றிச் செய்துள்ள பிரகடனங்கள் ஐயத்துக்கிடமின்றி இதை மெய்ப்பித்துவிட்டன.



நிப்பொனுடைய தீர்மானம் வளைந்து கொடுக்காது. இந்தியா தனது சுதந்தரத்தைப் பெறுவதற்காகத்தான் வசதிகளனைத்தையும் வாரி வழங்க நிப்பொன் தீர்மானமாயிருக்கிறது. சகல இந்தியர்களின் மனமார்ந்த ஆசை இது.

நிப்பொன் மனமார விரும்புகிறது: இந்தியாவின் சுதந்தரத்தைப் பெறுவதற்காகச் செய்கிற சுறுசுறுப்பான இயக்கம் இந்தியாவினுள்ளும், அதற்கு வெளியேயும், இன்னும் அதிக ஆக்கமுள்ளதாகச் செய்யப்பெற வேண்டும். ஆங்கிலோ-அமெரிக்கப் படைகள் கூடிய சீக்கிரம் இந்தியாவின் ஒவ்வொரு மூலை முடுக்கிலிருந்தும் விரட்டியடிக்கப்பட வேண்டும்.

உலக நிலை மேலும் மேலும் சிக்கலாகிவருகிறது. இதைப் பயன்படுத்திக் கொண்டு ஆங்கிலோ-அமெரிக்க எதிரிகள் தங்கள் சூழ்ச்சி வேலைகளை அதிகமாக்குவார்கள் என்பதில் ஐயமில்லை.

பரம்பரை மரபுப்படி, ஒருவரை மற்றவர் நம்புகிற நண்பர்கள் விஷயத்தில், நிப்பொன் நாடு ஒரு போதும் நம்பிக்கை மோசம் செய்வதில்லை. இந்தியா விஷயத்திலும் அப்படித்தான்.

இந்தியர்கள் ஆங்கிலோ-அமெரிக்கச் சூழ்ச்சிகளைக் கண்டு ஏமாந்து, தங்கள் சுதந்தரத்தைப் பெறக் கடவுள் தந்த வாய்ப்பைத் தவற விட்டுவிட மாட்டார்களென்று நான் மனமார விரும்புகிறேன். இந்தியர்கள் நிப்பொனின் வெற்றியில் திட நம்பிக்கை வைத்து, நீதிக்காகவும், நேர்மைக்காகவும் எங்களுடன் தோளோடு தோளாக நின்று போர் புரிவார்கள் என்று நம்புகிறேன்.

நான் திடமாக நம்புகிறேன்; தங்கள் சுதந்தரம் உதயமாகும் பெரும் புகழ் வாய்ந்த நாள் விரைவில் கிட்டும்படிச் செய்ய இந்தியர்களுக்கு உள்ள ஒரே வழி இதுதான். அவர்களது தீரப் போரில் அவர்கள் எல்லாவித வெற்றியும் பெற வேண்டுமென்று நான் மனப்பூர்வமாக விரும்புகிறேன்.

# இணைப்பு 3.

[மேன்மை தங்கிய டாக்டர் பாமா பேசிய பேச்சின் அசல் பிரதி]

போஸ் அவர்களே! நண்பர்களே!

உங்களுக்கு நான் உறுதி கூற முடியும். இந்தமாதிரிச் சந்தர்ப்பத்தில், உங்களுடன் இருப்பது எங்களுக்கு மிகப் பெரிய மகிழ்ச்சி தருகிறது.

உங்கள் பெருந் தலைவர் பேசியபடி, உங்களுக்கு அவர் விடுத்த "டில்லி நோக்கி" என்ற அழைப்புக் குரலை நான் இப்போது நினைவு கூர்கிறேன். ஆம்: அதுவே உங்கள் போர் ஒலி. ஆனால், நீங்கள் டில்லி நோக்கிச் சென்று கொண்டிருக்கிறீர்களானால், டில்லி அரச பரம்பரையின் கடைசிப் பிரதி நிதியாயிருந்த கடைசி இந்தியப் பெரும் மன்னர் மன்னராயிருந்தவருடைய சமாதியருகே நீங்கள் திரண்டிருப்பது பொருத்தமே. உங்களது பெரு முயற்சிக்கு ஆத்மத் தூண்டுதல் தேடவும், அந்த முயற்சியை வலிமை யுடையதாக ஆக்கவும், இத் தகைய புனித ஸ்தலத்திற்கு நீங்கள் வருவதும் பொருத்தமே. இந்தியர்களும், பர்மியர்களுமாகிய நாம் துயரம் நிறைந்த சந்தர்ப்பங்களால் நமது பண்டைச் சரித்திரத்தின் தொடர்பை இழந்துவிட்டோம். பண்டைக் காலத்துடன் இந்தத் தார்மிகத் தொடர்பைக் கொண்டுசெலுத்தி வருவது நமது கடமை. எனவே, சமயம் நேரும்பொதெல்லாம், பண்டைக் காலத்துக்கு நாம் திரும்பிச் செல்வது,-நமது தேசிய நினைவுகளை நோக்கித் திரும்பிச் செல்வது, சரியே. ஏன்? நமது உண்மையான பரம்பரைச் சொத்து அங்கேதா னிருக்கிறது.

பர்மியராகிய நாங்கள் சில புனித இடங்களை மிக முக்கியமானவையாகக் கொள்கிறோம். ஷ்வேபோவில் இருப்பது போல, வெற்றி தரும் சில பூமிகளை நாங்கள்



மிக முக்கியமானவையாகக் கருதுகிறோம். இந்தியர்களாகிய உங்களுக்கு இந்தப் பூமி வெற்றி கொண்டுதருமென்று நான் நம்புகிறேன். ஏனென்றால், ஷ்வேபோவின் புனிதப் பூமி—அதைக் கடந்து நாம் முன்னேறினால்—எந்த முயற்சிக்கும் கட்டாயம் வெற்றி தருமென்று பர்மியர்களாகிய நாங்கள் நம்புகிறோம்.

இந்தியச் சமூகத்தின் சார்பாக உங்கள் தலைவர் மனமுவந்து இரண்டரை லட்சம் ரூபாய் நன்கொடை தந்திருக்கிறார். இத்தகைய கருமத்தைப் பெறத் தகுதி வாய்ந்த எந்தப் பர்மிய லட்சியத்துக்கும் இதை உபயோகித்துக்கொள்ளலாம். எந்த முறையில் அவர் அதை வழங்கினாரோ அதே முறையில் அதை நான் ஏற்றுக் கொள்கிறேன். இந்தக் காலங்களில், நீங்கள் கடினமான காரியத்தைச் செய்ய விருக்கிறீர்கள். இப்படிப்பட்ட நிலையில், பணத்தின் முக்கியத்துவத்தை நான் உணர முடியும். எனக்குத் தெரியும்: உங்கள் தலைவர் இதைச் சிறிய தொகை, அற்பத் தொகை என்று சொல்லியிருந்தாலும், இரண்டரை லட்சம் சிறியதல்ல, அற்பமானதல்ல. உங்களுக்கு மிக மிகப் பெரிதான, கடினமான செலவு பிடிக்கும் வேலை இருக்கிறது. அந்த நோக்கத்தில் பார்க்கும் போது, இது முக்கியமான தொகை யாகும்.

எனக்குத் தெரியும்: உங்கள் இயக்கத்தைப் போன்ற ஓர் இயக்கத்தை நீங்கள் பேணிவளர்த்து வரும்போது, இந்தியாவிற்கு, டில்லி நோக்கி பிரம்மாண்டமான படை கிளம்பிச் செல்லும் பொருட்டு நீங்கள் தயாராகிக் கொண்டிருக்கும்போது, இப்படிப்பட்ட ஒரு தொகை நீங்கள் செய்யும் நிச்சயமான தியாகத்தின் அடையாளமாக ஆகவே செய்கிறது. நீங்கள் செய்யும் தியாகத்துக்கு அந்தச் சொல்லின் நிஜ அர்த்தப்படி, இது பிரதிநிதியாகிறது. பர்மாவை நீங்கள் மிக்க ஆழ்ந்த உள்ளத்துடன் பாராட்டுகிறீர்கள் என்பதற்கும், இந்த யுத்தத்தில் கஷ்டப்பட்ட பர்மியர்களிடத்தில் நீங்கள் பரிவு கொண்டிருக்கிறீர்கள் என்பதற்கும் இது அடையாளமாகிறது.

இது உங்கள் தாராளப் பண்பின் சிறந்த அறிகுறி. அதனால், இந்நாட்டின் மீது உங்களுக் குள்ள அன்பின் அறிகுறி என்று நான் சொல்லுகிறேன். எனவே, அந்த ரீதியிலேயே நன்கொடைக்கு எனது ஆழ்ந்த வந்தனத்தைத் திருப்பிச் செலுத்துகிறேன்.

பண்டைய இந்தியாவின் கடைசிப் பெரும் தீரருக்கு வணக்கம் செலுத்துவதில் உங்களோடு சேர்ந்துகொள்ள நான் விரும்புகிறேன். எனது சர்க்காரின் அங்கத்தினர்களும் உங்களுடன் சேர்ந்துகொள்ள விரும்புகிறார்களென்று நான் நிச்சயமாய் நினைக்கிறேன். அந்த ஆத்ம உணர்வோடு, பர்மியர்களாகிய நாங்கள் உங்கள்கூட முன் நடந்துவருவோம். பர்மியர்களாகிய நாங்கள் உங்களுடனிருந்து பகதூர் ஷாவின் ஆத்மாவைப் பின்தொடர்வோம். அவரது ஆத்மா உங்கள்கூட வழி நடக்குமென்று நான் நிச்சயமாய் நினைக்கிறேன். அந்த டில்லியின் கடைசிப் பெரும் சக்கரவர்த்தியினுடைய ஆத்மாவால் இட்டுச் செல்லப்பெற்று, நீங்கள் நிச்சயமாக இந்தியா திரும்புவீர்கள்.

எனக்குத் திடநம்பிக்கை யிருக்கிறது. நடந்ததும், நடப்பதும் ஒன்றுகூடி, இனி நடக்கவிருப்பதைக் கைப்பற்ற முடியும். கடந்த காலத்தைக் கொண்டிராத நிகழ்காலம் உதவுபடியாகாது. நிகழ்காலத்தை விட்டுவிட்ட கடந்த காலம் செத்துப்போனதல்லவா? அதைப்போல. எனவே, நான் சொன்னமாதிரி, அதை நான் மதிக்கிறேன். பெருமைவாய்ந்த கடந்த காலத்தை உங்களுக்கு நினைப்பூட்டுகிற புனிதமான ஒரு துண்டு நிலத்தினிடத்தே நீங்கள் வந்திருப்பதுகாண மகிழ்கிறேன். சென்றுபோன உங்கள் தலைவரை நீங்கள் பின்பற்றினால், — நீங்கள் பின்பற்றுவீர்களென்று நான் நிச்சயமாய் நினைக்கிறேன், இன்றிருக்கும் உங்கள் பெரும் தலைவரை நீங்கள் பின்பற்றுவீர்கள். வெற்றி உங்களுடையதே. பர்மா இன்று சுதந்தரமாயிருப்பது போல், இந்தியாவும் நிச்சயமாகச் சுதந்தரம் பெற்றுவிடும்.

# இணைப்பு 4.

[ஆஜாத் ஹிந்த் தற்காலிகச் சர்க்காரின் பிரகடனம்]

பிரிட்டிஷாரிடம் 1757-ல், வங்காளத்தில், இந்திய மக்கள் முதல் முதலாகத் தோல்விபெற்றார்கள். அதற்குப் பிறகு, தொடர்ந்து இடையறாது நூறு வருஷமாகக் கொடுமையான கடும் போர் புரிந்துவந்திருக்கிறார்கள். இந்தக் காலத்தைக்குறித்த சரித்திரத்தில், இணையற்ற வீரச் செயல்களும், பரித்தியாகமும் வெள்ளக்காடாய்க் கிடக்கின்றன. அந்த வரலாற்றின் ஏடுகளில், 'எப்படிப் பட்டவர்களுடைய பேர்களெல்லா மிருக்கின்றன? வங்காளத்தின் சிராஜ்-உத்-தௌலா, மோகன்லால்; தென்னிந்தியாவின் ஹைதர் அலி, திப்பு சுல்தான், வேலுத்தம்பி; மகாராஷ்டிரத்தின் அப்பா சாகிப் பான்ஸ்லே, பெஷ்வா பாஜி ராவ்; அயோத்தியின் பேகம்கள், பஞ்சாபின் சர்தார் ஷியாம் சிங், அர்த்தரிவாலா—எல்லாப் பெயர்களும் இருக்கின்றன. கடைசியாக, ஆனால், குறைவாக அல்ல, ஜான்சியின் ராணி லட்சுமி பாய், தந்தியா தோப்பி, தும்ரவோனின் மகாராஜா குன்வர்சிங், நானா சாகிப் ஆகியவர்களின் பேர்களும் இன்னும் பல பெயர்களிடையே காணப்படுகின்றன.

இந்தப் போர்வீரர்கள் அனைவரின் பெயர்களும் என்றும் அழியாவண்ணம் சரித்திரத்தில் பொன்னெழுத்துக்களால் பொறிக்கப்பெற்றிருக்கின்றன. நம்முடைய கெட்டகாலம். பிரிட்டிஷார் இந்தியா முழுவதுக்கும் பெரும் பொல்லாப்பு விளைவிக்கக்கூடியவர்கள் என்பதை நமது மூதாதைகள் முதலில் உணரவில்லை. அதனால், பகைவனை அவர்கள் ஒன்று சேர்ந்து எதிர்த்து நிற்கவில்லை. இறுதியில், உண்மை நிலையை உள்ளபடி உணர்ந்து கொண்டபோது, அவர்கள் ஒத்துக்கூடி முயன்

றார்கள். 1857-ல், பகதூர் ஷாவின் கொடியின்கீழ், சுதந்தர மனிதர்கள் என்ற முறையில், தங்கள் கடைசிப் போரை நடத்தினார்கள். தொடர்ச்சியான, பிரமாதமான வெற்றிகளை இந்தச் சண்டையின் ஆரம்பக் கட்டங்களில் அவர்கள் பெற்றபோதிலும். கெட்டவேளையும், தப்பான தலைமையும் சன்னஞ்சன்னமாய் அவர்களது இறுதி வீழ்ச்சியையும், அடிப்படுத்திய நிலையையும் கொண்டுசேர்த்தன. இருந்தபோதிலும், ஜான்சியின் ராணி, தந்தியாத் தோப்பி, குன்வர் சிங், நானா சாகிப் போன்ற தீரர்கள் நாட்டின் நினைவில் சாசுவதமான நட்சத்திரங்களாக வாழ்கிறார்கள். அப்படி வாழ்ந்து வந்து, மேலும் மேலும் பராக்கிரமச் செயல்களையும், தியாகச் செயல்களையும் நாம் புரிய நம்மை அவர்கள் ஊக்குவிக்கிறார்கள்.

1857-க்குப் பிறகு, பிரிட்டிஷார் நம்மைப் பலவந்தமாக நிராயுதபாணிகளாக்கினார்கள். கொடுமைக்கும், மிருகத்தனத்துக்கும் அடிப்படுத்தினார்கள். கொஞ்ச நாள், இந்திய மக்கள் செயலற்று, மல்லாந்து கிடந்தார்கள். ஆனால், 1885-ல், இந்தியத் தேசியக் காங்கிரஸ் பிறந்துவிட்டது. அதனுடன் புதியதொரு விழிப்பு உண்டாயிற்று. 1885-ல் தொடங்கிப் போன யுத்தம் முடியும் வரை, தாங்கள் இழந்துவிட்ட சுயேச்சையை மீட்கும் முயற்சியில் இந்திய மக்கள் எல்லாவிதமான உபாயங்களையும் கையாண்டு பார்த்தார்கள். கிளர்ச்சி, பிரசாரம், பிரிட்டிஷ் பண்டங்களை மறியல்செய்வது, பயங்கரச் செயல்கள், நாசவேலைகள் எல்லாம் செய்தார்கள். கடைசியாக, ஆயுதம்தரித்த புரட்சி. ஆனால், இந்த முயற்சிகள் எல்லாம் கொஞ்சக் காலத்துக்குத் தோல்வியடைந்தன. கடைசியில் 1920-ல் தோல்வி உணர்வால் பைத்தியம் பிடித்தவர்களாகிப் புது வழி ஒன்று கிடைக்காதா என்று இருட்டில் தடுமாறித் தடவிக்கொண்டிருந்தபோது, இந்திய மக்களுக்குப் புது ஆயுதம் ஒன்று உடன் உதவிபுரிய மகாத்மா காந்தி முன்வந்தார், ஒத்துழையாமை, சட்டமறுப்பு இவைதான் மகாத்மா காந்தி இந்தியருக்குத் தந்த புது ஆயுதம்.



அதற்குப் பிறகு, 40 வருஷம்வரை இந்திய மக்கள் கடுமையான தேசபக்தி வேலைகளில் முனைந்து நின்றார்கள். விடுதலைச் செய்தி ஒவ்வொரு இந்தியனின் வீட்டுக்கும் எட்டேறியது. தானே நடந்து காட்டிக் கஷ்டப்படுவதற்கு மக்கள் பயிற்றுவிக்கப்பட்டனர். விடுதலை லட்சியத்துக்காகத் தியாகம் செய்யவும், சாகவும் அவர்கள் கற்பிக்கப்பெற்றார்கள். தலைமையிடத்திலிருந்து தொலைதூரக் கிராமங்கள்வரை ஒரே அரசியல் ஸ்தாபனத்தில் மக்கள் சேர்த்துப் பிணைக்கப்பட்டார்கள். இப்படியாக, இந்திய மக்கள் அரசியல் உணர்வுபெற்றார்கள். அதுமட்டுமா, மீண்டும் ஓர் அரசியல் உருவப்பாடு பெற்றார்கள். இப்போது, அவர்கள் எல்லாரும் சேர்ந்து, ஒரே குரலில் பேசமுடியும். ஒரே மனத்துடன் கடிதில் முயலமுடியும். ஒரே பொது இலக்கை அடைய வேலை செய்ய முடியும். 1937 முதல் 1939 வரை எட்டு மாகாணத்திலுள்ள காங்கிரஸ் மந்திரி சபைகள் புரிந்த செயல்களின்மூலம் தங்கள் சொந்தக் காரியங்களை நடத்திக் கொள்ளத் தாங்கள் தயார், அதற்கான திறமை தங்களிடம் உண்டு என்று அவர்கள் நிரூபித்துக் காட்டிவிட்டார்கள்.

இப்படியாக, இப்போது நடக்கும் இவ்வுலக யுத்தம் தொடங்கப் போகிற வேளையில், இந்தியாவை விடுவிப்பதற்கான கடைசிப் போராட்டத்திற்குக் களம் தயாராகிவிட்டது. இந்த யுத்தம் நடக்கும் காலத்தில், ஜெர்மனியானது தன் கூட்டாளிகளின் உதவிகொண்டு ஐரோப்பாவிலுள்ள நம் எதிரிமீது உடைத்து நொறுக்கும்வண்ணம் அடி கொடுத்துள்ளது. எதிரியைத் தகர்த்தெறியும்வண்ணம் அடி கொடுத்துள்ளது. நிப்பானோ, தன் கூட்டாளிகளின் துணைகொண்டு கிழக்காசியாவிலுள்ள நம் எதிரி மூர்ச்சை போட்டுவிழும் வண்ணம் அவன்மீது அடிமேல் அடி கொடுத்துள்ளது. சந்தர்ப்பங்கள் இந்தியர்களுக்கு மிக்க வசதியாய் ஒன்று சேர்ந்து கொண்டுவிட்டன. இந்தச் சந்தர்ப்பச் சாதகத்தால், இன்று, தங்கள் தேசியவிடுதலையை பெறுவதற்கு இந்திய மக்களுக்கு அற்புதமான வாய்ப்புக் கிடைத்திருக்கிறது.

சமீபக்காலத்துச் சரித்திரத்தில், முதல் தடவையாக வெளிநாடுகளிலுள்ள இந்தியர்களும் அரசியல் விளிப்புப் பெற்று ஒரு ஸ்தாபனத்தில் ஐக்கியமாகிவிட்டார்கள். இந்தியாவிலுள்ள தங்கள் தேசமக்களுடன், ஒத்த சுதியில் அவர்கள் சிந்திக்கிறார்கள், உணருகிறார்கள் என்பது மட்டுமல்ல. அவர்களுடன்கூட இவர்களும் சுதந்தரப் பாதையில் ஒத்துநடை போடுகிறார்கள். குறிப்பாகக் கிழக்கு ஆசியாவில் 20 லட்சம் பேருக்கு அதிகமான இந்தியர்கள் இப்பொழுது ஒரே மொத்தம் படைப்பகுதியாக அமைந்துகொண்டுவிட்டார்கள். "பூரணத் திரட்சி" என்ற முழக்கொலி அவர்களை ஏந்தி நடத்துகிறது. அவர்களுக்கு முன்னால், இந்தியாவின் விடுவிப்பு ராணுவம் அணி அணியாகத் திரண்டு நிற்கிறது. ராணுவ வீரர்களின் உதடுகளில் "டில்லி நோக்கி முன்னேறு!" என்ற முழக்கொலி புரளுகிறது.

பிரிட்டிஷார் இந்தியாவில் நடத்திய ஆட்சி ஆஷாடபூதித்தனமானது. இந்தியாவை அது கொள்ளையடித்துச் சூறையாடி, இந்தியர்களைப் பட்டினிபோட்டுக் கொல்றது. இவைகளைத் தாளமாட்டாத இந்தியர்கள், வேறு வழியின்றி, ஆத்திரமடைந்தார்கள். பிரிட்டிஷ் ஆட்சி இந்தியர்களின் நல்லெண்ணத்தை முற்றுமிழந்துவிட்டது. இப்போது, அது வாய்க்கும் கைக்குமாகத் திண்டாடிக்கொண்டு ஜீவித்துவருகிறது. அந்த அபாக்கிய ஆட்சியின் கடைசி மிச்ச மீதியை நாசமாக்குவதற்கு அதிகமாக ஒன்றும் வேண்டியதில்லை. ஒரு நெருப்புச் சுவாலைதான் தேவை. அந்த நெருப்புச் சுவாலையை மூட்டிவிடுவதுதான் இந்திய விடுவிப்பு ராணுவத்தின் வேலை. இந்தியாவிலுள்ள பொதுஜனங்களின் உற்சாகமான ஆதரவு கிடைப்பது உறுதி. பிரிட்டனுடைய இந்திய ராணுவத்தின் பெரும்பகுதியும் நிச்சயம் ஆதரிக்கும். தீரமும், எதிர்க்க இயலாத ஆற்றலும்வாய்ந்த வெளிநாட்டுக் கூட்டாளிகளும் பக்கப்பலம் அளிப்பது நிச்சயம். ஆனால், தன் சொந்தப்பலத்தையே முதற்கண் நம்பி நிற்கவேண்டும். இத் தகைய நிச்சயமான ஆதரவையும், சொந்தப் பலத்தையும் நம்பி நிற்கும் இந்திய விடுவிப்பு ராணுவம்



அது புரியவேண்டிய சரித்திரச்செயலைப் பூர்த்தி செய்து வைக்கும் என்பதில் அதற்கு நம்பிக்கையிருக்கிறது.

சுதந்தரத்தின் அருணோதயம் கிட்ட இருக்கிறது.
இந்திய மக்களின் கடமை யாது? தங்கள் சொந்தத் தற்
காலிகச் சர்க்காரை ஏற்படுத்தவேண்டும். அந்தச் சர்க்
காரின் கொடிக்கீழ்க் கடைசிப் போராட்டத்தைத்
தொடங்கவேண்டும். ஆனால், இந்தியத் தலைவர்கள் எல்
லாம் சிறையிலிருக்கிறார்கள். இந்தியாவிலுள்ள ஜனங்
கள் பூரண நிராயுதபாணிகள். இப்படிப்பட்ட நிலைமை
யில், இந்தியாவில் தற்காலிகச் சர்க்காரை ஏற்படுத்து
வது முடியக்கூடியதல்ல. அந்தச் சர்க்காரின் ஆதரவில்
ஆயுதம் தாங்கிய போராட்டத்தைத் தொடங்குவதும்
முடியக்கூடியதல்ல. எனவே, கிழக் காசியாவிலுள்ள
இந்தியச் சுதந்தரச் சங்கத்தின் கடமை யாது? இந்தியா
விலும், வெளிநாட்டிலுமுள்ள தேசபக்த இந்தியர்கள்
அனைவரும் ஆதரவுதர வேண்டும். இந்த ஆதரவுடன்
இந்தச்செயலை மேற்கொள்ள வேண்டும். செய்யவேண்
டிய செயல் யாது? ஆஜாத் ஹிந்த் (சுதந்தர இந்தியா)
தற்காலிகச் சர்க்காரை ஏற்படுத்தவேண்டும். கடைசிச்
சுதந்தரப் போரை நடத்தவேண்டும். சங்கத்தால்
அமைக்கப்பெற்ற விடுவிப்பு ராணுவம் (அதாவது,
ஆஜாத் ஹிந்த் பவுஜ் அல்லது இந்தியத் தேசிய ராணு
வம்) உதவிக்கு வரும்.

கிழக் காசியாவிலுள்ள இந்தியச் சுதந்தரச் சங்கத்
தால் நாம் ஆஜாத் ஹிந்தின் தற்காலிகச் சர்க்காராக
அமைந்துவிட்டோம். நமது கடமைகளைச்செய்யப் புகுந்
திருக்கிறோம். நம்மைச் சார்ந்துள்ள பொறுப்பை நாம்
முற்றும் உணருகிறோம். இறைவனை இறைஞ்சுகிறோம்.
தாய்நாட்டை விடுவிக்க நாம் செய்யும் வேலைகளையும்,
நமது போராட்டத்தையும் இறைவன் ஆசீர்வதிப்பாராக.
இதன்மூலம் எங்கள் உயிர்களையும் எங்கள் போர்த்
தோழர்களின் உயிர்களையும் தாய்நாட்டின் விடுதலைக்
காக, அதன் க்ஷேமத்துக்காக, உலக நாடுகளிடையே
அது உன்னதமடைவதற்காகப் பணயம் வைக்கிறோம்.

தற்காலிகச் சர்க்காரின் வேலை என்ன? போராட்டத்தைத் தொடங்கி நடத்துவது. இது இந்திய மண்ணிலிருந்து பிரிட்டிஷாரையும், அவர்களது கூட்டாளிகளையும் வெளிக்கிளம்பச் செய்யும். அப்புறம், தற்காலிகச் சர்க்கார் செய்யவேண்டிய வேலை என்ன? ஆஜாத்ஹிந்தின் நிரந்தரத் தேசியச் சர்க்காரை நிறுவச்செய்வது. இந்தச் சர்க்கார் இந்திய மக்களின் இஷ்டப்பிரகாரம் அமைக்கப்பெறும். அவர்களுடைய நம்பிக்கையைப் பெற்றிருக்கும். பிரிட்டிஷாரும், அவர்களது கூட்டாளிகளும் வீழ்த்தப்பட்ட பிறகு, இந்திய மண்ணில் ஆஜாத் ஹிந்தின் நிரந்தரச் சர்க்கார் ஏற்படுத்தும்வரை நாட்டின் அலுவல்களைத் தற்காலிகச் சர்க்கார் பார்த்துவரும். இந்திய மக்களின் கண்காணிப்புச் சர்க்காராக இது இருக்கும்.

தற்காலிகச் சர்க்காருக்கு ஒவ்வோர் இந்தியனின் விசுவாசத்தையும் பெறப் பாத்தியதை உண்டு. அதை இதன்மூலம் தற்காலிகச் சர்க்கார் பாத்தியதையாகக் கொண்டாடுகிறது. மதச்சுதந்தரத்தைத் தற்காலிகச் சர்க்கார் அவரவருக்கும் அளிப்பதாக உத்தரவாதம் செய்கிறது. அதுமட்டுமா? தன் பிரஜைகள் அனைவருக்கும் ஒத்த உரிமையையும், ஒத்தவாய்ப்பையும் அது அளிப்பதாக உத்தரவாதம் செய்கிறது. அதன் திடமான தீர்மானத்தைப் பிரகடனம் செய்கிறது. நாடு முழுவதுக்கும், அதன் பகுதி அனைத்துக்கும் இன்பமும், செழிப்பும் உண்டாகும்வண்ணம் உள்ள துறையை அது கடைப்பிடிக்கும். நாட்டின் குழந்தைகள் அனைவரையும் சமமாகப் பேணிவரும். சென்ற காலத்தில், அன்னிய சர்க்காரால் தந்திரமாய் வளர்த்துவிடப்பட்ட மாறுபாடுகளைத் தாண்டி மேலே செல்லும்.

கடவுள் பெயரால்,—இந்திய மக்களை ஒரு தேசமாக இணைத்துப் பிணைத்த, மறைந்துபோன, தலைமுறைகளின் பெயரால்,—வீரச் செயல்களுக்கும், பரித்தியாகத்துக்கும் பரம்பரை மரபை நமக்குப் பிதுரார்ஜிதச் சொத்தாக விட்டு மாண்டுபோன வீரர்களின் பெயரால்,—எங்கள் கொடியின்கீழ் இந்தியாவின் சுதந்தரத்துக்காக



அடிபோடும்படி நாங்கள் இந்தியமக்களை அழைக்கிறோம். பிரிட்டிஷாருக்கும், இந்தியாவிலுள்ள அவர் கூட்டாளிகள் அனைவருக்கும் எதிராகக் கடைசிப் போராட்டத்தைத் தொடங்கி, வீரத்துடனும், விடாப்பிடியுடனும், இறுதிவெற்றியில் நம்பிக்கையுடனும், இந்திய மண்ணிலிருந்து எதிரி வெளியேற்றப்பட்டு, இந்திய மக்கள் மறுபடியும் ஒரு சுயேச்சைத் தேசிய இனமாக ஆகும்வரை, அந்தப் போராட்டத்தை நடத்திவைக்கும்படி அவர்களை நாங்கள் அழைக்கிறோம்.

ஆஜாத் ஹிந்த் தற்காலிகச் சர்க்காரின் சார்பாகக் கைச்சாத்திட்டது.

சுபாஷ் சந்திரபோஸ் (ராஜாங்கத் தலைவர், பிரதம மந்திரி, யுத்தம், அயல்நாட்டு விவகாரம் இவைகளின் மந்திரி.)

காப்டன் மிஸஸ் லட்சுமி (பெண்கள் ஸ்தாபனம்);
எஸ். ஏ. ஐயர் (விளம்பரம், பிரசாரம்);
லெஃப்டனன்ட் கர்னல் ஏ. சி. சாட்டர்ஜி (நிதி);

லெஃப்.—கர். அஜிஸ் அஹமது,
" என். எஸ். பகத்,
" ஜே. கே. பான்ஸ்லே,
" குல்ஜாரா சிங்,
" எம். எஸ். கியானி,
" ஏ. டி. லோகநாதன்,
" ஏசான் காதிர்,
" ஷா நவாஸ் (ஆயுதம் தாங்கிய படைகளின் பிரதிநிதிகள்);

ஏ. எம். சாஹே, காரியதரிசி (மந்திரி பதவி);
ராஜ் பிஹாரி போஸ் (அதியுச்ச ஆலோசகர்);

கரிம் கனி,
தேவதாத் தாஸ்,
பி. எம். கான்,
ஏ. எல்லப்பா,
ஜே. தாவி,
சர்தார் இஷார் சிங் (ஆலோசகர்கள்);
ஏ. என். சர்க்கார் (சட்ட ஆலோசகர்).

சியோனன்,
21—10—1943.

ARCHIVES LIBRARY
108375
MADRAS
V2 : 5147 M97
N47